வரு.76 இல. 21 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමන්ජරී

2024 ஜூன் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 02 Sunday, 2024




/ Thinakaran.lk / ThinakaranLK













## வங்குரோத்தடைந்த வர்த்தகத்தை கட்டியெழுப்ப

# இவ்வாரம் முதல் 7% வட்டியில் சலுகைக் கடன் திட்டம் அமுல்

## அனைத்து வர்த்தக வங்கிகளூடாகவும் விண்ணப்பிக்கலாம்



### Black List பண்ணப்பட்டவர்களுக்கும் வாய்ப்பு

கோவிட் 19 தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை முறையாக முன்னெடுப்பதில் சிரமங்களுக்குள்ளானவர்களுக்கு இந்த வாரம் முதல் 07 வீதம் சலுகை வட்டியில் கடன் வழங்கப்படவுள்ளதாக கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சும் கைத்தொழில் அமைச்சும் இணைந்து மேற்கொண்டுள்ள இந்தக் கடன் திட்டம் மீண்டும் வலுவூட்டல் ('RE ENERGISE') என பெயரிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

### நிதி மற்றும் கைத்தொழில் அமைச்சுகள் இணைந்து 'RE ENERGISE' என்ற பெயரில் இத்திட்டத்தை அமுல்படுத்துகின்றன

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் நலிவுற்ற அல்லது முடங்கிய அல்லது தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ள எந்தவொரு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் அல்லது வர்த்தக நடவடிக்கைகளை மீள கட்டியெழுப்புவதற்கு ஊக்கமளிக்கப்படும் என செயலாளர் கூறினார்.

06

## வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியருடன் நாளை பேச்சு



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்களுடன் நாளை திங்கட்கிழமை பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

06

# பாராளுமன்றம் ஜூன் 04 இல் கூடி 07 இல் நிறைவுறும்

## மின்சார சட்டமூலம் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் ஜூன் 06 இல்

பாராளுமன்றம் நாளை மறுதினம் 04ஆம் திகதி முதல் 07ஆம் திகதிவரை கூட்டப்படவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் (28) கூடிய பாராளுமன்ற

06

## யாழ். இந்து கல்லூரி மீண்டும் சாதனை

# 03 பாடங்களில் 56 பேர் 'A' சித்தி



க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் (31) அறிவிக்கப்பட்டதன் மூலம் வழமை போன்று இந்த வருடமும் சிறந்த பெறுபேறுகளை யாழ். இந்துக் கல்லூரி பதிவு செய்துள்ளது. அதன்படி இந்த ஆண்டு பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 56 பேர் மூன்று பாடங்களிலும் A சித்தி பெற்றுள்ளனர். மேலும் இரண்டு B சித்தியுடன் 30 மாணவர்களும் ஒரு A சித்தியும், இரண்டு B சித்தியும்

06

# வாய் வீச்சு தலைவர்களால் நாட்டை முன்னெடுக்க முடியாது



வாய் வீச்சு தலைவர்களால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிகொண்டுசெல்லமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டின் அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளும் பல பிரச்சினைகளுக்கு மத்தியில்

06

## G.C.E. A/L பெறுபேறு வெளியீடு

# பல்கலை அனுமதிக்கு 173,444 மாணவர் விண்ணப்பிக்க தகுதி

## வட மாகாணத்திலிருந்தே அதிகம் பேர் தகுதி



கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றிய 269,613 பரீட்சார்த்திகளில் 173,444 பேர் (64.33 வீதமானோர்) பல்கலைக்கழகங்களுக்கு பிரவேசிப்பதற்காக விண்ணப்பிக்க தகுதி பெற்றிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெளியான பரீட்சை பெறுபேறுகளை 04 மாதங்களுக்கும் குறைவான காலத்துக்குள் வெளியிட முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பரீட்சைக்கு தோற்றிய 229,057 பாடசாலை பரீட்சார்த்திகளில் 151,343 பேரும் 40,556 தனியார் பரீட்சார்த்திகளில 22,101 பேரும் இந்த வருடம் பல்கலைக்கழக பிரவேசத்துக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுள்ளனர்.

06

# பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் விலை மே 31 நள்ளிரவு முதல் குறைப்பு

## Ceypetco, IOC, Sinopec நிறுவனங்கள் அறிவிப்பு



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் (31) நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளில் திருத்தங்களை செய்துள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், இதன் புதிய விலை 355 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் டீசலின் விலை 16 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலை 317 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

06

# இந்தியாவில் கடும் வெப்பம் இதுவரை 85 பேர் உயிரிழப்பு

## ஒடிசாவில் அதிகளவு மரணங்கள் பதிவு



இந்தியாவின் ஒடிசா, பீகார், ஜார்க்கண்ட், இராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கடந்த 24 மணி நேரத்தில் கடும் வெப்பத்தால் 85 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஒடிசா மாநிலத்தில் அதிகளவான உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. அங்கு கடந்த சில நாட்களாக கடுமையான வெப்ப அலை வீசி வருகிறது.

இதேவேளை பீகார் மாநிலத்தின் பல பகுதிகளில் 44 டிகிரி செல்சியசை கடந்து வெப்பம்

06

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்காகவே

# சட்ட மாஅதிபரின் சேவைக்காலம் நீடிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் தொடர்பாக பேராயர் பேரவையுடன் இணைந்து எதிர்கால செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் குழுவின் பிரதிநிதியாக சட்ட மாஅதிபர் முக்கிய பங்காற்றுவதால், சட்ட மாஅதிபரின் சேவையை நீடிக்க தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஜனாதிபதியை சந்தித்து இது தொடர்பில் கேட்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

06

## எங்கள் கருத்து...

# இளவயதினரைச் சீரழிக்கும் கைத்தொலைபேசி பாவனை!

கைத்தொலைபேசிப் பாவனையினால் நன்மைகளும் உள்ளன, அதற்கு மாறாக தீமைகளும் நிறைந்துள்ளன. ஸ்மார்ட் தொலைபேசிகளைப் பயன்படுத்துபவர்களில் அநேகமானோர் இளவயதினராகக் காணப்படுவதால், நன்மைகளுக்குப் பதிலாக தீமைகளே அதிகமாக உள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேசமயம் இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ளதாக ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

தென்மாகாணத்திலுள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள் குழுவொன்று ஆய்வை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

சிறுவர்கள் அதிகமான நேரம் கைத்தொலைபேசியில் மூழ்கியிருப்பதனால் பலவகையான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் இதன் காரணமாக இரவு நேரத்தில் உறக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தொலைபேசிக்கு அடிமையான சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கையை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்த நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

இதுஒருபுறமிருக்க, மற்றொரு அதிர்ச்சியான தகவலும் வெளியாகியிருக்கின்றது. கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையான சிறுவர்களில் ஒரு தொகையினருக்கு

06

## 2024 ஒகஸ்ட் முதல் வாரத்துக்குள்

# மொரட்டுவை மருத்துவ பீடம் SAITM வளாகத்துக்கு மாற்றம்



மொரட்டுவை மருத்துவ பீடத்தின் முறையான செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் மொரட்டுவை மருத்துவ பீடத்தை 2024 ஒகஸ்ட் முதல் வாரத்துக்குள் SAITM வளாகத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கல்வி அமைச்சின்


06

## மட்டு. நகரில் 'புத்தகத் திருவிழா'



மட்டு. நகரில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் முயற்சியினால் உருவாக்கப்பட்ட நவீன நூலகத்துக்கான 'புத்தகத் திருவிழா' புத்தக சேகரிப்பு குழுத் தலைவர், முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் மு.பவளகாந்தன் தலைமையில் மட்டு. மாநகர சபை நூலக கேட்போர் கூடத்தில் நேற்று (01) நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டு புத்தகங்களை வழங்கிய போது... (படம்: வெல்லாவெளி தினகரன் விஜயரெத்தினம்)

# ஆறு மாவட்டங்களுக்கு மீண்டும் 24 மணிநேர மண்சரிவு எச்சரிக்கை



நாட்டில் தற்போது நிலவும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக 06 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி கொழும்பு, கண்டி, கேகாலை, குருநாகல், நுவரெலியா மற்றும்

06

# முதியோருக்கான மே மாத கொடுப்பனவு ஜூன் 02ஆவது வாரம் வழங்கப்படும்

## நலன்புரி நன்மைகள் சபை அறிவிப்பு

## ஜூன் மாத கொடுப்பனவும் அதே மாதம் வழங்க ஏற்பாடு

நலன்புரி சபையினால் அதிகரிக்கப்பட்ட முதியோருக்கான 2024 மே மாத கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தேவையான சுமார் 1,518 மில்லியன் ரூபா நிதி மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது. தொழில்நுட்ப காரணங்களினால் கொடுப்பனவுகளை

06

## பொலிஸாரால் தேடப்பட்டு வந்த

# சந்தேக நபர் ஒஸ்மான் CID யால் அதிரடி கைது

## 72 மணிநேரம் தடுப்புக்காவலில் வைத்து விசாரனை



ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் என குஜராத்தில் கைது செய்யப்பட்ட 04 இலங்கையரையும் வழிநடத்தியதாக கூறப்பட்ட சந்தேக நபர் கொழும்பில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் சந்தேக நபரை 72 மணி நேரம் தடுப்புக்

06





## நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டு

# இளைஞர்களின் வேலையில்லா பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## ஏற்றுமதி பொருளாதாரமாக மாறுவதற்கான நேரம் இது

### வடக்கு இளைஞர்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தல்



இந்த வருடம் வங்குரோத்து நிலையில் இருந்து நாடு விடுபட்டதன் பின்னர் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடமாகாணத்தை மையமாக கொண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**தற்போதைய இளைஞர் தலைமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும்**

வடமாகாணத்தைச் சேர்ந்த, பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவான இளைஞர் யுவதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டதுடன், அவர்கள் தமது கேள்விகளை நேரடியாக ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அந்தக் கேள்விகள் அனைத்துக்கும் சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி, இளைஞர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி வழங்கிய பதில்களும் பின்வருமாறு.

**கேள்வி:**

**ஜனாதிபதி அவர்களே, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண நிலையம் இளைஞர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளக்கூடிய இடமாகும். ஆனால் வெளியூர்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி வழங்குவதில் சிக்கல் உள்ளதா?**

பதில்:

அந்த நிலையம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேசிய இளைஞர் சேவை மன்றத் தலைவருக்கு அறிவித்துள்ளேன். அந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் யாழ் நிலைய அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு நிதி ஒதுக்க முடியும். குறிப்பாக இந்நாட்டு இளைஞர்களுக்காகவே தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உருவாக்கப்பட்டது. இளைஞர்களின் கருத்துகளின் அடிப்படையில் அன்று நான் தேசிய இளைஞர் சேவை மன்றத்தை ஸ்தாபித்தேன். இது மிகவும் வெற்றிகரமான திட்டம் என்றே கூற வேண்டும். மிகவும் கடினமான நேரத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக நான் பொறுப்பேற்றேன். இப்போது படிப்படியாக முன்னேறி வருகிறோம். அதேவேளை, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிகளில் தற்போதைய இளைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். உலகத்துடன் முன்னேறிச் செல்வதற்கு உங்கள் ஆலோசனைகளை எங்களுக்குத் தாருங்கள். அன்று ஜே. ஆர். ஜெயவர்தன அக்கால இளைஞர்களுக்கு உகந்த வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு கேட்டார். அனைவரிடமிருந்தும் கருத்துக்களைப் பெறுங்கள். இளைஞர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. அதற்கமைய நாம் செயல்பட வேண்டும்.

**கேள்வி:**

**ஜனாதிபதி அவர்களே, வடக்கில் குடிநீர் தட்டுப்பாடு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதால், அதற்கான தீர்வை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.**

பதில்:

வடக்கில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் உப்புநீர் சுத்திகரிப்பு தொடர்பான புதிய திட்டமொன்றை (Desalination Project) முன்னெடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த திட்டம் ஜூன் மாதமளவில் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது. வடமாகாணத்தில் ஒரு காலத்தில் போதுமான அளவு நீர் இருந்தது. சில நேரங்களில் கடுமையான நீர்த் தட்டுப்பாடு ஏற்படும். நீர்ப் பற்றாக்குறை ஏற்படும் நேரத்தில் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்று ஆராய வேண்டும். இந்தப் பிரச்சினை வடக்கில் மட்டுமல்ல. தெற்கிலும் சில பகுதிகளில் உள்ளன. எமக்குக் கிடைத்துள்ள அறிக்கைகளின்படி 2050ஆம் ஆண்டுக்குள் வறண்ட பிரதேசத்தில் மழைவீழ்ச்சி குறையும். ஈர வலயத்தில் மழை அதிகரித்து நீர் அதிகரிக்கும். காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் நமக்கு மட்டுமல்ல, உலகில் பல நாடுகளுக்கும் உள்ளன. காலநிலை மாற்றத்திற்கு தீர்வு காண உலக நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம்.

**கேள்வி:**

**ஜனாதிபதி அவர்களே, பலர் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சுயதொழில் மேற்கொள்வதற்கு வட்டியில்லா கடன் திட்டத்தை அறிமுகப்படுத்த முடியுமா?**

பதில்:

வேலையில்லாத் திண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி முழு நாட்டினதும் பிரச்சினையாக மாறியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், தொழில்களுக்கான ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. இவ்வருடத்திற்குள் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீட்கப்படும் என நம்புகிறோம். அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. நாட்டின் வளர்ச்சிக்கு நமது நாட்டு பொருளாதாரத்தை, ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்ற வேண்டும்.

அடுத்த 5 - 10 ஆண்டுகளில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே எங்களது நோக்கமாகும். அதற்கான சட்டங்கள் ஜூன், ஜூலை மாதங்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதாரம் எதிர்மறையாக இருந்தது. ஆனால், 2024 இல் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்ட பின்னர் வங்கி முறை மூலம் சலுகைக் கடன் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி:**

**ஜனாதிபதி அவர்களே, தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் அமுல்படுத்தப்படும் யொவுன்புர வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிக்க முடியுமா?**

பதில்:

காலநிலையைப் பொறுத்து, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இளைஞர் நிகழ்ச்சித் திட்டம் மார்ச் மாதத்தில் தான் நடத்தப்படுகிறது. யொவுன் புர நிகழ்ச்சியை அடுத்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடத்த தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு ஆலோசனை வழங்குவேன். அதற்கு இப்போதே தயாராகுங்கள். மேலும், இந்த ஆண்டு ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது யொவுன்புர திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**கேள்வி:**

**ஜனாதிபதி அவர்களே, அரச சேவைப் பரீட்சைகளுக்கான வயதெல்லை நீடிக்கப்படுவதோடு, பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு அரச துறையைத் தவிர வேறு வேலை வாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்களை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியுமா?**

பதில்:

பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறும் மாணவர்களின் வயது குறித்து கண்டறிய வேண்டியது அவசியம். எமது காலத்தில் 20 - 22 வயதில் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறுவர். அதனால் தான் வயதெல்லை 25 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதென நான் நினைக்கிறேன். பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் சிலர் அரச சேவையில் சேருகின்றனர். அரச சேவையில் இணையாதவர்களின் நிலை என்ன? விவசாயம் செய்யும் நபர்களுக்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட உதவியளிக்க முடியும்.

**கேள்வி:**

**உலகப் புகழ்பெற்ற வர்த்தகரான எலோன் மஸ்க் இலங்கைக்கு வரவுள்ளதாக கூறப்படுகிறது. இது இளைஞர்களுக்கு எவ்வாறு பயனளிக்கும்?**

பதில்:

உலகளாவிய “Starlink” வலையமைப்பை இலங்கையுடன் இணைப்பது பற்றி எலோன் மஸ்க்குடன் கலந்துரையாடினேன். "Starlink" மூலம், கொழும்புக்கு வெளியே உள்ள WiFi பிரச்சினை நிவர்த்திக்கப்படும். மேலும், நமது நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி குறித்தும் அவருடன் கலந்தாலோசித்தேன்.

அது குறித்த முக்கியமான திட்டங்களை செயல்படுத்த எமது நாட்டுக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளேன். மேலும், “Starlink” வலையமைப்பு குறித்து ஆராயுமாறு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான பணிகள் நிறைவடைந்துள்ளன. இந்தத் திட்டத்திற்கு பாதுகாப்பு அமைச்சின் கருத்துகளை அறிய வேண்டியுள்ளது"

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் பி. எம். எஸ். சார்ள்ஸ், இளைஞர் விவகாரம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஜனாதிபதி பணிப்பாளர் ரந்துல அபேதீர, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன உட்பட பெருமளவான இளைஞர் யுவதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.







கொழும்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை, சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளருமான ராஜா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தென்காசி மாவட்ட செயலாளர் சையது பட்டாணி, மணிச்சுடர் ஊடகவியலாளர் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் மரியாதை நிமித்தமாக, அவரது இல்லத்தில், கடந்த 29ஆம் திகதி வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார்கள். அதேபோல் சிங்கப்பூர் தொழிலதிபர் மற்றும் ரோயல் கிங்ஸ் நிறுவனர் சிராஜுதீன், சிங்கப்பூர் ரோயல் கிங்ஸ் மேலாளர் முஹம்மது ஹாரீஸ் ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்கள். **(படங்கள்: திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

# பாகிஸ்தானில் நடைபெற்ற "From Gandhara to the world " மாநாடும் கண்காட்சியும்

பாகிஸ்தான் இஸ்லாமாபாத் நகரில் கடந்த மாதம் 28 மற்றும் 29 ஆகிய இரு தினங்களில் இடம்பெற்ற பாரம்பரியங்கள் குறித்தான சர்வதேச மாநாடான "From Gandhara to the world " Symposium and Exhibition நிகழ்வில் இலங்கை சார்பாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷர்ரப், இலங்கை பாகிஸ்தான் நட்புறவுச் சங்கத் தலைவர் இத்ரீஸ் அத்மானி பௌத்த மதகுருமார்கள், ஊடகவியலாளர்கள், தொல்லியல் நிபுணர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் பெஸாவர் நகரில் உள்ள ஆளுநர் இல்லத்தில் ஆளுநர் பைசால் காசிமுக்கும், இலங்கை புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் உள்ளிட்ட இலங்கை குழுவினருக்குமிடையில் பரஸ்பர சந்திப்பும் விருந்துபசாரமும் இடம்பெற்றது. இச்சந்திப்பில் இரு நாடுகளுக்குமிடையிலான பாரம்பரிய சுற்றுலாத்துறையை மேம்படுத்துதல், பௌத்த பாரம்பரியங்கள் தொடர்பான அறிவையும், அனுபவத்தையும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளல், வர்த்தக உறவுகளை வளர்த்துக் கொள்ளல் போன்ற முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.







# தமிழருவி த.சிவகுமாரனின் ஆன்மிக இலக்கியப் பயணம்

லண்டனிலிருந்து சி.தயாளன்



இலங்கையின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான தமிழருவி த.சிவகுமாரன் இம்மாதம் 22, 23 ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெறும் உலக சைவ மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்தும் 23ஆவது உலக சைவ மாநாடு முதல்நாள், லண்டன் விம்பிள்டன் ஸ்ரீ கணபதி கோவில் மாநாட்டு மண்டபத்திலும் இரண்டாம் நாள் லண்டன் லூசியம் சிவன் கோவில் மண்டபத்திலும் நடைபெற உள்ளது.

''சைவமும் தமிழிசையும்'' என்னும் பொதுத் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் தமிழகம், மலேசியா, கனடா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிருந்து மகா சந்நிதானங்களும், அறிஞர்களும் கலந்து சிறப்புரைகளையும் செயலமர்வுகளையும் நிகழ்த்தவுள்ளனர்.' சைவ ஆலயப் பயன்பாட்டில் தமிழிசை', 'இளைஞர்கள் மத்தியில் தமிழிசை' என்னும் பொருள்களில், இரு தினங்களும் பேருரைகளை ஆற்றவுள்ள தமிழருவி, முதல்நாள் மாநாட்டில் நடைபெறவுள்ள 'இடம் பெயர்ந்ததும் புலம் பெயர்ந்ததும் எம் தமிழ் மக்களுக்கு நன்மைகளைப் புரிந்திருக்கிறதா?

அல்லது தீமைகளைப் புரிந்திருக்கிறதா? என்னும் தலைப்பில் ஆறு அறிஞர்கள் பங்குபற்றும் பட்டி மன்றத்திற்கு தலைமை தாங்கவுள்ளார். மாநாட்டில் பல அறிஞர்கள் எழுதிய சைவம், தமிழிசை பற்றிய கட்டுரைகளைத் தாங்கிவரும் மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

லண்டனில் நடைபெறவுள்ள தமிழ் விழாக்கள், கம்பன் விழா, வவுனியா சங்கமம், நடன அரங்கேற்றம், மூத்தோர் நிலைய நிகழ்வுகள், ஆலய உற்சவங்களில் உரையாற்றவுள்ள

தமிழருவி ஸ்கொற்லாந்து, எடின்பரோ நகரில் இருந்து சிறப்பாகச் செயற்பட்டுவரும் இந்து மகாசபையின் பத்தாமாண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

லண்டனில் 1998 இல் நடைபெற்ற முதலாவது உலக சைவ மாநாட்டில் கலந்து கொண்டதிலிருந்து இங்கு நடைபெற்ற பதினொரு சைவ மாநாடுகளிற்கு இவர் அழைக்கப்பட்டு சிறப்புரைகளை ஆற்றிய பெருமைக்குரியவர். தமிழருவி சிவகுமாரன் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், ஹொலண்ட், நோர்வே, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் இலக்கிய, சமய அமைப்புகளால் தமிழ் இலக்கிய ஆன்மிகச் சொற்பொழிவுகளுக்காக தொடர்ச்சியாக அழைக்கப்பட்டு வருபவர்.




## பரிசு அட்டைகளுக்கு சுகாதார அணையாடைகளை வழங்குவதற்கு உங்களுடைய வர்த்தக நிலையத்தையும் பதிவுசெய்துக் கொள்ளுங்கள்



சுகாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலமாக பாடசாலை மாணவிகளை வலுவூட்டும் நோக்கத்துடன் நாடு முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவிகளுக்கு புதிய கருத்திட்டமாக சுகாதார அணையாடைகளை கொள்வனவு செய்வதற்கு பரிசு அட்டைகளை வழங்கும் செயற்றிட்டம் ஒன்று கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பாக ஆர்வம் காட்டும் நாடளாவிய வர்த்தக உரிமையாளர்களினால் கையடக்க தொலைபேசியில் 'play store' இல் நுழைந்து 'Thilinapath Android' பதிவிறக்கம் செய்து வழங்குநர்களாக பதிவு செய்துக் கொள்ளலாம்.

அதற்காக பின்வரும் ஆலோசனைகளை பின்பற்றி 2024/06/05 ஆம் திகதி தொடக்கம் உங்களுடைய பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

### பதிவு செய்துக் கொள்வதற்காக முன்வைக்கப்பட வேண்டிய தகவல்கள்

- உங்களுடைய கையடக்க Android தொலைபேசியில் play store இல் நுழைந்து Thilinapath Android பதிவிறக்கம் செய்து 300.00 ரூபாய் கட்டணம் செலுத்துவதன் மூலம் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- இதற்காக வர்த்தக உரிமையாளரின் பெயரில் திறக்கப்பட்ட வங்கிக் கணக்கின் தகவல் மற்றும் இதை பயன்படுத்துவதற்கு உபயோகப்படுத்தும் தொலைபேசி இலக்கத்தை வழங்குவது அத்தியாவசியமாகும்.
- பதிவு செய்வதற்குரிய மேற்படி தகவல்களை சமர்ப்பித்து இரண்டு நாட்களுக்குள் உங்களுடைய பதிவு உறுதிப்படுத்தப்படும்.
- பதிவு செய்யும் வர்த்தகர்களுக்கு கையடக்க தொலைபேசி இலக்கம் ஒன்றை பதிவிறக்கம் செய்யும் வாய்ப்பு கிடைப்பதுடன் அதன் மூலமாக மாத்திரம் பரிசு அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டை (Scan) செய்வதன் ஊடாக பரிசு அட்டைகளுக்கான சுகாதார அடையாளங்களை அணையாடைகளை விற்பனை செய்யும் வசதிகள் ஏற்படும்.
- இதில் உள்நுழைவதன் மூலம் மேலதிக தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளலாம்

உங்களால் விற்பனை செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்குரிய பரிசு அட்டைகளின் பெறுமதி பரிசு அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் காலாவதியான பின்னர் உங்களுடைய வங்கி கணக்கிற்கு நேரடியாகவே அனுப்பப்படும்.

**2024.06.05 ஆம் திகதி முதல் பதிவுகள் ஆரம்பிக்கப்படும்**




play store இல் பிரவேசித்து Thilinapath Android பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்
Hot Line: 0112 785 573

கல்வி அமைச்சு
Ministry of Education

முதற்கட்டம் 2024.06.10 ஆம் திகதி முதல் 2024.07.10 ஆம் திகதி வரையிலும் பரிசு அட்டைகள் மூலமாக சுகாதார அணையாடைகளை கொள்வனவு செய்வதற்கு மாணவிகளுக்கு வாய்ப்பு உண்டு.



# வடபகுதி மக்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்றாய் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க!!

## வெற்றிகரமாக நிறைவடைந்த மூன்று நாள் சூறாவளிப் பயணம்

அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் வடமாகாணம் மிகவும் முக்கியம் வாய்ந்த பிரதேசமாகும். ஜனாதிபதி ஒருவர் வடக்கிற்கு விஜயம் செய்வதாக இருந்தால் அது தென்பகுதியை கூர்ந்து அவதானிக்கச் செய்யும். மறுபக்கம் வடக்கிலுள்ள தமிழ்க்கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு அறிக்கை விடுவதும், புறக்கணிப்பதும் வாடிக்கையான விடயங்கள் எனலாம். எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், மறியல் என போராட்டங்கள் வேறு வெடிக்கும். எந்த ஜனாதிபதி அங்கு சென்றாலும் இந்த நிலைமை தான் இருக்கும்.

இவ்வாறான நிலைமையிலே கடந்த வார இறுதியில் ஜனாதிபதி வடக்கிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த விஜயத்தை முன்னெடுத்திருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடபகுதிக்கான விஜயம் பல வழிகளிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கவனிக்கத்தக்கதாகவும் அமைந்திருந்தது. மூன்று நாட்கள் வடக்கில் தங்கியிருந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி வடபகுதி மக்கள் பிரதிநிதிகளையும், இளைஞர் சமூகத்தையும், சந்தித்து கருத்துப் பரிமாறிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

தாயின் வருகைக்காக காத்திருக்கும் குழந்தையைப் போன்று ஜனாதிபதியின் வருகையை வடக்கு மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். சில ஜனாதிபதிகளின் வருகையின்போது போராட்ட களமாக வெடிக்கும் வட மாகாணம் இம்முறை திருவிழாக் கோலம் பூண்டது என்றால் அது மிகையல்ல.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று இரண்டு வருடங்கள் கூட நிறைவடையாத நிலையில் அவர் வடக்கிற்கு பல தடவைகள் சென்று வந்துவிட்டார். அங்கு செல்லும் போதெல்லாம் அவர் வெறுங்கையோடு சென்றதில்லை. அது மட்டுமன்றி பாராளுமன்றத்திலும் ஜனாதிபதி அலுவலகத்திலும் தமிழ் கட்சிகளுடன் அவ்வப்போது சந்திப்புகள் நடக்கும். வடக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு அவற்றுக் தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படும். ஆராயப்படும் விடயங்கள் தீர்க்கப்பட்டுள்ளனவா என



அதிகாரிகள் முன்னிலையில் மீளாய்வு செய்யவும் ஜனாதிபதி தவறமாட்டார். சில விடயங்களுக்கு காலக்கெடு விதிக்கப்பட்டு அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படும்.

கடந்த இரண்டு வருட காலத்திற்குள் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணி விடுவிப்பு, கடற்றொழில் சார்ந்த விடயங்கள், காணாமல் போனோர் விவகாரம், மீள்குடியேற்றம், வீடமைப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கைதிகள் விடுதலை என பல முக்கிய பிரச்சினைகளுக்கு குறிப்பிடத்தக்க தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்றால் அதனை யாரும் மறுக்க மாட்டார்கள்.

அரசியலுக்காக ஜனாதிபதியை பல்வேறுவிதமாக தமிழ்க் கட்சிகள் விமர்சித்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக கரிசனை கொண்டுள்ளார் என்பதை அவை நன்கு அறிந்தே வைத்துள்ளன. அதனால் தான் நீண்டகாலம் நீடித்த தமிழ் கைதிகளின் விடுதலை பெருமளவு தீர்ந்துள்ளது. காணி விடுவிப்பும் திருப்திப்படும் மட்டத்தில் உள்ளது.

இந்த வருடத்தில் இரண்டாவது தடவையாகவும் வடக்கிற்கு மிகவும் முக்கியம் வாய்ந்த விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம். முல்லைதீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு சென்றார். அவரின் சூறாவளிச் சுற்றுப் பயணத்தினால் வடபகுதி புதுப்பொலிவு பெற்று பழைய மிடுக்குடன் மீண்டும் தலைநிமிர்ந்து நிற்கும் நம்பிக்கையைப் பெற்றது.

### வடக்கிற்கு காணி அதிகாரம்

தெற்கில் காணி உரித்து வழங்கும் செயற்பாடுகள் பல மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட நிலையில் ஆண்டாண்டு காலமாக தமது சொந்த நிலத்திற்கு முழுமையான உரித்தின்றி இருந்த வடபகுதி மக்களுக்கு முதன்முறையாக, ஜனாதிபதியால் காணி உறுதிகள் வழங்கப்பட்டன. நீண்டநாள் கனவு நனவாகியதில் பெருமகிழ்ச்சி அடைந்த தாய்மார்களும் பாட்டன்மார்களும் கண்கள் கலங்க ஜனாதிபதிக்கு தமது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க மறக்கவில்லை அம்மக்கள். வடக்கில் 18 ஆயிரத்திற்கும் அதிகமான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட உள்ள போதும் ஆளணிப் பற்றக்குறை காரணமாக நான்கு மாவட்டங்களிலும் சுமார் 3500 காணி உறுதிப் பத்திரங்கள் மாத்திரமே பகிரப்பட்டன. எதிர்வரும் காலத்தில் மேலும் 13 853 காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வுகளிலும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை திறந்து வைக்கும் நிகழ்வுகளிலும் தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பில் டலஸ் அலகப்பெருமவுக்கு வாக்களிப்பதாக பகிரங்கமாக அறிவித்து விட்டு வாக்கெடுப்பில் மறைமுகமாக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அவரை தெரிவு செய்தமை மிகச் சரியானது என்பதை அவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் நன்கு உணர்ந்திருப்பர். வாக்குறுதியை மீறியது பிழையல்ல என்பது இன்று நிதர்சனமாகி வருகிறது.

பாராளுமன்றத்திலும் வெளியிலும் அநேகமான தமிழ்க் கட்சி எம்.பிகள் ஜனாதிபதியை கடுமையாக விமர்சிப்பது தெரிந்ததே. ஜனாதிபதியை எவ்வளவு தான் விமர்சித்தாலும் வடக்கில் அவர் செய்து வரும் அளப்பரிய சேவைகளை அவர்களால் பாராட்டாமல் இருக்க முடியாது. அதனால் தான் போலும் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வுகளில் உரையாற்றிய எதிர்த்தரப்பு தமிழ் எம்.பிக்கள் பலரும் ஜனாதிபதியின் வருகையையும் அவர் அளித்து வரும் சேவைகளையும் கிலாகித்துப் பேசியிருந்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு முக்கியஸ்தரும் எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி பங்கேற்ற பல நிகழ்வுகளில் கலந்து கொண்டார். நீண்டகாலமாக காணி உரிமை இல்லாமல் இருந்த மக்களுக்கு காணி உரித்து வழங்க நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்க அவர் மறக்கவில்லை. அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கும் முயற்சிகளுக்கும், காணி அதிகாரத்துக்கான உறுதி வழங்கும் இந்த முயற்சிக்கும் அவர் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தனும் ஜனாதிபதியின் செயற்பாடுகளை பாராட்டியிருந்தார்.

"யுத்த காலத்தில் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட காணிகளை மக்களுக்கு மீள வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஜனாதிபதிக்கு முன்வைத்திருந்தோம். ஜனாதிபதி பதவிக்கு வந்த பின்னர் இந்தக் காணிகளை விடுக்க தொடர்ந்து முயற்சித்தார். இதில் அவருக்கு இடையூறுகளைச் சந்திக்க நேரிட்டது. இருந்தும் உறுதியுடன் ஜனாதிபதி இந்த பணிகளை முன்னெடுத்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

"வடக்கில் உள்ள ஏனைய பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி தீர்வு கண்டு வருகிறார். அரசியல் கைதிகள் விடுக்கப்பட்டுள்ளனர். காணமல் போனோர் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி ஆர்வமாக இருக்கிறார்" என்றும் அவர் மேடையில் வெளிப்படையாக குறிப்பிட்டிருந்தார்.

விநோ நோகராதலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் எம்.பி ஆகியோரும் பெரும்பாலான நிகழ்வுகளில் பங்கேற்று வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகளுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினார்கள்.

### சுகாதாரத்துறையில் மறுமலர்ச்சி

யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் சென்றிருந்தாலும் வடக்கில் சுகாதாரத் துறையில் இன்னும் குறைபாடுகள் இருக்கவே செய்கிறது. இந்த நிலையில் கடந்த நல்லாட்சியில் பிரதமராக இருந்த போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கில் சுகாதாரத்துறை முன்னேற்றத்திற்கு பல சேவைகளை அளித்திருந்தார். அதன் நீட்சியாக வடக்கின் சுகாதாரத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பல திட்டங்கள் ஜனாதிபதியின் விஜயத்தின் போது திறந்து வைக்கப்பட்டன. மேல் மாகாணத்தைப் போன்று உயர்தர சுகாதார சேவைகளை கொண்ட மாகாணமாக வடமாகாணம் மேம்படுத்தப்படும் வகையில் இந்த முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக யாழ். வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றும், தமிழ் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கும் ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டியுள்ளார். விரைவில் அந்தக் கனவும் நனவாக இருக்கிறது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் அதிநவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஏ9 வீதியில் சுகாதார சுற்றுலாத்துறையை வளர்க்கவும் இந்த சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியினால் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடம் திறந்து வைக்கப்பட்டதோடு 46 வருடங்களின் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது கட்டடம் என்பதால் இது பலவழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றே கூற வேண்டும். இந்தத் திட்டத்திற்காக 942 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் துறை கட்டடம், இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவப் பயிற்சிக்காக 1200 மாணவர்களுக்கு இடமளிப்பதுடன் சர்வதேச ஆராய்ச்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்க உதவும் என்பது விசேட அம்சமாகும்.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியில் 5,320 மில்லியன் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சிறப்பு மகளிர் சுகாதார நிலையம் (Centre of Excellence for Women's Healthcare) கடந்த 25ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. புதிய பிரிவு வடமாகாண சுகாதார கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

2017ஆம் ஆண்டு பிரதமராக இருந்த போது வடமாகாண சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக ஆரம்பித்த மற்றொரு திட்டத்தையும் இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி திறந்து வைத்திருந்தார்.

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் வைத்திய புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுபநேரத்தில் திறந்து வைத்தார். நெதர்லாந்து அரசாங்கத்தின் ஆதரவுடன் 4500 மில்லியன் ரூபா செலவில் இந்த மருத்துவ சிகிச்சை நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் உள்ள மிகப் பெரிய மருத்துவ புனர்வாழ்வு சிகிச்சை மற்றும் மனநல அபிவிருத்தி நிலையம் இது என்பதோடு மனநல மறுவாழ்வுப் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு, ஆய்வுகூடம், கதிரியக்கப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு ஆகியவற்றையும் கொண்டுள்ளது விசேட அம்சமாகும்.

நவீன வைத்தியசாலைகளுடன் கூடிய சுகாதார வசதிகளை வடக்கு மாகாணம் பெற்றுள்ளதாக இங்கு குறிப்பிட்ட ஜனாதிபதி, மேல் மாகாணத்தைப் போன்று மேம்பட்ட சுகாதார சேவைகளைக் கொண்ட மாகாணமாக வடக்கின் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்வதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்திருந்தார். வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 04 வைத்தியசாலை நிலையங்களில் உள்ள உபகரணங்கள் இலங்கையில் உள்ள பல வைத்தியசாலைகளில் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

### யாழ் ஆசிரியர் பாரம்பரியம் மீண்டும்...

ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர்கள் தான் சிறந்த ஆசிரியர்களாக இருந்தார்கள். அந்தப் பாரம்பரியத்தை மீண்டும் ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதில் ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார். அதன் ஒரு அங்கமாக கடந்த வாரம் யாழ் மாவட்டத்தில் 375 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது.



உயர் மட்டத்தில் கல்வி பேணப்பட்டதால் தான் யாழ்ப்பாணம் கட்டியெழுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்தில் உள்ள சில பாடசாலைகள் உலகம் முழுவதும் பெரும் புகழைப் பெற்றிருந்தன. ஹார்ட்லி கல்லூரி மாணவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்திய வரலாற்றை நியமனம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

யாழ்ப்பாணத்தின் கல்வி முறை மீண்டும் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும். வடமாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி யாழ்ப்பாணத்தில் பாடசாலை முறைமையை முன்னைய சர்வதேச மட்டத்திற்கு கொண்டு வருவதற்கான திட்டங்களை சமர்ப்பிக்குமாறு வடமாகாண ஆளுநருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

கல்வித்துறை முன்னேற்றம் தான் ஒரு சமூகத்தின் உயர்வில் பிரதானமான காரணி என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

### இளைஞர்களுடன் கலந்துரையாடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இளைஞர் யுவதிகளின் கருத்துக்களை பெறுவதிலும் அவர்களுடன் கலந்துரையாடுவதிலும் அதிக ஆர்வம் காட்டி வருகிறார். அவரின் அநேகமான விஜயங்களில் நிச்சயம் இளைஞர்களுடான சந்திப்பொன்றுக்கு நேரம் ஒருக்கப்பட்டிருக்கும். அந்த வகையில் இம்முறை வடக்கு விஜயத்தில் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் அப்பிரதேச இளைஞர் யுவதிகளை சந்தித்தார் ஜனாதிபதி. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த சந்திப்புகள் இடம் பெற்றன. இதன்போது பிரதேச இளைஞர்களின் திறன்களையும் கலாசாரத் திறமைகளையும் கண்டுகளிக்கவும் அவர் தவறவில்லை. அவர்களை பாடவும் ஆடவும் ஊக்கப்படுத்தினார்.



இளைஞர் யுவுதிகளினால் தொழில்வாய்ப்பு, முதலீடு, குடிநீர்ப் பிரச்சினை,அபிவிருத்திச் செயற்பாடுகள், விவசாயத்துறை அபிவிருத்தி, சுற்றுலாத்துறை, ஏற்றுமதிப் பொருளாதாரம் என பல்வேறு விடயங்கள் பற்றி தங்குதடையின்றி ஜனாதிபதியிடம் வினவுவதற்கு அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அவர்களின் அனைத்துக் கேள்விகளுக்கும் சளைக்காமல் இன்முகத்துடன் பதில் கொடுத்திருந்தார் ஜனாதிபதி.

### திடீர் சந்திப்பு

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தில் முக்கியமான வேறு சில விடயங்கள் நடத்திருந்தன. முல்லைத்தீவு மாவட்டத்தில் "உறுமய" வேலைத் திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்ற போது. ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக்கூறி அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள், கல்லூரி முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வடமாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் அந்த இரு பெண்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளை கேட்டுள்ளார். ஆனால் தங்களின் பிரச்சினையை ஜனாதிபதியிடம் தான் முன்வைக்க வேண்டும் என்று அவர்கள் பிடிவாதமாக இருந்தனர்.

அதனையடுத்து, வடமாகாண ஆளுநரால் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது. வேலைப்பளுவுக்கு மத்தியிலும் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிய முன்வந்தார். கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்களின் காணிப் பிரச்சினை தொடர்பில் அந்தப் பெண்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

மற்றொரு முக்கிய அம்சமாய் அமைந்தது சுகவீனமுற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஷ்வரனை அவரது வீட்டுக்குச் சென்று ஜனாதிபதி சந்தித்தமை. எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சி.வியுடன் சில நேரம் உரையாடி அவரது உடல் நலன் குறித்து விசாரித்த ஜனாதிபதி, சில அரசியல் விடயங்கள் பற்றியும் பேசியதாக அறிய வருகிறது.

வடக்கு எம்.பிகளின் ஆதரவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனது வடக்கு விஜயத்தின் போது யாழ்ப்பாணம், முல்லைதீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு சென்றிருந்தார். அவர் பங்கேற்ற நிகழ்வுகளில் அநேகமான வடமாகாண எம்.பிகள் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், விநோ நோகராதலிங்கம், தர்மலிங்கம் சித்தார்த்தன் போன்ற எதிரணி எம்.பிகளும் ஆளும் தரப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் போன்றோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

''இதுவரை காலமும் பதவியில் இருந்த ஜனாதிபதிகளில் யாரும், எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முன்வரவில்லை. 1985ஆம் ஆண்டுக்குப் பின்னர் வனவள திணைக்களம் கையகப்படுத்திய காணிகளை, விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறிப்பாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை ஜனாதிபதி விடுவித்துள்ளார். அதலபாதளத்திற்குச் சென்ற நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்டியெழுப்பியுள்ளார். அவரது கரங்களைப் பலப்படுத்தினால் இந்த நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக ஜனாதிபதி மாற்றுவார்" என பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கையில் கூறியிருந்தார். அவரின் உரையை ஆமோதிக்கும் வகையில் சபையில் கரகோசம் வானை முட்டியது.

"2005இல் உங்கள் பயணத்திற்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வடபகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கிறேன்" என்று தமிழரசு கட்சி முக்கியஸ்தரான எம்.ஏ. சுமந்திரன் எம்.பி நாசுக்காக கூறியதில் இறந்த காலத்தைப் பற்றி மாத்திரமன்றி எதிர்காலம் பற்றிய சில நிஜங்களும் மறைந்துள்ளன எனலாம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு உட்பட வடக்கு மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணக்கூடிய ஒரே நபர் ரணில் விக்கிரமசிங்க தான். ஆரம்பித்த பல முன்னெடுப்புகளை பூர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அரியாசனத்தில் அவர் மீண்டும் அமர வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. வடக்கு மக்கள் அவருடன் கைகோர்க்க தயாரக இருக்கிறார்கள் என்பது அவர்களின் முகங்களிலும் பேச்சிலும் வெளிப்படவே செய்தது.

எம்.எஸ்.பாஹிம்

# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் முழுநாட்டுக்கும் நன்மையைத் தரும்

## முன்னாள் கல்வி அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அகிலவிராஜ் காரியவசம் பேட்டி

**பிங்கிரியவை மையமாகக் கொண்டு அமைக்கப்படும் இலங்கையின் மிகப்பெரிய முழுமையான ஒருங்கிணைந்த ஏற்றுமதி செயலாக்க வலயம் வடமேற்கு மாகாணத்திற்கு மாத்திரமன்றி, முழுநாட்டுக்கும் நன்மை வகிக்கும் ஓர் திட்டமாக அமையும் என முன்னாள் கல்வி அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். இந்த உத்தேசத் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அதனால் நாட்டுக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகள் குறித்து அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஜனாதிபதியினால் முன்மொழியப்பட்ட பிங்கிரிய ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் குறித்து உங்கள் கருத்து என்ன?**

பதில்: வடமேற்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் போன்ற பரந்த நோக்குடன் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையாகவே இதனை நான் பார்க்கிறேன்.

**கே: பிங்கிரியவில் ஏற்கனவே உள்ள ஏற்றுமதி செயலாக்க வலயம் தவிர, புதிய திட்டம் அதை விரிவுபடுத்தும் அல்லவா?**

பதில்: குறிப்பாக பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கூட்டு அபிவிருத்தி திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி அமைச்சரவையில் வழங்கப்பட்டுள்ளது. பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் 157 ஏக்கர் நிலமாகவும், 282 ஏக்கர் நிலமாகவும் உருவாக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்தப் பிரதேசத்தை மூன்றாம் கட்டமாக அபிவிருத்தி செய்வது புதிய பிரேரணையின் முன்முயற்சியாக எடுக்கப்பட்ட விடயமாகும்.

அதற்காக 666 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. முதலாவதாக குளியாப்பிட்டிய பிரதேசத்தில் கைத்தொழில் நகரமொன்றுக்கு ஏற்ற வகையில் பாரியளவிலான காணியைக் கண்டறியுமாறு ஜனாதிபதி என்னிடம் கோரிக்கை விடுத்தார். அதன்படி, தும்மலசூரிய பிரதேசம் உள்ளிட்ட பல பகுதிகள் ஆராயப்பட்டன. அப்போதுதான் பிங்கிரிய பிரதேசம் இதற்காக அடையாளம் காணப்பட்டது.



**வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கு வாய்ப்புகள் கிட்டும்**

**கே: இந்த அபிவிருத்தி வலயத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்தத் தேவையான நிதி எவ்வாறு கிடைக்கப்பெறும்?**

பதில்: தொழில்துறை மற்றும் முதலீட்டு வலயங்கள், பொதுக்கட்டமைப்புக்கள், அணுகலுக்கான வீதிகள், உள்ளக வீதிகள் உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் நிறைய பணம் செலவழிக்கிறது. கூடுதலாக, தனியார் துறை முதலீடுகள் அந்த துறைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. இவை அனைத்தையும் கொண்டு, இப்பகுதியில் ஒரு பெரிய வளர்ச்சியை உருவாக்க முடியும் என நாம் நம்புகிறோம்.

**கே: தற்போது செயல்படும் பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலய தொழிற்சாலைகள் எவ்வாறு இயங்குகின்றன?**

பதில்: அங்கு ஏற்கனவே பெரிய அளவில் தொழில்துறை பணிகள் நடைபெற்று, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. உலகப் புகழ்பெற்ற பிராண்ட்கள் கொண்ட தொழிற்சாலைகள் அங்கு நிறுவப்பட்டுள்ளன. ஆசியாவிலேயே இல்லாவிட்டாலும் தெற்காசியாவிலேயே மிகப்பெரியதாகக் கருதப்படும் மருந்துத் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்க சமீபத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், வாசனைத் திரவியங்கள் தயாரிப்பில் உலகில் உயர்ந்த நற்பெயரைக் கொண்ட ஒரு நிறுவனத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார். இவ்வாறான நிறுவனங்களின் உற்பத்திகளை உலகச் சந்தைக்கு வழிநடத்தி, அதன் மூலம் இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவருவதே இலக்காகும்.

**கே: இந்த பாரிய அபிவிருத்தித் திட்டத்தில் சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி உள்ளடக்கப்படவில்லையா?**

பதில்: அதற்காக நிறைய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. வடமேற்கு மாகாணத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்காக மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களுடன் பல்வேறு வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக இரணைவில மற்றும் ஹலவத்தை பகுதிகள் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கே: இந்தத் துறையில் முதலீட்டாளர்களுக்கு என்ன சிறப்புச் சலுகைகள் உள்ளன?**

பதில்: கிராமப்புற தொழில்மயமாக்கலை உருவாக்க, அரசாங்கம் கிராமப்புறங்களில் உள்கட்டமைப்பை முடிந்தவரை மேம்படுத்துகிறது. தொழிலதிபர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். மேலும், முதலீட்டாளர்களுக்கு பல்வேறு அரசுவரிச் சலுகைகள் மற்றும் பிற சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

**கே: ஒரு கொல்ஃப் மைதானம் அமைக்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இது பற்றிக் கூற முடியுமா?**

பதில்: ஹலவத்த பிரதேசத்தில் கொல்ஃப் மைதானத்தை நிர்மாணிப்பதற்கும் பிங்கிரியவை ஏற்றுமதி பதப்படுத்தும் வலயம் மற்றும் இரணைவில சுற்றுலா வலயத்துடன் இணைக்கும் புதிய வீதியை அமைப்பதற்கும் ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். இது மிகவும் மதிப்புமிக்க ஆலோசனையாகும்.

**கே: இந்தத் திட்டத்தில் இணைந்துகொள்ளத் தயாராக இருக்கும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதா?**

பதில்: ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1977 இல் இலங்கையில் திறந்த பொருளாதார முறையை அறிமுகப்படுத்தியது. கூடுதலாக, பொருளாதாரத்தில் பல பெரிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுமதி செயலாக்க வலயங்கள் மற்றும் புதிய பொருளாதார பார்வையுடன் அவற்றின் அபிவிருத்தியில் விரிவான அனுபவமுள்ள தலைவர்.

அவரது தொலைநோக்குத் தலைமையின் மூலம் முதலீடுகளை வெல்வது கடினம் அல்ல. அந்த நோக்குடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் மூலம், மதிப்புமிக்க முதலீட்டு வாய்ப்புகளை நாம் வெல்ல முடியும்.

**கே: பிங்கிரிய அடிப்படையிலான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்தின் முதன்மை நோக்கம் என்ன?**

பதில்: வடமேற்கு மாகாணம் மட்டுமன்றி அண்மையில் உள்ள மாகாணங்களுக்கும் புதிய முதலீடுகளைக் கொண்டுவருவதே இதன் முதன்மை நோக்கமாகும். புதிய தொழில்கள், சேவைகள் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் பொருளாதார ரீதியாக மேற்கொள்ளப்படுவதற்கானவாய்ப்பைவழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு, இப்பகுதியைச் சேர்ந்த வேலையில்லாத இளைஞர், யுவதிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்.

---

## இந்திய மக்களவைத் தேர்தல் நேற்று நிறைவு;

# வெற்றி, தோல்வியை ஊகிக்க முடியாதவாறு தேர்தல் களம்!





**270 இற்கும் அதிகமான ஆசனங்களை பா.ஜ.க கைப்பற்றுவது சாத்தியமில்லையென்று தேர்தல் ஆய்வாளர்கள் அபிப்பிராயம்**

இந்திய லோக்சபா தேர்தலின் இறுதிக்கட்ட வாக்களிப்பு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. ஜூன் 4 ஆம் திகதி லோக்சபா தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தற்போதைய அரசியல் களத்தில் பா.ஜ.கவினால் மீண்டும் ஆட்சி அமைக்க முடியுமா? பெரும்பான்மைக்கான இடங்களை பா.ஜ.க தனித்துப் பெறுமா? என்ற விவாதங்கள் அரசியல் களத்தில் இடம்பெறுகின்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் பா.ஜ.க 303 இடங்களில் வெற்றி பெற்றது. தற்போதைய தேர்தலில் 400 இடங்களைக் கைப்பற்றுவோம் என்கின்றனர் பா.ஜ.க தலைவர்கள். ஆனால் மொத்தம் 543 தொகுதிகளில் பா.ஜ.க கூட்டணியால் 400 இடங்களைக் கைப்பற்ற முடியுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

தென்னிந்தியாவின் 132 தொகுதிகளை கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் சாத்தியம் குறைவுதான். தமிழ்நாடு, கேரளா மாநிலங்களில் பா.ஜ.க ஒன்றிரண்டு தொகுதிகளில்தான் வெற்றி பெற முடியும். ஆந்திரா, தெலுங்கானாவிலும் ஏறத்தாழ இதே நிலைமைதான். கர்நாடகாவில் மட்டும்தான் பல ஆசனங்களை பா.ஜ.கவினால் பெற முடியும்.

ஆகையால் தென்னிந்திய மாநிலங்களில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே பா.ஜ.கவினால் 400 இற்கும் அதிகமான தொகுதிகளைக் கைப்பற்ற முடியும் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

2019 தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், பா.ஜ.க 30 தொகுதிகளை இழந்தால் பெரும்பான்மைக்கான 272 இடங்களைக் கைப்பற்ற போராட வேண்டியிருக்கும். அதேநேரத்தில் பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள் 30, 40 தொகுதிகளில் வெற்றி பெற்றாலேயே மீண்டும் பா.ஜ.க ஆட்சி அமைக்கும் நிலைமை உருவாகும்.

பா.ஜ.கவுக்கு 240 முதல் 260 இடங்கள் வரைதான் கிடைக்கக் கூடும் என்கிறார் தேர்தல் வியூக வல்லுநர் யோகேந்திர யாதவ். இதனை மற்றொரு தேர்தல் வியூக வல்லுநரான பிரசாந்த் கிஷோரும் ஆமோதிப்பதைப் போல 'எக்ஸ்' பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

யோகேந்திர யாதவின் கணிப்பின்படி காங்கிரஸ் கட்சி 100 இடங்களையும் இந்தியா கூட்டணியில் உள்ள இதர கட்சிகள் 100 இடங்களையும் பெறும் வகையிலான சூழ்நிலை ஏற்பட்டாலும் பெரும்பான்மையை இந்தியா கூட்டணியால் பெற்றுவிட முடியுமா? என்பது கேள்விக்குறிதான்.

2019 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் பா.ஜ.க சுமார் 1 இலட்சத்துக்கும் குறைவான வாக்கு வித்தியாசத்தில் வென்ற தொகுதிகள் 77. இவற்றில் 40 தொகுதிகளில் சொற்ப எண்ணிக்கையில்தான் பா.ஜ.கவினால் வெற்றி பெற முடிந்தது. இந்த 40 தொகுதிகளை பா.ஜ.க மீண்டும் கைப்பற்றுமா? என்பதை உறுதியாக சொல்ல இயலாதுள்ளது. பா.ஜ.க ஆட்சி அமைப்பதில் இந்த 77 தொகுதிகள் மிக முக்கிய பங்கை வகிக்கக் கூடும் எனவும் தேர்தல் வியூக வகுப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த 77 தொகுதிகள் பா.ஜ.கவை விட்டு போனால் 210 முதல் 230 இடங்களைப் பெறக் கூடிய நிலைமைதான் உருவாகும். அப்போது பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள் கைகொடுக்கும் அல்லது இந்தியா கூட்டணி உடைக்கப்பட்டு புதிய ஆட்சியை பா.ஜ.க அமைக்கும் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.



மக்களவைத் தேர்தல் நாடு முழுவதும் ஏழு கட்டங்களாக நடைபெற்று முடிந்துள்ளது. அதில் முதற்கட்டமாக ஏப்ரல் 19ஆம் திகதியும், இரண்டாம் கட்டமாக ஏப்ரல் 26ஆம் திகதியும், மூன்றாம் கட்டமாக மே 7ஆம் திகதியும், நான்காம் கட்டமாக மே 13ஆம் திகதியும் பல தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, சமீபத்தில் கடந்த 20ஆம் திகதி ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவானது 48 தொகுதிகளில் நடைபெற்றது. ஏழு கட்டங்களாக நடைபெற்ற வாக்குப்பதிவின் வாக்கு எண்ணிக்கை எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெற்று, அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட இருக்கின்றன.

இதேவேளை பா.ஜ.க 370 இடங்களைப் பெறும் என்றும், தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இடங்களைத் தாண்டும் என்றும் பிரதமர் மோடி கூறிய நாளிலிருந்து, 'இது சாத்தியமில்லை' என்று தேர்தல் அவதானிகள் கூறி வருகின்றனர்.

'இவை அனைத்தும் தொழிலாளர்களின் மனஉறுதியை உயர்த்தும் கோஷம். பா.ஜ.க 370 இடங்களைப் பெறுவது சாத்தியமற்றது. ஆனால், அக்கட்சி 270 இற்குக் கீழே சரியாது என்பதும் உறுதி. முந்திய மக்களவைத் தேர்தலில் 303 இடங்கள் அல்லது இன்னும் கொஞ்சம் கூடுதலான இடங்களை பா.ஜ.க பெற முடியும்' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

"முதலில், 2019 தேர்தலில் பா.ஜ.க 303 இடங்களைப் பெற்ற இடங்களைப் பார்க்க வேண்டும். அந்த 303 இடங்களில் 250 இடங்கள் வடக்கு மற்றும் மேற்கு பிராந்தியங்களில் இருந்து வந்தவை. இம்முறை இந்தப் பிராந்தியங்களில் கணிசமான இழப்பை அவர்கள் சந்திக்கிறார்களா என்பது முக்கிய கேள்வி. கிழக்கு மற்றும் தெற்கில், பா.ஜ.க தற்போது மக்களவையில் சுமார் 50 இடங்களைக் கொண்டுள்ளது. இந்தப் பகுதிகளில் பா.ஜ.கவின் வாக்கு சதவீதம் கணிசமாக அதிகரிக்கும் என நம்பப்படுகிறது. எனவே, ஒட்டுமொத்தமாக, கிழக்கு மற்றும் தெற்கில் பா.ஜ.கவின் இடப்பங்கு 15 தொடக்கம் 20 இடங்கள் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் குறிப்பிடத்தக்க இழப்பு எதுவும் இல்லை" என்று மற்றொரு அரசியல் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

"ஒரு அரசாங்கம் எப்போது தோல்வியடைகிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு கட்சி அல்லது அதன் தலைவர் மீது மக்கள் மத்தியில் கணிசமான கோபம் ஏற்படும் போது இது நிகழ்கிறது. பா.ஜ.கவாக இருந்தாலும் சரி, பிரதமர் மோடியின் 10 ஆண்டுகால ஆட்சியாக இருந்தாலும் சரி, சமூகத்தில் பெரும் பகுதியினர் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இருப்பினும், பிரதமருக்கு எதிராக பரவலான கோபம் இருப்பதாக எந்த தரப்பிலிருந்தும் குறிப்பிடத்தக்க அளவு குரலைக் கேட்க முடியவில்லை. எனவே, நரேந்திர மோடியை அகற்ற வேண்டும் என்ற உணர்வு மக்களிடம் தற்போது பெரிதாக இல்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


**எஸ்.சாரங்கன்...**

# க.பொ.த. உ/த பரீட்சை பெறுபேறு வெளியீடு

## வர்த்தக பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி

### பொறியியல் துறைக்கு தெரிவான மாணவன்

யாழ். விசேட நிருபர்



க.பொ.த. உயர்தர பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி கிர்த்திகா பத்மலோஜன் யாழ். மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவனான மதியழகன் டினோஜன் முதலிடத்தை பெற்று பொறியியல் பீடத்துக்கு தெரிவாகியுள்ளார். இம்மாணவன் அகில இலங்கை மட்டத்தில் 47ஆவது நிலையை பெற்றுள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 90 மாணவிகள் விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்று பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ளனர். வர்த்தக பிரிவில் முதலாம் நிலை மற்றும் கலைப் பிரிவில் 05ஆம் இடம் உட்பட 24 பேர் 03 ஏ சித்திகளையும் 18 பேர் 02 ஏ,பி சித்திகளையும் 06 பேர் 02ஏ, சீ சித்திகளையும் பெற்றுள்ளனர்.

பரீட்சைக்கு 284 பேர் தோற்றியிருந்தனர். க.பொ.த. உயர்தர பரீட்சையில் கலைப்பிரிவில் வஜினா பாலகிருஷ்ணன் மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் நாடளாவிய ரீதியில் 32ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

## வைத்திய துறைக்கு இரு மாணவர்கள் தெரிவு

வாச்சிக்குடா விசேட நிருபர்



அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஸ்ண தேசிய பாடசாலையிலிருந்து இவ்வருடம் இருவர் வைத்தியத்துறைக்கு தெரிவாகியுள்ளதுடன், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்திலிருந்து சட்டத்துறைக்கு ஒருவரும் தெரிவாகியுள்ளார். ஆலையடிவேம்பு கோட்டத்தில் 77 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு பெற்றுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கமலமோகனதாசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று இராமகிருஸ்ண தேசிய பாடசாலையில் 43 பேரும் அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஸ்ண மிசன் மகா வித்தியாலயத்தில் 22 பேரும் கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தில் 04 பேரும் கண்ணகி வித்தியாலயத்தில் 04 பேரும் தம்பட்டை மகா வித்தியாலயத்தில் 04 பேரும் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு பெற்றுள்ளனர்.

வலய மட்டத்தில் வர்த்தக பிரிவில் அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஸ்ண தேசிய பாடசாலையும் கலைப்பிரிவில் அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஸ்ண மிசன் மகா வித்தியாலயமும் அதிகூடிய சித்தி பெற்றுள்ளது.

## உயிரியல் விஞ்ஞான பிரிவில் மாணவி சாதனை

பேருவளை விசேட நிருபர்

வெளியாகிய 2023 (2024) ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சையில் பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மாணவி கே.எப். பாத்திமா நிஹ்லா, உயிரியல் விஞ்ஞான பிரிவில் அகில இலங்கை ரீதியில் 04ஆம் இடத்தையும் மாவட்ட ரீதியில் முதலிடத்தையும் பெற்றுள்ளார்.

அனைத்து பாடங்களிலும் A சித்தி பெற்று, 2.9986 என்ற Z புள்ளிகளையும் அவர் பெற்றுள்ளார்.

பேருவளை பெலஸ்பாத் பகுதியை சேர்ந்த கம்சுல் பைஸர், ஃபாத்திமா ஹரீஸியா தம்பதியினரின் புதல்வியாவார் இம்மாணவி. இது பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் பாடசாலை வரலாற்றில் சாதனையென பாடசாலை அதிபர் எஸ்.ஐ.குமார் கூறினார்.

இம்மாணவிக்கு கல்விச் சமூகத்தினர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## சுவிஸில் The Rise அமைப்பின் சர்வதேச மாநாடு

### கிழக்கு ஆளுநர் செந்தில், ஸ்ரீதரன் எம்.பி., ம.ம.மு. சதீஷ் சிவலிங்கத்துக்கு அழைப்பு



சுவிஸில் அரச தலைவர்களின் பங்கேற்புடன் The Rise அமைப்பு நடத்தும் 'தமிழரின் பொருளாதார எதிர்காலம் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், த.தே. கூ. எம்.பி. சிவஞானம் ஸ்ரீதரன், மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் சதீஷ் சிவலிங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் உலக நாடுகளில் பல்வேறு தமிழர் அமைப்புகளை ஒன்றிணைத்து சமூக, பொருளாதார, கலாசார நிலைகளில் இனத்துவ அடையாளத்துடன் எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களை செயற்படுத்தி வரும் The Rise அமைப்பினரே அழைப்பு விடுத்துள்ளனர். The Rise அமைப்பின் ஏற்பாட்டில் ஜூன் 79ஆம் திகதிகளில் சுவிட்ஸர்லாந்தில் டாவோஸ் மண்டபத்தில் Tamil Economic Future என்ற சர்வதேச மாநாடு நடைபெறவுள்ளது.

Montenegro ஜனாதிபதி Jakov Milatovic, Montenegro குடியரசு பிரதமர் Milojko Spajic, North Montenegro குடியரசின் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் Kreshnik Bekteshi, கொங்கோ குடியரசின் வெளிவிவகார மற்றும் சர்வதேச பொருளாதார அலுவல்கள் அமைச்சர் Claude Gakosso, தமிழ்நாட்டு அரசின் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, ஐரோப்பியா உள்ளிட்ட நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொருளாதார நிபுணர்கள், பேராசிரியர்கள், முதலீட்டாளர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

"The Rise Davos' தமிழரின் பொருளாதார எதிர்காலம்" என்ற ரீதியில் 13ஆவது Global Summit of Tamil Entrepreneur & Professionals ஆகிய மாபெரும் தொழில் வணிக மாநாட்டில் நிபுணர்களின் கருத்துரை, வணிக உத்தி, நிதி நிலைமை அடிப்படையிலான ஆராய்வு, கலை பண்பாட்டு விழுமியங்களுக்கான எதிர்கால திட்டம் ஆகியவை கவனத்தில் கொள்ளப்படும்.

த றைஸ் நிறுவுனர் செவாலியர் டாக்டர் ஜெகத் கெஸ்பர்ராஜ் அடிகளார் தலைமையில் இலங்கையில் தமிழர் நலன் மற்றும் 'மலையகம் இருநூறு' என்ற விசேட அமர்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணம் குறையாது

டீசல் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாதென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் இது தொடர்பில் தெரிவிக்கையில், டீசல் விலை 307 ரூபாவாக குறைந்ததால் மாத்திரமே பஸ் கட்டணங்களை குறைக்க முடியும்.

டீசல் விலை 04 சதவீதம் குறைந்தால் மாத்திரமே பஸ் கட்டணங்களை குறைக்க முடியும். ஆனால் இம்முறை டீசல் விலை 2.8 சதவீதமாகவே குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (31) நள்ளிரவு முதல் டீசலின் விலை லீற்றருக்கு 16 ரூபாவினால் குறைக்கப்பட்டு 317 ரூபாவாக குறைந்துள்ளது.

எனவே, டீசல் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாதென அவர் தெரிவித்தார்.

### சட்ட மாஅதிபரின்...

பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, பிரேமநாத் சி.தொலவத்த உள்ளிட்டோர் இது குறித்து ஜனாதிபதியிடம் வினவியிருந்தனர்.

### ஆறு மாவட்டங்களுக்கு...

இரத்தினபுரி மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மண்சரிவு எச்சரிக்கை நேற்று (01) சனிக்கிழமை காலை 08.00 மணி முதல் இன்று (02) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணி வரை அமுலிலிருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வாய் வீச்சு தலைவர்களால்...

முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிலர் கூறுகின்றனர். தாம் செய்து காட்டுவதாக தெரிவித்த போதிலும் அவ்வாறு செய்து காட்டுவதற்கு ஒன்றுமில்லை என்றும் திறமையற்ற தலைவர்கள் தேர்தலை நடத்த மாட்டார்கள் என்றும் அவர் கூறினார். 'தேர்தல் உரிய நேரத்தில் மற்றும் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய தலைவர்கள் அறிவித்துள்ளனர். அன்றையதினம் தகுதியானவரை தேர்ந்தெடுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மேலும் தெரிவித்துள்ளார்.

### பாராளுமன்றம் ஜூன் 04...

அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது பற்றி தீர்மானிக்கப்பட்டது. நாளை மறுதினம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் 10.30 மணிவரையான நேரம் வாய்மூல விடைக்காக ஒதுக்கப்பட்டிருக்கும். மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை பெண்களின் வலுவூட்டல் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடக்கும். இதன் பின்னர் இலங்கை பட்டய கப்பல் தரகர்கள் நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், தெதிகம ஸ்ரீமைத்திரி பிரக்ஞாரத்த பௌத்த கல்வி சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் .

பி.ப 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணைக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜூன் 05 புதன்கிழமை, மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் 04 வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.00 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான 05 வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் கீழ் 2311/40 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி, குடியியல் வான் செலவு சட்டத்தின் கீழ் 2362/23 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் 2374/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பவற்றை விவாதமின்றி அங்கீகரிப்பதற்கும் இணங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பி.ப 5.30 மணி வரை கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சியால் கொண்டு வரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜூன் 06 வியாழக்கிழமை, மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை இலங்கை மின்சாரம் சட்டமூலம் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதம் நடைபெறும்.

ஜூன் 07 வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை, வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணிவரை பொதுத் தனிசு முகாமைத்துவம் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 2364/37 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இலங்கை அரசாங்கத்திற்கும் சவூதி அரேபிய அரசாங்கத்துக்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பை நீக்குவதற்கும், வரி செலுத்தாது தட்டிக்கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்கான உடன்படிக்கையை அங்கீகரித்தல்), விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஐந்து கட்டளைகள், உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 2376/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை, நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2382/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான 02 கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சந்தேக நபர் ஒஸ்மான்...

காவலில் வைத்து விசாரிக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது பொலிஸாரால்தேடப்பட்டு வந்த ஒஸ்மான் புஷ்பராஜ் ஜெரார்ட் என்ற இந்த சந்தேக நபர், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் கைது செய்யப்பட்ட விதம் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. முன்னதாக இவரை கைது செய்ய உதவுவோருக்கு 20 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்திருந்தது.

முன்னதாக ஐ. எஸ். ஐ. எஸ். தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்ட 04 இலங்கையர்களும் கொழும்பிலிருந்து சென்னை ஊடாக அஹமதாபாத் விமான நிலையத்துக்கு சென்ற போது இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். பாகிஸ்தானை சேர்ந்த அபு என்பவரின் கட்டளைப்படி இந்தியாவில் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களை அவர்கள் கொண்டிருந்ததாக இந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### இந்தியாவில் கடும்...

பதிவாகியுள்ளது. வெப்பத்தின் தாக்கத்தால் மக்கள் வெளியே நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பீகாரில் கடந்த 24 மணி நேரத்தில் 10 தேர்தல் பணியாளர்கள் உட்பட 16 பேர் வெப்பத் தாக்குதலுக்கு உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பீகார் மாநிலத்தில் வெப்பம் காரணமாக அனைத்து பாடசாலைகள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் முன்பள்ளிபாடசாலைகள் எதிர்வரும் 08 ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளன.

### பெற்றோல், டீசல்...

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. புதிய விலை 202 ரூபா என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

சுப்பர் டீசல் மற்றும் ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லையென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இதேபோன்று லங்கா ஐஓசி நிறுவனமும் சினோபெக் நிறுவனமும் எரிபொருள் விலையை நேற்று முன்தினம் (31) நள்ளிரவு முதல் குறைத்துள்ளது.

எவ்வாறாயினும் எந்தவொரு நிறுவனமும் ஒக்டேன் 95 பெற்றோல் மற்றும் சிலோன் சுப்பர் டீசல் விலையை குறைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சினோபெக் நிறுவனம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்தை தொடர்ந்து சினோபெக் நிறுவனமும் எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு புதிய விலை 355 ரூபாவாகவும் ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 19 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் இதன் புதிய விலை 314 ரூபாவாகும்.

இதேவேளை ஒக்டேன் 95 ரக பெற்றோல் விலையில் மாற்றமில்லை. (ரூ. 420). அத்துடன் சுப்பர் டீசல் விலையிலும் மாற்றமில்லை (ரூ. 377) என அறிவிக்கப்பட்டுள்ளது.

### இவ்வாரம் முதல்...

வர்த்தக வங்கிகளால் Black List க்கு உட்படுத்தப்பட்டவர்கள், இந்தத் திட்டத்தின் கீழ் கடனை எளிதாக பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்த செயலாளர், 05 வருட காலத்துக்குள் திருப்பி செலுத்த கூடிய வகையில் 50 இலட்சம் ரூபா வரையில் மீண்டும் வலுவூட்டல் ('RE ENERGISE') திட்டத்தின் கீழ் கடனை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

கடன் வழங்கப்படும் போது 02 இலட்சம் ரூபா வரையிலான தனிநபர் உத்தரவாதத்திலான கடன் தள்ளுபடி செய்யப்படுகிறது. அதற்கு மேலுள்ள கடன்களுக்கு சொத்தை பிணையாக சமர்ப்பிக்க வேண்டும்.

மீண்டும் வலுவூட்டல் 'RE ENERGISE கடன் திட்டம் தொடர்பான இறுதி நடவடிக்கைகள் கடந்த புதன்கிழமை நிறைவடைந்தன. இதற்கமைய அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் அடங்கலாக 10 வங்கிகளில் இந்தக் கடன்கள் வழங்கப்படவுள்ளன.

பிராந்திய அபிவிருத்தி வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சம்பத் வங்கி, செலான் வங்கி, கொமர்ஷல் வங்கி, கார்கில்ஸ் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, ஹற்றன் நெஷனல் வங்கி மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி ஆகியவற்றினூடாக இந்தக் கடன்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கடன் திட்டத்தின் மற்றுமொரு அம்சமாக முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ஒரு கோடி 50 இலட்சம் ரூபா வரையிலான கடனுக்கு விண்ணப்பிக்க முடியும். அதற்கும் வட்டி 07 % . செலுத்தும் காலம் 10 ஆண்டுகள். மேலும் ஓராண்டு நிவாரணகால அவகாசம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

### பல்கலைக்கழக கல்விசாரா...

கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் சிறந்த தீர்வை வழங்க தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இதனை தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன்,

“தற்போது பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இது ஒரு துரதிஷ்டவசமான விடயம். ஏனெனில் இதனூடாக எதிர்கால சந்ததியினரான மாணவர்களே பாதிக்கப்படுகின்றனர். இதன் மூலம் நாளாந்தம் சுமார் 150 மில்லியன் ரூபா நேரடியான நட்டம் ஏற்படுகின்றது. இது நிதி ரீதியிலான நட்டம் மாத்திரமே. மனித நேரமும் இதன் மூலம் வீணடிக்கப்படுகிறது. எனவே இன்னும் ஒரு மணிநேரமேனும் வீணடிக்க அரசாங்கத்துக்கு அவசியமில்லை. பெற்றோர் என்ற வகையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இதன் பாதிப்பு தெரியும் என்று நினைக்கிறேன். எனவே அவர்களும் இதனை தொடர்ந்து கொண்டு செல்ல விரும்பமாட்டார்கள். இதற்கு சரியான தீர்வை எவ்வாறு எட்டுவது என்பதையே நாம் இப்போது பார்க்க வேண்டும்.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு நிறைவேற்ற சுமார் 1.1 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. நான் இது பற்றி விரிவான அறிக்கையொன்றை தருமாறு கேட்டிருக்கிறேன். மேலும் நாம் எவ்வாறு இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பது குறித்து நிதி அமைச்சு மற்றும் திறைசேரியின் உயர் அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளேன். நான் நாளை திங்கட்கிழமை வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்க தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன். ஒரு மத்திய நிலையிலிருந்து இதற்கு தீர்வு காண்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

### 03 பாடங்களில்...

பெற்ற 24 மாணவர்களும் உள்ளனர். இந்த மாணவர்களில் அதிக எண்ணிக்கையில் மூன்று A சித்தி பெற்றவர்கள் உயிரியல் துறையை சேர்ந்தவர்கள். ஆண்கள் பாடசாலையான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 133 வருட பாரம்பரியம் கொண்ட பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

### எங்கள் கருத்து...

## இளவயதினரைச் சீரழிக்கும் கைத்தொலைபேசி பாவனை!

நீரிழிவு நோய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அவர்களின் உடல் இயக்கம் சரியாக இல்லாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக மருத்துவ ஆய்வில் தெரிய வந்துள்ளது.மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்வதாகவும், பெற்றோரால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலைமை உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஸ்மார்ட் தொலைபேசிகளில் வயதானவர்கள் மாத்திரமன்றி, சிறுவர்களும் எந்நேரமும் மூழ்கிக் கிடப்பதை நாம் சாதாரணமாகவே காண்கின்றோம். அவர்களது கல்வி பாதிக்கப்படுவது மாத்திரமன்றி, தீய பழக்கவழக்கங்களுக்கு அவர்கள் ஈர்க்கப்படும் ஆபத்தும் உள்ளது.

தவறான நபர்களுடன் தொடர்பு கொள்வதால் வீணான பிரச்சினைகளுக்கும் அவர்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

இன்றைய இளவயதினரே நாட்டின் நாளைய தூண்கள் ஆவர். கைத்தொலைபேசி பாவனையின் விளைவாக அவர்களது எதிர்காலம் பாழடைவதற்கு பெற்றோர் இடமளிக்கலாகாது.

### பல்கலை அனுமதிக்கு...

பல்கலைக்கழக பிரவேசத்துக்கு விண்ணப்பிப்தற்கான தகுதியை பெற்றவர்களில் பெண் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இம்முறை 70.1%பெண் பரீட்சார்த்திகளும் 56% ஆண் பரீட்சார்த்திகளும் தகுதி பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

வெளியிடப்பட்ட உயர்தரப் பெறுபேறுகளில் 03 பாடங்களில் 3.9 வீதமானோர் A சித்தி பெற்றுள்ளனர். அதாவது 10,484 பேர் இவ்வாறு சித்தியடைந்துள்ளனர். கடந்த ஆண்டு இத்தொகை 3.8 வீதமாக இருந்தது. இந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 580 ஆக அதிகரித்துள்ளது.

வர்த்தக பிரிவிலேயே அதிக எண்ணிக்கையிலானவர்கள் 03 A சித்திகளை பெற்றுள்ளனர். இது 7.05 வீதமாகும். இரண்டாவதாக கலைப்பிரிவில் கூடுதலானவர்கள் A சித்திகளை பெற்றுள்ளனர். இது 4.64 வீதமாகும். பௌதீக பாடத்தில் 4.12 வீதமானோர் A சித்திகளை பெற்று இந்த பட்டியலில் மூன்றாவது இடத்தில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த ஆண்டு வெளியிடப்பட்ட உயர்தரப் பெறுபேறுகளின்படி, பல்கலைக்கழக பிரவேசத்திற்கான 06 பிரிவுகளில் உயிரியல் தொழில்நுட்பம் பிரிவு முக்கியமாக அமைந்துள்ளது.

வணிகப் பிரிவு இரண்டாவது இடத்திலும் (71.09%), கலைப் பிரிவு மூன்றாவது இடத்திலும் (69.51%), பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு நான்காவது இடத்திலும் (68.12%), இயற்பியல் பிரிவு ஐந்தாவது இடத்திலும் (57.98%) உயிரியல் 57.71% மானோர் தகுதி பெற்றுள்ளனர்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் கூற்றுப்படி, வட மாகாணத்திலிருந்து அதிக பரீட்சார்த்திகள் இவ்வருடம் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர். இதில் இரண்டாவது இடம் மேல் மாகாணமும், மூன்றாவது இடம் கிழக்கு மாகாணமும் ஆகும்.

இதற்கமைவாக இந்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 27,970. உயிரியல் மற்றும் உயிரியல் பாடங்களிலேயே பெரும்பாலானவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களின் எண்ணிக்கை 16.63 ஆகும். உயிரியல் பிரிவில் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் சித்தியடைந்துள்ளனர். உயிரியல் பிரிவில் சித்தியடையத் தவறியவர்களின் எண்ணிக்கை 6161 ஆகும். அவர்களில் 5130 பேர் உயிரியல் பிரிவில் அனைத்துப் பாடங்களிலும் தோல்வியடைந்துள்ளனர்.

பெறுபேறுகளுக்கு http://onlineexams.gov.lk/eic என்ற இணைப்பின் மூலம் ஜூன் 05 முதல் 19 வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

### முதியோருக்கான மே மாத...

வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தாலும், ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தின் பின்னர் பிரதேச செயலகங்களில் வழமையான முறையில் முதியோருக்கான கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் நலன்புரி நன்மைகள் சபை அறிவுறுத்தியுள்ளது.

அதேபோல் ஜூன் மாத கொடுப்பனவும் அதே மாதத்திலேயே வழங்கப்படும் என்றும், அஸ்வெசும கொடுப்பனவு கட்டமைப்பின் கீழ் உரிய வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சபை அறிவித்துள்ளது.

### மொரட்டுவை மருத்துவ...

செயலாளர் திலகா ஜயசுந்தரவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு தெற்காசிய தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையை ஒதுக்குவது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் இந்த எழுத்துமூல அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவை பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களை நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலையை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு மொரட்டுவை பல்கலைக்கழக அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் பெற்றோரிடமிருந்து பெறப்பட்ட பல கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்த சந்திப்பு நடைபெற்றது. 2025 ஜனவரியில் கற்கைகளை ஆரம்பிக்கும் முன் ஆரம்ப ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு மொரட்டுவை பல்கலைக்கழகம் குறைந்தபட்சம் ஓகஸ்ட் 2024 க்குள் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனை வளாகத்தை அணுக வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.




# அரசியல் பரபரப்பை ஏற்படுத்திய பாலித ரங்கே பண்டாரவின் பேச்சு!

**தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள் தெரிவித்துவரும் கருத்துக்கள் அரசியல் களத்தை நாளுக்கு நாள் பரபரப்பாக்கி வருகின்றன. பொதுத்தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா முதலில் நடத்தப்படும் என்ற விடயத்தில் தொடர்ந்தும் உறுதியற்ற நிலைமை காணப்பட்டுவரும் சூழலில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார கூறிய கருத்து பெரும் பேசுபொருளாகியுள்ளது.**

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் இரண்டையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கும் யோசனையை அவர் முன்வைத்திருந்தார்.

சூழ்நிலைகள் அவசிமாகும் வேளையில், இந்த முன்மொழிவை முறைப்படி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். சர்வதேச நம்பிக்கையை மீண்டும் பெற்றுக் கொண்டமைக்கும், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் ஜனாதிபதியின் தலைமைத்துவமே காரணமாக அமைந்தது.

## இரு தேர்தல்களையும் ஒத்திவைக்கலாமெனக் கூறிய யோசனையினால் சூடாகியது அரசியல் களம்!

நாட்டின் தற்போதைய தேவைகள் உடனடி ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தலுடன் ஒத்துப்போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டு ஆண்டுகள் (அல்லது ஐந்து ஆண்டுகள்) நீடிக்க வேண்டும், அதனுடன் தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் நீடிக்கப்பட வேண்டும் என்றும், அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இந்த முன்மொழிவின் பின்னால் அணிதிரளுமாறும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

சவாலான தருணத்தில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் இரண்டையும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பது ஒரு விவேகமான அணுகுமுறையாகும், தேவைப்பட்டால் பொதுவாக வாக்கெடுப்பு நடத்தப்படும் என்பது அவருடைய கருத்தாக இருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் இந்த முன்மொழிவை முன்வைத்ததைத் தொடர்ந்து இவ்விடயம் அரசியல் அரங்கத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆளும் பொதுஜன பெரமுன கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும், அமைப்புகளும் இந்த முன்மொழிவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கத் தொடங்கின.

தற்போதைய அரசாங்கத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ இந்த முன்மொழிவைநிராகரித்திருந்தார்.ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதானது பாராளுமன்றத்தின் ஜனநாயகக் கோட்பாடுகளை மீறும் செயற்பாடு என்றும், மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தேர்தல்கள் எதுவும் ஒத்திப்போடப்படாது உரிய நேரத்தில் நடத்தப்பட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

ஒரு நாட்டின் அரசியல் மற்றும் ஸ்திரத்தன்மை என்பது மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலிருந்தே ஏற்பட வேண்டுமே தவிர அவர்களுடைய குரல்களை ஒடுக்குவதன் மூலமாக இருக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

பொதுத்தேர்தலா ஜனாதிபதித் தேர்தலா முதலில் நடத்தப்படும் என்ற சந்தேகம் காணப்பட்டு வரும் நிலையில் இரண்டு தேர்தலையும் நடத்தாது பிற்போடுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபடப்போகின்றதா என்ற கேள்வியை ரங்கே பண்டாரவின் கருத்து ஏற்படுத்தியமையே இந்த அரசியல் பரபரப்புக்குக் காரணமாக அமைந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரின் இந்தக் கருத்தானது அரசியல் ஆழத்தை அறிந்து கொள்வதற்கான ஒரு யுக்தியாக இருக்கலாம் என்றும் அரசியல் அவதானிகள் சிலர் குறிப்பிடுகின்றனர். இருந்தபோதும் ரங்கே பண்டாரவின் கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்தே அன்றி ஜனாதிபதியினதோ அல்லது கட்சியினதோ நிலைப்பாடு அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும், இது விடயத்தில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அதேநேரம், ஏற்கனவே தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு விதிகளுக்கு அமைய ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடத்தப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் செப்டெம்பர் 15ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான ஆலோசனைகளை நிராகரித்தார்.

எந்தக் காலத்திலும் அரசாங்கமோ அல்லது ஆளும் கூட்டணியோ கலந்துரையாடாத பிரேரணைகளை முன்வைப்பது தவறு. தேர்தல் குறித்த அரசின் நிலைப்பாடு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. மேதினக் கூட்டங்கள் போன்ற மக்கள் கூட்டங்களைப் பார்த்து அரசியல் முடிவுகளை அரசாங்கம் எடுக்காது. இவ்வாறான விடயங்களைப் பார்த்து அரசாங்கம் பீதியடையவோ அல்லது பதற்றமடையவோ இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.



தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற ரங்கே பண்டாரவின் யோசனை அனைத்து எதிர்க்கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக நாடொன்றில் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்பட்டு மக்களின் வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதனைத் தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளாகவே அமையும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் காலத்தில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பும் ஜனநாயகத்துக்கு முரணான வகையில் அடியாட்களின் பலத்தினைக் கொண்டு நடத்தப்பட்டதொன்று என்றும் அவர் விளக்கியிருந்தார். எனவே, எந்தவொரு தேர்தலும் பிற்போடப்படுவதில் யாரும் விரும்பவில்லையென்பது இதன் மூலம் உறுதியாகியுள்ளது.

அது மாத்திரமன்றி, ஜனாதிபதித் தேர்தல் அரசியலமைப்புக்கு உட்பட்ட விதத்தில் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும், அதற்கான பணம் வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலதடவைகள் கூறியுள்ளார். எனவே, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எந்த யோசனையும் அரசாங்கத்துக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அத்துடன், நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக ஜனாதிபதி களமிறங்குவார் என ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு ஜூன் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முயற்சிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், தேர்தலில் போட்டியிடுவது பற்றிய உத்தியோகபூர்வ முடிவு எதுவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து வெளியாகாமல் இருக்கின்றது. இருந்தாலும், எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு அதற்கான பிரசாரங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன.




எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகவும், அநுர குமார திஸாநாயக்க தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகவும் களமிறங்குவது உறுதியாகியிருக்கும் நிலையில், ஜனாதிபதி தரப்பில் உறுதியான அறிவிப்பு இன்னமும் வெளியாகவில்லை.

மறுபக்கத்தில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் எண்ணத்தில் மேலும் பலர் இருப்பதையும் அரசியல் அரங்கத்தில் காண முடிகின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக இருந்தாலும் மற்றுமொரு பிரிவினர் அக்கட்சியின் தலைமைத்துவத்தை அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவுக்கு வழங்கி அவரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மாத்திரமன்றி, 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இம்முறையும் மீண்டும் போட்டியிடப் போவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. அவருக்கு நெருக்கமான தரப்பினரை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்திவெளியிட்டிருந்து.

இவற்றுக்கும் அப்பால், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட வேண்டும் என்ற பேச்சுக்களும் அடிபடுகின்றன. இந்த அடிப்படையில் பார்க்கும்போது ஜனாதிபதித் தேர்தல் களமானது மிகவும் போட்டி நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கத்தில், நாடு தற்பொழுது ஓரளவுக்கு ஸ்திரமான நிலையில் இருப்பதற்குப் பிரதான காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் குறிப்பிட்டால் அது மிகையாகாது. இக்கட்டான சூழலில் நாட்டைப் பொறுப்பெடுத்து முடிந்தளவுக்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து ஓரளவுக்கு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கமே காரணம்.

ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த பொருளாதார மீட்பு நடவடிக்கைகள் இடையறாது தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதே நாட்டுக்கு ஏற்புடையதாக இருக்கும். எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் அப்பதவியில் வகிப்பது நாட்டுக்கு சாதகமானதாக அமையும் என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது அரசியல் அவதானிகளின் கணிப்பு மாத்திரமன்றி பொதுமக்கள் மத்தியிலும் இந்த நிலைப்பாடு தற்பொழுது அதிகரித்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. அதற்காக, ஜனநாயக செயற்பாடுகள் கைவிடப்பட வேண்டும் என்று அர்த்தம் அல்ல. ஜனநாயக ரீதியிலான தெரிவின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியானால் நாட்டை மேலும் ஸ்திரமான நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற நிலைப்பாடும் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இது இவ்விதமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்துள்ள வேட்பாளர்கள் எவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றி அறிவிப்புக்களை முன்வைக்கவில்லையென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இளம் சட்டத்துறையினருக்கு நடத்திய செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியிருந்தார். எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது பற்றிய நிலைப்பாட்டை முன்வைக்கவில்லையென்பதால் பாராளுமன்றம் மேலும் பலப்படுத்தப்பட வேண்டியிருப்பதாக அவர் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தாடல்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தாலும் அண்மைக் காலத்தில் இது பற்றிய பேச்சுக்கள் எதுவும் பெரிதாக இடம்பெறவில்லை.



நாட்டு மக்களின் அபிப்பிராயம் எத்தகையது!

சித்தாந்த சிகாமணி காசிவாசி செந்திநாதையர் நூற்றாண்டு (1924–2024)

# ஞானம் சஞ்சிகை சிறப்பிதழ் வெளியீடு

இருபத்தைந்தாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை, தனது 289ஆவது (2024 ஜூன் மாத) இதழை காசிவாசி செந்திநாதையர் நூற்றாண்டு சிறப்பிதழாக 280 பக்கங்களில் வெளிக்கொணருகின்றது.

1848ஆம் ஆண்டு ஈழநாட்டில் பிறந்த காசிவாசி செந்திநாதையர், அக்காலத்துத் தமிழ்சமய அறிஞர்கள் தம்வயம் கொண்டிருந்த அனைத்துப் புலமைகளையும், பண்புகளையும் தம்மிடம் செம்மையாகக் கொண்டு, காலத்துக்குரிய தேவைகளுடன் இயைந்து, சமயத் தொண்டாற்றிய தலைமகன்களில் ஒருவராவார். இவர் இயற்கை எய்தி 15-05-2024 அன்று ஒரு நூற்றாண்டு கடந்து விட்டது.

ஐயரைப் பற்றி இந்தியாவைச் சேர்ந்த ஜே. எம். நல்லசாமிபிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"எமக்குத் தெரிந்தமட்டில், இந்த தமிழ் நாட்டில் இருமொழிகளிலும் வல்லுநராகி, அதிலும் வேத ஆகம நூல்கள் பயின்று, நம் ஆகமங்களையும் அதன் பூர்வோத்திரங்களையும் உணர்ந்து, அதிலும் அவ்வுண்மைகளை நாம் உணரும்பொருட்டு அநேக நூல்களையும் பத்திரிகைகளையும் பதிப்பித்து நம் சைவத்தை வளர்த்து வந்தவர்களில், நம் ஐயரவர்களைவிட இன்னும் பெரியாரைக் கண்டிலம்"

(ஜே. எம். நல்லசாமிபிள்ளை – சிவஞானபோத வசனாலங்காரதீப நூல் பாயிரம்)

அவர் வாழ்ந்த காலத்துக்கும், தேவைக்கும் ஏற்ப அவைதிக மத கண்டனம் செய்பவராகவும், சித்தாந்தியாகவும், வேதாந்தியாகவும், சுத்தாத்வித சைவராகவும் இயங்கிவந்த செந்திநாதையரின் செயற்பாடுகளிலும் பணிகளிலும் 'வேத நெறியும் சைவ நெறியும் ஒரே முடிவாயுள்ளன" எனும் திடமான கொள்கை இழையோடித் தொடர்ந்து வந்துள்ளதைக் காணமுடிகின்றது. இந்தக் கொள்கை அவரின் பணிகளில் இடையிடையே மறைந்து வந்திருப்பினும் அவரின் அந்திமகாலச் செயற்பாடுகளிலும் எழுத்துக்களிலும் இது நன்கு பளிச்சிட்டுத் தெரிந்ததெனலாம்.

காசிவாசி செந்திநாதையர் நூற்றாண்டு நிறைவாக வெளிவரும் ஞானம் சஞ்சிகையின் சிறப்பிதழ், மூன்று பகுதிகளை உள்ளடக்கியது. அவையாவன, ஐயரின் பன்னிரு கட்டுரைகள் அடங்கிய "செந்திநாதம்" எனும் பகுதி, ஐயரின் 46 படைப்புகள் குறித்த பிரசுர விபரத்தோடு, அப்படைப்புகளின் உள்ளடக்க சாரத்தையும் ஆய்வுநோக்கில் களஞ்சியப்படுத்திய "செந்திநாதக் களஞ்சியம்" எனும் பகுதி, ஐயரின் வாழ்க்கைச் சரிதம் செம்மையாக்கப்பெற்ற "செந்திநாதையர் சரிதம்" எனும் பகுதி என்பனவாம். இத்தொகுதியிலே செந்திநாதையர் பற்றிய கட்டுரைகளை பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன் (கனடா), பிரம்மஸ்ரீ ச. பத்மநாதன் ஆகியோரும் செந்திநாதையர் பற்றி பதிவுசெய்துள்ளனர்.

ஞானம் சஞ்சிகை ஆசிரியர் குழுமம்

__________

காசிவாசி செந்திநாதையரின் நூற்றாண்டுச் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவானது வருகின்ற ஜூன் மாத 8ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4:45 க்கு கலாநிதி




க. இரகுபரன் (தலைவர், கொழும்புத் தமிழ்ச்சங்கம்) தலைமையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும். இவ்விழாவில் ஆசியுரையை 'சிவாகமகலாநிதி' சிவஸ்ரீ. கு. வை. க. வைத்தீஸ்வர குருக்களும், சிறப்புரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாதனும், கருத்துரையை, யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட முதுநிலை விரிவுரையாளர், கலாநிதி தி. செல்வமனோகரனும் ஆற்றவுள்ளனர். நூலின் முதற்பிரதியை தொழிலதிபர் . ஈ. கணேஷ் தெய்வநாயகம் (ஈஸ்வரன் பிரதர்ஸ்) பெற்றுக்கொள்வார்.



# வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஜனாதிபதி கூடுதல் கரிசனை!

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடபகுதிக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்துவைத்ததுடன், வடபகுதியிலுள்ள மக்களின் பல்வேறு பிரச்சினைகளை நேரடியாகக் கேட்டறிந்து அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தினார்.**



யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துவைத்த அவர், முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களில் 'உறுமய' திட்டத்தின் கீழ் காணி உரிமைப் பத்திரங்களையும் வழங்கி வைத்தார்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்குத் தலைமைத்துவம் வழங்கிவரும் ஜனாதிபதி, நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமாயின் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் அவசியத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார். இதன் ஓர் அங்கமாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இவர் எடுத்திருந்த முயற்சிகள் இடைநடுவில் கைவிடப்பட்டமை துர்ப்பாக்கியமான நிலைமையாக இருந்தாலும், வடக்கு கிழக்கின் அபிவிருத்தி தொடர்பில் அவர் தொடர்ந்தும் சரிசனை செலுத்தி வருகின்றமை அவருடைய இந்த விஜயத்தின் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்களில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிச் செல்ல வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதால், அவருடைய இந்த வடக்கு விஜயத்தின் போது அப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அங்குரார்ப்பண நிகழ்வுகள் மற்றும் காணி உரிமைப்பத்திரம் கையளிக்கும் நிகழ்வுகளில் அவர்களின் பங்களிப்பையும் காணமுடிந்தது. எதிர்க்கட்சியில் இருப்பதால் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதும் போர்க்கொடி தூக்குவதும் மாத்திரமே அவர்களது கடமை என்று அர்த்தமில்லை.

அரசாங்கம் முன்னெடுக்கும் சிறந்த செயற்றிட்டங்களை வரவேற்கும் அதே நேரம், தவறிழைக்கும் சந்தர்ப்பங்களை சுட்டிக்காட்டி சரிசெய்வதற்கான ஒத்துழைப்பை வழங்குவதே ஆக்கபூர்வமான அரசியல் செயற்பாடாக இருக்கும். இவ்வாறான நிலையில், ஜனாதிபதியின் அண்மைய யாழ்ப்பாண விஜயத்தின் போது இடம்பெற்ற நிகழ்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட ஏனைய அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

இது ஜனாதிபதியின் சிறந்த அணுமுறையை எடுத்துக்காட்டியிருந்தது. இதற்கும் அப்பால், சுகவீனமுற்றிருக்கும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனை வீடு தேடிச்சென்று சந்தித்திருந்த ஜனாதிபதி, அவரை நலன் விசாரித்திருந்ததுடன், நட்புரீதியான கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.

தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து பொதுவேட்பாளரை நிறுத்துவதில் காணப்படும் சிக்கல்கள் பற்றி ஜனாதிபதி இதன்போது பிரஸ்தாபித்திருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. வடக்கின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இருவருடைய சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், அரசாங்கத்தினால் அதாவது வெளிநாட்டு அரசுகளின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் பல அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.



யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துக்கான புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன், கிளிநொச்சியில் பெண்களுக்கான விசேட மருத்துவமனை உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் இதில் குறிப்பிடத்தக்கவையாகும்.

யுத்தத்திற்கு முன்னர், கொழும்புக்கு அடுத்தபடியாக சிறந்த சுகாதார சேவையைக் கொண்ட பிரதேசமாக யாழ்ப்பாணம் திகழ்ந்தது. மேல்மாகாணம் அபிவிருத்தியடைந்த நிலையில் தென்மாகாணமும் மத்திய மாகாணமும் அபிவிருத்தியடைந்தன.

வடக்கு மாகாணத்தை மீண்டும் அந்த நிலைக்கு கொண்டு வருவதே தமது அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கும், மன்னார் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதுடன், வவுனியா வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றி, வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை நிறுவுவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நோக்கில் வடக்கின் வைத்தியசாலைக் கட்டமைப்புக்கள் அபிவிருத்தி செய்யப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



யுத்தம் காரணமாக வடக்கில் உள்ள பலர் காணிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் இதனைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியையும் ஜனாதிபதி வழங்கியிருந்தார். இடம்பெயர்ந்துள்ள கேப்பாபுலவு மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தது மாத்திரமன்றி, வடபகுதியில் உள்ள இளைஞர் யுவதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடிய ஜனாதிபதி, தனது அரசாங்கம் முகங்கொடுத்த சவால்கள் மற்றும் நாட்டை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார்.

"இப்பிரதேச இளைஞர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இளைஞர்களுக்கு வருமான வழிகள் மற்றும் தொழில்வாய்ப்புகள் அவசியம். முதலில் யாழ்ப்பாணத்தில் அல்லது தேசிய மட்டத்தில் இந்தப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும்" என கிளிநொச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளைஞர்கள் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

"இன்று நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதுதான். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் 2023_2024 திட்டத்தை நான் இப்போது ஆரம்பித்துள்ளேன். நாடு வங்குரோத்து அடைந்துள்ளதை உலகமே ஏற்றுக்கொண்டது. இப்போது நாடு வங்குரோத்து நிலையில் இல்லை. நாடு வங்குரோத்தாகும் பட்சத்தில் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் நம்முடன் இணைந்து செயல்படாது.

நாட்டு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். தொழில் செய்பவர்களுக்கு போதிய சம்பளம் கிடைப்பதில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் ஏன் ஏற்பட்டது? பழைய பொருளாதார முறையினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. எனவே, பழைமையான பொருளாதாரப் போக்கையும், அரசியல் போக்கையும் மாற்ற வேண்டும். தொழில் வாய்ப்புகளை வழங்கி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் திட்டத்தை, என்னால் மறந்துவிட முடியாது.

அரசாங்கம் வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுங்கள். நாம் செல்ல வேண்டிய புதிய பாதையை முன்னோக்கிக் கொண்டு செல்வது அவசியம். 2022 இல் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், இவ்வளவு குறுகிய காலத்தில் மீண்டு வரும் என்று யாரும் நம்பவில்லை. தொழில் கேட்பதை விட யார் ஆட்சிக்கு வந்தாலும் எப்படி தொழில் வழங்குவது என்ற கேள்வியை கேளுங்கள். பொய்க் கூச்சல் போடுபவர்களிடம் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு இருக்காது. உங்களது பிரச்சினைகளை முறையாக தீர்க்கும் திட்டத்தை எமது அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது" என்றும் ஜனாதிபதி கூறியியிருந்தார். இந்த மாநாட்டில் இளைஞர் யுவதிகள் முன்வைத்த பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதில் வழங்கியிருந்தார்.

நாட்டைப் பாரிய பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீட்பதில் பல சவால்களைச் சந்தித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம், யுத்தத்தினால் நீண்டகாலம் பாதிக்கப்பட்டிருந்த மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் அக்கறை செலுத்தி, அங்குள்ள மக்களின் குறைகளையும் நிவர்த்தி செய்வதிலும் அக்கறை காண்பித்திருப்பது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. அபிவிருத்தித் திட்டங்களைப் போன்று வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்பார்க்கும் தேசிய பிரச்சினைக்கும் அரசாங்கம் ஆக்கபூர்வமான தீர்வை வழங்க முன்வர வேண்டும் என்பதே அங்குள்ள மக்களின் அபிலாஷையாகும்.

**பி.ஹர்ஷன்...**

# சர்வதேச நீதிமன்றங்களின் உத்தரவுகளை மீறி ரபா மீது இராணுவ நடவடிக்கை!



## சர்வதேச சட்டங்களை மதித்து செயற்படுமாறு இஸ்ரேலுக்கு உலக நாடுகள் வலியுறுத்தல்!

**காஸாவில் சுமார் 14 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்துள்ள ரபா மீது இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில் ரபாவின் மத்திய பகுதியில் இஸ்ரேல் படையினரின் கவசவாகனங்கள் பிரவேசித்திருந்ததாக கடந்த புதனன்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டிருந்த சூழலில், காஸா–எகிப்து எல்லையிலுள்ள 14 கிலோ மீற்றர் நீளமான பிலடெல்பி நுழைவாயிலை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக இஸ்ரேலிய படையினர் அறிவித்துள்ளனர்.**

இச்சூழலில் 'ரபா மீது எல்லோரது கண்களும்' (All eyes on rafah) என்ற வாசகம் கடந்த புதனன்று சமூக ஊடகங்களில் தீயாகப் பரவியது. குறிப்பாக இன்ஸ்டர்கிராமில் மாத்திரம் 24 மணித்தியாலயங்களில் சுமார் 45 மில்லியன் தடவைகள் பகிரப்பட்டுள்ளன. இவ்வாறு முழு உலகினதும் கவனம் ரபாவில் குவிந்துள்ளன. அந்தளவுக்கு ரபா முக்கியத்துவம் பெற்று விளங்கக் காரணம் என்ன என்ற கேள்வியும் நிலவவே செய்கிறது.

'காஸாவில் இடம்பெயர்ந்துள்ள பெரும்பகுதி மக்கள் தஞ்சமடைந்துள்ள ரபா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது' என்று உலகின் பல நாடுகளும் வலியுறுத்திவரும் சூழலில் இரண்டு சர்வதேச நீதிமன்றங்கள் முக்கியத்துவம் மிக்க இரு உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது. அதாவது நெதர்லாந்தின் ஹேக் நகரிலுள்ள சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) 'ரபா மீது இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கக்கூடாது என்று கடந்த 24 ஆம் திகதி (மே) உத்தரவிட்டது.

அதேநேரம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) காஸாவில் யுத்தக் குற்றம் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிராகக் குற்றம் புரிந்துள்ளதாகக் குறிப்பிட்டு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் யாவ் காலண்ட் உட்பட ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயீல் ஹனியா, காஸா பிரிவு தலைவர் யஹ்யா சின்வார், படைப்பிரிவு தளபதி முஹம்மட் தைப் ஆகியோருக்கு கடந்த 20 ஆம் திகதி பிடிவிறாந்து பிறப்பித்திருக்கிறது.

இவ்வாறு இரண்டு சர்வதேச நீதிமன்றங்கள் முக்கியத்துவம் மிக்க இரு உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கும் சூழலிலும் இஸ்ரேல் ரபா மீது படை நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறது. உலகளாவிய கவனம் ரபாவின் பக்கம் ஈர்க்கப்பட இதுவே முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி முதல் காஸா மீது யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. அந்த யுத்தத்தை நிறுத்தவும் மனிதாபிமான உதவிகள் காஸாவுக்குள் செல்ல இடமளிக்கும் வகையிலும் ஐ.நா. பொதுச் சபையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. அப்பிரேரணைகள் நடைமுறைக்கு வராத சூழலில் தென்னாபிரிக்கா, ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தை (International court of justice) கடந்த வருடம் டிசம்பர் 29 ஆம் திகதி நாடியது.

காஸாவில் இனப்படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதலை நிறுத்துதலை இலக்காகக் கொண்டு இந்நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா மனு தாக்கல் செய்தது. இம்மனு மீதான விசாரணை 2024 ஜனவரி 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதன் போது இஸ்ரேல் இக்குற்றச்சாட்டை நிராகரித்த போதிலும், குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை தென்னாபிரிக்கா தரப்பில் முன்வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் சர்வதேச நீதிமன்றம் கடந்த ஜனவரி 26 இல், 1948 இனப்படுகொலை மாநாட்டின்படி, இனப்படுகொலையாகக் கருதப்படும் எந்தவொரு செயலையும் தவிர்ப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டது. அத்தோடு தென்னாபிரிக்காவால் கூறப்பட்டுள்ள சில செயல்கள் இனப்படுகொலை மாநாட்டின் விதிகளின் கீழ்வரும் என்றும் குறிப்பிட்டுள்ள இந்நீதிமன்றம், தென்னாபிக்கக் கோரிக்கைப்படி யுத்தத் நிறுத்தத்திற்கு உத்தரவிடவில்லை. இருப்பினும் சர்வதேச நீதிமன்ற உத்தரவை தென்னாபிரிக்கா வரவேற்றது.

இந்நிலையில் காஸா மீதான யுத்தம் தொடர்ந்த நிலையில் கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி மீண்டும் சர்வதேச நீதிமன்றத்தை நாடிய தென்னாபிரிக்கா, ரபாவிற்கு எதிரான யுத்தத்தை முன்னெடுக்க இஸ்ரேல் திட்டமிடுவது கடந்த ஜனவரி 26 ஆம் திகதி வழங்கிய உத்தரவை மீறும் வகையிலும் மேலும் பெரிய அளவிலான தீங்கு மற்றும் அழிவுக்கு வழிவகுக்குமா" என்பதையும் நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டுமெனக் கோரியது.

இக்கோரிக்கையை பெப்ரவரி 16 இல் நிராகரித்த நீதிமன்றம், ஜனவரியில் வழங்கப்பட்ட தற்காலிக உத்தரவுகள் ரபா உள்ளிட்ட காஸா பகுதி முழுவதும் பொருந்தும்' என்றது. அதன் பின்னர் காஸாவில் பட்டினி, பஞ்சத்தை நிவர்த்திக்கவென மனிதாபிமான உதவியை வழங்க வேண்டும் என்று கூடுதல் அவசர நடவடிக்கைகளுக்கு இஸ்ரேலுக்கு உத்தரவிடுமாறு கடந்த மார்ச் 06 இல் சர்வதேச நீதிமன்றத்தை தென்னாபிரிக்கா கோரியது.

இது தொடர்பான வாதப்பிரதிவாதங்களின் அடிப்படையில், 'காஸா மக்களுக்கு தாமதமின்றி உணவு விநியோகத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு ஏகமனதாக கடந்த மார்ச் 28 ஆம் திகதி உத்தரவிட்டது.

காஸா தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் இவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வந்த சூழலில் இஸ்ரேல் ரபா மீதான யுத்தத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக மே மாதம் 06 ஆம் திகதி ரபாவின் கிழக்கு பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்துள்ளவர்களை வெளியேறுமாறு அறிவித்தது. அதனைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா, ரபாவில் தஞ்சமடைந்துள்ள இடம்பெயர்ந்தவர்களைப் பாதுகாக்கவென கூடுதல் நடவடிக்கைகளைக் கோரி மே 10 ஆம் திகதி மீண்டும் சர்வதேச நீதிமன்றத்துக்குச் சென்றது. இது தொடர்பில் தென்னாபிரிக்காவின் வாதங்கள் மே 16 ஆம் திகதியும் இஸ்ரேலின் வாதங்கள் 17 ஆம் திகதியும் முன்வைக்கப்பட்டன.

இந்தச் சூழலில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், இஸ்ரேல் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் உட்பட ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவர், காஸா பிரிவுத் தலைவர், டயப் ஆகியோருக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பித்தது. இதற்கு இஸ்ரேலும் ஹமாஸும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இதேவேளை சர்வதேச நீதிமன்றம் கடந்த 24 ஆம் திகதி ரபா மீது தாக்குதல்களை முன்னெடுக்கக்கூடாது என்று இஸ்ரேலுக்கு உத்தரவிட்டது.

ஆனால் இந்நீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரான சில தினங்களுக்குள் 60 மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அதிலும் ரபாவில் வெளியேறும் மக்கள் தங்குவதற்கான பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டதால் அல் சுல்தானில் உள்ள பாதுகாப்பு வலய கூடார முகாம் மீது கடந்த ஞாயிறன்று தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டதோடு, பலர் காயமடைந்துள்ளனர். அவர்களில் பெரும்பகுதியினர் குழந்தைகளும் பெண்களுமாவர்.





## ஒரே நாளில் 45 மில்லியன் தடவைகள் பகிரப்பட்டுள்ள ரபா வாசகம்

இத்தாக்குதலுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் கடும் கண்டனங்கள் எழுந்தன. குறிப்பாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரன், 'சர்வதேச சட்டத்தையும் சர்வதேச நீதிமன்ற உத்தரவையும் முழுமையாக மதித்து உடனடியாக போர்நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு இஸ்ரேலுக்கு அழைப்பு விடுப்பதாகக் குறிப்பிட்டார்.

அயர்லாந்தின் பிரதமர் சைமன் ஹரிஸ், 'ரபாவில் இஸ்ரேலிய தாக்குதல்களை கொடூரமானதும் வெறுக்கத்தக்கதும் என்றும் குறிப்பிட்டதோடு, போர்நிறுத்தத்தை கொண்டு வருவதற்கு உதவ எங்கள் வசம் உள்ள அனைத்து வசதிகளையும் பயன்படுத்த ஐரோப்பா முன்வருவதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங், ரபா மீதான இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் தொடரக்கூடாது. அதன் தாக்குதல்கள் பயங்கரமான ஏற்றுக்கொள்ள முடியாத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அதனால் காஸா சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் தஞ்சமடைந்துள்ள ரபா மீது தனது படை நடவடிக்கையை இஸ்ரேல் முன்னெடுக்கக்கூடாது என்றுள்ளார்.

அதேபோன்று பெல்ஜியம், சவுதி அரேபியா, துருக்கி, ஸ்பெய்ன், நோர்வே உள்ளிட்ட பல நாடுகளும் இத்தாக்குதலுக்கு கடும் எதிர்ப்புக்களுடன் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

இவ்வாறான நிலையில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, கடந்த ஞாயிறன்று ரபாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பலஸ்தீனிய மக்கள் கொல்லப்பட்டதைத் துரதிர்ஷ்டவசமான விபத்து என்றும் ஹமாஸ் உறுப்பினர்களை எமது படைகள் குறிவைத்ததால் பொதுமக்கள் மரணம் நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டதோடு விசாரணைக்கு உத்தரவிடுவதாகவும் மன்னிப்பு கோருவதாகவும் குறிப்பிட்டார்.

ஆன போதிலும் ரபா மீதான யுத்தம் தொடர்வதானது, சர்வதேச நீதிமன்ற உத்தரவை மதித்து செயற்படுவதாகவோ உலக நாடுகளின் யுத்த நிறுத்தக் கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படுவதாகவோ தெரியவில்லை. ஆனால் அமைதி, சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களதும் ஒரே எதிர்பார்ப்பும் வலியுறுத்தலும் காஸா முகம் கொடுத்துள்ள அழிவுகளும் சேதங்களும் முடிவுக்கு வர யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்பதாகவே உள்ளது.



**மர்லின் மரிக்கார்...**

# பாலித ரங்கே பண்டாரவின் 'அரசியல் வெடிகுண்டு'



ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார கடந்த வாரம் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அநுர, மற்றும் சஜித்தின் விவாதங்களை மீறி ரங்கேயின் பேச்சு வைரலானது. ஜனாதிபதியின் பதவியையும், பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தையும் இரண்டாண்டுகளுக்கு தள்ளிப்போடும் கதையே இந்த வாரம் முழுவதும் அரசியல் களத்தில் பேசப்பட்டது.

ஜனாதிபதி ரணிலின் கருத்தும் இதுதானா என்பதை அறிய பலரும் இதுபற்றி ஜனாதிபதி ரணிலிடம் கேட்க ஆரம்பித்தனர். “அரசாங்கத்தின் கருத்தை நாங்கள் கூறியுள்ளோம். ஆனால் ஜனாதிபதி தேர்தல் குறித்து வேறு எந்த கட்சியும் கருத்து தெரிவிக்கலாம்” என்றார், ஜனாதிபதி. அவர் சொன்னது யாருக்கும் புரியவில்லை, ஆனால் அதற்கு மேல் யாரும் கேள்வி கேட்கவில்லை. ஜனாதிபதி ரணில் கடந்த வார இறுதியை வட மாகாணத்தில் கழித்தார். ஜனாதிபதி வடக்கிற்கு சென்றது தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நல்லதொரு கருத்தை வெளியிட்டார். யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், 2005 ஜனாதிபதி தேர்தலில் வடக்கு மக்கள் வாக்களிக்காத காரணத்தினால் ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டார் எனக் கூறினார். ஆனால், ஜனாதிபதி ரணில் பிரதமரானபோதும், ஜனாதிபதியான பின்னும், வடக்கு மக்களுக்காக ஆற்றிய சேவையை அதிகரித்தாரே தவிர, குறைக்கவில்லை எனவும் சுமந்திரன் உணர்ச்சிப் பெருக்குடன் தெரிவித்தார். இந்த உரையை விழாவில் பலர் ஆமோதித்தனர்.

இந்த நிகழ்வில் தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர். உறுமய உறுதிப் பத்திரங்களை வழங்கிய பின்னர், ஜனாதிபதி ரணில் மாலையில் இளைஞர்கள், யுவதிகளை சந்திக்கச் சென்றார். அதனை தேசிய இளைஞர் சேவை மன்றம் ஏற்பாடு செய்திருந்ததுடன் மற்றைய கூட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்திருந்தார். எலோன் மஸ்க்கின் சேவையை இலங்கைக்கு கொண்டு வருவது குறித்து பேசிய ஜனாதிபதி ரணில், இளைஞர்களின் வேலை வாய்ப்பு பிரச்சினை மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு பதில்களை வழங்கினார். இதற்கிடையில் இளைஞர்களிடம் அவர்களுக்குப் பிடித்த பாடகர் யார் என்று கேட்டார். பாலசுப்ரமணியம் என்று கூட்டம் ஒருமித்த குரலில் கூச்சலிட்டது. அப்போது ஜனாதிபதி அவரின் ஒரு பாடலைப் பாடுமாறு கூறியதையடுத்து இளைஞர் ஒருவர் வந்து பாலசுப்பிரமணியத்தின் பாடலைப் பாடி இளைஞர்களையும் ஜனாதிபதி ரணிலையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

அடுத்த வருடம் யாழ்ப்பாணத்தில் இளைஞர் கிராம நிகழ்வை (யொவுன்புர) ஒன்றை நடத்துவதற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக இளைஞர்கள் முன்னிலையில் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். அதற்கு முன் இந்தியக் கலைஞர்களை அழைத்து வந்து இசைக் கச்சேரி நடத்தச் சொன்னார். சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் இளைஞர் சந்திப்பு ஆரம்பமானது. உடனடியாக இளைஞர் சேவை மன்றத் தலைவருக்கு போன் செய்து, தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற அவரது அறிவிப்பின்படி, தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. டக்ளஸ் தேவானந்தா கூட்டிய இளைஞர் கூட்டத்திற்குச் சென்ற ஜனாதிபதி அதனை முடித்துக் கொண்டு மறுநாள் அதிகாலை கிளிநொச்சிக்குச் சென்று அங்குள்ள வைத்தியசாலையின் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். உறுமய உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டதன் பின்னர், ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் மாலை மீண்டும் யாழ்ப்பாணம் வந்தார். மேல்மாகாணத்திற்கு அடுத்தபடியாக சிறந்த கல்வித் தரம் பெற்ற யாழ்ப்பாணத்தை மீண்டும் அதே நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்றார்.

சி.வி.விக்னேஸ்வரன் எம்.பிக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணிலிடம் தெரிவிக்கப்பட்ட போது, அவரது வீட்டுக்குச் சென்றார். யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி ரணில், சுமார் 40 நிமிடங்கள் அவரைச் சந்தித்து சிநேகபூர்வமாக உரையாடினார். அங்கு வந்த வயதான பெண்மணி ஒருவர் ஜனாதிபதி ரணிலை நேரில் பார்க்க வேண்டும் என பாதுகாப்பு படையினரை தொந்தரவு செய்ய ஆரம்பித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் வீட்டிற்கு அருகில் வந்த பெண் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போதே ஜனாதிபதி ரணிலும் இந்தச் செய்தியைக் கேட்டுள்ளார். அவரது கார் அந்தப் பெண்ணை நெருங்கியதும், அவர் கார் கண்ணாடியைத் தாழ்த்தி, கையசைத்து வரவேற்றார். அன்றிரவு ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் தயார் செய்யப்பட்டிருந்த இரவு விருந்திற்குச் சென்ற ஜனாதிபதி, அங்கிருந்த பிரதேச அரச அதிகாரிகளுடன் சிநேகபூர்வ சந்திப்பிலும் ஈடுபட்டார். யாழ்ப்பாணத்தின் விவசாய மீள் அபிவிருத்திக்காக ஜனாதிபதியின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை அங்கு அறிமுகப்படுத்துமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். வவுனியா வைத்தியசாலை கட்டட திறப்பு விழாவின் பின்னர் நடைபெற்ற தேநீர் வைபவத்தின் போது, மன்னாருக்கும் பரிசுகளை கொண்டு வரு மாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார். தொடர்ந்து வடக்கிற்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி மன்னாருக்கு வரமாட்டார் எனவும் அவர் நகைச்சுவையாக தெரிவித்தார்.

“மன்னாருக்காக என்னிடம் பல தனியான திட்டங்கள் உள்ளன. அந்த முதலீட்டு திட்டங்களோடு வருவேன். எப்படியிருந்தாலும், நான் வருடத்திற்கு ஒரு முறை மடு தேவாலயத்திற்கு வருவேன். என்று பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனிடம் ஜனாதிபதி கூறியதையும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணிலின் யாழ்ப்பாண விஜயத்தின் போது ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய டெங்கு பிரசாரத்தின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலக பிரதானி சாகல கலந்துரையாடினார். மழையால் டெங்கு பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதால், டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பில் சில நாட்களில் சுமார் 40 பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ள நிலையில், மேலும் வலுவிழந்த மரங்கள் உள்ளனவா என ஆராய உரிய திணைக்களங்களுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதியின் செயலகத் தலைவர் சாகல ஆலோசனை வழங்கியுள்ளார். மாநகர சபையின் பரிந்துரையின் பேரில் மரக் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான மரங்களை இனங்கண்டு அவற்றை வெட்டுமாறு மாநகர சபைக்கு அறிவித்தார். ஜனாதிபதியின் ஆலோசனைக்கு ஆதரவாக பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி திங்கட்கிழமை வழமை போல் அமைச்சர்களை சந்தித்தார், அதில் சிறப்பு எதுவும் இருக்கவில்லை. மறுநாள் காலை பாதுகாப்பு அமைச்சுக்குச் சென்று வழமை போன்று நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடினார். ஐக்கிய தேசியக் கட்சி முகாமைத்துவக் குழு மாலையில் கூடிய போதே பொதுச் செயலாளர் ரங்கேயின் அரசியல் குண்டு வெடித்துள்ளது. நாடளாவிய ரீதியில் நியமிக்கப்படவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களின் பட்டியல், பொதுச் செயலாளர் ரங்கேவால் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் ஹரீன் பெர்னாண்டோ ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் தொடர்பில் நீண்ட விளக்கமொன்றை முன்வைத்தார். அதை முடித்துவிட்டு பொதுச்செயலாளர் ரங்கேயின் கருத்து குறித்து ஜனாதிபதியிடம் ஹரீன் கேட்டறிந்தார்.

அவரது அறிக்கை பாதிப்பை ஏற்படுத்தியதாக பலர் கருத்து தெரிவித்த போது தலையிட்ட ஜனாதிபதி ரணில், “அரசாங்கத்தின் கருத்தை நான் அமைச்சரவைக்கு தெரிவித்துள்ளேன். ஆனால் இது தவிர, வேறு கருத்துக்கள் இருக்கலாம். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படத் தேவையில்லை” என்றார். அவர் அவ்வாறு சொன்னதும், இந்த நேரத்தில் தலைவர் என்ன சொல்லப் போகிறார் என்று சிந்திக்க முடியாமல் அனைவரும் மௌனமானார்கள். பல அமைச்சர்களும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் வினவியதுடன், ஜனாதிபதி வழங்கிய பொதுவான பதில் முகாமைத்துவ சபைக்கு வழங்கிய பதிலைப் போன்றே அமைந்திருந்தது. கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நாட்டின் மின்சாரத் துறை தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட ரணில் அதன் பின்னர் நிதி அமைச்சுக்கு வந்தார்.

ரங்கேயின் அறிக்கைக்கான பதில்கள் குறித்து ஜனாதிபதி செய்திப் பணிப்பாளர் நாயகத்திடம் கேட்டறிந்தார். “சிறிகொத்தாவில் சிலர் வந்து போராட்டம் நடத்தியுள்ளனர். அரசியல் மற்றும் தேர்தல் சம்பந்தப்பட்டவர்கள் இதைப் பற்றி பேசுகிறார்கள், ஆனால் சாதாரண மக்கள் மத்தியில் இதைப் பற்றி பெரிய ஆரவாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என்று தினித் சிந்தக கூறியபோது ஜனாதிபதி ரணில் தலையை அசைத்தாரே தவிர வேறு எதுவும் பேசவில்லை.

நிதி அமைச்சில் பணியை முடித்துக் கொண்டு தொழிற்சங்கத் தலைவர் லெஸ்லி தேவேந்திரவின் நினைவேந்தல் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார். இரத்மலானை விமானப்படைத் தளத்தில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி வியாழக்கிழமை தனது அலுவலகத்தினை வந்தடைந்தார்.

அங்கு வந்த அமைச்சர்களும், அதிகாரிகளும் ரங்கே பேசியது குறித்து கேட்க ஆரம்பித்தனர். ரங்கேயின் அறிக்கைக்கு சி.வி.விக்னேஷ்வரனும் ஒப்புதல் அளித்துள்ளார். அது உண்மைதான், இந்த நேரத்தில் பொருளாதாரத்தை வீழ்ச்சியடைய வைப்பது நல்லதல்ல. தேர்தலை ஒத்திவைப்பதே சிறந்த தீர்வு” என்று பேராசிரியர் ஆசுமாரசிங்க கூறும்போது, ஜனாதிபதியின் அரசியல் பலருக்கு புரியவில்லை என அங்கிருந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் வரும் என்று அமைச்சரவையில் மட்டுமே கூறினேன். ஜனாதிபதி ரணில் சில கருத்துக்களை வழங்கியதோடு புன்னகைத்தார்.

அரசாங்கம் வர்த்தமானி மூலம் அறிவித்துள்ள தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை வழங்க மாட்டோம் என தோட்ட முதலாளிகள் தெரிவித்துள்ளனர் என மனுஷ நாணயக்கார தெரிவித்தார். குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்ய தேவையான சட்டங்களை இயற்றுங்கள்." ஜனாதிபதியின் பதில் குறுகியதாக இருந்தது.

சட்டமா அதிபரின் சேவை நீடிப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர கேள்வி எழுப்பினார். "ஈஸ்டர் அறிக்கை குறித்த விடயங்களை சட்டமா அதிபர் பேராயர்களுடன் கையாள்கிறார். அதனால்தான் இந்த சேவை நீடிப்பை செய்தேன். வேறு எந்தக் காரணமும் இல்லை, யாருக்காவது பிரச்சினை இருந்தால், ஆயர்களிடம் கேட்கலாம் என்று ஜனாதிபதி கூறினார். வியாழன் மாலை இந்நாட்டில் அமெரிக்கவின் பிரபல்யமான காருக்கு இணையான காரை தயாரித்த இளைஞர் ஒருவர் ஜனாதிபதி ரணிலுக்கு தனது காரை காட்டுவதற்காக கொண்டு வந்திருந்தார். இதனை மேம்படுத்தி இலங்கையில் விற்பனை செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.


## இலங்கை கடற்படை

தீவை சுற்றி தங்கத்திலான வேலி

கடற்படை மற்றும் கடல்சார் கல்லூரி பயிலிளவல் உத்தியோகத்தர்களை (ஆண் / பெண்) ஆட்சேர்ப்பு செய்தல்

### கல்வித் தகைமைகள்.

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தாய்மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் பின்வரும் பிரிவுகளுக்காக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| நிறைவேற்றுப் பிரிவு | உயிரியல் விஞ்ஞானம், பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் இணைந்த இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் 03 சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| வழங்கற் பிரிவு | பொருளியல், வியாபாரக் கற்கை அல்லது வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் கணக்கீடு ஆகிய பாடங்களைகளில் 03 சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| பொறியியற் பிரிவு | பௌதீகவியல், இணைந்த கணிதம், மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்று 02 திறமைச் சித்திகள் மற்றும் 01 சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும் |
| மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியற் பிரிவு (ஆண்கள் மட்டும்) | பௌதீகவியல், இணைந்த கணிதம், மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்று 02 திறமைச் சித்திகள் மற்றும் 01 சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| காலாட்படைப் பிரிவு வேண்டும். | குறைந்தபட்சம் எந்த ஒரு பரிட்சையில் 03 பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல் |
| ஒழுக்காற்று பராமரிப்பாளர் பிரிவு | குறைந்தபட்சம் எந்த ஒரு பரிட்சையில் 03 பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

- க.பொ.த. (உ/த) பரீட்சையில் பொது அறிவுப் பரீட்சையில் 30 இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல்.
- க.பொ.த.(உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை பல்கலைக்கழக நுழைவிற்கான குறைந்தபட்சத் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

பொறியியற் மற்றும் மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியற் பிரிவிற்கு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் உள்நாட்டு ∴ வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் 04 வருடப் பட்டத்தினைத் தொடருவதற்கான வாய்ப்பினைப் பெறுவர்

### ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகள்

- ரூ 89,551.80 அதிக சம்பளம் (உணவு கொடுப்பனவு)
- போக்குவரத்து வசதிகள்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி
- மருத்துவ வசதி
- தங்குமிட வசதிகள்
- சீருடை வசதிகள்

### அடிப்படை தகுதிகள்

- இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.
- திருமணமாகாதவர் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 22 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
- உயரம் - ஆண் - 5 அடி 6 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல். (ஒழுக்காற்று பிரிவிற்கு 5 அடி 7 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல்.)
- உயரம் - பெண் - 5 அடி 4 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல். (ஒழுக்காற்று பிரிவிற்கு 5 அடி 4 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல்.)
- நிறை - ஆண் - 52 கிலோகிராமிற்குக் குறையாதிருத்தல்
  - பெண் - 45 கிலோகிராமிற்குக் குறையாதிருத்தல்
- மார்பு (ஆண்) - 32 அங்குலத்தை விடக் குறையாதிருத்தல்
- நிறப்பார்வை - STD II
- தொலை பார்வை - 6/6 (மூக்குக் / கண்ணாடி வில்லைகள் பயன்படுத்தாமல்)

011-7195 120, 011-7195154
www.navy.lk/joinus
www.facebook.com/SriLankaNavyOfficial

QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது மேலும் விவரங்களுக்கு தொலைபேசி எண்ணை அழைக்கவும்

விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதி 2024 ஜூலை 04

# நாசாவின் செவ்வாய் கிரக ஆய்வில் இலங்கைப் பெண்!



விண்வெளியைப் பற்றி அறிந்து கொள்வதற்கு பூமிவாசிகளுக்கு புதுமையான ஆர்வமிருக்கின்றது. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன், இந்த ஆர்வமானது பிரபஞ்சத்தை ஆராய்ச்சி செய்யும் நிலைக்கு உயர்ந்துள்ளது. இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க அரசாங்கத்தின் கீழ், விண்வெளியை ஆராய்வதற்கான நாசா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பிரபஞ்சத்தை ஆராய்ச்சி செய்வதற்கான சட்டரீதியான அதிகாரமும் கிடைத்தது. இதன் பிரகாரம் 1969ஆம் ஆண்டு ஜுலை மாதம் சந்திரனில் முதலாவது தரையிறக்கம் நடந்தது.



அதன் பின்னர் பல தசாப்தங்களாக உலகின் பல வளர்ந்த நாடுகள் நிலவை அடைந்தும், நிலவின் மீது ரொக்கட்டுகளை இறக்கி அங்கு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டதும் ஏட்டிக்குப் போட்டியாக மாறியுள்ளது. அதன் வெற்றி தோல்விகள் குறைவில்லாமல் இடம்பெறுவதோடு, தொடர்ந்தும் பிரபஞ்சத்தில் இறங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிலவை அடைந்ததில் திருப்தி அடையாத பூமிவாசிகள் அத்தோடு நிறுத்திக் கொள்ளாது சூரிய குடும்பத்தை ஆராய்ச்சி செய்யவும் ஆரம்பித்தனர். இதில் முன்னிலை வகித்ததும் நாசா நிறுவனமாகும். தினமும் பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்தியும், செயற்கைக்கோள்கள் மற்றும் பிற வான்வழி பொருட்களை அவ்வப்போது பிரபஞ்சத்திற்கு அனுப்பியும் நாசா நிறுவனம் பூமிக்குப் புறம்பாக மனிதர்கள் வாழ்வதற்குத் தகுதியான வேறு கிரகங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றது. அதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தின் ஹூஸ்டனில் நகரில் ஜான்சன் விண்வெளி மையத்தை அமைத்து, செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்வதற்கான நீண்ட ஆராச்சியில் நாசா நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. இதற்காக மனித ஆய்வு ஆராய்ச்சி மாதிரி (Human Exploration Research Analog – HERA) உருவாக்கப்பட்டு பல்வேறு ஆராய்ச்சி மற்றும் மாதிரி செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உலகம் முழுவதிலும் விண்வெளி அறிவியல் தொடர்பில் விரிவான அறிவும் ஆர்வமும் கொண்டவர்களிடையே தன்னார்வலர்களாக நாசா நிறுவனம் தெரிவு செய்கின்றது. அமெரிக்காவின் சென்பிரான்சிஸ்கோவில் வசிக்கும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கலாநிதி பியுமி விஜேசேகரவும் அவ்வாறு அதில் இணைந்துகொண்டார். 640 சதுர அடி பரப்பளவுடன் இரண்டு தளங்களையும் மற்றும் மேலே தனியான தளத்தையும் கொண்ட மொடியுலராக வடிவமைக்கப்பட்ட ஒரு விண்வெளி மாதிரி வடிவத்தில் கலாநிதி பியுமி விஜேசேகரவுடன் இன்னும் மூன்று பேர் 45 நாட்கள் பல்வேறு ஆராய்ச்சிகள் மற்றும் சோதனைகளில் ஈடுபட உள்ளதோடு, அவர்கள் அதனுள்ளிருந்து எதிர்வரும் 24ஆம் திகதி வெளியே வர உள்ளனர்.

இந்த அற்புதமான அனுபவத்தை அனுபவிக்கும் கலாநிதி பியுமி விஜேசேகர, கலிபோர்னியாவின் சிலிக்கான் வேலி பிரதேசத்தில் அமைந்துள்ள நாசா ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானியாக உள்ளார். அவர் அதன் கதிர்வீச்சு உயிரியல் இயற்பியல் துறையில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆராய்ச்சி விஞ்ஞானி ஆவார். 2015ஆம் ஆண்டில், அமெரிக்காவின் சென்டியாகோ, கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் உயிரியல் பொறியியல் துறையில் பட்டத்தையும், பென்சில்வேனியாவில் உள்ள கார்னெகி மெலன் பல்கலைக்கழகத்தில் உயிரியல் மருத்துவப் பொறியியலில் முதுகலை மற்றும் கலாநிதி பட்டத்தையும் நிறைவு செய்துள்ள இவர், அமெரிக்காவின் புகழ் பெற்ற பௌதீக ஆய்வு ஆராய்ச்சி விஞ்ஞானி ஆவார். கலாநிதி பியுமி விஜேசேகரவுடன் இந்த அனுபவத்தைப் பெறும் ஏனையவர்களாக ஐக்கிய அரபு எமிரேட்ஸைச் சேர்ந்த ஷெரீப் அல் ரொமேதி, அமெரிக்காவின் கெனெக்டிகட் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜேசன் லீ மற்றும் அமெரிக்க விமானப்படையின் விண்வெளி நடவடிக்கை தொடர்பான அதிகாரி ஸ்டெபானி நவரோ ஆகியோர் உள்ளனர். செவ்வாய் கிரகத்துடன் தொடர்புடைய 18 சுகாதார ஆய்வுகள் மற்றும் சுற்றாடல் காரணமாக ஏற்படக் கூடிய உடல், நடத்தை மற்றும் உளவியல் பிரதிபலிப்புக்கள் தொடர்பில் ஆழமான ஆராய்ச்சிகள் அவர்களால் மேற்கொள்ளப்படவுள்ளதாக நாசா அறிவித்துள்ளது. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் தரவுகள் செவ்வாய் கிரகத்திற்கான அடுத்த பயணத்தின் போதும் மற்றும் விண்வெளி பயணத்தில் அங்கு உயிர்வாழ்வதற்கு தயாராவதற்கும் நாசா நிறுவனத்திற்கு பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாதிரி அறையில் 45 நாட்களாக நான்கு ஆராய்ச்சியாளர்கள் தனிமைப்படுத்தப்படுதல் மற்றும் பூமியிலிருந்து வெகு தொலைவில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுவது உள்ளிட்ட செவ்வாய் கிரகத்தில் வாழ்வதற்கு ஏற்ற சூழல் தொடர்பில் விரிவான வகையில் தரவுகளை சேகரிக்கும் நோக்கில் நடத்தப்படும் இந்த மாதிரி ஆராய்ச்சித் தொடரின் முடிவுகள், எதிர்காலத்தில் விண்வெளிப் பயணத்தில் நாசா நிறுவனத்திற்கு புதிய புரட்சியை ஏற்படுத்த தேவையான பின்னணியை உருவாக்கும்.



*பௌஸ் முஹம்மட்*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*

# தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி

## ஜூன் 28,29 ஆம் திகதிகளில் சென்னையில்




பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி என்பன நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் ஜூன் 28,29 திகதிகளில் நடைபெற உள்ளன. அந்நிகழ்வை தமிழக அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி உலகத் தமிழ் வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. இந்நிகழ்வில் தமிழ்நாடு EGovernance, ELCOT, Tidel Park, இந்திய தகவல் தொழில்நுட்ப பூங்கா (STPI) மற்றும் பன்னாட்டு முன்னணி நிறுவனங்கள், கருத்தரங்கம் நடத்துவதோடு காட்சிப்படுத்தவும் உள்ளன. இந்நிகழ்வில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் முன்னணி பல்கலைக்கழகங்கள் பங்கேற்க உள்ளன.

இந்திய அளவில் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு 3ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

IT துறை வளர்ச்சியில் AI தொழில்நுட்பம், ரோபோடிக், தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. மேலும் பொறியியல் துறை மாணவர்கள் வேலை வாய்ப்புகள் பற்றி அறியவும், தங்களின் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தி சந்தைப்படுத்தவும், பன்னாட்டு தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் பயனுள்ளதாக இருக்கும் என உலகத்தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டு குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.



ஜெயந்தி நகர் ஜிந்துபிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய கோவிலில் அண்மையில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வில் கலந்துகொண்ட தர்மகர்த்தா தெ, பிரம்மநாயகம், தமிழ்நாடு சிவநடராஜன் மற்றும் சிவனடியார்களை படங்களில் காண்க


# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வேலைவாய்ப்பு**

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

QUICK BOOK அனுபவத்துடனான கணக்காளர் மற்றும் கணக்கிடலை கையால் செய்தல். எமது முகவரிக்கு அருகாமையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது. கொழும்பு11, 3ஆம் குறுக்குத் தெரு, 96 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். மின்னஞ்சல் hassans @sltnet.lk 034973

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கொழும்பு தலவத்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 40, 000 45, 000 அலுவலகத்தின் அடிப்படையில் வயது 55 வய திற்கு கீழ். 0777 584961, 0777 456579. 036154

தங்கி யிருந்து வேலை செய்வதற்கான ஆண் சமையல்காரர் பெருந்தோட்ட பங்களாவில் வேலை செய்த முன் அனுபவத்துடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். ஆவணங்களுடன் தொடர்பு கொள்ளவும். 0755841352. 034954

**322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள தொடர்மாடி Construction வேலைக்கு, பெயின்டர், பெயின்டர் லேபர்ஸ் தேவை. Metro Habitat, No. 14, Rudra Mawatha, Colombo-6. 0773629518/ 0777380622. 035921

**325 தொழில்துறை பொது**

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டலுக்கு வெயிட்டர்கள், Tea Makers, Juice Bar O perator வேலைகள் உள்ளன. நேர்முகப் பரீட்சைகளுக்காக 0753105333, 0742434127 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். 035908

வீடமைப்பு நிர்மாணத்துறை நிறுவனத்திற்கு வெல்டர் பைப் பெயின்டர் மேசன் இலெக்ரிக் டிரைவர் மற்றும் கையுதவியாட்கள் நேரில் வரவும். களுபோவில. 0777 126910, 076 8172912. 036037

adz.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling

**காணி/தோட்டம்**

**613 பலகைக் குற்றிகள்**

தெஹிவளை, ஹில் வீதி புதிதாக கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. 9.5 பே. 2 மாடி தனியான நுழைவாயில். 7 படுக்கையறைகள், 5 குளியலறைகள், 2 பவுடர் அறைகள், தனியான இரு மின்சாரம்/ நீர் மீட்டர்கள். தரகர் தேவை யில்லை. 91.5 மில்லியன். 0713693999. 034945

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

இரு வீடுகள் விற்பனைக்கு. ஒன்று கொழும்பில் மற்றது கம்பஹாவில். 5, 10 பேர்ச்சுகள் இரு காணிகள் விற்பனைக்கு. அழைக்கவும் 0770260294/ 0720912807. 035725

பொரளை கௌதமி வீதியில் 6/ 10 பர்ச்சஸ் காணி வீட்டுடன் விற்பனைக்கு. தொடர்பு 077 1630517. 036070

கொழும்பு15, முகத்துவாரத்தில் 3 மாடி வீடு விற்பனைக்கு. 1 3 பேர்ச் . 4 அறைகள், ஒரு பேர்ச் 6 மி ல்லியன். 0761269134. 034792

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

கண்டி மாநகர சபை எல்லைக்குள் 3000 ச. அடி 22 பேர்ச்சிலமைந்துள்ள பலமாக கட்டப்பட்டுள்ள வீடு பாடசாலைகளுக்கு மாளிகாவ, வாவி மற்றும் சிட்டி சென்ரருக்கு நடைதூரம். ஐந்து படுக்கை அறைகள், 4 கழிவறைகள், உணவருந்தும் பிரதேசம், இணை க்கப்பட்ட பான்ரி, வேலைக்கார ருக்கான அறை மற்றும் கழிவறை, கராஜ் மற்றும் கழிவறை இன்னும் பலவும். முன்னும் பின்னும் தோட்டம், தரை மேலான நீர்த்தாங்கி, மூன்று வழி மின்சாரம், ஸ்ரீலங்கா தொலைபேசி FIBR E இணைப்பு சிறந்த சாதாரணமான விலை. உரிமையாளர் (மருத்துவர்) புலம்பெயருகின்றார். தொடர்பிலக்கம் 081 2219534. 035189

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

தெஹிவளை கவுடான இரண்டு படுக்கையறை வீடு வாடகைக்கு. கார்கிளெ்ஸ் புட்சிட்டிக்கு அருகில். தொலைபேசி/ வட்ஸ்அப் 011 2716080, 0768058809, 077 6738809. 036032

**642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

ரகம பொல்கஹஹேன கந்தான பஸ் பாதையில் பொல்கஹஹேன சந்தியில் வீடு வாடகைக்கு. கொழும்புக்கு 30 நிமிடங்கள் 14000/ 075 3944644. sribauli8@gmail.com 035924

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி BUDGET aDZ போட்டோ குறும் விளம்பரம்


Toyota Axio 2015, CAG-XXX, and Corolla 141, 2008 care for sale or Exchange, Dammika Moters, Kalubowila, 0777 880 800, 0777 224 500, 1472 - 1


Honda Civic EG8, 300-XXXX, Auto, White, sale or Exchange, Dammika Moters, Kalubowila. 0772 2988 99, 0777 880 800, 1472 - 3


Rosa Unregistered Bus, 29 Seat. 2014, White, rechning Seats, for sale or Exchange, 0777 880 800, 0777 224 500, 1472 - 5


Daihatsu Atrai Full Option, Turbo, Unregistered Vehicle for sale or Exchange, Dammika Moters, Kalubowila 0777 880 800, 0777 224 500, 1472 -4


BMW 520D, 2014, Face light, Diesel, CAA-XXX, for sale or Exchange, Dammika Moters, Kalubowila. 0772 298 899, 0778 806 565. 1472 - 2


Jaguar X Type 2003, KU-XXXX, First Owner, for sale or Exchange Dammika Moters, Kalubowila 0777 880 800, 0777 224 500, 1472 - 6


German lathe machine 13 feet length center to center 8 feet 2” bore removable gap 4 jo chuck in good condition for sale 0775 997 770 ajith


Bajaj Platina BAZ-0069, 100CC, Motor Cycle Highest Offer, 0777 766 928 KU - 01

தினகரன் வாரமஞ்சரி போட்டோ குறும் விளம்பரம்
Amal - 077 7 270 443
Ajith - 077 7 278 979

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## AUTO A/C
Specialized in Auto Air Conditioning Repairing & Installation
RANCO AIR CONDITION
Wanela Road, Dehiwala.
0777 48 77 88

## HONDA VEZEL
RS Sensing, 2016, CAS xxxx, Safety, Multifunction, Paddle Shift, Auto Pilot, Cruise Control, Original Paint, All service records available, Registered Owner, Excellent Condition
Contact - 077 7 908 963

## ALMAK GLASS & ALUMINIUM
PROFESSIONAL IN INSTALLATION OF TEMPERED GLASS
Doors, Windows, Partitions, Ceilings, Spider Wall, Shop Fronts, Cladding, Roller shutters
ROLLER SHUTTERS | SHOWER CUBICLES
E-mail : almakglass@gmail.com
0773 255 141

## VAUABLE LANDS FOR SALE
IN CLOSE PROXIMITY TO
SRI JAYAWARDENAPURA HOSPITAL, JUDGES BUNGALOWS
25 PERCH - 18 PERCH - 10 PERCH BLOCKS
SURROUNDED BY CITIES (WITHIN 3 KM CIRCLE)
NUGEGODA - MAHARAGAMA
THALAWATHUGODA DELKANDA
WIJERAMA - PAMUNUWA
EMBULDENIYA - UDAHAMULLA
Judges Bungalows (Nadukara Waththa) · Amarathunga Mawatha · Sri Jayewardenepura General Hospital
0758 342 237 / 0753 705 060

## LUXURY APARTMENT FOR RENT
IN THE GRAND, COLOMBO 07
Located on the 12th floor, this fully furnished apartment spans 1,157 sq. ft. and features two grand bedrooms, maid's room with washroom, and attached washrooms. The apartment also boasts access to two swimming pools, including a panoramic 71-meter infinity pool with heated Jacuzzi jets on the 32nd floor. Enjoy exclusive views from the sky bar and restaurant, and explore the sports facilities, gymnasium, spa, mini-mart, badminton court, kids' play area. Peace of mind is ensured with enhanced security, all within the unparalleled luxury of The Grand. Schedule your viewing now and experience it for yourself. 02 Parking Slots available
Contact : 0772 605 353 / 0777 267 615

## NO DOWN PAYMENT — LIMITED OFFER
3 BEDROOMS
2 BATHROOMS
LIVING
KITCHEN
DINING
CONTACT US TO BUILD ON YOUR OWN LAND
Hotline 0114 371 200
Monthly 237,000/-
DAHAM HOME BUILDERS (PVT) LTD
WhatsApp/ Imo - 0711 123 196 Call - 0776 200 196

## මානසික පීඩනය, අධික කේන්තිය, අනවශ්‍ය සැක, අමතක වීම, ලිංගික ගැටළු, දිවි හානි තැත්කම්, සබකෝලය, ඇබ්බැහි වීම්.
(මධ්‍යසාර, මත් ද්‍රව්‍ය, දුම්වැටි, කැසිනෝ හා විවිධ නොවිධිමත් ක්‍රියා)
නිවසේ පාලනය කල නොහැකි රෝගීන් සඳහා
ජාතික, කළුබෝවිල හා අංගොඩ රෝහල් අනුයුක්ත විශේෂඥ මානසික වෛද්‍යවරුන් හරහා ප්‍රතිකාර
NEPTUNE HEALTH
නො.186, (2වන මහල) පාක් පාර, කොළඹ 05.
දු.ක: 011 - 2055 644
www.neptunehealth.lk (පෞද්ගලික වෛද්‍ය මධ්‍යස්ථානයකි)

## கம்பளை நகர எல்லைக்குள்
கம்பளை-நுவரெலிய பிரதான வீதிக்கு முகப்பாக
கஹட்டபிட்டியவில் 15.5 பேர்ச் வர்த்தக முதன்மைகள் மற்றும் வர்த்தகரீதியிலான பெறுமதியுடைய காணி விற்பனைக்கு.
பேர்ச்சொன்று 2.3 மில்லியன் ரூபா
தொடர்பிலக்கம் - 0784 581 477

## Prime Property for Sale at Sirimal Uyana, Rathmalana
Extent - 43.4 perches
This Land can be devided into two Blocks
This land is an ideal location for
- Housing projects
- Holiday Bungalow
Price - Rs 2,500,000 per perch (Negotiable)
DILAN
For inspection, Please call Dilan Property solutions
075 9 770 369
If you do have a property for sale/ rent please share the details

## VICTORIAN GUEST
Bandarawela
victorianbungalow.lk
2km Away from Railway Station & Bandarawela Town
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
077 3 711 196 | 070 2 536 896

## FLORENCE ELDER CARE HOME / NURSING HOME & HOME NURSING
We are open 24 hours for your well being
A PROFESSIONAL AND GOVERNMENT QUALIFIED NURSING STAFF (Registered in Sri Lanka Medical Council) & PRIVATE TRAINED NURSING STAFF (With experience of more than 5 years)
You'll experience our special health care services
- Ambulance Service
- Physiotherapy
- Medical Care for 24 hours
- Providing Medical Instruments
- Collecting samples for laboratory testing
- Catheterization and Catheter care
- Wound care (specially for diabetic patients)
- Fluid resuscitation

FLORENCE ELDER CARE HOME & HOME NURSING (PVT) LTD.
JA-ELA: No. 261/1, Old Negombo Rd, Kanuwana, Ja-Ela
BORALESGAMUWA: No. 44/41, 1st Lane, Alepalhena Mw, Boralesgamuwa
COLOMBO 05: No. 301A, Thimbirigasyaya Rd, Colombo 05.
KANDY: No. 503A, Peradeniya Rd, Kandy
E-mail: florencecarehomenursing@gmail.com
Tel: 0718 661 006 / 071 2608070

## TOYOTA 3.5 TON FORKLIFT
2015 MODEL
3 STAGE MAST, FREE MAST, SIDE SHIFTER, AUTO TRANSMISSION, DIESEL, 400 HOURS WORKED, IN BRAND NEW CONDITION
5.5 MILLION
0775 997 770

## LAND FOR SALE
800M FROM GELIOYA TOWN CENTRE
15 AND 21 PERCH BLOCK
PER PERCH Rs. 230,000/-
CALL : 0766 609 192

## OFFICE SPACE FOR RENT / LEASE
Ramanayake Mw. - Colombo 02
Office space available at prominent building at a prime commercial location on W. A. D. Ramanayake Mawatha.
Available Area (Sq. Ft.): 5th Floor - 2,400 Sq. Ft.
Services Included: 24hr Security, 100% Back-up Generator, Water, Central A/C System, Elevator Access, Building Fire System and many more features.
For Inquiries Pls Contact:
077 7 555 054 / 077 345 10 28

## SWIMMING POOLS
We Construct all types of Swimming Pools, we undertake to consult your pool from the excavation.
Suppliers of Filters, Motors, All Pool Chemicals, Filter Services, Pool Tiles, Deck Tiles, Jacuzzy Jets Accessories and all other Pool Equipments etc...
SUPPLIERS AND DEALERS OF GOOD QUALITY POOL CHEMICALS, CHLORINE 70 & 90, SODASH, ALUMIN ETC...
EURONIX CONSTRUCTION & WATER MANAGEMENT (PVT) LTD
SUPPLYING HIGH QUALITY EUROPE MADE FILTERS MOTORS ETC...
www.euronix.net
Hotline : 0754 778 357
We are Specializing on Constructing Large Pools For Commercial Purposes.

## கூட்டுறவு வைத்தியசாலை ஏறாவூர் வ/பகூச
### மருத்துவர் தேவை
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரில் அமைந்துள்ள எமது கூட்டுறவு வைத்தியசாலைக்கு MBBS or RMO தகைமையுடன் இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு பெற்ற மருத்துவரொருவர் தேவை.

MBBS பட்ட உரிமையாளர் அல்லது ஓய்வு பெற்ற மருத்துவர் அல்லது இலங்கை மருத்துவ பேரவையுடனான பதிவுள்ள வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற பதிவுள்ள மருத்துவர்களும் பரிசீலனை செய்யப்படுவார்கள்.

கடமை நேரங்கள் :- 8 மணித்தியாலங்கள்
அனுபவம் :- 1-2 வருடங்கள்
சம்பளம் :- சம்பளம், ஏனைய வசதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன பேசித் தீர்க்கப்படலாம்.
தங்குமிடம் :- மாவட்டத்திற்கு வெளியேயிருந்து வருபவர்களுக்கு வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 2024.06.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக mlalathief123@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பப்படலாம் அல்லது பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படலாம்.

கௌரவ தலைவர்,
கூட்டுறவு வைத்தியசாலை, வ/ப ஏறாவூர் பகூச பிரதான வீதி, ஏறாவூர்.
மின்னஞ்சல் : mlalathief123@gmail.com
தொலைநகல் இல. : 0652240807
தொடர்பிலக்கம் : 077 4447294, 077 3999043, 0777230124, 077 230125

## எமது கடல் உணவை பொதி செய்யும் நடவடிக்கைகளுக்காக முழுமையான அமைவிடமொன்றை நிர்மாணிப்பதற்காக தேடுகின்றோம்.
- வசதியான போக்குவரத்திற்காக விமானநிலையத்திற்கு அண்மையில்
- திறனுள்ள பதனிடலுக்காக வாவி நீருக்கான அணுகுவழி
- பொதியிடல் நோக்கங்களுக்காக பாரிய இடப்பரப்புள்ள திறந்தவெளி

மேலேயுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் இடப்பரப்பொன்று வாடகைக்கு/ குத்தகைக்கு உங்களிடம் இருப்பின்,
தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி: + 94 77 788 8211 / +94 77 550 4114,
மின்னஞ்சல்: chandrapalawasantha2@gmail.com

## தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## தெஹிவளையில் முதன்மையான காணி விற்பனைக்கு
இலவசம்: மேலதிக 7 பேர்ச்சுக்கள்
- 14 பேர்ச்சுக்கள் மொத்த இடப்பரப்பு
- குடியிருப்பிற்கு அல்லது வர்த்தக அபிவிருத்திக்காக உகந்தது
- பிரதான வீதிகள் மற்றும் உள்ளூர் பயன்பாடுகளுக்கான இலகுவான அணுகுவழிகள்
- விரைவாக அபிவிருத்தியாகும் பிரதேசத்தில் அமைந்துள்ளது
- பிரபல்லமான அமைவிடத்திலுள்ள மிகச்சிறந்த முதலீடு

தெஹிவளை, கடவத்த வீதியில் அமைந்துள்ள பிரத்தியேகமான நுழைவாயில் முதன்மையான காணி விற்பனைக்கு
0777 03 56 78

## PICCASO Paints — AMTEK
ALL WALL & FLOOR FINISHES WITH A GUARANTEE UNDER ONE ROOF !
WALL FILLER
TITANIUM KING
Titanium Wall
Titanium Floor
Titanium Textured wall Finishes - Outdoor/Indoor
Factory Floor
AMTEK INTERIOR SOLUTIONS (PVT) LTD
28, Sulaiman Terrace, Colombo 05, Sri Lanka
Hotline : 0777-420709 | 0777-420711
Amtek Interior Solutions | amtekinteriorsolutions

## FOR SALE
M S PLATE

| 5' X 20' | 8' X 30' |
|---|---|
| 6 MM | 20 MM |
| 8 MM | 25 MM |
| 10 MM | 38 MM |
| 12 MM | 50 MM |

Available 50M Tons
Please Contact : Phone & WhatsApp
0712 765 752, 0777 302 261



# அன்று ரணில் இருந்திருக்காவிட்டால் இன்று எமது நாட்டின் நிலை என்ன?

**ரணிலால் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்ய முடியாது எனக் கூறி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தவர்களுக்கு ரணில் நல்லதொரு பதிலை வழங்கியுள்ளார். அவர் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஜனாதிபதி பதவியை வழங்கியிருக்கிறார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை நாட்டின் இளம் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டார். நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட சீர்திருத்தங்கள் தொடர்பிலேயே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போது உரையாற்றிய ஜனாதிபதி தனது உரையின் போது நாட்டில் இடம்பெற்ற போராட்டத்தின் (அரகலய) இறுதியில் இடம்பெற்ற நிலை தொடர்பில் முக்கியமான தகவல் ஒன்றை வெளிப்படுத்தினார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியை இராஜினாமாச் செய்த பின்னர், போராட்டக்காரர்களாலும், இன்னும் சில தரப்பினராலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அதாவது அவரும் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்பதாகும். அது தொடர்பில் அவரது உரையில் ஜனாதிபதி இவ்வாறு கூறினார். "அப்போதைய ஜனாதிபதி கப்பலில் ஏறி திருகோணமலை நோக்கிச் சென்ற போது சிலர் என்னிடம் பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்யுமாறு கோரினர். பெரும்பான்மை பலம் கொண்ட ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்றும், அவ்வாறில்லையேல் என்னால் இராஜினாமாச் செய்ய முடியாது என்றும் நான் அப்போது கூறினேன். இராஜினாமாக் கடிதத்தை எழுதினாலும் நான் அதனை ஜனாதிபதியிடம் ஒப்படைக்க வேண்டும். எனினும் ஜனாதிபதி கப்பலில் இருக்கும் போது, நாட்டிலிருந்து வெளியேறி மாலைதீவுக்குச் சென்று கொண்டிருக்கும் போது என்னால் இராஜினாமா கடிதத்தை அவரிடம் ஒப்படைக்க முடியாது. சிலருடைய அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ அல்லது எனது வீட்டிற்கு தீ வைக்கப்பட்டதற்காகவோ அன்று நான் இராஜினாமாச் செய்திருந்தால், ஜனநாயக நீரோட்டத்தில் இல்லாத ஒருவர் ஆட்சியைப் பிடித்துக் கொள்வார்". அன்று ஏனையவர்கள் பிரதமர் பதவி ஏற்க மறுத்த போது ரணில் விக்கிரமசிங்க அதனைப் பொறுப்பேற்று பதில் ஜனாதிபதியாக பதவியேற்று செயற்படாமல் இருந்திருந்தால், இன்று இந்த நாடு எந்த நிலையில் இருந்திருக்கும் என எவராலும் கூற முடியாது என நினைக்கிறேன். அவர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்ற போது ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லம், பிரதமர் அலுவலகம், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் ஆகிய இடங்கள் போராட்டக்காரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. மீதமிருந்தது பாராளுமன்றம் மட்டுமேயாகும். சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் லால்காந்த உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியுடன் தொடர்புடைய தரப்பினர் பாராளுமன்றத்தை ஆக்கிரமிப்பதற்காக பாராளுமன்றத்திற்கு வருமாறு பொதுமக்களை கேட்டு பிரசாரம் செய்து கொண்டிருந்தனர். அன்று அந்த பிரசாரத்தை முறியடித்து, பாராளுமன்றத்தைப் பாதுகாத்து போராட்டக்காரர்களை அரசாங்க அலுவலகங்களில் இருந்து அகற்றாமல் இருந்திருந்தால், நிச்சயமாக இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி முறை அந்நேரமே முடிந்திருக்கும்.

அன்று ரணில் விக்கிரமசிங்க இல்லாதிருந்தால் இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான அபேட்சகர்கள் எங்கே இருந்திருப்பார்கள்? சஜித் பிரேமதாச அன்று போராட்டக்காரர்களிடமிருந்து மயிரிழையில் உயிர் தப்பியிருந்தார். அநுரகுமார திசாநாயக்கவும் கூட அவ்வாறானதொரு நிலைமைக்கு முகங்கொடுத்திருந்தார். எனினும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாகக் களமிறங்கி வழமையான பாணியில் மேடைகளில் முழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க அன்று நாட்டைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்குமா என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என நினைக்கிறேன். பாராளுமன்றத்தைப் பாதுகாத்துக் கொண்டு, போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டை அராஜகத்திலிருந்து விடுவித்துக் கொண்டதால் வெற்றிடமாகிய ஜனாதிபதி பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிக்கும் வாய்ப்பு பாராளுமன்றத்திற்கு கிடைத்தது. இதன் போது அன்று பாராளுமன்றத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையை முன்னெடுத்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவும் போட்டியிட முன்வந்தார். போராட்டக்காரர்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடாத்திய டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவும், அவ்வாறு வெற்றிபெற்றதன் பின்னர் சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமிக்கும் ஒப்பந்தத்துடன் முன்வந்தார். ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். நாட்டில் ஜனநாயக ஆட்சி முறை மீண்டும் நிறுவப்பட்டது. 1994ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். ஆனால் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு கூட ரணிலுக்கு வழங்கப்படவில்லை. மாறாக சஜித் பிரேமதாச கட்சி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டார். எனினும் அவராலும் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாமல் போனது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சஜித் ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார். ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலானோர் ரணிலை விட்டு விலகி சஜித்துடன் இணைந்தனர். ரணில் தனியாகக் கட்சியை வழிநடத்தினார். பாராளுமன்றத் தேர்தலில் சஜித்தால் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை.

ரணிலால் ஒரு ஆசனத்தைக் கூட வெற்றி பெற முடியாமல் இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தனி உறுப்பினரானார். ரணில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து 02 வருடங்களில் ஜனாதிபதியானார். ரணிலால் ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றியடையச் செய்ய முடியாது எனக் கூறி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தவர்களுக்கு ரணில் நல்லதொரு பதிலை வழங்கியுள்ளார். அவர் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஜனாதிபதி பதவியை வழங்கியிருக்கிறார்.

கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள் இன்னமும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்திருப்பது ஏன்? ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கா?2022 ஏப்ரல் 12ஆம் திகதி இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறான நாட்டைத்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார்.

கொழும்பு துறைமுகத்திற்கு எரிவாயு மற்றும் எரிபொருளுடன் வந்திருந்த கப்பல்களுக்குச் செலுத்துவதற்காக ஒரு சில மில்லியன் டொலர்களைக் கூடத் தேடிக் கொள்ள முடியாத நிலைக்கு நாடு உள்ளாகியிருந்தது.

எரிபொருள் வரிசைகள், எரிவாயுக்கான வரிசைகள், உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் வரையறையின்றிய மின் துண்டிப்பு போன்றவற்றால் மக்கள் அனுபவித்த துன்பங்கள் தொடர்பில் விரிவாகப் பேசத் தேவையில்லை. சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டு மக்கள் முகங்கொடுத்த துன்பங்களோடு இன்றுள்ள நிலையினை ஒப்பிட்டால் இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தைப் புரிந்து கொள்ள முடியும். அன்று ரணில் ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றிருக்காவிட்டால் இன்று இந்நாடு எந்த நிலையில் இருந்திருக்கும்? 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இலங்கை அரசியல் வரலாற்றில் மாபெரும் புரட்சியைச் செய்து கொண்டிருந்தது.

அக்கட்சி முகங்கொடுத்த முதலாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலேயே பெரும் வெற்றியை ஈட்டிக் கொண்டது. எதிர்க்கட்சி 55 இலட்சம் வாக்குகளைப் பெற்ற போது 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று தமது அபேட்சகரை ஜனாதிபதி பதவிக்குக் கொண்டு வருவதற்கு அந்தக் கட்சியால் முடிந்தது. அதன் பின்னர் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 1978ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் முதல் தடவையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று அக்கட்சி வெற்றி பெற்றது. எனினும் 2022ஆம் ஆண்டு மே 09ஆம் திகதி கொழும்புக்கு வந்த தமது ஆதரவாளர்களை பேரை ஆற்றில் தள்ளி விட்ட முறையையும், தமது ஆதரவாளர்கள் வந்த பஸ் வண்டிகளை பல்வேறு இடங்களில் வைத்து தீயிட்டுக் கொளுத்திய சம்பவங்களையும் தமது கண்களால் பார்த்துக் கொள்ளும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

நூற்றுக்கணக்கான தமது கட்சி அரசியல் பிரமுகர்கள் மற்றும் பிரதேச அரசியல் தலைவர்களின் வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட முறையையும், சிலர் படுகொலை செய்யப்பட்ட முறையையும் அவர்களால் பார்க்க முடிந்தது. அன்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்று, பொதுஜன பெரமுனவினருக்கும், ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பை வழங்காதிருந்திருந்தால் இயல்பான வாழ்க்கை வாழ்வதற்கு இடம் கிடைத்திருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க போன்று இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களின் பிரச்சினைகள், கஷ்டங்கள் மற்றும் தேவைகள் குறித்து அக்கறை கொண்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செயற்பட்ட ஒரு தலைவர் வேறு எவரும் இருக்கமாட்டார்கள். 2015ஆம் ஆண்டு வரைக்கும் மஹிந்த ராஜபக்ஷவுடன் நீண்ட காலம் இணைந்து செயற்பட்ட தமிழ் முஸ்லிம் கட்சிகள் 2015ஆம் ஆண்டில் மீண்டும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசாங்கத்தை அமைத்தன. 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் அனேகமான இந்தக் கட்சிகள் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைத்தன. ரணில் சஜித் முரண்பாடு அக்கட்சியின் உள்ளகப் பிரச்சினையாகியது. எனினும் சஜித் வேறு ஒரு கட்சியை அமைத்துக் கொண்ட போது ஹக்கீம், றிசாட் பதியுதீன், திகாம்பரம் போன்றவர்கள் சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டனர். இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஒரு தலைவரை விட்டு விலகி புதிய கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டமை பெரும்பாலானோரை வியப்பில் ஆழ்த்தியது என்றே கூறலாம்.

சிறுபான்மையினர் தொடர்பில் குறிப்பாக அவர்களின் பாதுகாப்பிற்காக விசேட அர்ப்பணிப்புகளைச் செய்த ரணில் விக்கிரமசிங்கவைப் போன்ற முதிர்ச்சியடைந்த அரசியல்வாதிகள் அண்மைய காலங்களில் இருக்கவில்லை. இது மிகவும் உறுதிப்படுத்தப்பட்டது 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்திலாகும்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கணிசமானோர் கொல்லப்பட்டபோது, நாட்டினுள் எந்தவித மோதல்களும் ஏற்படவில்லை. முஸ்லிம்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் மோதலை உருவாக்க பலர் முயற்சித்த போதிலும் ரணில் விக்கிரமசிங்க அதற்கு இடமளிக்கவில்லை. அன்று ரணில் இல்லாதிருந்தால் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக இருந்திருக்கும். அப்படி இருந்தும் ரணிலால் அந்த நிலையை தடுத்து முஸ்லிம் மக்களைப் பாதுகாக்க முடிந்தது.

எனினும் சில முஸ்லிம் தலைவர்கள், இனங்களை மதிக்கும் அன்பு நண்பரான ரணில் விக்கிரமசிங்கவை விட்டு விலகி வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைக்க ஆரம்பித்தனர். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் பெரும்பாலானோர் சிந்திப்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இல்லாவிட்டால் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களில் நாட்டுக்கு என்ன நடந்திருக்கும் என்பதேயாகும்.



**சுனந்த மத்துமபண்டார**
களனி பல்கலைக்கழகத்தின் முன்னாள் பொருளியல் துறை, சிரேஷ்ட பேராசிரியர்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# பலஸ்தீனர் மீதான இனப்படுகொலை; ஐ.நா.வும் பொறுப்புக் கூறவேண்டும்?

## பலஸ்தீன மக்கள் முழுமையாக கொல்லப்படும் வரை உலகம் பார்த்துக் கொண்டே இருக்குமா?



**பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்**
யாழ். பல்கலைக்கழகம்



ஐக்கிய நாடுகள் சபையின் ஆத்மா, காஸாவில் மாண்டு விட்டதாக துருக்கிய ஜனாதிபதி ஏர்டோகன் தெரிவித்துள்ளார். உண்மையில் ஐ.நா. ஒடுக்கப்பட்டுவரும் தேசிய இனங்களுக்கு முன்னே தனது ஆத்மாவைக் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாடுகளின் சபையிடம் நாடுகளின் நலனுக்கான ஆத்மா இருக்குமே அன்றி அடக்கு முறைக்குள்ளாகும் மக்களை பாதுகாக்கும் வலிமை இருக்கின்றது என்று கருதமுடியாது. 1912 - 1915 வரை ஏர்டோகனின் மூதாதையரான துருக்கிய ஆட்சியாளர்களால் 15 இலட்சம் ஆர்மேனியர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதை நினைவில் கொள்ள மறந்துவிடக்கூடாது. இவ்வாறு யூதர்கள், நைஜீரியர்கள், கம்போடியர்கள், டுட்சி இனத்தவர் என்ற வரிசையில் மேற்கொள்ளப்பட்ட போது ஐ.நா.வின் ஆத்மாவை யாரும் தேடவில்லை. ஐ.நா. என்பது வல்லரசுகளின் நலனுக்கான சபை மட்டுமே.

இஸ்ரேல் என்ற நாடும் அதன் ஆட்சியும் அமெரிக்க பெருவல்லரசின் நீட்சிக்கான சக்தியே. ஆதனால் அமெரிக்காவின் நலன்களை இஸ்ரேல் காஸாவில் நிறைவு செய்கிறது. மறைமுகமாக ஐ.நா.வும் அமெரிக்க நலனுக்கு கட்டுப்படுகிறது. அவ்வாறாயின் ஐ.நா.வும் காஸாவில் நிகழும் இனப்படுகொலையின் பங்காளியாகவே உள்ளது.

ரபா மீதான தாக்குதலை இஸ்ரேல் மேற்கொள்ளும் போது ஹமாஸ் போராளிகளை அழிப்பதே தனது தாக்குதலின் நோக்கம் என்கிறது. ஆனால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் வயோதிபர்கள் தற்காலிகமாக வசிக்கும் இடங்களை நோக்கி விமானத் தாக்குதலையும், ஏவுகணைத் தாக்குதலையும் நிகழ்த்தி வருகிறது. இஸ்ரேல் பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்வதற்கான அனைத்து எத்தனங்களையும் நிகழ்த்தி வருகிறது. காரணம் இனப்படுகொலையை மேற்கொள்ள முன்னர் அரசுகள் பின்பற்றும் நடைமுறை குறித்த இனப்படுகொலை அவதானிப்பு என்ற அமைப்பின் தலைவர் கலாநிதி கிறகோரி எச். ஸ்டான்டன் 1996இல் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்கு இனப்படுகொலை குறித்து அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தார். அந்த அறிக்கையின் பிரகாரம் இனப்படுகொலைக்கான படிமுறைகளைப் பட்டியல் படுத்தியிருந்தார். (ஆதாரம்: சிறிஞானேஸ்வரன்(2022) பன்னாட்டுக் குற்றங்கள் எனும் நூல்) அதன்படி,

முதலாவது, வகைப்படுத்தல்: இனமொன்றை அல்லது இனப்படுகொலைக்கு உள்ளாக்கவுள்ள பிரிவினரை ஏதாவது பொது அடையாளத்தின் கீழ் ஒன்றுதிரட்டுதல் வகைப்படுத்தலாக அமைகிறது. அதில் இனம், மொழி, சார்ந்த கலாசார அடையாளங்களை முன்னிறுத்தி அத்தகைய வகைப்படுத்தலை நிகழ்த்துதல். அதனையே இஸ்ரேல் பலஸ்தீனர் மீதும் நிகழ்த்துகிறது. அவர்களை இஸ்லாமிய பொது கலாசாரத்திற்குள்ளால் மட்டுமன்றி பலஸ்தீனர் என்ற அடையாளம் சார்ந்தும் வகைப்படுத்துகிறது.

இரண்டாவது, குறியிடல்: அதாவது வகைப்படுத்தல் குழுவினரை பொதுப் பெயர் அல்லது சின்னம் ஒன்றினால் அடையாளப்படுத்துவது குறியிடலாகக் கொள்ளப்படுகிறது. பலஸ்தீனர் அல்லது ஹமாஸ் என்பது குறியிடலாகவே தெரிகிறது.

மூன்று, மனிதமாண்பை மறுத்தல்: குறிப்பிட்ட மனிதத் தொகுதியொன்றின் மனிதமாண்புகளை புறந்தள்ளி அம்மனிதத் தொகுதிகளை விலங்குகளுக்கும், உண்ணிகளுக்கும் அல்லது நோய்களுக்கும் சமப்படுத்த முனைவது, மனிதமாண்பை மறுத்தலாகும். ஏறக்குறைய பலஸ்தீனர்கள் மீது அத்தகைய நிலையையே இஸ்ரேலிய அரசாங்கம் மட்டுமல்ல இஸ்ரேலிய மக்களும் மேற்கொள்கிறார்கள்.

நான்கு, ஒழுங்குபடுத்தல்: அரசுகளே இத்தகைய ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்கின்றன. இனப்படுகொலைக்கு தேவையான முக்கிய வளங்களால் ஆயுதங்கள், ஆயுதப் பயிற்சிகள் மற்றும் இரகசியமான குழுக்களை கட்டமைத்து அவற்றுக்கு பயிற்சியளித்தல். அது மட்டுமன்றி விசேட இராணுவ அணிகளையும் ஏனைய குழுக்களையும் தயார் செய்து அவற்றுக்கு இனப்படுகொலை மேற்கொள்வதற்கான அனுமதியையும் அரசுகள் மேற்கொள்கின்றன. இதனையே இஸ்ரேல், அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகள் கூட்டாக நிகழ்த்தி வருகின்றன. ஆயுத தளபாடங்களை பரிமாற்றுவது, பயிற்சியிலும் படைப் பிரயோகத்திலும் ஈடுபாடு காட்டுவது என்ற அடிப்படையில் இஸ்ரேலைப் பாதுகாப்பதற்கு, அமெரிக்கா ஒழுங்குபடுத்துகிறது.

ஐந்து, பிரித்து எதிரியாக்குதல்: ஒற்றுமையாக செயற்படும் இனத்தை பிரித்து குழுக்களாக தனிமைப்படுத்தி வெறுப்புக் கட்டமைப்பை உருவாக்குதல். வெறுப்புப் பிரச்சாரத்தை மேற்கொள்வது. அதனை இஸ்ரேல் பலஸ்தீன தரப்புக்குள் ஏற்படுத்த முனைவதுடன் பலஸ்தீனத்திற்கு ஆதரவான தரப்புக்கள் மத்தியில் பிரசாரத்தை மேற்கொண்டுவருகிறது.

ஹமாஸ் அமைப்பையும், பலஸ்தீன அதிகாரக் கட்டமைப்பையும் தனித்தனியாக பிரித்து கையாளுதல் என்பதே அந்த மக்கள் கூட்டத்தை பிரித்து எதிரியாக்குவதே. அதற்காக மிதவாதிகளை கொலை செய்வது அவர்களை அடக்குமுறையின் கீழ் கொண்டுவருதல் என்பனவும் பிரித்து எதிரியாக்கும் வேலையாகவே வரையறுக்கப்படுகிறது.

ஆறு, தயாராகுதல்: இனப்படுகொலைக்கு உள்ளாக வேண்டியவர்கள் தாம் பின்பற்றும் கலாசாரத்தினாலோ அல்லது இனத்துவத்தினாலோ அல்லது மத பிரிப்புகளாலோ அடையாளப்படுத்தப்படுவார்.

இதில் வயது, பால், சாதியம் பிரதேசம் கூட செல்வாக்குச் செலுத்தும். இனப்படுகொலை செய்யவேண்டியவர்கள் பட்டியல்படுத்தப்படுவர். அவர்கள் அடையாளப்படுத்தப்படக் கூடிய குறிகளை எவ்வேளையிலும் கொண்டிருக்குமாறு கட்டளையிடப்பட்டிருப்பார்கள். இதில் தனியாக பிரித்து முகாங்களுக்குள் அடைத்தல். மற்றும் அந்த மக்களின் வளங்களை சூறையாடுதல். அவர்கள் வாழும் பகுதிக்குள் உணவு, தண்ணீர் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் செல்லவிடாது தடுத்தல் அல்லது பஞ்சம் ஏற்படக்கூடிய விதத்திலான சூழலை உருவாக்கி அவர்களை பட்டினிச் சாவடையச் செய்தல். இது தாராளமாக இஸ்ரேலிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு தனிப்பட்ட யூதக் குழுக்களை அமைத்து, எந்த பொருளும் ரபாவுக்குள்' போகாதபடி செயல்படுத்த இஸ்ரேலிய அரசு குழுக்களை தயார் செய்து செயற்படுத்தி வருகிறது.

ஏழு, நிர்மூலமாக்குதல்: இனப்படுகொலைக்கு தயார்படுத்தப்பட்டவர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கை பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படும்.

மிக வேகமாக கூட்டுக் கொலைகள் நடைபெறும். இச் செயற்பாடே இனப்படுகொலை எனப்படும்.

இதனை மேற்கொள்ள அரசுகள் தாம் தயார்செய்துள்ள இராணுவப் பிரிவுகளை மற்றும் ஆயுததாரிகளை பழிதீர்க்கும் கொலைகள் என்ற அடிப்படையில் இனப்படுகொலையை மேற்கொள்ள அனுமதிக்கும்.

எட்டு, மறுத்தல்: இறுதியாக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை மறுத்தல் நிகழும். அதில் ஆதாரங்களை மறைக்கும் செயற்பாடுகள் அனைத்து படுகொலையாளர்களாலும் மேற்கொள்ளப்படும். தடயங்களையும், சாட்சியங்களையும் அழித்தல். உடலங்களுக்கும், என்புகளுக்கும் தீயூட்டுதல் என்பன நிகழும். அதனுடன் அதற்கு எதிரான பிரசாரங்களும் அரங்கேற்றப்படும். குற்றச்சாட்டுக்களை ஏற்காதது மட்டுமல்லாது, விசாரணைக்கு அனுமதியாத உத்திகளை அரங்கேற்றுவர். ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு இனப்படுகொலையை நியாயப்படுத்துவார்கள். இதனை ஏற்கனவே இஸ்ரேலிய அரசாங்கம் தொடங்கிவிட்டது. அது கடந்த காலத்தில் மேற்கொண்ட எந்த இனப்படுகொலைக்கும் விசாரணையையோ அல்லது தண்டனையையோ எதிர்கொள்ளாத வகையில் செயற்பட்டு வருகிறது. தற்போதும் காஸாவிலும் ரபாவிலும் நிகழ்த்தும் இனப்படுகொலைகளை மறைக்க முயலுகிறது. தடயங்களை அழிக்கிறது. ஆதாரங்கள் வெளிவராது அல்ஜசீராவை வெளியேற்ற முயலுகிறது. மேற்குறித்த அனைத்தையும் இஸ்ரேல் மட்டுமன்றி அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் கூட்டாக செயற்படுத்துகிறது. அதற்கு எந்தவித நடைமுறையும் அன்றி ஐ.நா. சபை செயல்படுத்துகிறது.

அறிக்கையும் எச்சரிக்கையும் இஸ்ரேலையோ, அல்லது அமெரிக்காவையோ பாதிக்கப் போவதில்லை. அமெரிக்கா இஸ்ரேலின் போர் உத்திகளை நெறிப்படுத்தவே பாதுகாப்புச் சபையில் வெளிநடப்புச் செய்வதும் குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பினை மௌனமாக கடத்துதல் போன்ற விடயங்களையும் மேற்கொள்கிறது.

ரபாவுக்குள் இஸ்ரேல் நுழையக்கூடாது என்பது அந்தப் போர் நீண்டகாலம் நீடிக்கும் என்பதோடு அதனால் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் தனது தேர்தல் அரசியலை பாதிக்கும் என்பதில் கவனமாக செயற்படுகிறது.

எனவே இஸ்ரேல் நிகழ்த்துவது இனப்படுகொலை என்றும் தெரிந்து கொண்டும், அதனைத் தடுக்க முடியாது இயங்கும் ஐ.நா.சபை இனப்படுகொலைக்கு துணை போவதாகவே தெரிகிறது. சைபிரஸ் அனுபவத்தை ஏன் ஐ.நா. ஹமாஸ் இஸ்ரேலிய போரில் பிரயோகப்படுத்த முடியாதுள்ளது என்பது கவனத்திற்குரியது.

அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் ஆயுத தளபாடங்களை தற்போதும் வழங்குவதில் அக்கறையாகவே உள்ளன. இதனைத் தடுப்பதென்பது உலக நாடுகள் எவையாலும் முடியாது.

பலஸ்தீன மக்கள் முழுமையாக கொல்லப்படும் வரை உலகம் பார்த்துக் கொண்டே இருக்குமா?

# கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இனிமேல் ஆங்கிலத்தில்.....

## சஜித் தெரிவித்த கருத்து தொடர்பில் முக்கியஸ்தர்கள் கூறியவை

இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னர் பாடசாலைக் கல்வி ஆங்கில மொழியை மையமாக வைத்து முன்னெடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சக்வல திட்டத்தின் மூலம் நட்புறவு வகுப்பறைகளை வழங்கும் வேலைத்திட்ட நிகழ்வுகளின் போது குறிப்பிட்டார்.

தகவல் தொழில்நுட்ப பாடத்தை முதலாம் தரத்திலிருந்தே கட்டாய பாடமாக்கி கற்பித்தல் நடவடிக்கைகளை ஆங்கில மொழியில் நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இது தொடர்பில் கூறுகையில், இவ்வருடம் முடிவடைவதற்கு முன்னர் மனித வளங்களை வழங்கி, தகவல் தொழில்நுட்ப பாடம் கட்டாயமாக்கப்படும். கற்பித்தல் நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் முன்னெடுக்கப்படும். இதனைக் கேட்கும் போது சிலருக்குக் கோபம் வரலாம். நாம் ஏன் இவ்வாறு செய்யப் போகிறோம் என்பதற்கு சிறியதொரு உதாரணத்தைக் கூறவா? மஹறிவுல்வெவ பாடசாலையைச் சேர்ந்த மாணவர் ஒருவர் நன்றாகக் கற்று உயர்தரத்திலும் சித்தி பெற்று கலைத்துறையில் பல்கலைக்கழகத்தில் உயர் பட்டத்தைப் பெற்றுக் கொள்கிறார். அந்த மாணவர் அவ்வாறு கற்கும் போது மற்றொரு மாணவர் கொழும்பில் சர்வதேச பாடசாலை ஒன்றுக்குச் செல்கிறார். அம்மாணவர் ஆங்கிலத்தில் கற்று, ஆங்கிலத்தில் பட்டத்தையும் பெற்றுக் கொள்கிறார். எனினும் வேலைவாய்ப்பு கிடைப்பது கலைத் துறையில் சிங்களத்தில் கற்ற மாணவருக்கா அல்லது ஆங்கிலத்தில் கற்ற மாணவருக்கா?

“அதுதான் ஆங்கிலத்தை மையமாகக் கொண்டு அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான காரணமாகும். விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளால் சர்வதேச பாடசாலைகளில் கற்க முடியுமா? இது இலவசக் கல்வி முறை. இது கண்ணங்கர இலவசமாக எமது நாட்டிற்கு வழங்கிய அன்பளிப்பு. எனினும் இதனை நாம் நடைமுறைப்படுத்தும் போது புதுமையான கோசங்கள் எழும் என்பதை நான் அறிவேன்.

சஜித் பிரேமதாசவின் ஆங்கில மொழியை மையமாகக் கொண்ட தகவல் தொழிநுட்ப கணனி அறிவியலில் ஆங்கில எழுத்தறிவினை மேம்படுத்தும் கல்வியை தோற்கடிப்போம் என்ற பதாதைகளை ஏந்தியவாறு மதவாச்சி நகரில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தூண்டப்பட்டுள்ளனர். ஆசிரியர்களும் அதிபர்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். நான் கவலைப்படவில்லை. எவ்வாறான ஆர்ப்பட்டங்கள் நடத்தப்பட்டாலும் பிரச்சினையில்லை. ஆனால் பதாதைகளைத் தூக்குவதற்கு முன்னர் நான் கூறிய உதாரணத்தைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அந்ததொழில் வாய்ப்புக்களுக்காக உங்கள் பிள்ளைகள் செல்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கும் நவீன கல்வி முறைக்கு நாம் செல்ல வேண்டுமா? இல்லையா?. இதற்கான பதில் இருப்பது எனது கைகளிலல்ல.



சிங்களம் மாத்திரம்தான் எனக் கூறும் அரசியலுக்கு ஏமாற வேண்டும் என்றே நான் பெற்றோர்களிடம் கூறுகின்றேன். சிங்களம் மாத்திரம்தான் என சிலர் கூறுகின்றனர். தமிழ் மாத்திரம்தான் என இன்னும் சிலர் கூறுகின்றனர். இந்த அரசியலில் ஏமாற வேண்டாம். தமது வாக்கு வங்கியில் வாக்குகளை நிரப்பிக் கொண்டு அரசியல்வாதிகள் சுகபோகம் அனுபவிக்க முயற்சிக்கின்றார்கள். இவ்வாறு முன்னெடுத்துச் செல்லும் போது 40 இலட்சம் மாணவர்களின் நிலை என்னாவது? இவ்வாறான கோஷம் எழுப்புவோர் அடிப்படைவாத மாக்சிஸ்ட்வாத, கம்பியுனிஸ்ட் வாதிகளின் சமூக நீதியைப் பற்றிப் பேசினால் அவர்களின் பிள்ளைகள் கற்பது சர்வதேச பாடசாலைகளிலும், சர்வதேச பல்கலைக்கழகங்களிலுமாகும். தயவு செய்து இவர்களின் பொய்களுக்கு ஏமாறாதீர்கள்.

### கல்வியும், வாழ்வாதாரமும் ஒரே பாதையில் செல்ல வேண்டும்



பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்

கல்வி கற்கும் போது எமக்கு பல எதிர்பார்ப்புகள் இருக்கும் என்பதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கருத்தாகும். அந்தக் கல்வியைப் பயன்படுத்தி, நல்லதொரு தொழிலைப் பெற்று தனது வீட்டையும் குடும்பத்தையும் பராமரிப்பதற்கான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி திருப்திகரமான வாழ்க்கை வாழ்வதே கல்வியின் இறுதி இலக்காகும். நமது நாட்டில் இருக்கும் பெரும் பிரச்சினை என்னவெனில் கல்விக்கும் வாழ்வாதாரத்திற்கும் இடையே உள்ள இடைவெளியாகும். பல பட்டதாரிகள் உள்ளனர்; கல்வி பெற்றுள்ளனர்; ஆனால் அந்த பட்டப்படிப்புக்கு ஏற்ற தொழிலைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் உள்ளன. எனவே, இது இளைஞர்களின் அதிருப்திக்கு வலுவான காரணமாகும். கல்வியும் வாழ்வாதாரமும் ஒரே திசையில் செல்ல வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும் போது கல்வித் துறையில் சில மாற்றங்களைச் செய்வது அவசியமாகும்.

நாட்டின் உள்ளக அமைப்பு மற்றும் பாடங்கள் தொடர்பில் பார்க்கும் போது, அது தொழிலுடன் இணைக்கப்பட வேண்டும். ஆங்கிலம் என்பது ஒரு ச ர்வதேச மொழியாகும், அந்த மொழியில் தேர்ச்சி பெற்றிருப்பது மிகவும் முக்கியமாகும். தகவல் தொழில்நுட்பம் என்று வரும்போது ஆங்கில மொழி மிகவும் முக்கியமானது. தொழில்முறை கல்வியை எடுக்கும்போது, பொறியியல் பாடத்தில் ஆங்கில மொழி அவசியமாகும். எனவேதான் ஆங்கிலக் கல்வியில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெளிவாகக் கூறியுள்ளார். அதற்கு ஆங்கிலக் கல்வியை நடைமுறையில் வளர்க்க வேண்டும்.

இது தமது தாய் நாட்டின் மொழிகளான சிங்களம், தமிழ் மொழிகளைப் புறக்கணித்து ஆங்கில மொழி ஊக்குவிக்கப்படுகின்றது என்பது அர்த்தமல்ல. இ ங்கு குறிப்பிடப்படுவது அவ்வாறான ஒரு கருத்தல்ல. ஆரம்பக் கல்வி எப்படியும் எமது நாட்டில் தாய் மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றது. இவ்வாறு கூறுவது ஆரம்ப கல்வியில் தாய் மொழியைப் புறக்கணித்து ஆங்கில மொழியில் கற்பிப்பது என்பதல்ல. ஆங்கில பாடத்தை வெற்றிகரமாகப் போதித்து சிறந்த தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். கல்வியை நவீனமயமாக்குவதன் ஒரு பகுதியாகவே இது மேற்கொள்ளப்படும். தற்போதைய சமூகத்திற்குப் பொருந்தும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றே அவர் கூறியுள்ளார்.

### ஆங்கில கல்வியை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமானது.



பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித் ஹேரத்

ஆங்கிலத்தில் கற்பித்தல் என்பது நம் நாட்டில் தற்போதுள்ள கல்வியமைப்புடன், நடைமுறையில் செயல்படுத்த மிகவும் கடினமான செயலாகும். எனினும் சர்வதேச அளவில் எடுத்துக் கொண்டால் ஆங்கிலக் கல்விக்கு இடம் கொடுப்பது மிகவும் முக்கியமாகும். இதற்கு சிறந்த ஆயத்தங்கள் தேவை. இது கொள்கை ரீதியான தீர்மானமாயின், இதற்கு அனேகமானோர் இணங்குவார்கள். தாய் மொழியில் கற்பிக்கும் போது ஆங்கில மொழிக்கும் முன்னுரிமைய வழங்க வேண்டியது முக்கியமாகும். இதற்காக அதிகளவிலான ஆசிரியர்கள் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இந்நாட்டில் ஆங்கில மொழி ஆசிரியர்களின் பற்றாக்குறை உள்ளது. இதற்குத் தேவையான பயிற்சி நிறுவனங்கள் இல்லை. எனவே இது மிகவும் கடினமான பணியாகும். இவ்வாறான கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் ஒரே முறையில் கற்பிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமானதாகும். மூன்று மொழிகளையும் வலுவாகக் கற்பிக்கும் போது ஆங்கிலத்திற்கு அதிக இடம் வழங்கப்பட வேண்டும். இதில் பாரிய சிரமங்கள் உள்ளன. இதற்கு திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இது மிகப் பெரிய பணியாகும்.

### ஆங்கிலத்தில் கற்பிப்பது பாரிய கலாசார சீரழிவாகும்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் அரச கொள்கை கற்கை பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தம்ம திசாநாயக்கா

1931ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பார்க்கும் போது ஒன்பது தசாப்தங்களாக இலங்கையை முழுமையான நாடாக மாற்றும் நடவடிக்கையை ஆட்சியாளர்களாலும் நிர்வாகிகளாலும் யதார்த்தமாக்க முடியாமல் போயுள்ளது. நாட்டின் வங்குரோத்து நிலை என்பது பல தசாப்தங்களாக ஆட்சியாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் அலட்சியப் போக்கின் விளைவேயாகும். எனவே அவர்கள் எந்தளவுக்குத் தோற்றுப் போனவர்கள் எனக் கூறுவதானால், நாடு வளர்ச்சி அடையாதது அவர்களின் தவறினால் அல்ல என அவர்கள் நினைக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு ஆங்கில அறிவை வழங்கினால், நாட்டில் பெரும் அபிவிருத்தி இடம் பெறும் என்று நினைக்கின்றனர். முக்கியமாக ஜேர்மன், பிரான்ஸ், ஜப்பான், சீனா போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்நாடுகள் செயற்படுவது தாய் மொழியிலாகும் என்பதை உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பிரயாணம் செய்யும் இவர்கள் மறந்து விட்டார்கள். அவர்கள் மற்றைய மொழிகளுக்கு இரண்டாமிடத்தையே வழங்கியிருக்கின்றார்கள். இந்த அனைத்து நாடுகளும் தொழில்நுட்ப ரீதியில் நாம் நினைத்தும் பார்க்க முடியாதளவுக்கு முன்னேறியுள்ள நாடுகளாகும்.

விஞ்ஞான அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு அதிகம் உள்ள நாடுகளான ஆங்கிலம் பேசும் நாடுகளை விட இவர்கள் முன்னணியில் உள்ளனர். இதற்கு என்ன காரணம்? அது ஆங்கில மொழியால் அல்ல. எமது நாட்டு ஆட்சியாளர்களுக்கு கற்பனை அறிவும், கற்பனை சக்தியும் இல்லை என்பதுதான் பிரச்சினை. ஒரு நாட்டை எவ்வாறு முன்னேற்ற வேண்டும் என இவர்களுக்குத் தெரியாது. எனவேதான் ஆங்கிலம் தெரியாததால்தான் இவ்வாறு நடந்துள்ளது என நாட்டு மக்கள் மீது குற்றத்தைச் சுமத்துகின்றார்கள். அதேபோன்று நாட்டு இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பில்லாதது ஆங்கில அறிவு இல்லாமையே என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதா?

ஆங்கிலத்தில் கற்பிப்பது, ஆங்கிலம் கற்பிப்பது என்பவை இரண்டு விடயங்கள். இவர்கள் இதனைக் குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள். எமது நாட்டு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும். அதேபோன்று வேறு எந்த ஒரு மொழியையும் கற்றுக் கொள்வதற்கான வசதிகள் இருக்க வேண்டும். எனினும் கற்பிக்கும் போது அவர்கள் தெரிவு செய்யும் மொழி என்ன என்பதைத் தெரிவு செய்வதற்கான உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும்.

தமிழில் – எம். எஸ். முஸப்பிர்....

# எதுக்கடா முறுக்கு மீசை?

வலம்புரி கவிதா வட்டத்தின் 100ஆவது விஷேட கவியரங்கில் பாடப்பட்ட கவிதை

ஆண்களுக்கு மீசை,
ஆண்மையின்
அடையாளம் என்பார்
ஆளுமையின் சுவடு என்பார்
ஆக்ரோசத்தின் அழகு என்பார்
கம்பீரத்தின் சின்னம் என்பார்

அந்தனையும்
உண்மை என்றால்.....

வீட்டிலே மனையாள்
ஆட்சி செய்ய
விட்டுக் கொடுத்து
தயங்கி ஒதுங்கி
வேடிக்கைப் பார்த்துக்
காலம் கழித்து
பேடியாகவே சுற்றித்
திரிகின்றாயே
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?

பச்சிளம் பாலகர்களை
பாசாங்குகள் காட்டியே
பாலியல் துஷ்பிரயோகம்
செய்கிறாரே நாளாந்தம்
அஞ்சாது பாதகர் செய்யும்
அநியாயம் கண்டும்கூட
கிஞ்சித்தும் உனக்கு
இங்கு ஆவேசம் வரவில்லையே
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?

எண்ணற்ற பொய்கள் சொல்லி
ஏமாற்றி தேர்தலில் வென்று
பன்மடங்காய் சொத்துக்கள்
சேர்க்கும்
பண்பில்லாரின் பாதம் பணியும்
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?

குட்டக் குட்டக்
குனிந்து குனிந்து
தட்டத்தட்டத்
தலையை கவிழ்ந்து
கெட்ட சொற்களை
செவியில் நிறைத்து
மட்டமாகவே கெட்டு
வாழ்கின்ற
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?
படித்து பட்டங்கள்
பலவும் பெற்று
பெருமைகள் அதனால்
நிறைய சேர்த்து
பிடித்த தொழிலை
செய்து வாழும்
பெண்ணை மணக்க
தடுமாறுகிறாயே
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?

கொள்ளை விலை சேர்க்கும்
கொடூரக் குண வணிகர்கள்
பிள்ளைகளையும் அழிக்கும்
குரூர போதை வியாபாரிகள்
எல்லையின்றி சுரண்டும்
ஏகத்தாள அரசியல் வாண்டுகள்
தொல்லைகள் தொடர்கிறதே
தீர்க்க வராது பாராதிருப்பவனே
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?

அநியாயக்காரன் அக
மகிழ்ந்து வாழ்கிறான்
சுரண்டல்காரன் சுகமாகச்
சிரிக்கிறான்
பொறாமைக்காரன்
பொல்லாததை
செய்கிறான்
பெருமை
கொண்டவன் எட்டியே
உதைக்கிறான்
வெறுமைக் கண்களால்
இவைகளைப் பார்க்கிறாய்
சிறுமையாய் செயலின்றி
சிலையாய் நிற்கிறாயே
உனக்கு எதுக்கடா
முறுக்கு மீசை?

இத்தனையும்
செய்திட மீசைதான்
எதற்கு?
என்று கேட்பதிலும் நியாயங்கள்
இருக்கு!
சாதனைகள் செய்தவர்கள்
சகலருக்கும் மீசையுண்டா?
சர்வதேச தலைவர்கள்
அனைவருக்கும் மீசையுண்டா?

சாதனைகள் செய்திட
மீசைதான் எதற்கு?
சத்தியத்தை
நிலைநாட்ட மீசைதான் எதற்கு?
போராட்டங்கள் செய்திட
மீசைதான் எதற்கு?
போட்டிகளில் வென்றிட
மீசைதான் எதற்கு?

கேள்விகள் கேட்டிட,
கெட்டதை அழித்திட
வேள்விகள் செய்திட,
வெற்றிகள் பெற்றிட
சட்டவாட்சி பெற,
சத்தியத்தை நிலை நிறுத்த
தப்பை தட்டிக் கேட்க
மீசைதான் எதற்கு?

நல்லவராய் வாழ்ந்திட
மீசை எதற்கு?
நல்லவைகள் செய்திட
மீசை எதற்கு?
எல்லோர்க்கும் நன்மை
செய்ய மீசை எதற்கு?
என்றென்றும் சிறந்து
வாழ மீசை எதற்கு?

மீசை இருந்தாலென்ன?
மீசை இல்லாவிட்டால் என்ன?

ஆணுக்குத் தேவை ஆண்மை
ஆணுக்குத் தேவை உண்மை
ஆணுக்குத் தேவை வாய்மை
ஆணுக்குத் தேவை நேர்மை

ஆணுக்குத் தேவை மென்மை
ஆணுக்குத் தேவை மேன்மை
ஆணுக்குத் தேவை வீரம்
ஆணுக்குத் தேவை கம்பீரம்

ஆண் மகனே! உனக்கு
இவை இருந்தால் போதுமே
இத்தனையும்
இருக்கும் ஆணுக்கு
சத்தியத்தோடு வாழும்
அவனுக்கு
மீசை இருந்தாலென்ன?
மீசை இல்லா
விட்டால் என்ன?



இலக்கியச் செம்மல், கலாபூஷணம்
சிரேஷ்ட சட்டத்தரணி
ரஷீத் எம். இம்தியாஸ்

# தம்பதியினர் மீது தாக்குதல்; பணம், நகை கொள்ளை

யாழ். விசேட நிருபர்

வர்த்தகர் ஒருவரும் அவரது மனைவியும் இனந்தெரியாதோரால் தாக்குதலுக்கு உள்ளாகியதுடன், இவர்களிடமிருந்து பணம் மற்றும் தங்கநகைகளும் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் யாழ். உடுப்பிட்டி பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வர்த்தகர் வியாபார நடவடிக்கையை முடித்துவிட்டு வீடு திரும்பிய போது வீட்டுக்கு அருகில் மறைந்திருந்த கொள்ளைக் கும்பல் இவர் மீது தாக்குதல் நடத்தி, வியாபாரத்தில் ஈட்டிய பணத்தை கொள்ளையடித்துள்ளது. இந்நிலையில் சத்தம் கேட்டு வீட்டுக்கு வெளியில் வந்த வர்த்தகரின் மனைவி மீதும் கொள்ளைக் கும்பல் தாக்குதல் நடத்தி இவரது நகைகளையும் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச்சென்றுள்ளது.

# கனடாவில் எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜனின் நூல்களின் அறிமுக விழா

உலகத் தமிழ் வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பெற்ற ஐரோப்பா வாழ் எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜனின் நூல்களின் அறிமுக விழா கடந்த 25ஆம் திகதியன்று கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்றது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் மேற்படி விழாவிற்கு தற்போதைய தலைவர் எழுத்தாளரும் கவிஞருமான அகணி சுரேஸ் தலைமை தாங்கினார். வாழ்த்துரைகளை கனடா உதயன் பத்திரிகையின் ஆசிரியர் நா. லோகேந்திரலிங்கம், எழுத்தாளர், அ. தேவதாசன், இசைக்கல்லூரி நிறுவனரும் அதிபருமான திருமதி சுகல்யா இரகுநாதன், எழுத்தாளரும், ஊடகருமான. சாமி அப்பாதுரை ஆகியோர் நடத்தினார்கள். இவரது நூல்களின் நயவுரைகளை பல்வைத்திய கலாநிதியும் திறனாய்வாளருமான மேரி கியூரி போலும், எழுத்தாளரும் முன்னாள் கொத்தணி அதிபருமான தங்கராஜா சிவபாலுவும், எழுத்தாளரான குரு அரவிந்தனும், எழுத்தாளரும் பேராசிரியருமான சிந்தனைப் பூக்கள் பத்மநாதனும் நிகழ்த்தினார்கள். ‘பைரவி நுண்கலைக் கூட கலாசார மண்டபத்தில்’ மிகவும் சிறப்பாக மண்டபம் நிறைந்த எழுத்தாளர்கள், விருந்தினர்கள், பார்வையாளர்கள் எனப் பலரின் பங்களிப்புடன் நடைபெற்றது.

கோவிலூர் செல்வராஜன் ஒரு ஈழத்து பாடகர், நடிகர், கவிஞர் மற்றும் பத்திரிகை ஆசிரியர். இவரது இயற்பெயர் செல்வராஜன் ராசையா. இவரது முதலாவது சிறுகதை தொகுப்பு "விடியாத இரவுகள்" ஆகும். இவர் இதுவரை நாவல், சிறுகதை, கட்டுரை என்று பதினைந்து நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது நூல்கள் இலங்கையிலும், ஐரோப்பிய நாடுகளிலும், கனடா, ஆவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.





இவர் இலங்கை வானொலியில் பல நாடகங்களில் பங்கேற்று நடித்துள்ளார். வானொலிப் பாடகராக இருந்ததோடு, இசையமைப்பாளராகவும் திகழ்ந்தார். இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், படகுத்துறை அருகினிலே – 1975, லாவண்யா ஒரு முற்றுப் புள்ளி – 1978, இளமைக் கோவில் ஒன்று – 1977 ஆகிய நாவல்களும் எழுதினார். சிந்தாமணி, வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் நிறைய சிறுகதைகளும் லண்டன் மேகம், புதினம் நோர்வே – பறை, பாரிஸ் ஈழநாடு, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகளும், கவிதைகளும், பாடல்களும் பிரசுரமாகியுள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நிரந்தரப் பணியாளராக, பல்துறை கலைஞராக இருந்த இவர் புலம் பெயர்ந்த பின்னரும் தான் சார்ந்திருந்த துறைகளில் பிரகாசித்தார்.

பாடலாசிரியராகவும் படகராகவும், இசையமைப்பாளராகவும் இருக்கும் இவர் பல இறுவட்டுகளை தயாரித்து வெளியிட்டுள்ளார்.

தனது ஊரான திருக்கோவில் பிரதேசத்தில் இருக்கின்ற கோவில்கள் பற்றிய பக்தி பாடல்கள் அடங்கிய இறுவட்டுகளை உருவாக்கியுள்ளார். இவர் பல விருதுகளைப் பெற்றுள்ளார். கோவிலூர் செல்வராஜனின் இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறோம்.

லங்கேஸ் தர்மலிங்கம்
கனடா




## மனிதாபிமானம்...!



அன்று
மனிதம்
புதைந்து போனது
சில புதைகுழிகளில்
முற்றிய எலும்புக் கூடுகளை
எடுக்கும் போது

இன்று
மனிதம்
புதைக்கப்படுகிறது

தாயின் கருவறையிலிருந்து
உலகை முத்தமிட
முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

பச்சிளங் குழந்தைகள்
பால் பருகி
குடலை சென்றடைய
முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

மழலை மொழி பேசி
தாயின் முகம்பார்த்து
கபடமற்ற சிரிப்பு
முடியும் முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

தன்னை மறந்து
வீதியில்
விளையாடும் விளையாட்டு
முடியும் முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

கூடாரத்தில்
தேன்கூடு போன்று
கால் நீட்ட இடமின்றி
தூங்கிய தூக்கம்
கலையு முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

வாலிபத்தின் வாசனை
நுகர்ந்து
உடலை விட்டு
நீங்கு முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

ஆசைகளை துறந்த
துறவிகளாய்
ஒரு வேளை உணவைப்
பெற முன்பே
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

தோல் சுருங்கி
நடை தள்ளாடி
உயிர் ஊசலாடும்
மூதாதையர்
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்

அகதிகளாக அந்தஸ்து
பெற்றவர்களுக்கு
அடுக்குக் குண்டுகள் போட்டு
குண்டுகளின் பசி தீர்க்க
கொத்துக் கொத்தாய்
உயிர் பறிக்கும் மனிதாபிமானம்


முகம்மது
முகைதீன் நௌபீக்
தோப்பூர்

## சாய்ந்து விழுந்த சரித்திரம்

சரித்திர மரமொன்ற
சரிந்து வீழ்ந்தது
விபத்தா சதியா
என்பதை விட இறையழைப்பு
சஹீதானாய்

ஈரானுக்கு
மட்டுமல்ல உலக
தேசத்துக்கே பேரிழப்பு
உன் இழப்பைத்
தாங்காது
உன்னை. நேசித்த
மக்களின். கண்ணீர்
துஆ வீண்போகாது

குர்ஆனை தூக்கிப்பிடித்து
முத்தமிடும் காட்சி
நிஜமாக நேசித்தாய்
சமய அறிஞர் என்பதை
நிரூபித்தாய்
வீரம் மாத்திரமல்ல
வித்துவமும்
ஓங்கி. ஒலித்தது



தலைவர்கள்
மரணிப்பதில்லை
உருவாக்கப்படுகிறார்கள்
அஞ்சலிப்பதிவுகள்
அதற்குச் சான்றாய்
படிமட்ட வளர்ச்சி
கட்டியம் கூறும்
சமய அறிஞராய் சிறந்த
வழக்கறிஞராகப்
நீதிபதியாய்
ஏன் ஜனாதிபதியாய்

யாருக்கும் அஞ்சாத
சிங்கமாய் அடுத்தவர்
துயர்துடைக்கும்
முஃமினாய் உணர்த்தினாய்
உண்மைப் படுத்தினாய்
காஸா மக்களும்
கண்ணீர் விடுகிறார்
உனக்கு
உலங்கு வானூர்தி தான்
இறுதிப் பயண வாகனமாய்

தனியாக மட்டுமல்ல
தன் சகபாடிகளுடன்
அரச கதிரையில்
இருந்து ஆட்சிசெய்யாத
அரசனாய்
இது. நபி. வழி
குலபாஉர் ராசிதீன் வழி
மக்கள் குறை கேட்டாய்
மகத்துவ பிரயாணமும்
அதற்கான நன்மையும்
பெறுவாய்

இனியென்ன
இன்பமுறும் ஜன்னத்துல்
பிர்தௌஸ் சுவனமும்தான்
காத்திருக்கும்
துயருள்ள குடும்பத்துக்கும்
மக்களுக்கும்
இதயம் கனிந்த துஆக்கள்
உரித்தாகட்டும். ஆமீன்

தோப்பூர்.எஸ்.சிராஜுதீன்
நற்பிட்டிமுனை

## டயட் ஆகாத மொபைல் போனும் தலைசுற்றி திரியும் நானும்

நேரத்தை திருடிச் செல்லும் பிரபஞ்சம்
வழியனுப்பிய நாளில் நான்
அலைவரிசையின் பிரதிபலிப்பு
நிராசையின் அன்பளிப்பு.
அடிமையக்கப்பட்ட சிறையில்,
ஆயுள் கைதிகளின் அறையில்
கையில் விலங்கு இடப்படவில்லை.

விந்தையை தோற்றுவிக்கும்
விளையாட்டுகள்.
நொடிகளின் வியாக்கியானம்
வாட்ஸ் ஆப் ஸ்டேட்டஸ்
இன்ஸ்டகிராமில் சூழலும்

மர்மங்களில் புகைப்படம்
கைகளாகவும் இமோஜியாகவும்
கல்வியின் வளர்ச்சி
சூமின் புரட்சி.

இளமை வரலாற்றை
கைப்பற்றி கையடக்கியது
தடம் பதிக்க, இடம் விதிக்க
தினசரி நடைமுறை
அனுசரி விடுமுறை
குணப்படுத்த முடியாத வியாதியாகியது.

மபாஸ்

## உன்னையே நீ செதுக்கு

யாரையும் நீ
நம்பியிராதே
உன்னையே நீ நம்பு
நீ நெருப்பாயிரு
உன்னை எதிர்க்கும்
தீய சக்திகள்
உன்னைத் தீண்டினால்
அவை எரிந்து
சாம்பலாகும்
நீ சிங்கம் போலிரு
யாருக்கும் எப்போதும்
அடிமையாயிருக்கத்
தேவையில்லை
எதைப்பற்றியும்
கவலைப்படாதே
கற்ற கல்வியும்
உன் திறமையும்
கடைசிவரை
கைகொடுக்கும்
தாகமாயிருக்கும்
போது மட்டும்

நிறைய நீர் அருந்து
பசிக்கும் போது மட்டும்
உணவு உட்கொள்
ஓய்வு நேரங்களில்
ஓடியாடி விளையாடு
அவை உன்
ஆரோக்கியத்திற்கு நலன்
நல்ல இசையையும்
நல்ல
பாடல்களையும் கேள்
அவையும் உன்
ஆத்மாவை
ஆனந்தப் படுத்தும்
நல்ல புத்தகங்களை வாசி
அவையும் உமக்கு நலன்
உன்னையே நீ செதுக்கு
யாரிலும் தங்கியிராதே
யாரையும் நம்பியிராதே.

சி.மௌநேஷ்
மட்டக்களப்பு

## வையகம் வாழ்த்தும்!

பொல்லாத எண்ணத்தை
பொறுக்கி எறிந்தால்
பூமி உன்னை வாழ்த்தும்!

நல்லோருடன் நட்பு வைத்தால்
நானிலம் உன்னை போற்றும்!

இல்லாதோருக்கு
இரங்கிவிட்டால்
இதயங்கள் உன்னை புகழும்!

கல்லாதோருக்கு
கற்றுக்கொடுத்தால்
கருணையுடன் உன்னை
பார்க்கும்!

சொல்லோடு உன்னில்
செயலுமிருந்தால்
புனிதனாக உன்னை நோக்கும்!

பேரன்பை நீ வைத்துவிட்டால்
பெரும் குணங்கள்
உன்னில் பூக்கும்!

பொறுமையுடன்
நீ இருந்துவிட்டால்
துன்பம் வராது
உன்னை காக்கும்!

முறையாக நீ
வாழ்ந்துவிட்டால்
முன்னேற்றம் உனக்கு
கிடைக்கும்!

நெறிமுறைகள் நீ
பேணிவிட்டால்
தூய்மையே உன்னில் சுரக்கும்!

அறிவுரை நீ வழங்கிவிட்டால்
ஆற்றலும் உன்னில் வளரும்!

பணிவிடை நீ செய்துவிட்டால்
பக்குவம் உன்னில் மலரும்!

நீதி உன்னில் இருந்துவிட்டால்
பூமி உன்னை வணங்கும்!

நியாயம் உன்னில்
வளர்ந்துவிட்டால்
அமைதி உன்னை
அரவணைக்கும்!

ஆன்மிகம் உன்னை
ஆட்கொண்டால்
சாத்விகம் உன்னில் நிலைக்கும்!

பணிவு உன்னில்
இருந்துவிட்டால்
கனிவாய் வாழ்க்கை அமையும்

துணிவு நீ வளர்த்துவிட்டால்
துயரம் உன்னை விட்டோடும் !

காத்தான்குடி
கலைமதி றபாய்தீன்

## விமர்சனத்தை உரமாக்கின் அது உன் இலட்சியத்தை மரமாக்கும்



வியர்க்காமல் விளையாடலாமா.....?
விமர்சனமில்லாது வளரலாமா.......?

கூட்டத்தில் ஒருவன் உனை
கடுமையாய் விமர்சிக்கிறானா?
நீ வளர்கிறாய் என அர்த்தம் காணடா

ஒரு கூட்டமே உனை விமர்சித்தால்
நீ உயரத்துக்கு வளர்ந்துவிட்டாய்
என்றதற்கு அர்த்தம் காண்

பிறகென்ன?

விமர்சனங்களைத் தாங்க இயலாதவன்
தான் நினைத்ததை எப்படி அடைவான்....?
அவதூறுகளை தாங்கி கடக்காதவன்
அற்ப வெற்றி கூட காண மாட்டான்.

விமர்சிக்கப்படுகிறாயா......?
நீ
மகிழடா தயங்காது
எவனோ ஒருவனை உனைக்கண்டு
பொறாமைப்பட நீ வைத்துள்ளாய்
லேசாய் நீ பெருமைகொள்.
விமர்சனங்கள்.....
அவை உனக்கு வரும்
பாராட்டுகள் மறந்திடாதே......

விமர்சனத்தை உரமாக்கு..
அது நிச்சயம் உன்
இலட்சியத்தை மரமாக்கும்.

ஹொறொவ்பொத்தான
அகமட் இம்தியாஸ்

## இருள்வெளி

கதிரவன் மறைந்து
அதிக நேரமில்லை
சில மணித்தியாலம்
தெரு விளக்கின் துணை
வெளி ஒன்றில்
நடைப்பயணம்
திடீரென்று தோன்றியது
இருள் வெளி
மனதில் குடிகொண்டது
மற்றொரு இருள்வெளி
காரணம் நேற்று இரவு கேட்ட
நண்பனின் பேய்க்கதை
இருள்வெளியில் இரண்டு
வெள்ளை நிறப் பேய்கள்
தூரத்தே அவைகள்
துள்ளித் துள்ளி வருகின்ற
டொக் டொக் ஓசை
நெஞ்சுக்குள் தண்ணியில்லை
வேகமாக முன்னோக்கி
நடக்கிறேன் ஆனால்
பின்னால் பேயை நோக்கி
செல்வது போன்ற பிரமை
இரத்தம் உறைவதுபோல்
இருக்கிறது எனக்கு
கண்ணை மூடிக்கொண்டு

கத்த நினைக்கிறேன் ஆனால்
சத்தம் வரவில்லை
திடீரென்று மின்சார ஒளி
கண்ணைக் கூசச் செய்தது
பவர் கட் முடிவுற்றது
திரும்பிப் பார்க்கிறேன்
இரண்டு வெள்ளை மாடுகள்
எனக்குப் பின்னால் வண்டிலை
இழுத்துக்கொண்டு
வேகமாக வருகின்றன

குப்பிளான் குமரன்



## வெளிநாட்டு வாழ்க்கை...

நாட்டங்கள் கைகூடவே
நாடு கடந்துதான் போனேன்
நானும் பாலைவனத்திற்கு பயணம்

நான் கண்மூடினாலும் திறந்தாலும்
நாள்தோறும் இருண்டுவிட்ட
நீண்ட இரவுகளாலும்
பகல்களாலும்
நாட்களை கடக்கிறேன் உழைத்தே
நானும் இப்பாலைவனத்தில்
நரை விழுந்த பறவையாக ...

நானிங்கு ஒரே இருப்பில்
வரிசையாக
நாழிகை எனக்கான
பல வேலைகளில்
நறுக்கவும்
பொடிக்கவும் அரைக்கவும்
நானொரு இயங்கும்
இயந்திரமாக

நிறைந்தே உண்ண உணவிருந்தும்
நாவில் தாகமும் பசியும்
பாதியிருக்கும்
நானும் வேலைப்
பளுக்களோடுதான்
நாட்களும் அதிகமாக
கடந்திருப்பேன்

ஒரே நாவினால் பல முகங்களோடு
பல மொழிகள் பேசுகின்றேன்
காரமும் இனிப்பும்
புளிப்பும் சேர்ந்த
அவர்களின் பேச்சில்

மாறி மாறி பரிமாற்றுவார்கள்
அவரவர்களின் நிர்வாக
அதிகாரங்களும்

சில பொழுதுகளில் உடல் வெந்து
கருகி பொசுங்கிடும்
அனல் பறக்கும் வெயிலில்
வியர்வையில் தினம் குளித்தே
களைப்புகளை போக்க
நான் வேலைப் பளுவில்
கவனமானவன்

வருடத்தில் பாதி மாதங்கள்
உடல் உறைந்து போகும்
குளிர்காலங்கள்
காலநிலையும் மாறுகின்றன

நாளும் நொடியும் யுகங்களாகும்
ஏனிந்த வாழ்க்கையென்றே
எண்ணம் தோன்றிட
நானுமிங்கு தனியறை யொன்றில்
கூவி அழுகின்றேன்
துணையின்றி திரும்புகிறது
நேசங்களின் நினைவுகள்
குன்றென குவிந்து நிறைகிறது

எட்டித் தொட்டுவிட்ட உறவுகள்
ஏக்கத்தில் மனதையும்
வாட்டுகிறது தினமும்
ஏனிந்த வெளிநாட்டு
வாழ்க்கையென்றே
எண்ணங்கள்தான் தோன்றும்

உறக்கத்தை அடகு வைத்தே

மீட்கப்படாத இரவுப்
பொழுதுகள் தினமும்
உறவுகளை நினைத்தே
என்னுயிர் கொன்று தின்னும்

நானிங்கு தினம் ஏற்கும்
சோதனைகளிலும் வேதனைகளிலும்
பெரும் ஆனந்தமும் சேர்ந்திருக்கும்
ஏனென்றால், தாய்நாட்டில்
தினமும் இரவுணவின் ருசியுடன்
என் குழந்தைகள் உறங்கிக்கொள்ளும்
என்னவளின் அரைவயிறு நிரம்பியிருக்கும்

மனைவி பிள்ளைகளென மேம்படவே
எனது உழைப்பு எந்நாளும்
இந்நிலையும் மாறுமென்றே தினமும்
இரவுகளும் பகல்களும்
இங்கு கனவிலே மட்டும் பலிக்கும்

உறவுகளையெல்லாம் தூரமாக்கி
உணர்வுகளையும் இழந்துத்தான்
உறக்கத்தையும் தொலைத்து
உழைப்பில் மரத்துப்போன இந்த
உடல் இனி உறங்கிக்கிடக்க
மண்ணறை மட்டுமே மிச்சமிருக்கிறது

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு

## தாயின் நினைவுகள்

பத்து மாதம் சுமந்தவளே
என்னை கட்டிக் காத்த காதலியே
பணிவு சொல்லித் தந்த பனித்துளியே
வாழ்க்கையை காட்டித் தந்த வசந்தமே
உன்னை என்றுமே போற்றி
விடுவேன் அம்மா

உன் உதிரத்தை பாலாக்கி
உன் கருவறையை வீடாக்கி
கண்ணிமை போல் காத்தாயே
பின் குழந்தையாய்
என்னை பிரசவித்தாயே

பசித்திருந்து பசியாற்றினாய்
விழித்திருந்து தாலாட்டினாய்

இரவு நடுநிசியாய் இருந்தாலும்
நீ ஆழ்ந்த உறக்கத்தில்
இருந்தாலும்
என் அழுகுரல் கேட்டதுமே
எழுந்திடுவாய்
அந்த நாள் உன் உறக்கத்தையே
இழந்திடுவாய்

விலை மதிக்க முடியாத உன் அன்பிற்கு
என்ன கைம்மாறு செய்வேன் அம்மா

பகல் இரவாய் காலம் மாறிச் சென்றாலும்
உன் நினைவுகள் என்னை விட்டு
மாறாதம்மா



எம்.ஆர்.எம். பிலால்
அல்ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி

# Vishwa தனிநபர் வங்கிச்சேவை செயலியை அறிமுகப்படுத்தியுள்ள சம்பத் வங்கி




இலங்கையில் வங்கித்துறையில் புத்தாக்கங்களில் முன்னிலை வகித்து வருகின்ற சம்பத் வங்கி, தனது புரட்சிகரமான மொபைல் பயன்பாடான *Sampath Vishwa Retail* ஐ பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. இணைய வங்கிச்சேவைத் துறையில் குறிப்பிடத்தக்கதொரு சாதனையாக இந்த முற்போக்கான அறிமுகம் அமைந்துள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற சௌகரியம் மற்றும் அணுகலுக்கு உத்தரவாதமளிக்கின்றது.

ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட பயனர் தளத்துடன், அதாவது, வங்கியின் ஒட்டுமொத்த வாடிக்கையாளர்கள் மத்தியில் கிட்டத்தட்ட 25% ஐ இது பிரதிநிதித்துவம் செய்வதுடன், இணைய வங்கிச்சேவையில் சௌகரியத்தைப் பொறுத்த வரையில், *Sampath Vishwa Retail* ஆனது சிகரத்தின் உச்சியில் திகழ்கின்றது. புதுப்பிக்கப்பட்டு, அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள இந்த மொபைல் பயன்பாடு, தங்குதடையின்றிய, பாதுகாப்பான, மற்றும் உள்ளுணர்வை ஏற்படுத்துகின்ற வங்கிச்சேவை அனுபவத்திற்கு உறுதியளித்து, இத்துறையில் புத்தாக்கத்தை முன்னெடுப்பதில் சம்பத் வங்கியின் அர்ப்பணிப்பையும் மீள உறுதிப்படுத்துகின்றது.

தங்குதடையின்றிய இடைமுகம் மற்றும் சர்வதேச தராதரங்களுக்கு அமைவான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவற்றைக் கொண்டு, மீள்வடிவமைக்கப்பட்டுள்ள இச்செயலி, பயனர் அனுபவத்தில் புதிய தர ஒப்பீட்டு நியமத்தை நிலைநாட்டுகின்றது. வேகமான வழிகாட்டல் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதால், ஒரு சில அசைவுகள் அல்லது தொடுகைகளுடன் பயனர்கள் தாம் விரும்பும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பில் சம்பத் வங்கி கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு இது சான்று பகருகின்றது.

# மேம்படுத்தப்பட்ட பலகொல்ல கிளையை திறந்துள்ள DIMO





இலங்கையில் முன்னணியில் உள்ள பல்வகைத் துறை குழுமமான *DIMO*, மத்திய மாகாணத்தில் உள்ள நுகர்வோரின் பல்வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தனது பலகொல்ல சேவை மையத்தை இல. 688, பலகொல்ல, கென்கல்ல எனும் முகவரியில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

இதற்கு முன்னதாக, பலகொல்ல சேவை மையமானது *TATA* வாகனங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில், தற்போது இந்த புதிய கிளையானது, போக்குவரத்து மற்றும் விவசாயத் துறை தொழில்துறையினருக்கு பல்வேறு சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதோடு, வீட்டுப் பயன்பாட்டு உபகரணங்களுக்கான தீர்வுகளை வழங்கி, வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலான வலுவான பங்களிப்பை வழங்குகின்றது.

இது தொடர்பில், *DIMO* நிறுவனத்தின் *Automotive Engineering Solutions* இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி மஹேஷ் கருணாரத்ன தனது கருத்தை வெளியிடுகையில், "நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் வகையில், பிராந்திய வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

*DIMO* பலகொல்ல சேவை மையத்தை முழுமையான கிளையாக தரமுயர்த்தியமையானது, பிராந்திய வளர்ச்சிக்கு பங்களிக்கும் எமது முயற்சிகளில் மற்றுமொரு படியாக குறிப்பிடலாம். *DIMO* நிறுவனத்தின் பலகொல்ல கிளையின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு ஒரே கூரையின் கீழ் பல்வேறு தீர்வுகளை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ." என்றார்.

# Q&E உடன் மூலோபாய பங்காளித்துவத்தை ஏற்படுத்தியுள்ள கொமர்ஷல் வங்கி




கொமர்ஷல் வங்கியின் *LEAP Global Linker* தளத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் (*SMEs*) ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக *Q&E* நிறுவனத்துடன் மூலோபாய பங்காளித்துவம் ஒன்றை ஏற்படுத்தியிருப்பதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் *LEAP Global Linker* என்பது அந்த வங்கியினால் தலைமைதாங்கி வழிநடத்தப்படும் ஒரு முன்னோடி முயற்சியாகும். உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் தகவல் பரிமாற்றத்தை வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் அதிநவீன தொடர்பாடல் சூழல் அமைப்பாகும். சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் பக்கபலத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இத் தளம், தொழில் முயற்சிகளை டிஜிட்டல் மயமாக்கவும் வியாபாரச் செயற்பாடுகளை மேம்படுத்தவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய நியமங்களுக்கு அமைவாகவும் *Global Linker* தளத்தின் அனுகூலங்களைப் பயன்படுத்தியும் ஏற்படுத்தப்பட்டுள்ள கொமர்ஷல் வங்கியின் *LEAP Global Linker* தளம், இந்த நாட்டிலுள்ள *Q&E* கள் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்கள் தமது பண்டங்கள் மற்றும் சேவைகளை விற்பதற்கு எவ்வித செலவுமின்றி ஒன்லைன் ஸ்டோர்களை அமைப்பதற்கு உதவும். இத் தளத்தின் ஊடாக வியாபாரங்கள் தமது வாடிக்கையாளர் அடித்தளத்தை விரிவுபடுத்த முடியும், உலகெங்குமுள்ள சாத்தியமான முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்களுடன் தொடர்பை ஏற்படுத்த முடியும், நெட்வேர்கிங் முயற்சிகளுக்கு வலுவூட்ட முடியும், வெளிநாட்டுச் சந்தைகளை ஆராய்ந்து தேடிக்கொள்ள முடியும்,

# இலங்கை காலநிலை உச்சி மாநாடு 2024 நிலைத்தன்மையை உறுதிப்படுத்திய NDB



இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் 'எங்கள் தேசம் மற்றும் கோளுக்கான காலநிலை நடவடிக்கை' என்ற தலைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை காலநிலை உச்சி மாநாட்டில் இணை அனுசரணையாளராக தீவிரமாக பங்குபற்றியதன் மூலம் *NDB* வங்கி நிலைத்தன்மைக்கான தனது அர்ப்பணிப்பினை மீள உறுதிப்படுத்தியுள்ளது.

மே 7 முதல் 9 வரை நடைபெற்ற இந்த உச்சிமாநாடு, பணிப்பாளர் சபை மட்டத்தில் காலநிலை நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் தேசிய மற்றும் பெருநிறுவன காலநிலை நடவடிக்கைகளை எளிதாக்கும் கொள்கைகளில் பங்குதாரர்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

ஒரு முன்னணி நிதி நிறுவனமாக, காலநிலை மாற்றம் மற்றும் சமூகங்கள் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் அதன் தாக்கத்தை நிவர்த்தி செய்வதற்கான அவசரத் தேவையை *NDB* உணர்ந்துள்ளது. உச்சிமாநாட்டில் வங்கியின் பங்கேற்பானது, நிலையான நடைமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. இந்த உச்சிமாநாட்டில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளையும் சேர்ந்த வல்லுநர்கள் உள்ளடங்கலாக 60க்கு மேற்பட்ட பேச்சாளர்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் காலநிலை நெருக்கடியில் உலகளாவிய மற்றும் உள்நாட்டு ரீதியிலான பாதிப்புகள், வர்த்தக செயற்பாடுகளில் ஏற்படும் இடர்கள், காலநிலை மீள்தன்மை, கார்பன் நீக்கம் போன்ற முக்கியமான தலைப்புகளில் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

# பாதுகாப்பான மற்றும் விசாலமான 2024 Nissan Urvan NV350 ஐ அறிமுகப்படுத்தும் AMW



இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (*SLTDA*) கீழ் பயணிகள் போக்குவரத்து வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு இலங்கை அமைச்சரவையின் அண்மைய தீர்மானமானது, சுற்றுலாத் துறை தொடர்பான முக்கியமான முன்னேற்றமாக அடையாளம் காணப்படுகிறது.

அந்த வகையில், *Associated Motorways (Private) Limited* நிறுவனமானது, *2024 NISSAN Urvan NV350* எனும் 16 ஆசனங்களைக் கொண்ட, அகலமான இட வசதியைக் கொண்ட, *High roof Micro bus* வாகனத்தை இறக்குமதி செய்து வழங்குகிறது. குறிப்பாக 16 - 30 ஆசனங்களைக் கொண்ட இது *minicoach* வகையைச் சேர்ந்ததாகும். *2024 Nissan Urvan NV350* ஆனது, இலங்கைக்கான சிறந்த தெரிவாகவும், இலங்கை சுற்றுலாவிற்கு ஏற்ற தெரிவாகவும் அடையாளம் காணப்படுகின்றது. இந்த வாகனமானது, ஆசனங்களின் திறன் மற்றும் தரநிலைகள், அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரத்திற்கு அவசியமான அம்சங்களை பூர்த்தி செய்வதோடு, *Nissan Motor Corp* நிறுவனம் வழங்கும் உற்பத்தி நிறுவனத்தின் உத்தரவாதத்தையும் கொண்டுள்ளது.

*2024 Nissan Urvan NV350* வாகனம், கால்களை வைக்க போதுமான வசதியையும், தலைக்கும் கூரைக்கும் இடையிலான இடவசதியையும் கொண்டுள்ளதன் மூலம், ஒவ்வொரு பயணத்தையும் பயணிகளுக்கு வசதியானதாக ஆக்குகின்றது. அதன் மாற்றியமைக்கூடிய கட்டமைப்பு மூலம், பயணிகளுக்கு வசதி மற்றும் சொகுசு ஆகிய இரண்டையும் உறுதி செய்யும் வகையில், பயணப் பொதிகளை வைப்பதற்கான இடத்தை தடையின்றி வழங்குகிறது.

# International Organization for Migration (IOM) ஸ்ரீலங்கா உடன் கைகோர்க்கும் eChannelling




இலங்கையின் முன்னணி வைத்திய முற்பதிவு கட்டமைப்பும், SLTMOBITEL இன் துணை நிறுவனமுமான eChannelling, ஐக்கிய இராஜ்ஜியம், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளுக்கான புலம்பெயர்வுகளுக்கு அவசியமான சுகாதார மதிப்பாய்வுகளை மேற்கொள்வதற்கான இலவச ஒன்லைன் முற்பதிவுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக International Organization for Migration (IOM) ஸ்ரீ லங்கா உடன் கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது.

புலம்பெயர்வோர் மற்றும் பயணங்களை மேற்கொள்வோருக்கு அவசியமான, பயனளிக்கும் பரிபூரண சுகாதார மதிப்பாய்வுகளை IOM வழங்குகின்றது. இந்த புதிய பங்காண்மையினூடாக, புலம்பெயர்வோருக்கு தமது IOM சுகாதார மதிப்பாய்வு முற்பதிவுகளை ஒன்லைனில் eChannelling இன் இணையத்தளமான https://www.echannelling.com/ ஊடாக அல்லது eChannelling மொபைல் app ஊடாக மேற்கொள்ள முடியும்.

eChannelling மற்றும் IOM இடையிலான கைகோர்ப்பினூடாக, இடையீட்டாளர்களின் தலையீடின்றி புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்போருக்கு தமது மருத்துவ பரிசோதனை முற்பதிவுகளை இலவசமாக முற்பதிவு செய்து கொள்ளும் வசதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட செயன்முறையினூடாக புலம்பெயர்வோருக்கு தமது பிரயாணத்துக்கு முன்பாக சுகாதார பரிசோதனை சேவைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படுகின்றன.

IOM இன் புலம்பெயர் சுகாதார பிரிவினூடாக, இலங்கையில் 2014ஆம் ஆண்டு முதல் விசேடத்துவமான சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த ஊழியர்களினூடாக, உயர் தரம் வாய்ந்த சேவைகள் நிபுணத்துவமான முறையிலும், வினைத்திறனான முறையிலும் வழங்கப்படுகின்றன.

# நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் 'கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட உறவு' திட்டம்

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி தனது "கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட உறவு" 2024 திட்டத்தை முன்னெடுப்பதாக அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட திட்டம் வெற்றிகரமாக அமைந்திருந்ததைத் தொடர்ந்து, இந்த ஆண்டின் திட்டத்தினூடாக, வாடிக்கையாளர்களின் வெளிநாட்டு பண அனுப்புகை அனுபவத்தை மேம்படுத்தி, முன்னைய சாதனைகளை விஞ்சுவதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், வெளிநாடுகளில் வசிக்கும் அன்புக்குரியவர்களுடன் உறுதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கின்றது.

தொடர்ச்சியாக 12 வாரங்களுக்கு, ஒவ்வொரு வாரமும் தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்களுக்கு ஸ்மார்ட் தொலைபேசியை வழங்கவுள்ளது. அதனூடாக வெளிநாடுகளில் வசிக்கும் தமது அன்புக்குரியவர்களுடன் தொடர்பில் இருப்பதற்கு உதவியாக அமைந்திருக்கும். இந்த நடவடிக்கையினூடாக வளர்ச்சியை ஊக்குவித்து, வெளிநாட்டு பண அனுப்புகை தொடர்பான வங்கியின் இலக்குகளையும், நாட்டின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வாராந்த வெற்றியாளர் தெரிவில் பங்கேற்பதற்கு, வாடிக்கையாளர்கள் ஆகக்குறைந்தது ரூ. 50000 பெறுமதியான வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கலை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினூடாக அனுப்பி பெற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும், வெற்றியாளர் தெரிவுக்கான ஒவ்வொரு அனுமதியைப் பெறும். அதனூடாக வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகளை வெற்றியீட்டுவதற்கும், வங்கியின் தங்கியிருக்கக்கூடிய மற்றும் வினைத்திறனான பண அனுப்புகை சேவைகளை அனுபவிக்கவும் உதவியாக அமைந்திருக்கும்.

# நவலோக்க மருத்துவநிலையத்தை கையகப்படுத்தல் மேன்முறையீட்டு நீதிமன்ற தடையுத்தரவு நீடிப்பு

நவலோக்க மருத்துவ நிலையத்தை கையகப்படுத்துவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தடை உத்தரவுக்கு எதிராக *HNB* முன்வைத்த ஆட்சேபனைகளை நிராகரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கின் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரை, நவலோக்க மருத்துவ நிலையத்தின் சொத்தை சுவீகரிப்பதற்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றம் இதற்கு முன்னர் வழங்கிய தடையுத்தரவை நீடிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் துணை நிறுவனமான நவலோக்க மருத்துவ நிலையத்தினால் கடனாகவும் வட்டியாகவும் *HNB* இற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ. 600 மில்லியன் தொடர்பில், நவலோக்க வைத்தியசாலையின் வளாகமொன்றை ஏலத்தில் விடும் அவ்வங்கியின் தீர்மானத்தை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்த நவலோக்க மருத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி கடந்த மார்ச் மாதம் இந்தச் சம்பவம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவொன்றை பிறப்பித்தது.

இதேவேளை, நவலோக்க மருத்துவமனை குழுமத்துடன் இணைந்த அதன் துணை நிறுவனங்களால் பெறப்பட்ட அனைத்து கடன்கள் மற்றும் வட்டித் தவணைகளை உரிய முறையில் மீளச் செலுத்துவதற்குரிய, வலுவான நிதி ஆதாரங்கள் நவலோக்க மருத்துவமனை குழுமத்திற்கு உள்ளது எனவும், இந்த நிலைமையானது நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் எந்தவொரு தடையையும் ஏற்படுத்தாது எனவும் தனது பங்குதாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் நவலோக்க மருத்துவமனை குழுமத்தினால் அறிவிக்கப்படுகின்றது.

# உலகளாவிய மின்னியல் வாகன வணிகத்தை விஸ்தரித்துள்ள TVS மோட்டார் கம்பனி



இலங்கையில் இருசக்கர மற்றும் மூன்று சக்கர வண்டிகள் துறையில்; உலகளாவிய ரீதியில் முன்னணியாகத் திகழும் வாகனத் தயாரிப்பாளரான TVS Motor Company (TVSM) தனது உயர்மதிப்புக் கொண்ட TVS iQube மின்னியல் ஸ்கூட்டரை இலங்கையில் இன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

TVSM நிறுவனத்தின் உறுதியான மற்றும் நம்பகமான பொறியியல் திறமையின் ஆதரவுடன் TVS iQube மின்னியல் ஸ்கூட்டர் முன்னணியான செயல்திறன், சௌகரியம், உருவாக்கத்தரம், நீடிக்கும் தன்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையில் தான் கொண்டுள்ள பிரசன்னம் மற்றும் இருசக்கரவண்டிகள் துறையில் 38% சந்தைப் பங்கின் உரிமையாளர் என்ற சிறப்பின் ஊடாக TVS Lanka Pvt. Ltd நிறுவனம் ஏற்படுத்திக் கொண்டுள்ள நன்கு விஸ்தரிக்கப்பட்ட விற்பனைக்குப் பின்னரான சேவையுடனேயே இந்தத் தயாரிப்பு அறிமுகப்படுத்தப்படுகின்றது.

TVS iQube மின்னியல் ஸ்கூட்டர் ஒப்பிடமுடியாத செயல்திறன் மற்றும் அறிவார்ந்த இணைப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. 125 CC ஸ்கூட்டருக்கு இணையான அதிகூடிய 4.6 KW வலு சக்தியைக் கொண்ட TVS iQube ஸ்கூட்டர் 4.2 செக்கனில் 040 ; km/h வரை வேகத்தை அதிகரிக்கக் கூடியது.

# The Colombo Border திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை அறிமுகப்படுத்திய Prime Residencies



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Lands Residencies PLC, தனது 'The Colombo Border,' திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டியுள்ளது. நகர வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமையவுள்ள இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தின் பெருமளவான குடிமனைகள் விற்றுத் தீர்ந்துள்ள நிலையில், தற்போது இரண்டாம் கட்டத்தை அறிமுகம் செய்வதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் பைலிங் பணிகளை நிர்மாணத் துறையின் புகழ்பெற்ற நாமமான San Piling முன்னெடுத்து வருகிறது. இது திட்டம் தொடர்ந்து முன்னேறி வருவதற்கான அறிகுறியாகவும் திகழ்கிறது.

கொழும்பு – கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள இந்த 'The Colombo Border' திட்டத்தினூடாக, கொழும்பினை அண்மித்த பேலியகொட பகுதியிலிருந்து சில நிமிடங்களில் கொழும்பு நகரை சென்றடைய முடியும் என்பதுடன், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் களனி வெலி புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கும் சில நிமிடங்களில் பயணிக்க முடியும். இதனூடாக, கொழும்பு மத்தி மற்றும் அண்மித்த பகுதிகளை தனிப்பட்ட மற்றும் பொதுப் போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தி துரிதமாக சென்றடையக் கூடியதாக இருக்கும்.



சுவாமி விபுலாநந்தர் துறவு பூண்ட நூற்றாண்டு (1924-2024) நிறைவையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் "இசைத்தமிழ் விழா" கொழும்பு தமிழ் தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் தலைவர் கலாநிதி க. இரகுபரன் தலைமையில் நடைபெற்றது. சுவாமி விபுலாநந்தார் சிலை, சைவ மங்கையர் வித்தியாலயத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும், இராமகிருஸ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மனாந்தஜீ, சுவாமி விபுலாநந்தரின் உருவச் சிலைக்கு, மலர் மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# போராட்ட வாழ்விலிருந்து விடை பெற்றார் திலின!!!

## ஈஸ்டர் தாக்குதலில் பலியான 315ஆவது நபராகிறார் அவர்



இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நிகழ்ந்து ஐந்துவருடங்கள் கடந்தாலும் இன்னும் அதன் வடு ஆறவில்லை. தாக்குதல்களில் உயிரிழந்தோர் ஒருபக்கம் இருக்க காயமடைந்தவர்கள், அவயங்களை இழந்தோர் இன்றும் உடல், உள வேதனைகளுடன் அன்றாடம் போராடி வருகின்றனர். 2019ஆம் ஆண்டு கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியன் தேவாலயம், கிழக்கில் சியோன் தேவாலயம் மற்றும் கொழும்பிலுள்ள மூன்று நட்சத்திர ஹோட்டல்கள் ஆகிய இடங்களில் இந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருந்தன.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் தின விசேட ஆராதனை ஆரம்பித்து அது முடிவடைவதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது.

அந்தவகையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் தனது மகனை இழந்து மாற்றுத்திறனாளி என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்த திலினா ஹர்ஷனி அண்மையில் இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றார். ஈஸ்டர் தாக்குதலில் பலியான 315ஆவது நபர் அவராவார்.

திலினா ஹர்ஷனி மனவலிமை மிக்க, ஆற்றல்கள் நிறைந்த பெண். எத்தகைய விமர்சனங்கள், ஏமாற்றங்கள், பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை புன்சிரிப்புடன் எதிர்கொள்வார். நீர்கொழும்பிலுள்ள பிரபல கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் கல்வி கற்ற அவர் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினார். பாடசாலையில் அனைவராலும் அறியப்பட்ட நடனக்கலைஞராகவும் இருந்தார்.

அவரால் யாருக்கும் எந்த தொந்தரவும் இருக்கவில்லை. தனது மூன்று பிள்ளைகளுடன் அவருடைய வாழ்க்கை அழகாய் நகர்ந்தது. எனினும் உயிர்த்த ஞாயிறு திருப்பலிக்காக நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்துக்கு சென்ற அவருக்கு எதிர்பாராத இழப்புகளும் ஏமாற்றங்களும் கிடைக்கும் என்பதை அவர் கனவில் கூட நினைத்து பார்த்திருக்க மாட்டார். ஒருநொடியில் அவருடைய வாழ்க்கையே தலைகீழாக மாறியது.

அன்று நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு திருப்பலி நிறைவடைவதற்கு சிறிதுநேரமே இருந்தது. அனைவரும் உயிர்த்த இயேசுவின் திருச் சொரூபத்துக்கு முன்பாக ஆசிர்வாதத்துக்காக காத்திருந்தனர். அப்போது திலினவின் கையிலிருந்த ஆசிர்வதிக்கப்பட்ட நூல் கழன்றமையால் அதை கட்டுவதற்காக மூத்த மகனை தூக்கி தனது மடியில் அமர்த்திக்கொண்டார்.

அப்போது திடீரென ஒரு பயங்கர சத்தம், மக்கள் பதறியடித்துக்கொண்டு பீதியுடன் அங்கும் இங்கும் ஓடினர். திலின பலத்த காயங்களுடன் கீழே விழுந்தார். அவரின் பின்னால் அமர்ந்திருந்த தாய் சிறுகாயங்களுடன் உயிர்தப்பினார். தாயார் உடனே பதறியடித்துக் கொண்டு மகளின் மற்றைய இரண்டு பிள்ளைகளையும் தேடி ஒருவழியாய் கண்டுபிடித்தார். அவர்கள் இருவரும் சிறுகாயங்களுடன் உயிர்தப்பியிருந்தனர். எனினும் திலினவின் மடியிலிருந்த மூத்த மகன் உயிருடன் இருக்கவில்லை. அதனைத்தொடர்ந்து திலினவை தாயார் தேடியபோது அவர் தரையில் முகம் குப்புற விழுந்து கிடந்தார். உயிர் ஊசலாடிகொண்டிருந்து. அவரைச் சுற்றி இரத்த வெள்ளமாக காட்சியளித்தது. உடனே தாய் அங்கிருந்தவர்களின் உதவியுடன் திலினவை முச்சக்கர வண்டியில் ஏற்றி நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்தார். 14மாதங்களின் பின்னர் இடது கண்ணை இழந்த நிலையில் முதுகுத் தண்டுவடத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுடன் மீண்டு வீட்டுக்கு வந்தார் திலின, அப்போது தான் மூத்தமகன் உயிருடன் இல்லையென்பதை அவர் அறிந்துகொள்கின்றார். அவரால் அதை தாங்கிகொள்ளவே முடியவில்லை. கடைசியாக தனது மடியிலே மகனின் உயிர் பிரிந்ததை எண்ணி எண்ணி மனம் நொந்தார். எனினும் எந்த சூழ்நிலையிலும் அவர் தனது நம்பிக்கையை கைவிடவில்லை.

முதுகுத் தண்டுவடத்தில் ஏற்பட்ட பலத்த காயம் காரணமாக அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. படுக்கையிலேயே இருந்தார். கிட்டதட்ட 5 பெரிய சத்திரசிகிச்சைகள், 3 சிறிய சத்திரசிகிச்சைகள் அவருக்கு செய்யப்பட்டிருந்தன. இடது கண்ணில் ஏற்பட்ட பாதிப்பை சரிசெய்ய முடியாத போதும் மற்றைய கண்ணை பாதுகாப்பதற்காக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

திலினவுக்கும் அவருடைய இரண்டு பிள்ளைகளுக்கும் கத்தோலிக்க திருச்சபை பெரும் பலமாக இருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கரித்தாஸ் அமைப்பின் ஊடாக திலினவுக்கான பிரத்தியேக அறையொன்று நவீன வசதிகளுடன் கட்டிக்கொடுக்கப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் திலினவுக்கு பக்கபலமாக இருந்தனர். திலினவை காப்பாற்ற போராடினர். இலங்கையிலுள்ள முன்னணி நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரிடமும் ஆலோசனைக்காக திலினவைக் கொண்டு சென்றனர். வைத்தியர் அறுவைச் சிகிச்சைக்கு பரிந்துரைத்ததுடன் அதற்கு பெருந்தொகைப் பணம் செலவாகும் எனவும் தெரிவித்தார். குடும்பத்தினர் ஆரம்பத்தில் சமூக ஊடகங்கள் மூலம் நிதி திரட்ட ஆரம்பித்த போதிலும், அவருக்கு அனைத்து மருத்துவக் கட்டணங்களும் மருத்துவமனையால் தள்ளுபடி செய்யப்பட்டது.

எனினும் எந்தவொரு முயற்சியும் கைகூடவில்லை. நீண்டகால போராட்டத்துக்கு பின்னர் அவர் கடந்த 29ஆம் திகதி இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தற்சமயம் பிள்ளைகள் இருவரும் தாத்தா, பாட்டியின் பாராமரிப்பில் இருந்து வருகின்றனர்.

திலினவின் இறந்த மூத்த மகனுக்கு அரசாங்கத்தால் வழக்கப்பட்ட நஷ்டஈட்டு தொகையையும் அவர் செலவழிக்கவில்லையென உறவினர்கள் தெரிவிக்கின்றனர். அதை ஒருகாலத்தில் பிள்ளைகள் இருவரும் எடுத்துக் கொள்ளட்டும் என்று திலின வைப்பிலிட்டதாகத் தெரியவருகின்றது. அது மட்டுமின்றி அவருக்கு கிடைத்த உதவித்தொகையும் பிள்ளைகளுக்காக வைப்பிலிட்டதாக தெரியவருகின்றது.

எதுஎவ்வாறாயினும் திலின போன்று பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.



**வசந்தா அருள்ரட்ணம்**

# வெற்றிகரமாக நடந்து முடிந்த ரியாத் சுற்றுலாப் பயணக் கண்காட்சி





சவூதி அரேபியாவின் ரியாத் நகரிலுள்ள சர்வதேச மாநாட்டு மற்றும் கண்காட்சி மையத்தில் ரியாத் சுற்றுலாப் பயணக் கண்காட்சி (RTF) 2024 கடந்த மே மாதம் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பை ரியாதிலுள்ள இலங்கை தூதரகம், இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்தது.

சவுதி அரேபியாவுக்கான இலங்கையின் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத் இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனங்களின் கண்காட்சி கூடத்தை திறந்து வைத்தார்.

மேற்படி திறப்பு நிகழ்வில் உரையாற்றிய தூதுவர் அமீர் அஜ்வத் இலங்கை மற்றும் சவுதி அரேபியாவுக்கிடையிலான உறவுகள் பற்றி வரலாற்று ரீதியாக எடுத்துரைத்ததுடன், இலங்கையிலுள்ள சுற்றுலாத் தளங்கள் தொடர்பான தகவல்களை அரபு மொழியில் பகிர வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

மேலும் அவர் தனதுரையில் சவுதி அரேபியாவில் இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைத் தூதுவராலயத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்ற 'அஹ்லன் ஸ்ரீலங்கா' மற்றும், 'இப்னு பதூதாவின் பயணப் பாதை' மற்றும் 'ஆதம் மலை நோக்கிய பயணம்' போன்ற புதிய முன்னெடுப்புகளையும் அறிமுகம் செய்தார்.

நான்கு வருட நீண்ட இடைவெளிக்கு பின்னர் பதினெட்டு இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனங்களின் பங்கேற்புடனும் இக்கண்காட்சியில் இலங்கை பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இந்தக் கண்காட்சி சுற்றுலா மற்றும் உல்லாச பயண ஊக்குவிப்பு நிறுவனங்களுக்கிடையில் தொடர்புகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டிருந்தது.

இக் கண்காட்சியின் இறுதி நாளன்று தூதுவர் அமீர் அஜ்வத் ரியாதிலுள்ள இலங்கைத் தூதரக வளாகத்தில், குறித்த கண்காட்சியில் கலந்து கொண்ட இலங்கை சுற்றுலாத் தள ஊக்குவிப்பு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான ஒரு திறந்த கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் தூதரக பிரதானி மொஹமட் அனஸ் (HoC) மற்றும் ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் வணிகச் செயலாளர் திருமதி தஷ்மா விதானவசம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பரத நாட்டிய அரங்கேற்றம்







ரமேஷ்குமார், மல்லிகா தம்பதிகளின் புதல்வி ரஷ்மிதா மற்றும் விஜேசுந்தரம் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வி வினுஷா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நுவரெலியா சினி சிட்டா நகர மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார். நடன ஆசிரியர் எம். ரமேஷ்காந்த் அண்ணாமலை தஞ்சாவூர் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பட்டம் பெற்றவராவார்.

**(நுவரெலியா தினகரன் நிருபர் எஸ்.தியாகு)**

# தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் விருது வழங்கும் விழா இன்று

தந்தை செல்வா நற்பணி மன்றத்தினால் நடத்தப்படும் வருடாந்த தந்தை செல்வா ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு இன்று ஜூன் மாதம் 02ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு 14 கலைமகள் தமிழ் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் எஸ்.ரவிந்திரனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் சபா ஜெயராஜா கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கதிர்வேலாயுத சுவாமி அறங்காவலர் கே.ரகுநாதன், கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் கலாநிதி செல்வநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

விவேகானந்தா தேசிய பாடசாலை அதிபர் மூக்கையாப்பிள்ளை மூவேந்தன், விவேகானந்தா தேசிய பாடசாலையின் முன்னாள் உப அதிபர் பி.ஸ்டேன்லி ரஞ்சிதன், காக்கைதீவு இந்துமன்ற தலைவர் தியாகராஜா தயாநிதி, மகேந்திரன் சியாந்தி (சமுர்த்தி வங்கி முகாமையாளர் மட்டக்களப்பு), எம்.ஸ்ரீகுமார் (சமூக சேவையாளர் பதுளை), பெ. தம்பிராஜா (முன்னாள் அதிபர் பலாங்கொடை), எஸ்.கோபாலன் (ஆசிரிய ஆலோசகர் நுவரெலியா) ரா.பாலசந்திரன் (அதிபர் புஸல்லாவ), அருள்நாதன் (லங்காஸ்ரீ ஊடகம் கொழும்பு) திருமதி பிரணிதா தமீந்திரன் (சக்தி எப்.எம்.) வ.ஜகதாஸ் (அதிபர் திருகோணமலை), சுதத் ஹேமந்த பண்டார (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்) ஆகியோர் தந்தை செல்வா விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும். பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பதக்கம் வழங்கப்படும். அறநெறிப் பாடசாலைக்கு தவறாது வருகை தந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.


## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

**திட்டமிடல், நிர்மாணம், செயற்படுத்தல், பராமரிப்பு மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வளவுகளின் கூரை மீது 200 ஆண்டு காலத்திற்காக சூரிய படல் நிறுவுவதற்கு திட்ட முன்மொழிவுகளை கோரல்**





Lease Period : 20 Years
Bid Bond : Rs.100,000/-

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கீழுள்ள வளவுகளில் கூரை மீது 20 ஆண்டு காலத்திற்கு நிர்மாணம், செயற்படுத்தல், பராமரித்தல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் சூரிய படல் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

வெற்றிகரமான விண்ணப்பதாரர் அதனையொத்த திட்டங்களுக்காக தொழில்நுட்ப திறன் மற்றும் முன் தகைமையுடன் இருத்தல் வேண்டும் என்பதோடு முதலீட்டு முன்மொழிவு கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு அளவுகோல் மற்றும் குறிப்பாக வழங்கப்படும் உயர் வருவாய் பகிர்வு வீதம் அடிப்படையில் வெற்றிகரமான விலைமனுதாரர் தேர்வு செய்யப்படுவார்.

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தரப்புகளுக்கு (முதலீட்டாளர்கள்/மேம்பாட்டாளர்கள்) சார்ந்த விபரங்கள் அடங்கிய முதலீட்டு முன்மொழிவு கோரல் ஆவணத்தை மீளளிக்கப்படாத 25,000 ரூபா தொகையை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் I, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி பிரிவினால் 2024 ஜூன் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை மாதம் 12ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஜூலை மாதம் 02ஆம் திகதி மு.ப. 10.00க்கு செத்சிறிபாய, கட்டம் I, 9ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

திட்ட முன்மொழிவை பெறுவது 2024 ஜூலை மாதம் 25ஆம் திகதி பி.ப. 2.00க்கு முடிவுறும் கிடைக்கப் பெற்றிருக்கும் முன்மொழிவுகள் உடன் திறப்பது பத்தரமுல்லை 'செத்சிறிபாய' 7ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை பெறுகை பிரிவில் மேற்கொள்ளப்படும்.

| வரிசை இலக்கம் | இடம் | கூரை பகுதி (சதுர அடி) தோராயமாக | வரிசை இலக்கம் | இடம் | கூரை பகுதி (சதுர அடி) தோராயமாக |
|---|---|---|---|---|---|
| 1 | செத்சிறிபாய கட்டம் I | 37,570 | 6 | பேலியகொடை மெனிங் சந்தை | 148,000 |
| 2 | செத்சிறிபாய கட்டம் II | 24,477 | 7 | பொலன்னறுவை நிர்வாகக் கட்டிடம் | 15,037 |
| 3 | கொழும்பு மத்திய பேரங்காடி | 44,000 | 8 | மாகம் ருஹுனுபுர சர்வதேச மாநாட்டு நிலையம் | 18,578 |
| 4 | மிதக்கும் சந்தை புறக்கோட்டை | 10,411 | 9 | யாழ்ப்பாணம் UDA அலுவலகம் | 3,317 |
| 5 | ட்ரேஸ் சிட்டி (Trace Expert City) மருதானை | 55,000 | 10 | தம்புல்ல அலுவலக தொகுதி | 7,622 |

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்
பணிப்பாளர் (ஆதன மேம்பாடு),
ஆதன மேம்பாடு மற்றும் முகாமைத்துவ பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகார சபை, 8ஆவது மாடி,
செத்சிறிபாய கட்டம் I, பத்தரமுல்லை,**

**தொலைபேசி இலக்கம்:
011-2875921 அல்லது 011-2875916-20
நீடிப்பு 2966-2968**

**தொலைநகல்: 011-2875900
மின்னஞ்சல்: directorred@uda.gov.lk
இணையதளம்: www.uda.gov.lk**

**தலைவர்,
வருவாய் கேள்விக் குழு (சிரேஷ்ட)
நகர அபிவிருத்தி அதிகார சபை,
7ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் I,
பத்தரமுல்லை.**

# தம்பி உழைக்கிறான்



காலையில் அந்தப் பையனைக் கண்டது முதல் மலருக்கு மனசு கிடந்து தவிக்கத் தொடங்கியது. யார் அந்தப் பையன்? இவனை எங்கேயோ பாத்த மாதிரியிருக்கிறதே. ஆனாலும் யாரென்று தான் தெரியவில்லை. ஒன்றுக்குப் பத்துத் தடவைகள் அவனைப்பற்றி நினைத்துப் பார்க்கத் தொடங்கினாள். அப்போது தான் அம்மாவிடமிருந்து கோல் வந்தது. அதற்குமேல் அவளால் அவனைப் பற்றி நினைக்கவே முடியவில்லை.

"மலரு உங்கப்பா படுத்த படுக்கையாக கிடக்கிறாருடி. எதுக்கும் நீ ஒரு தடவை வந்திட்டு போம்மா. அவரைப் பார்க்கவே பாவமாயிருக்குதுடி. கைகால் இழுத்ததோடு இப்போ வாய்பேசவும் முடியல்லடி" சொல்லிவிட்டு அம்மா அழத் தொடங்கி விட்டாள்.

"சரிசரி அழாதம்மா" மலர் கொஞ்சநேரம் மௌனமாக நின்றாள். பிறகு "எப்படிம்மா அப்பாவுக்குத்தான் என்னைக் கண்டாலே ஆகாதே. நான் எப்படிம்மா வரமுடியும்?"

"என்னால் முடியல மலர் தனியாக் கிடந்து நான் என்ன பண்ணுவன் சொல்லு? உன்னைப் பார்த்தாலாவது மனசுக்கு ஆறுதலாயிருக்கும் மல்ல.",

"நீ சொல்வது சரிதானம்மா அப்பாவைப் பார்க்கக்கூடாதென்று எனக்கென்ன வேண்டுதலா?" "அப்போ புறபட்டு வாயேன்."

"என்னம்மா பேசிற நீ போன தடவை உன் பேச்சைக் கேட்டு நான் அங்கு வந்து பட்ட அவமானம் போதாதா? நான் செத்தாக் கூட இந்த வீட்டுப்பக்கம் நீ வரக்கூடாது ? என்றுதானே அப்பா கைக்குழந்தையோடு வந்த என்னை ஓட ஓட விரட்டினார். அதைக் கூட மறந்திட்டியா?"

"நீ சொல்வது சரிதான் மலரு. உடம்பில ஆட்டம் இருக்கும் வரையும் அப்படிதான் ஆடுவாங்க. உடம்பில் இயக்கம் கெட்டுப் போனா, அடங்கிக் கிடக்க வேண்டியதுதான். இப்போது அவரால் ஒன்றும் பண்ண முடியாது மலர். ஒருதடவையாவது நீ வந்திட்டுப் போம்மா." அம்மாவின் கெஞ்சலில் மலர் விழியின் மனசு இளகி விட்டது.

"சரிம்மா அவரோடையும் பேசிப்போட்டு உனக்கு முடிவு சொல்லுறன் சரியா? நீ எதுக்கும் கவலைப்படாமல் தைரியமாயிரு." அவள் போனை வைத்துவிட்டாள்.

அப்பாவுக்கும் அவளுக்கும் இடையில் அப்படி என்ன தான் வில்லங்கம்? இப்போ மலர்விழியின் மனசுக்குள் அந்தப் பழைய நினைவுகள் தான் ஓடி மறைந்தது.

அவளுடைய அப்பா ஒரு சாதாரண பள்ளிவாத்தியார் தான் ஆனால் எல்லா விடயங்களிலும் ரொம்பக் கண்டிப்பானவர். அம்மாவுக்குப் பரந்த மனசு. மலர் விழிக்கு ஒரு தம்பி அவன் டாக்டருக்குப் படிச்ச கையோடு லண்டனுக்குப் போய்விட்டான்.

மலர்விழிக்கு நர்ஸ் வேலை கிடைத்து. காலி பெரியாஸ்பத்திரியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தாள். இந்த விடயத்தில் வாத்தியாருக்குப் பெரிய சந்தோஷம் தான். இனி அவளுக்கொரு கல்யாணத்தைச் செய்து விட்டால் நிம்மதி என்று நினைத்தவர் மகளுக்கு மாப்பிளை பார்க்கத் தொடங்கிவிட்டார்.

அதற்கிடையில் மலர்விழியே ஒரு மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டாள் என்றது தான் அவருடைய கோபம்.

சரத் உண்மையிலேயே நல்ல பையன் மலர்விழி வேலைபார்க்கும் ஆஸ்பத்திரிலேயே அவனும் எக்கவுண்டனாக வேலை பார்த்து வந்தான்.

இருந்தும் அவன் என்ன சாதியோ? என்ன சமயமோ? என்ன குலம் கோத்திரமோ? என்று காரணம் சொல்லிச் சொல்லியே ஒதுக்கி விட்டார். மலர்விழி போராடிப் பார்த்துவிட்டு ஓர் நாள், அவர் முன் மாலையும் கழுத்துமாக அவனோடு வந்து நின்று போது, அவர் வெகுண்டெழுந்தார்.

அவளுடைய அந்தச்செயலை அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை. அன்றைக்கு அவளை அடித்து உதைத்து வீட்டைவிட்டுத் துரத்திய மனுசன் அதன்பிறகு எக்காரணம் கொண்டும் அவளைப் பார்க்க விரும்பினாரில்லை.

அதை நினைத்து நினைத்தே அம்மா உருகிப் போனாள். திடீரென்று ஒரு நாள் அம்மாவுக்கு வருத்தம் கடுமை என்று கேள்விப்பட்டு, கைக்குழந்தையோடு வீடு தேடி வந்தவளை வீட்டு வாசல் படியைக் கூட மிதிக்க விடாமல் ஓட ஓட அவர் விரட்டிய போதுதான் மலர்விழியின் மனசு கல்லாய்ப் போனது.

உலகத்தில் நடக்காத தப்பையா அவள் செய்து விட்டாள்? இந்த லட்சணத்தில் மறுபடியும் அவர் முன் போய் நின்றால் என்ன நடக்குமோ? நினைக்கவே அவளுக்கு பயமாயிருந்தது.

அம்மா தான் பாவம் தனியாகக் கிடந்து அல்லாடுகிறாள். வாறது வரட்டும் எதுக்கும் ஒரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டியது தான். முடிவெடுத்து விட்டாள் அவள்.

அன்றைக்கு 'டியூட்டி' முடிந்து வீட்டுக்கு வந்ததும் எல்லா விடயத்தையும் சரத்திடம் சொல்லி விட்டு அவன் முகத்தைப் பார்த்தாள். பாவம் அவன் எந்த மறுப்பும் சொன்னானில்லை. 'நீ போயிட்டு வா மலர் அம்மாவும் நானும் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வோம் தானே. நீ கவனமாகப் போயிட்டு வாம்மா" என சந்தோசமாக அவளை வழியனுப்பி வைத்தான் அவன்.

அவள் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. அம்மா அனுப்பிய ஆட்டோக்காரன் வந்து அவளை ஏற்றிச் சென்றான். ஸ்டேஷனில் இருந்து வீட்டுக்குச் செல்ல சுமார் இருபத்தாறு கிலோ மீற்றரை கடக்க வேண்டும். இருபது வருசங்களுக்கு பிறகு வருகிறாள். அப்பாடா எவ்வளவு பெரிய மாற்றம்? இது நம்ம ஊர் தானா அவளால் நம்பவேமுடியவில்லை.

போகும் வழியெல்லாம் புதுப் புது மாடி வீடுகளும், கடைகளும், கோயில்களும் ஊரே மாறிப் போயிருந்தது. ஓட்டோக்காரனிடம் எல்லா விடயங்களையும் மலர்விழி விசாரித்துக்கொண்டே வந்தாள்.

"எல்லாம் சூறாவளிக்கும், சுனாமிக்கும் பிறகு முளைத்தவை தானம்மா. இடையில் யுத்தத்தால் தரைமட்டமாகி... இப்போ புதுசு புதுசா உருவாகின்றன." என்றான் அவன்.

"பரவாயில்லையே ஊரைப்பார்க்கவே நல்ல எழுப்பமாயிருக்குதண்ணை" ஆட்டோக்காரன் சிரித்தான்.

போகும் வழியில் கடைசியாக ஒரு வீடு. நீலமும் வெள்ளையுமாகக் கலர் அடித்த அழகான இரண்டு மாடிக்கட்டிடம் "இது யாரோட வீடண்ணை?" மலர்விழிதான் கேட்டாள்.

இதுவா? உங்க அப்பாவோட அக்காமுறையாம் சரசக்கா என்றுதான் இங்கே எல்லோரும் கூப்பிடுவினம். அவங்களோட மாளிகை தான் இது.

மலர்விழியால் நம்பவே முடியவில்லை. அத்தனை அழகாக இருந்தது அந்த வீடு. "ஓ! சரசு மாமியோட வீடா?" மலர்விழி தன் வாயில் விரல் வைத்து வியப்பை வெளிப்படுத்தினாள். பிறகு அவள் ஏனண்ணை "மாமியோட பிள்ளைகள் யாரும் வெளிநாட்டில் இருக்குறானுகளோ?"

ஆட்டோக்காரன் சிரித்தான். மலர்விழிக்கு அவளின் சிரிப்பின் அர்த்தம் புரியவில்லை அதனால் கேட்ட கேள்வியையே அவள் மறுபடியும் கேட்டாள்.

"எங்கம்மா வெளிநாட்டில, சரசக்காவுக்கு ரெண்டு பையன்கள் தானே மூத்தவன் என்னமோ 'டூரிஸ்டுக் கைட்டாம்' மற்றவன் படிக்கிறான் போல, அவையின்ர வீட்டுச் சங்கதியெல்லாம் நமக்கெதுக்கம்மா. சரி உங்கவீடு வந்தாச்சு இறங்குங்க மலர்" வீட்டு வாசலில் ஆட்டோவை நிறுத்தினான் அவன்.

உள்ளேயிருந்து அம்மா தான் ஓடிவந்தாள். பல வருஷங்களுக்குப் பிறகு மகளைக் காண்கிறாள். "எப்படிடா இருக்கே?" அவளைக் கட்டிக் கொண்டு அழுதவள் நேராகத் தகப்பனாரிடம் அழைத்துச் சென்றாள்.

மலர்விழிக்கு முதலில் கைகால் எல்லாம் உதறல் எடுக்கத் தொடங்கியது. எல்லாம் ஒரு நிமிடம் தான். கட்டிலில் எலும்பும் தோலுமாய் பேச்சு மூச்சின்றி படுத்திருந்த அப்பாவைப் பார்த்ததும் மலருக்கு ஓவென்று அழவேண்டும் போல் இருந்தது. கைகால்கள் கூட இயங்காத நிலை. எவ்வளவு அட்டகாசமாக இருந்த மனுஷன் இப்படி அடங்கிப் போய்க் கிடக்கிறாரே. அந்த வேதனையைத் தான் அவளால் தாங்க முடியவில்லை. அவர், கால்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விடத் தொடங்கினாள் அவள்.

உணர்ச்சியற்ற மரக்கட்டையால் என்னதான் பண்ண முடியும்? ஒரு சின்ன எதிர்ப்பைக் கூடக் காட்டமுடியாமல் படுத்துக் கிடந்தவரின் கண்களில் இருந்துமட்டும் கண்ணீர் லேசாகக் கசிந்து கொண்டிருந்தது.

இது எதனால்? தன் இயலாமையை நினைத்து அழுகிறாரா? அல்லது இந்தக் கழுதையை வரக் கூடா தென்று சொல்லியும் வந்து விட்டாளே என்ற வெறுப்புணர்வா? அவளுக்கு ஒன்றுமே புரிய வில்லை. இப்போது அவள் அம்மாவைப் பார்த்தாள்.

இப்படித்தானம்மா ஒரே அழுதபடி இருக்கிறார். நான் என்ன பண்ணமுடியும்? அம்மா சொல்வதும் சரிதான். அப்பாவின் 'மெடிக்கல்' றிப்போட்களைப் படித்துப்பார்த்த பின் எல்லாவற்றையும் புரிந்து கொண்டாள். இனி ஒன்றுமே செய்வதற்கில்லையாம். டாக்டர்களும் கைவிட்டு விட்டார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. இருந்தும் அவள் தன் மனத்திருப்திக்காக எண்ணெய் பூசுவது, மசாஜ் பண்ணுவது என்று ஏதேதோ செய்து கொண்டிருந்தாள்.

எப்படியோ ஊருக்கு வந்தும் இரண்டு வாரங்கள் ஓடி விட்டன. சரத்திடம் அப்பாவைப் பற்றிச் சொன்னதும் பரவாயில்லை மலர் எங்களைப் பற்றி நீ கவலைப்படாத, பிள்ளைகளை நாங்கள் கவனிப்பம். நீ அப்பாவைப் பார்த்துவிட்டு வா என்றான். அன்றும் அப்படித்தான் மலர் அப்பாவுக்குச் சேலைன் போட்டுக் கொண்டிருந்தாள். வெளியில் யாரோ அம்மாவுடன் கதைத்துக் கொண்டிருப்பது துல்லியமாகக் கேட்டது.

"என்னக்கா மலர்விழி வந்திட்டாள் என்று கேள்விப்பட்டன் மெய்தானா?"

"ஓம் சரசு அவள் வந்து ஒரு கிழமையாச்சு எத்தனை நாளைக்குதான் அவளும் இங்கு நிற்கேலும்" அம்மாதான் சரசு மாமிக்கு பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அதுசரி அவளால தானே அண்ணனுக்கு இந்தநிலை அவர் சொல்லைக் கேட்காமல் தன்ரை இஷ்டத்திற்குக் கலியாணம் செய்துகொண்டு, என்றைக்கு ஓடினாளோ அன்றைக்கே அண்ணன் உடைஞ்சுபோனான்.

எவ்வளவு கம்பீரமாக இருந்தவன், இண்டைக்கு இப்படி சுருண்டு போய்க்கிடக்கிறான். போலிக்குப் பெருமூச்சு விட்டாள் சரசுமாமி.

என்ன சொல்லி அவள் வாயை அடக்குவது என்று தெரியாமல் அம்மா மௌனமாக நின்றாள்.

சரி அக்கா, அண்ணைய ஒருக்கா பார்த்திட்டுப் போறன் என்றபடியே சரசுவதி உள்ளே நுழையவும் மலர்விழி மறுவழியால் வெளியே வரவும் சரியாக இருந்தது.

வெளியே வந்த மலர்விழி அம்மாவைப் பார்த்தாள். மகளின் மனவேதனை அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

நீ ஒன்றுக்கும் கவலைப்படாத மலரு கொட்டுறது தானே தேளுக்கு குணம் அதுமாதிரித்தான் சரசுவும் சொல்லுறதை சொல்லி விட்டும் போகட்டும்.

நீ பேசாமல் இரு மலர், என்று மகளைச் சமாதானப்படுத்தி விட்டு மலர் விழியின் அம்மா உள்ளே போய் விட்டாள்.

நாகராசாண்ணை ஓடிப்போன உன்ரமகள் உன்னைப் பார்க்கவாம் எண்டு வந்திருக்கிறாலெல்லே எழும்பி பாரண்ணை. ஓடுகாலி என்று அடிக்கடி புலம்புவியே இப்போ வீடுதேடி வந்திருக்கிறாள். எழும்பண்ண எழும்பு... ஏதோ பாசமழையில் பேசுவதைப்போல் பேசிய வார்த்தைகளைக் கேட்ட மலர்விழியின் அம்மாவுக்கு வேதனை தாங்க முடியவில்லை.

இதெல்லாம் தேவையா? ஏன்தான் இப்படி மற்றவங்களின் மனசை வேதனைப்படுத்துகிறாளோ? என்று மனசுக்குள் நினைத்தபடியே. இரு சரசு நான் டீ ஊத்திக்கொண்டு வாறன் என்றாள்.

இல்லையில்லை நான் அவசரமாகப் போக வேணும். நீ டீ ஒன்றும் ஊத்தாத அதுசரி மலர்விழி எங்கபோட்டாள்? காணவேயில்லை வம்புக்கிழுப்பது போல் கேட்டாள் குளிக்கிறாள் சரசு. "சரி சரி ஊருக்குப் போகமுதல் வீட்டவரச் சொல்லு. என்ன அவளைக் கண்டும் பலவருஷ மாச்சுதல்லே. சரி நான் வாறன்" ஒரே மூச்சில் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள்.

இரண்டு நாட்கள் கழித்து மலர்விழி ஊருக்குப் போக ஆயத்தமானாள்.

"சரி போயிற்று வா மலரு இரவில் உங்க சித்தப்பா மகன் சந்திரன் உதவிக்கு வருவான். பகல்ல வேளைக்காரப் பையன் இருக்கிறான் தானே? நான் சமாளிப்பேன். நீ கவலைப்படாமல் போயிட்டு வா மகள். அடுத்த தடவை வரும் போது குடும்பத்தோடு வா மலர்"

அம்மாவின் அன்பான வார்த்தைகளால், மலருக்கு மனசு குளிர்ந்து போனது. அந்த சந்தோஷத்தில் இருக்கும் போதே, மலரு போக முதல்ல "சரசு மாமியையும் ஒருக்கால் போய்ப் பார்த்திட்டுப் போம்மா" என்றாள் அம்மா. அவ்வளவு தான், மலருக்கு எல்லா சந்தோசமும் எங்கோ அடிபட்டுப் போனாற் போலிருக்கவே "ஏம்மா அவ இன்னும் என்னை அவமானப்படுத்த வேணுமென்று விரும்புகிறாயா?" அம்மாவைக் கேட்டாள் மலர்.

"இல்ல மலரு நீ வந்தும் வராமல் போயிட்டியே என்று ஆயுள் முழுவதற்கும் சொல்லிக்காட்டுவாள் மகள் அதுதான் சொல்லுறன். அவள் இப்போ பணத்திமிருல ஆடுறாள். என்ன பேசிறதென்றே தெரியிறதில்ல. மற்றவங்களை மனம் நோக வைப்பதும் கிண்டலடிப்பதுமே தான் அவளுக்கு கைவந்த கலையாயிற்றே. நீ ஒன்றும் பேசாமல் சும்மா ஒருதடவை போய் எட்டிப் பார்த்துட்டு வா அதுபோதும்."

அம்மாவுக்காக அன்று மாலையில் சரசு வீட்டு வாசலில் போய் நின்றாள் மலர்விழி. வீட்டு கேட்டோடயே கோலிங் பெல்லை பூட்டியிருக்கிறார்கள். மனசுக்குள் நினைத்தப்படியே சுவிட்சை அழுத்தியதும் இரண்டாம் மாடியில் நின்றபடியே வெளியே எட்டிப் பார்த்தாள் சரசுமாமி.

"ஓ மலரா! வாம்மா வா" கீழே வந்து கதவைத் திறந்து வரவேற்றாள். விஸ்தாரமான முற்றம். உள்ளே பெரிய பூந்தோட்டம். வீடு பளிச்சென்றிருந்தது. அழகாக கோடிக்கணக்காயிருக்கும். வீட்டைப் பார்க்கவே மலருக்கு வியப்பாக இருந்தது.

மாமி உள்ளே அழைத்துச் சென்றாள். எப்படி மலரு வீடு நல்லா இருக்குதா? முகத்தில் பூரிப்புப் பொங்க மலரைப் பார்த்தாள் மாமி, "சூப்பராய் இருக்குது மாமி" சரசுவுக்கு பதில் சொன்னாள் மலர்விழி.

"ஓம் பிள்ளை எல்லாம் என்ர மூத்தவன்ர கைலாசுவின்ர உழைப்புத்தான் மலரு. சரியான கஷ்டப்பட்டுக் குடும்பத்தை நிமிர்த்திப்போட்டான்." பார்த்தியே பெருமையாகச் சொன்னாள் சரசு மாமி.

"பிள்ளையள் உழைத்தால் சந்தோஷம் தானே மாமி."

"ஓம் மலரு நீ உள்ளே போய் வீட்டைச் சுற்றிப் பார். நான் டீ ஊத்திக் கொண்டு வாறன் என்ன?"

மலர் சரி என்பது போல் தலையை ஆட்டினாள். தனியே இருக்க அவளுக்குப் பிடிக்கவேயில்லை. எனவே மாமி உள்ளே சென்றதும், மலர் கீழே இருந்தபடியே ஹோலைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினாள்.

நீலப் பெயின்ட் அடித்த சுவரில் நாலைந்து படங்கள் மின் விளக்கொளியில் அழகாகக் காட்சியளித்தன. கடைசியாக ஒரு படம், வெள்ளைக்காரன் ஒருத்தனோடு வாட்டசாட்டமான ஒரு இளைஞன் மிக நெருக்கமாக நின்றுகொண்டிருந்தான். படத்தைக் கூர்ந்து பார்த்த மலர்விழியின் மூளையில் மின்னலடித்தது. இந்தப்பையன்... சந்தேகமேயில்லை இவனேதான் அன்றைக்கு ஆஸ்பத்திரியில் சூட்டுக்காயத்தோடு ஒருவனை அழைத்து வந்தப் பையன் இவனேதான் இப்போது மலர்விழிக்குப் புரிந்து விட்டது.

சரசு மாமி டீக் கோப்பையோடு வெளியே வந்தாள். "என்ன மலரு படத்திலிருக்கிறது யாரெண்டு யோசிக்கிறாயா? இவன் தான் என்ர மூத்த மகன் கைலாசு... நீ இவனை எங்கே பார்த்திருக்கப் போகிறாய்?"

"ஓ! இவன் தானா மாமி அது? சரி இவன் எங்கே வேலை பார்க்கிறானென்று சொன்னனீங்கள்?" அவன் நல்ல பெரிய வேலையில இருக்கிறான் மலர். வெளிநாட்டுகாரரோடு தான் வேலை" மாமியின் முகத்தில் பெருமை தெரிந்தது.

"கவனம் மாமி காலம் கெட்டுக் கிடக்கிறது. உங்கட நல்லதுக்குத்தான் சொல்லுறன்." மலரின் வார்த்தைகளைக் கேட்டதும் சரசுவுக்கு ஒரு மாதிரியாய்ப் போய்விட்டது. "என்ன சொல்லுறாய் நீ? என்ர பிள்ளையென்ன பொய், களவா செய்கிறான்?" கோபத்தோடு கேட்டாள்.

"இல்ல மாமி நான் அப்படி சொல்லயில்ல. நம்மோட பிள்ளைகள் எங்க போகிறார்கள் யாரோட பழகுகிறார்கள்? எப்படி உழைக்கிறார்கள் என்றெல்லாம் பெத்தவங்க நாம தான் கவனிக்க வேணும். அதைத்தான் மாமி சொல்லுறன் வேறோன்றுமில்ல."

மலர் சொன்ன பதிலில் ஏதோ உட்குத்து இருப்பதாக உணர்ந்தாள் சரசு. எனவே மறுபடியும் "இல்ல மலரு உன்ரபேச்சு எனக்கு சரியாகப் படயில்ல ஏன் இப்படி சொல்லுகிறாய் சொல்லுபார்ப்பம். இந்தக் காலத்துல எவன் எப்படி உழைக்கிறான் என்று கேட்டறிய வேணும் மாமி. கண்டவங்களையும் நம்பி வாழ்க்கையைச் சீரழித்து விடக்கூடாதல்லவா. மாமி கைலாசு நல்லாயிருக்கவேணுமென்ற நோக்கத்தில் தான் சொல்லுறன். சொன்னது தப்பென்றால் மன்னியுங்கோ மாமி." பட்டும் படாமலும் சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டாள் மலர்விழி.

ஒன்றுமே விளங்காமல் சரசு கொஞ்சநேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். அதுவரை நேரமாக உள்ளே படுத்துக்கிடந்தபடியே எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த சரசுவின் புருஷன் வெளியே வந்து "ஏன்டி பைத்தியக்காரி அந்த ஓடுகாலி பொறாமையில் ஏதேதோ சொல்லிவிட்டு போறாளெண்டா அதைக்கேட்டு நீ மண்டை குழம்பியிருப்பியா.. போடி போய் தேத்தண்ணியைக் கொண்டுவா"

அதட்டியபடியே டீவியை போட்டவர் ஐயோ கடவுளே என்று கத்தியபடியே சரிந்து விழுந்தார்.


"என்னது.. என்னாச்சு.. ஏனப்பா இப்படிக் கத்திறியள்?" கணவன் கனகராசுவைக் கேட்டபடியே டீவியைப் பார்த்த சரசு, "உதென்னப்பா முருகா என்ற பிள்ளையைக் காப்பாத்தப்பா கதிர்காமக் கந்தா என் தலையை மொட்டையடிப்பன் தெய்வமே என்ர மகனைக் காப்பாற்றப்பா" கையெடுத்துக் கும்பிட்டபடியே அழுது புரண்டாள்.

அது வேறொன்றுமில்லை. பிரபல போதைவஸ்துக் கும்பலொன்றை பொலீஸார் கையும் களவுமாகப் பிடித்தனர். செய்திக் குறிப்போடு கைலாசுவினதும் அவன் கூட்டாளிமாரினதும் படங்களும் ரீவியில் பெரிதாக ஓடிக் கொண்டிருந்தது.

இதுவரை நாளும் தம்பி உழைக்கிறான் என்று திமிரோடு திரிந்த சரசு, வேரறுந்த மரம் போல விழுந்து அழுது புலம்பிக்கொண்டிருந்தாள். குற்றச்செயல்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்களுடைய உடமைகள் அனைத்தும் அரசுடமையாக்கப்படுவதோடு குற்றவாளிகள் மரண தண்டனைக்கும் ஆளாக்கப்படுவார்கள் என்ற செய்தி தொடர்ந்து கொண்டிருந்தது. அவனுடைய படத்தைப் பார்த்து கதறி அழுது கொண்டிருந்தாள் சரசு மாமி.

அனுராதா பாக்கியராஜா...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 123



திரு/திருமதி.செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ........................................
........................................
........................................
.............................. ..............................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 123
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 123

### மேலிருந்து கீழ்

1. மானமுள்ளவர்களுக்கு உதாரணமாகக் காட்டப்படும் ஒரு விலங்கு.
5. திறப்பு
7. பொதுநல செலவுக்காக அரசாங்கம் வசூலிக்கும் கட்டணம்
8. சிலப்பதிகாரக் கதையில் வரும் ஒரு முக்கிய கதாபாத்திரம் (குழம்பியுள்ளது)
10. வாக்குவாதம் அல்லது முரண்பாடான கருத்து (குழம்பியுள்ளது)
12. காடு
14. கற்பித்த ஆசிரியரை உயர்வாகக் குறிப்பிடுவது
15. சௌகரியம்
17. தோகை விரித்து ஆடுவதால் குழப்பம்
19. கானம் பாடும் பறவை என இதனைச் சொல்வார்கள்
21. மருத்துவக் குணமுள்ளது (திரும்பியுள்ளது)
22. சிரசு (திரும்பியுள்ளது)
23. உணவு உண்பதற்குப் பயன்படும். இது உடைந்து விட்டது.
25. தூய்மை (குழம்பியுள்ளது)
26. ஒரு துறையில் இதுவரை செய்ய முடிந்ததற்கு மேலாகச் செய்து காட்டுவது (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. உடற்பாதுகாப்புக்காக அணிந்து கொள்ளும் அங்கி
2. ஒருவருக்குப் பின் ஒருவராக நிற்கும் ஒழுங்கு முறை
3. பெண்கள்
4. சாதுவான காட்டு விலங்கு (தலைகீழ்)
6. வகை அல்லது ரகம்
9. பயிர்ச் செய்கையாளர்
11. பயம் (குழம்பியுள்ளது)
13. அரசன் குழம்பிவிட்டான்
15. முகம் (குழம்பியுள்ளது)
16. இயல்பான தன்மைக்கு ஏற்படும் கேடு அல்லது சேதம் (குழம்பியுள்ளது)
18. வேட்பாளர் தெரிவுக்குரிய இது குழப்பமாகத்தானிருக்கிறது. (குழம்பியுள்ளது)
19. காற்று. மழை போன்றவற்றால் ஏற்படும் சீதோஷ்ண நிலை
20. லட்சத்தின் நூறு மடங்கு(தலைகீழ்)
24. இந்தியாவில் சதத்தை இப்படிச் சொல்வர்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 122

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. செல்வாக்கு
5. பிதா
7. மட்டை
8. கடி
9. வடக்கு
11. வாசம்
12. குலம்
13. கதலி
14. வஸ்திரம்
16. புல்
17. பரி
18. கதிரவன்
20. பாம்பு

**மேலிருந்து கீழ்**

1. செருக்கு
2. வாட்டம்
3. மக்கு
4. குடை
5. பிடிவாதம்
6. தாகம்
10. வலம்புரி
11. சகதி
13. வலி
14. சீரகம்
15. ஸ்திரம்
16. பதில்
19. பாதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 122

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **மனோரஞ்சன் தரணிகாந்த்,** இல, 69 வட்ட விதானை வீதி, கல்முனை | **கே.எப். மில்ஹானி,** 14, புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர் | **என்.கே. வேணி** 25/10 சேர்ச் வீதி, பலாங்கொடை |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ். கனகரட்ணம்** திருகோணமலை
2. **ஆர். இஷால் ஹன்னா** கிண்ணியா
3. **என். லியாஸ்ரீ** மட்டக்களப்பு
4. **பி. குணசேகரன்** களுதாவளை
5. **எம்.டபிள்யூ.எப். ஷனாஸ்,** துல்ஹிரிய
6. **எம்.ஏ. அத்தாஸ்** மாத்தறை
7. **எம்.ஏ.எப். நிஸாமியா** கொச்சிக்கடை
8. **என். சிவசீலன்** நீர்வேலி
9. **எம்.எம். சஸாத்** மருதமுனை
10. **வீ. பாலேந்திரா** வெள்ளவத்தை

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)
பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**வாடகை அடிப்படையில் வான் சேவைபெறல்**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் 08 - 14 இருக்கை வசதிகொண்ட வான் சேவை 28.06.2024 ஆம் திகதியிலிருந்து மூன்று தினங்களுக்கு பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதால் 12.06.2024 வரை சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

மேலதிக தகவல்களுக்கு www.slida.lk என்ற எமது வலைத்தளத்தை பார்வையிடவும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,
28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
தொலைபேசி இல : 011-5980200 தொலைநகல் : 011-2584406
மின்னஞ்சல் : mail@slida.gov.lk

**கேள்வி அறிவித்தல்**

**சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு – 12**

**சுத்திகரிப்பு சேவை வழங்கல் – வருடம் 2024 – 2025**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பழைய மற்றும் புதிய கட்டிடங்களில் சுத்திகரிப்பு சேவைகளினை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. உரிய விண்ணப்பப் படிவத்தினை திணைக்களத்தின் காசாளரிடம் ரூபா. 1000/- இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாகவும் ரூபா.10,000/- இனை மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாகவும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் தாபனப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

02. குறித்த கட்டிடங்களை வாராந்த நாட்களில் 2024.06.05 மற்றும் 2024.06.06 ஆம் திகதிகளில் பி.ப. 02.00 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் பார்வையிட முடியும்.

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2024.06.24 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் அல்லது நேரடியாகவும் கையளிக்கலாம்.

04. கேள்விமனுக்கள் 2024.06.24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் உரிய வழங்குநர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அதில் பங்கு பெறுவதற்கு அனுமதியளிக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைகள் குழு,**
**சட்டமா அதிபருக்காக.**

**சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 16ம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

**கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்**

ஸ்ரீலங்கா சேர்விங்ஸ் பேங்ஸ் லிமிட்டட்
இல. 265, வோர்ட் பிளேஸ்,
கொழும்பு -07

**முறைப்பாட்டாளர்**

**வழக்கு இலக்கம் DMR/02338/2022**
**தன்மை:** நிதி
**செயற்பாடு:** பொது
**பெறுமதி:** ரூ. 5,441,871.75/-

**எதிராக**

1980 இல. 31 தொண்டர் சமூக சேவை அமைப்புகள் பதிவு செய்யும் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மானியங்களின் பிரகாரம் இல. 2004/15/46 - 2004/06/12 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் அநுராதபுரம், புபுதுபுர வர்த்தக கட்டிடத் தொகுதியில் கடை இல. 05 என்ற முகவரியில் தமது பதிவு அலுவலகத்தை நடத்திச் சென்று 'புபுது சேவை சங்கம்' என்ற பெயரில் மற்றும் விலாசத்தில் சமூக சேவை விடயங்களில் ஈடுபட்டுள்ள தொண்டர் சங்கத்தின் அங்கத்தவர்களான

1. திக்காபிட்டிய தென்னக்கோன் முதியன்சேலாகே அமரவங்ஷ திக்காபிட்டிய
இல. 217, புபுதுபுர, அநுராதபுரம்
2. திஸாநாயக்க முதியன்சேலாகே குணரத்ன
3ம் கட்டம், அநுராதபுரம்
3. நெகத் ரலலாகே குமுது ரேணுகா குணதிலக்க
இல. 3308, 3ஆம் கட்டம், அநுராதபுரம்
4. ஷிரோமா ஹேமாலி அல்லது மொஹொப்பு ஆரச்சிலாகே தொன் ஷிரோமா ஹேமாலி
இல. 3232, 3ஆம் கட்டம், அநுராதபுரம்
5. ரணசிங்க ஆரச்சிகே இந்ரா ஜயலத்
இல. 217, புபுதுபுர, அநுராதபுரம்
6. குமார பதிரனகே திலானி
இல. 25/3, குழுமப் பண்ணை, புபுதுபுர, அநுராதபுரம்
7. வெலிக்கட ஆரச்சிகே சந்ராவதீ
3ம் கட்டம், அநுராதபுரம்
8. குமாரகே ஜோன் சஞ்சீவ பெர்னான்டோ
இல. 180, புபுதுபுர, அநுராதபுரம்

**பிரதிவாதிகள்**

1980 இல 31 தொண்டர் சமூக சேவை அமைப்புக்கள் பதிவு செய்யும் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மானியங்களின் பிரகாரம் இல. 2004/15/46-2004/06/12 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட மற்றும் அநுராதபுரம், புபுதுபுர வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடை இல. 05 என்ற முகவரியில் தமது பதிவு அலுவலகத்தை நடத்திச் சென்று 'புபுது சேவை சங்கம்' என்ற பெயரில் மற்றும் விலாசத்தில் சமூக சேவை விடயங்களில் ஈடுபட்டுள்ள தொண்டர் சங்கத்தின் அங்கத்தவர்களின் அறிவூட்டலுக்காக

2022.09.05ம் திகதி அல்லது அதற்கு கிட்டிய தினத்தில் பெயர் குறிப்பிடப்படும் முறைப்பாட்டாளர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி பெயர் கொண்ட 1 முதல் 8 வரையான பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி இலக்கம் கொண்ட வழக்கை தாக்கல் செய்து வேண்டுதலின் ஏனைய விடயங்களில் கீழேயுள்ள சலுகைகளை வேண்டியுள்ளதால்

(அ) மேற்படி ரூ. 4,787,861.08/- நிலுவை கடன் தொகையை பிரதிவாதிகளுடன் மற்றும்/அல்லது வேறு வேறாக அறவிட்டுக் கொள்வதற்காக அவர்களுக்கு எதிராக முறைப்பாட்டாளருக்கு சாதகமான வழங்குத் தீர்ப்பொன்றை வழங்குமாறும்

(ஆ) மேற்படி ரூ. 4,787,861.08/- நிலுவை கடன் தொகை அடிப்படையில் 15% உடன்பாட்டுடனான வருடாந்த வட்டியாக 2020.01.31 வரை கணக்கில் எடுக்கப்பட்ட ரூ. 654,010.67/- தொகையையும் அந்த நிலுவை கடன் தொகையின் அடிப்படையில் 2020.02.01 முதல் வழக்குத் தீர்ப்புத் தினம் வரை மேலும் அவ் வட்டி விகிதாசாரத்தின் படி வட்டியையும் வழக்குத் தீர்ப்புத் தொகையின் அடிப்படையில் அத் தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்கப்படும் தினம் வரை சட்ட ரீதியான வட்டியையும் பிரதிவாதிகளிடம் ஒன்றாக மற்றும்/அல்லது வேறு வேறாக அறிவிட்டுக் கொள்வதற்காக அவர்களுக்கு எதிராக வழக்குத் தீர்ப்பு ஒன்றையும்

(இ) பிரதிவாதியின் அங்கத்துவம் வகிக்கும் புபுது சேவை சங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களுக்கு சிவில் வழக்கு விதிமுறைக் கோவை சட்டத்தின் 16ம் பிரிவின் பிரகாரம் பத்திரிகை அறிவித்தல் மூலம நோட்டீஸ் வழங்குவதற்கு அனுமதி வழங்குமாறும்

(ஈ) வழக்கு கட்டணங்களும்

(உ) கௌரவ நீதிமன்றம் கருதுகின்ற வேறு மற்றும் மேலதிக சலுகைகளும் ஆகும்.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு.**

**2024.04.01ம் திகதியன்று தயாரித்தது**
**முறைப்பாட்டாளரின் சட்டத்தரணி**
**சட்டத்தரணி என்.எஸ். வெல்கம.**

# காரையன் கதனின் "புழுதி"

# கிராமிய மணங்கமழும் சொல்லோவியங்களால் நிரம்பிய கவிதைப் பிரதி

*பாவேந்தல் பாலமுனை பாறூக்*

"எனது கவிதைகள் 'புழுதி' போன்றன. எத்தனை முறை தட்டி உதறி விட்டாலும், உங்கள் மனங்களிலும், நினைவுகளிலும் மீண்டும் மீண்டும் ஒட்டிக் கொள்ளும்" என்ற முன்னுரையோடு, அம்மாக்களுக்கு சமர்ப்பணம் செய்து காரையன் கதன் தந்திருக்கின்ற நூல் 'புழுதி'.

நேர்த்தியான அச்சமைப்பில் 'தாயதி' வெளியீடாக, 112 பக்கங்களில் 111 கவிதைகளை உள்ளடக்கி மலர்ந்திருக்கின்றது.

காரையன் கதன் வித்தியாசமான படைப்பாளி என்பதை அவரின் கவிதைத் தலைப்புகளை வாசித்தவுடனேயே புரிந்து கொள்ள முடியும். எடுத்துக் காட்டல்களாக தலைப்புகளில் சில இவை: குறட்டை,கட்டாக்காலி,பொக்காண்டி, முலை தொலைத்தவள், அரியண்டம், ஆட கட மோட கட, மிலாறு, நனைந்த கடல், சலசல, எவடம் எவடம், உப்புத்தண்ணி, பொருக்கு, தண்ணீர்ச் சோற்றுப் பழம், அத்தாங்கு, ஆலா பற பற, துண்டுபீடி.

"இன்னவைதான் கவி எழுத
ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்
மின்னல், முகில் தென்றலினை மறவுங்கள், மீந்திருக்கும் இன்னல், உழைப்பு ஏழ்மை, உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்" என்று ஈழத்தின் நவீன கவிதை முன்னோடி மஹாகவி எடுத்துரைப்பார்.

காரையன் கதன், அவர் வழியில் செல்பவராக, சாதாரண மனிதர்களின் வாழ்வியலை இலகு நடையில், அவர்களின் மொழியில் எழுதித் தருபவராக அடையாளம் பெறுகிறார்.



கிராமிய மணங் கமழும் சொற்களில் அம்மக்களின் நோவினைகளை, நொம்பலங்களை, சந்தோசங்களை அனுபவக் குறிப்புகளாகப் பதிவிடுகிறார். நிகழ்ச்சிகள், சம்பவங்கள் என்பவற்றை சொல்லோவியங்களாகத் தீட்டித் தருகிறார் அவர்.

'ஆட கட மோட' சிறு வயதில் நாம் விளையாடிய விளையாட்டை நினைவுக்குக் கொண்டு வருகின்ற கவிதை.

பால், பழம், முட்டை என்பவற்றை உள்ளங்கைக்குள் கொடுத்து, ஆடை கடைந்து, "ஆட கடைகிறேன் ஆட கடைகிறேன், நண்டூருது, நரியூருது அக்கிளு கிளு கிளு " என்று சிரிப்பூட்டிச் சிரித்து மகிழ்ந்த காலத்தை நினைவுக்குக் கொண்டுவருகின்ற கவிதை அது

ஆனால், கவிஞரின் கவிதை இப்படி அமைகிறது.

'மனதுக்குப் பிடித்தமான கைகளை
உற்பத்தி செய்து கொள்ளுங்கள்.'

உள்ளத்தில் எந்தவித அழுக்கும் இல்லாமல் நட்போடு பழகிய அந்தக் கரங்கள் இப்பொழுது இல்லை. விளையாட்டுக்குத் தேவையான மனதுக்குப் பிடித்த கைகளை முதலில் உருவாக்கிக் கொள்ள வேண்டி இருக்கிறது என்பதை அந்தக் கவி வரிமூலம் சொல்ல விழைகிறார் கவிஞர்.

"விரல்களைப் பிடித்து ஒவ்வொரு பெயர்வைத்து உறவுகளுக்கும் ஊட்டி விடுங்கள்.
உள்ளங்கை தாங்கி ஆட கட மோட கட
முழங்கையால் கடைந்து பாருங்கள்.
நண்டூருது, நரியூருது பாடி
அக்குளுக்குளு மூட்டுங்கள்.
சிரியுங்கள் சிரியுங்கள் நானும் சேர்ந்து கொள்கிறேன் என்று ஒரு நட்பு வெளியை அவாவுறுகிறார் கவிஞர்.

குறட்டை என்று ஒரு கவிதை.

" பகலை உண்ட களைப்பில்
உறங்கிக் கிடக்கிறது இரவு.
தூக்கம் தொலைத்த
மரங்கள் சில
அவ்வப்போது
குறட்டை விடுவதைப் போல
அசைந்து கொள்வதை காண்கின்றேன்".

பகல் வருவதும், மறைவதும் இரவு வருவதும், மரங்கள் அசைவதும் இயற்கையாக நடை பெறுவதுதான். ஆனால், கவிஞர் இரவு, பகலை உண்ட களைப்பில் உறங்கிக் கிடப்பதாகவும், மரங்கள் குறட்டை விடுவதாகவும் குறிப்பிடுகின்றார். இயல்பாக நடைபெறும் நிகழ்வொன்றின்மீது தனது சிந்தனையை, கருத்தை உட்புகுத்திச் சொல்லும் கவிதைகளைத் தருகிறார் அவர். நூலில் இடம்பெற்றுள்ள இவ்வாறான பெரும்பாலான அவரின் கவிதைகள் மூலமாக தற்குறிப்பேற்ற அணிக் கவிதைகள் தருபவராக, எதார்த்த வாதப் போக்குடைய கவிதைக் காரராக, கதனை அடையாளம் காண முடிகிறது.

ஏபரல்1 என்று ஒரு கவிதை.

நான்முட்டாள்
முட்டாள் தின வாழ்த்தை
எனக்குச் சொல்லிவிடுங்கள்
பிள்ளைகளை விட
கண் விழித்தவுடன்
கைத் தொலை பேசியைத் தேடும்
நான் முட்டாள்.
ஆடம்பரக் கனவுகளை விரித்து,
ஓய்வின்றிப் போன்பார்க்கும்
நான் முட்டாள்
கறிபுளியின் கைப்பக்குவம் மறந்து
போனைப் பார்த்து உணவுண்ணும்
நான் முட்டாள் !"

என்று தொடர்கிறது கவிதை.

போனுக்குள் தொலைந்து போன நமது வாழ்வின் பல்வேறு சுகானுபவங்களை எடுத்துச் சொல்லும் கவிதை அது.

றஷ்மி முகப்போவியம் வரைந்திருக்கும் "புழுதி'க்கு தாயதி செயற்பாட்டாளரும், சமூக செயலூக்கத்திற்கான முன்னோடியுமான தில்லை அணிந்துரை வழங்கியுள்ளார்.

சாதாரணமான சனங்களின் கதையை மிக எளிமையான சொற்களில் தருபவராக கதனைச் சொல்லும் அவர், கவித்துவம் என்று சொல்லி அறிமுகமற்ற சொற்களைத் தராதவர் என்றும் பாராட்டுகின்றார்.

" மகன் கதன் சமூகச் செயலூக்கத்திலும், தொடர்ச்சியான புத்தக ஆவணப்படுத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது போன்று தேர்ந்த வாசிப்புப் பழக்கத்திலும் ஈடுபடவேண்டும் என்பது எனது பேரவா." என்று குறிப்பிட்டு மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றார் தில்லை அவர்கள். அவரோடு இணைந்து நின்று, தேர்ந்த வாசிப்போடு இலக்கிய உலகில் அவர் இன்னும் வளர வாழ்த்துரைக்கின்றோம்.

நூல் : புழுதி
வெளியீடு: தாயதி,
விலை: ரூபா 560/(இலங்கை)
இந்திய ரூபா 140/ (இந்தியா)
தொடர்பு: காரையன் கதன்,
69 C/வடிவேல் குறுக்கு வீதி,
காரைதீவு,12.
இலங்கை.

தேசிய ஆராய்ச்சி பேரவை

**அரச தனியார் பங்குடமை திட்டம் (PPP Program)**

**தனியார் துறையிலிருந்து ஆர்வ வேண்டுகோளை அழைத்தல் (EOI)**

தேசிய ஆராய்ச்சி பேரவையினால் அறிமுகப்படுத்திய திட்டமானது தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்கான ஆராய்ச்சியை நடத்துவதற்காக அரச துறைக்கும் தனியார் துறைக்குமிடையில் பங்குடமையொன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கின்றது.

இந்த செயற்பாட்டில், தற்போதுள்ள தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சட்டகமைப்பில் பின்வரும் கருப்பொருள் ஆராய்ச்சிப் பரப்புக்கள் முன்னுரிமை பரப்புக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

- இலங்கையின் இயற்கை வளம் மற்றும் கனிப்பொருட்கள் ஆகியவற்றிற்கான பெறுமதியை சேர்த்தல்.
- புதுப்பிக்கத்தக்க சக்திவலு, சக்திவலு சேமிப்பு மற்றும் பசுமையான ஹயிட்ரஜன்.
- இலங்கை உயிர் வளங்களிலிருந்து ஊட்டச்சத்துக்கள் மற்றும் முதன்மையான மருத்துவ கலவைகள்.
- விவசாய, காலநிலை மற்றும் உணவு பாதுகாப்பு.
- மருத்துவ ஆராய்ச்சி மற்றும் ஏனையவைகள் (இலங்கையின் பொருளாதாரத்திற்கு நேரடியான நன்மைகளை வழங்குபவை)

செயற்பாடு, பங்குடமை வகை, நிதியிடல் மற்றும் ஆர்வ வெளிப்பாட்டு மையக்கருத்து குறிப்பு உருமாதிரி ஆகியன அடங்கலான PPP திட்டத்தை **https://www.nrc.gov.lk/index.php/private-public -partnership-programe/** என்பதிலிருந்து பார்வையிடலாம்.

ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பித்தல்:

**Please download the EOI concept note format from the NRC website: www.nrc.gov.lk**

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களில் தெரிவிக்க வேண்டிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தேவைகள் (வழங்கப்பட்டுள்ள எந்தவொரு கருப்பொருள் ஆராய்ச்சி பரப்புக்கள்), அவர்களின் வர்த்தக சாத்தியங்கள் மற்றும் வர்த்தகமயமாக்கலில் உங்களின் ஈடுபாடு ஆகியவற்றை தெளிவாக குறித்துரைத்தல் வேண்டும். அதற்கு மேலாக, தேஆபே ஆனது ஆகக்கூடிய தொகையாக 2 மில்லியன் இலங்கை ரூபா வரையுமான ஆராய்ச்சி செயற்றிட்ட வரவுசெலவுத் தொகையின் 50% ஐ பங்களிப்புச் செய்யும். எனவே, ஆகக்கூடிய தொகையான 2 மில்லியன் இலங்கை ரூபா வரையிலான மொத்த ஆராய்ச்சி வரவுசெலவுத் திட்டத்தின் 50% ஐ பங்களிப்புச் செய்வதற்கான உங்கள் ஆர்வத்தை தயவு செய்து குறிப்பிடவும்.

2024 ஜூன் 17 ஆம் திகதியன்று வரையும் சமர்ப்பிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் (கையொப்பமிட்ட வன் பிரதியொன்றின் வடிவத்தில்) ஆர்வ வெளிப்பாட்டின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் தேஆபே மேற்கொள்ளும்.

எந்தவொரு மேலதிக தகவலுக்காகவும், கொழும்பு-07, வித்யா மாவத்தை, 120/07 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய ஆராய்ச்சி பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலருடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 011-2675176 தொலைநகல்: 011-2675136 இணையம்: **www.nrc.gov.lk**

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி பேரவை,**
**கல்வி அமைச்சு**

# திட்டமிடல் அமைச்சில் ஒரு சித்தன்; கலாநிதி இ.மகாலிங்கசிவம்



கனடாவில் தான் கலாநிதிப் பட்டத்திற்காகப் பயிலும் போதுதான், 'இலங்கையில் நாங்கள் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட அறிவு உலகின் எந்தப் பல்கலைக் கழகத்திற்கும் குறைந்தது அல்ல என்று உணர்ந்தேன்' என்று மகாலிங்கசிவம் ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் கூறியிருக்கிறார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சி.ஜே. எலியேசர், பேராசிரியர் நடராசர் ஆகிய இரு பெரும் கணித மேதைகளிடம் கணிதவியல் பயின்ற பெரும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது.இலங்கையின் பொருளாதாரத் திட்டமிடலில் கால் நூற்றாண்டு காலம் அரும் பெரும் சேவையாற்றிய கலாநிதி இ.மகாலிங்கசிவம், என் அறிவுக்கெட்டிய வரையில்இலங்கையின் முதல் கணிதப்பொருளியல் அறிஞர் ஆவார்.

1951இல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, கணிதவியலில் 1955இல் சிறப்புப் பட்டம் பெற்றவர் 1965இல் பொதுநலவாய நாடுகளுக்கான புலமைப் பரிசில் பெற்று, கனடாவில் றொறன்ரோ பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்தைச் சிறப்புறச் செய்ததன் அடிப்படையில் கலாநிதிப்பட்ட ஆய்வினைத் தொடர அனுமதிக்கப்பட்டார். 'கனடாவின் சுத்திகரிக்கப்பட்ட செம்புக் கனிமத்திற்கான சந்தை : ஒரு கணிதப் பொருளியல் ஆய்வு' (Market for Canadian Refined Copper: An Econometric Study) என்ற ஆய்வேட்டிற்காக மகாலிங்கசிவம் 1969 இல் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார்.

இலங்கையின் புகழ்மிகு பொருளியல் அறிஞர் காமனி கொரியா, லால் ஜெயவர்த்தன ஆகியோருடன் பொருளாதாரத் திட்டமிடலில் இணைந்து பணியாற்றியவர் மகாலிங்கசிவம். 'Development Planning lessons of Experience என்று Albert Waterston என்ற அறிஞர் எழுதிய நூலை நாங்கள் அடிக்கோடிட்டு வாசித்தோம்' என்று மகாலிங்கசிவம் கூறியிருக்கிறார்.

பொருளாதாரத் திட்டமிடலில் அவரின் அனுபவம் விசாலமானது. பொருளாதார, புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு, உள்ளீடு வெளியீடு சார்ந்த அட்டவணை தயாரிப்பு (inputoutput tables), திட்டமதிப்பிடல், துறைசார் திட்டங்களைத் தயாரித்தல், அரசாங்க முதலீடுகள் சார்ந்த திட்டங்கள், மாவட்ட மட்டத்தில் விவசாயத் திட்டங்களை நிறைவேற்றுதல், திட்டங்கள் நிறைவேற்றப்படாமைக்குரிய தடைகளைக் கண்டாய்தல், வருடாந்தத் திட்டங்களை ஆக்குதல் போன்று திட்டமிடலின் அனைத்து அம்சங்களிலும் அவர் பூரண அறிவு பெற்றிருந்தார். மாகாண சபைகள் உருவாகி, அவற்றின் முக்கிய அங்கமாக நிதிக்குழு அமைக்கப்பட்டபோது, அதன் முக்கிய நிர்வகியாக மகாலிங்கசிவம் நியமிக்கப்பட்டார். அதிகாரம் மையத்தில் குவிவதால் ஏற்படும் பாதக விளைவுகள், கிராமிய மட்டத்தில் அதிகாரம் பகிரப்படுவதன் அவசியம், நிதிப்பங்கீடு நியாயமாக அமைதல் என்பன பற்றி அவர் அதிக கவனம் செலுத்தினார். மகாலிங்கசிவமும் கலாநிதி வி.அம்பலவாணரும் திட்டமிடல் சேவையினை மிக உயர்ந்த நிலைக்கு வளர்த்தெடுத்திருந்தனர்.காமனி கொரியா இலங்கையின் பத்தாண்டுப் பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தபோது, இந்தியத் திட்டமிடலின் தந்தை எனப்படும் பேராசிரியர் மகலநோபிஸ் என்னும் கணிதப் பொருளியலாளரின் ஆலோசனையை நாடியிருந்தார்.

(19 ஆம் பக்கம் பார்க்கவும்.)

மு.நித்தியானந்தன்

**கல்வியமைச்சு**
**திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆய்வு மற்றும் புத்தாக்கங்கள் பிரிவு**

**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை**

**இவ் அதிகார சபைக்கு சொந்தமான ஹல்பராவ காணியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இரும்புக் கட்டமைப்புக்களை விற்பனை செய்தல்**

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை சார்பாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் அவ் அதிகார சபைக்குச் சொந்தமான ஹல்பராவ காணியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இரும்புக் கட்டமைப்புக்களை விற்பனை செய்வதற்காக தகைமை மற்றும் அதிகாரமுள்ள கேள்வி வைப்பாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. இதற்காக தேசிய போட்டி கேள்விகோரல் செயற்பாட்டு முறைமை பின்பற்றப்படுகிறது.
2. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை, 2024.06.03 முதல் 2024.06.24 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை, பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்), தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரியில் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் தொ.பே.: 011 2888782-5 மூலம் விசாரிக்கலாம்.
3. இரும்பு தொகையை 2024.06.03 முதல் 2024.06.24 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இல. 508, ஹல்பராவ, தலங்கம காணியில் பரீட்சித்துப் பார்க்கலாம். அவ் இடத்திற்கு செல்வதற்கு முன்பு மேற்படி முகவரியில் இவ் அதிகார சபையின் தலைமையகத்திற்கு வருகைதந்து உதவிப் பணிப்பாளர் (நிர்வாக மற்றும் திட்டமிடல்) இடம் எழுத்துமூல அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
4. சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரியில் பணிப்பாளர் (நிர்வாக மற்றும் வளங்கள்) இடம் விண்ணப்பத்தை சமர்ப்பித்து 2024.06.03 முதல் 2024.06.24 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நாட்களில் மீளளிக்கப்படாத ரூ. 5000/- தொகையை அதிகார சபையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
5. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.06.18 மு.ப. 10.00 இற்கு இவ் அதிகார சபையின் ராஜகிரிய தலைமையக கேட்போர்கூடத்தில் நடைபெறும்.
6. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.06.25 பி.ப. 2.30 இற்கு முன்பு தலைவர், பெறுகைக் குழு, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி அல்லது மேற்படி முகவரியில் முதலாம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரிதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
7. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம் 2024.09.26 வரையானதாக இருத்தல் வேண்டும் (91 நாட்கள்).
9. கேள்விப் பத்திரத்துடன் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்துள்ள எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் விநியோகிக்கப்பட்ட இரத்துச் செய்ய முடியாத மற்றும் பெறுகையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆரம்ப எழுத்துமூல வேண்டுதலின் அடிப்படையில் நிபந்தனையற்ற நிதியாக மாற்ற முடியாத கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அக்கேள்விப் பிணைமுறி தலைவர், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 500,000/- (ரூபா ஐந்து இலட்சம்) பெறுமதியடய 2024.10.10 வரை செல்லுபடியாகும் கேள்விப் பிணையாக இருத்தல் வேண்டும்.
10. கேள்வி வழங்கல் கேள்விதாரரால் சகல தொகைகளையும் காசாகச் செலுத்தி குறித்த இரும்புத் தொகையை வாரத்தின் வேலை நாட்களில் (14 இற்குள்) நிருவாக வளாகத்திலிருந்து அகற்றிக்கொள்ள வேண்டும்.
11. சகல கேள்வி ஆவணம், ஒரு பகுதி அல்லது முழுக் கேள்வி பத்திரத்தையும் நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது. மேலும் கேள்விகள் சமர்ப்பித்தலுக்காக கேள்விதாரருக்கு ஏற்படும் செலவுத் தொகைகள் இவ் அதிகார சபையினால் மீள் செலுத்தப்படமாட்டாது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை,**
**971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, வெலிக்கட, ராஜகிரிய.**
2024.06.02

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**(வணிகக் கப்பற்றுறைச் செயலகம்)**

**கப்பல் பணியாளர்களை படம்பிடிப்பதற்கு புகைப்பட ஸ்டுடியோக்களைப் பதிவு செய்தல்**

கப்பல் பணியாளர் சான்றிதழுக்காக ICAO 9303 தர புகைப்படங்களைப் பிடிப்பதற்காக வணிகக் கப்பற்றுறைச் செயலகத்துடன் பதிவு செய்து கொள்வதற்கு ஆர்வமுள்ள தொழில்சார் புகைப்பட ஸ்டுடியோக்களை வணிகக் கப்பற்றுறைச் செயலகம் அழைக்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து ''dgshipping.gov.lk'' எனும் இணையதளத்தைப் பார்வையிடவும்.

இதில் உங்களுக்கு ஆர்வமிருந்தால், 2024 ஜூன் 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொலைபேசி: +94 11 210 5715 / 070 598 0389

**வணிகக் கப்பற்றுறைச் செயலகம்,**
**இல. 79, டெக்னிக்கல் சந்தி,**
**மருதானை வீதி,**
**கொழும்பு 10.**

## திட்டமிடல் அமைச்சில் ஒரு ..

19 ஆம் பக்க தொடர்ச்சி...

மகாலிங்கசிவம் இந்தப் பத்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தபோது அவருக்கு முதலில் தோன்றியது இந்தத் திட்டத்தில் எந்த கணிதப் பொருளாதார மாதிரியும் பாவிக்கப்படவில்லை என்பதாகும். இத்தகைய நீண்ட பொருளாதாரத் திட்டத்தில் ஒரு கணிதப் பொருளாதார மாதிரியின் பிரயோகம் மிக அவசியமானது என்றே அவர் கருதினார்.

பண்டகை, உடுப்பிட்டியில் இராசையா இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனாகப் பிறந்த மகாலிங்கசிவத்தின் ஆரம்பக் கல்வி திருகோணமலையில் ஆரம்பமானது. அவரது தந்தை திருகோணமலையில் பணியாற்றியதையடுத்து, அவர் திருகோணமலையில் ஸ்ரீ சண்முகா வித்தியாலயம், இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்று, பின்னர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 1942இல் சேர்ந்து எஸ்.எஸ்.சி.வரை பயின்று திறமைச் சித்தி பெற்றார்.

கே.டி.ஜோன் என்ற கேரளத்து அதிபரின் கீழ் அக்கல்லூரி பெருமை பெற்றிருந்த காலம். பின், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் எஸ்.கே.பங்கர் அதிபராக இருந்த காலத்தில், அங்கு தன் கல்வியைத்தொடர்ந்து, அங்கிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நுழைகிறார்.

ஆன்மிகத்தில் தோய்ந்த மகாலிங்கசிவம் யோக சுவாமிகளிடம் அதீத பக்தி கொண்டவர். கனடாவிற்கு உயர்கல்வியைத் தொடரப் பயணமாகுமுன், யோகசுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெறச் சென்றிருக்கிறார். மகாலிங்கசிவத்தின் துணைவியார் பெயர் மகாதேவி.

'மகாலிங்கம் மகாதேவி, நீவிர் எங்கும் மகா. எல்லாவற்றிலும் மகா, சென்று வாருங்கள்' என்று யோகசுவாமிகள் ஆசீர்வதித்து அனுப்பியுள்ளார்.

மகாலிங்கசிவம் தான் பயின்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவராக நின்று, கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி நல்கியுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் கதீற்றல் தமிழ்க் கலவன் பாடசாலை 1973 74இல் மூடப்படவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில், முத்துவெல மாவத்தையில் உள்ள தனியார் வீடொன்றை விலைக்கு வாங்கி, அதனை முகத்துவாரம் இந்துக்கல்லூரியாக மாற்றி, அங்குள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி நல்கிய பெருமகனாக மகாலிங்கசிவம் திகழ்கிறார்.

பல பொது நிறுவனங்களில் அவர் பொறுப்பாளராகத் திகழ்ந்தாலும், கண்டிப்பும் பொது நிதியை விரயமாக்காமல், சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையும் காட்டியிருக்கிறார். ஆன்மிக நம்பிக்கை மிக்க அவர், பொதுத் தொண்டுகளில் ஆழ்ந்த ஈடுபாட்டோடு உழைத்து வந்திருக்கிறார். அதி உயர் பதவிகளை வகித்தபோதும், எளிமையும் அன்பும் சாந்தமும் உதவும் உள்ளமும் கொண்டவராக விளங்கியிருக்கிறார்.

இராசையா மகாலிங்கசிவம் அமரராகி இன்று பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டிருந்த பெருமகனின் கதை நினைவில் மீட்கப்படவேண்டிய கதையாகும்.

## டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரிப்பு



நாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நுளம்பு பெருகும் இடங்களை அழிக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அறிவிக்கப்பட்ட நுளம்பு ஒழிப்பு வாரம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. எனினும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டுமென்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 24,815 ஆகவும், டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 09 ஆகவும் பதிவாகியுள்ளது.

**பரந்த கிளை வலையமைப்பு ஒன்றைக் கொண்ட இலங்கையில் உள்ள அபிவிருத்தி வங்கி ஒன்றுடன் எமது வாடிக்கையாளர்கள் இணைந்திருப்பதோடு எமது தேசத்தின் சுபீட்சத்தை நோக்கிய பயணத்தில் ஈடுபட்டுள்ளனர். வருமானப் பகிர்வு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு கிராமியப் பகுதியில் தொழில்முனைவை வளர்ப்பதன் மூலம் குறிப்பாக பிராந்தியத்தில் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பது வங்கியின் திட்டமாகும். தற்போது அவர்களின் பின்வரும் பதவிக்காக அதிக திறன் கொண்ட இடர் முகாமைத்துவ தொழில்முறையாளர் ஒருவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.**

## தலைமை இடர் அதிகாரி

**முக்கிய தேவைகள்:**

- வங்கியியலில் பட்டப்பின்படிப்பு தகைமை அல்லது தொழில்முறை தகைமை ஒன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல்.
- ICASL / ICA (England and Wales) / ACCA (UK) / CMA(UK) / (SL) அங்கத்துவம்
- சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் எட்டு ஆண்டுகள் அனுபவம் (தலைமை முகாமையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலைக்கு இணையானதாகவும் அதில் உதவி பொது முகாமையாளர் தரம் அல்லது அதற்கு மேல் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல்) அதில் இடர்/ நிதி/ கணக்காய்வு துறையில் வங்கி/ நிதி நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகளை பெற்றிருத்தல் வேண்டும்.
- கடன் மதிப்பீடு மற்றும் அங்கீகார நடைமுறையின் வெளிப்பாடு அனுகூலங்களாக அமையும்.
- 56 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:**

தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் தொழில்துறை தரங்களுடன் மற்ற பொருத்தமான நன்மைகள் கிடைக்கப்பெறும்.

**குறிப்பு:**

மேலுள்ள தேவையான தகைமை அளவுகோல்களை நிறைவு செய்யாத அல்லது தவறான தகவல்களை வழங்கும் விண்ணப்பங்கள் ஆட்சேர்ப்பின் எந்த ஒரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். குறுகிய பட்டியலில் சேர்க்கப்பட்ட அபேட்சகர்களை அழைப்பது மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்வதற்கு சேவைப் பெறுநருக்கு உரிமை உள்ளது.

இந்த விளம்பரத்தின் 10 நாட்களுக்குள் **mslrcv@sltnet.lk** என்ற மின்னஞ்சலுக்கு இரு உறவினர் அல்லாத நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் PDF வடிவத்தில் உங்களது முழுமையான சுயவிபரக்கோவையை அனுப்பவும். subject பந்தியில் MSLReference No. 7974 என்று குறிப்பிடவும்.

MSL Management Systems (Pvt) Ltd.

**இல.: 08, டிக்கேல் வீதி,**
**கொழும்பு 08,**
**mslrcv@sltnet.lk**
**0112015900**




இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளை வலையமைப்புடன் 3000 இற்கும் மேற்பட்ட திறமையான ஊழியர்களைக் கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு தேவையான தகமைகளுடன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சிரேஷ்ட முகாமையாளர் - தகவல் தொழில்நுட்ப நிர்வாகம் (Senior Manager - IT Governance)

**தகமைகள்**

- தகவல் பாதுகாப்பு, கணினி அறிவியல், தகவல் தொழிநுட்பம், கணினி பொறியியல் அல்லது துறைசார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற இளமானிப் பட்டம்.
- தகவல் பாதுகாப்பு துறைசார் (CEH, CISM, CISA, CISSP, CGEIT) சான்றிதழ்கள் அல்லது அது போன்றவற்றுள் ஒன்று

**அனுபவம்**

- மொத்தமாக 05 வருடகால தகவல் தொழில்நுட்பம் சார்ந்த அனுபவத்துடன் 03 வருடகால தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ நிர்வாகி/ இணைய பாதுகாப்பு (Cyber Security) துறையில் நிறைவேற்றுத் தர அனுபவம்,
- 50 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.

### உதவி முகாமையாளர் - கனிஷ்ட தகவல்தள நிர்வாகி (Junior Database Administrator)

**தகமைகள்**

- கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம் அல்லது துறைசார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற இளமானிப் பட்டம்.
- ORACLE, MS SQL சான்றிதழ்கள் மேலதிக தகமைகளாகக் கொள்ளப்படும்.

**அனுபவம்**

- ஆகக் குறைந்தது 03 வருடகால தகவல்தள நிர்வாகத்துறைசார் அனுபவம், வங்கி அல்லது நிதியியல் நிறுவனம் ஒன்றில் எனில் விரும்பத்தக்கது.
- 35 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.

### உதவி முகாமையாளர் - கனிஷ்ட வலையமைப்பு நிர்வாகி (Junior Network Administrator)

**தகமைகள்**

- கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பம் அல்லது துறைசார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற இளமானிப் பட்டம்.
- வலையமைப்பு நிர்வாகம் சார்ந்த சான்றிதழ்கள் (CCNA, HCIA, NSE 3) மேலதிக தகமைகளாகக் கொள்ளப்படும்.

**அனுபவம்**

- ஆகக் குறைந்தது 03 வருடகால வலையமைப்பு நிர்வாகத்துறைசார் அனுபவம், வங்கி அல்லது நிதியியல் நிறுவனம் ஒன்றில் எனில் விரும்பத்தக்கது.
- 35 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்/ கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழிற் துறையில் நிலவும் தர நிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது முழுமையான சுயவிபரக் கோவையை, உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களுடன் **2024 ஜூன் 11ம்** திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, **careers@rdb.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கே உரித்தாகும்.

பிரதேச அபிவிருத்தி வங்கி
Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk

## சுற்றுலாத்துறை அமைச்சு

### இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)

## விலைமனு அறிவித்தல் – தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (NCB)

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| இல. | விடயம் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | விலைமனு பாதுகாப்பு தேவைப்படுத்தல்கள் (ரூபா) | விலைமனு முன்னோடிக் கூட்டம் திகதி மற்றும் நேரம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| | சேவை | | | | |
| 1 | செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபைக்கு 4 எண்ணிக்கையான மோட்டார் கார்கள் மற்றும் 1 எண்ணிக்கையான டபிள் கெப் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் ஒப்பந்த இல. **SLTDA/ HR&PM/ S/NCB/Vehicle Hiring/2024/01** | 10,000.00 | 500,000.00 | 2024 ஜூன் 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு | 2024 ஜூன் 27 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |

2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைத்திறனின் பிரகாரம் உரித்தான துறையில் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தலும் வேண்டும்.
3. 2024 ஜூன் 13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-03, காலி வீதி, 80 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் மாடியிலுள்ள D.G. இன் கூட்ட அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பெற்று இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் 4 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவின் பெறுகைக்கான உதவிப் பணிப்பாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். தொடர்பிலக்கம்: 0112426800 (நீடிப்பு: 305, 277). இலத்திரனியல் தபால் முகவரி: **sltdaproc@srilanka.travel**
5. **2024** மே 31 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூன் 27 ஆம் திகதியன்று வரையும் **sltdproc@srilanka.travel/** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பணவைப்பு துண்டுடன் விண்ணப்பதாரியின் தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் **https://sltda.gov.lk/tender** என்ற இணையதளத்தின் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலமாக ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று இசுஅஅ இன் இணையதளத்தினூடாக பதிவிறக்கம் செய்யப்படலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 10,000 ரூபாவை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் இலங்கை வங்கியின் கூட்டுரு கிளையின் 7119413 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். (குறிப்பு: தயவு செய்து பணவைப்பு துண்டில் பணவைப்பாளரின் விபரங்கள் மற்றும் நோக்கம் ஆகியவற்றில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' என குறிப்பிடப்படுவதுடன் மேற்கூறப்பட்டுள்ள துண்டின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பது கட்டாயமானதாகும்) பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏனைய பணக்கொடுப்பனவுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
7. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு, (4 ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல. 80, காலி வீதி, கொழும்பு -03 என்ற முகவரிக்கு விலைமனுவை மூடும் திகதிக்கு முன்னராக நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன எழுதப்படல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இசுஅஅ இன் 4 ஆம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவில் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழுடனும் அதற்கு பின்னரான வர்த்தமானி அறிவித்தல்களுடனும் (பிசிஏ-3) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
10. விலைமனு பாதுகாப்பானது இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத்திலும் நிருணயிக்கப்பட்டவாறு விலைமனு செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்கோரல் ஆவணத்தில் நிருணயிக்கப்பட்டுள்ள திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதாவது நிறுவனத்தில் ஊழியரொருவருடன் நெருங்கிய குடும்ப உறவைக் கொண்டுள்ள ஊழியரொருவர் அல்லது கம்பனியொன்றின் மற்றும்/ அல்லது நபரொருவர் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை கொண்டிருக்க மாட்டார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும். மேலும், இசுஅஅ ஆனது எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன் இசுஅஅ ஆனது விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் ஆகியவற்றில் தெரிவு செய்யப்படும் விலைமனுதாரருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை.**

## தேசிய ஆராய்ச்சி பேரவை

**கல்வி அமைச்சு**

## புலனாய்வாளர்களுக்கு வழங்கும் மானியங்கள் – 2024

அரசு சார்ந்த விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான அமைப்புக்கள்/ பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புத்தாக்க, புலனாய்வாளர்களுக்கு வழங்கும் மற்றும் சமமாக மதிப்பீடு செய்யப்பட்ட ஆராய்ச்சி செயற்றிட்டங்களின் அனைத்து விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பரப்புக்களுக்கான நிதியிடலுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய நலன்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்துடன் நேரடியான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மானியங்கள் மிகவும் உயர்தர போட்டிரீதியில் அமைந்திருப்பதுடன் முன்மொழிவு உள்ளடக்கங்கள் தீவிரமாக மதிப்பீடு செய்யப்படும். எந்தவொரு மானியத்திற்கும் வழங்கப்படும் நிதியின் ஆகக்கூடிய தொகையானது 3.0 மில்லியன் இ.ரூபாவாகும்.

விண்ணப்பிப்பதற்காக முதன்மையான புலனாய்வாளர் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரித்தான கையொப்பங்களுடன் ஒரு வன்பிரதி மற்றும் அதனது துல்லியமாக ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்றுடன் (மென் பிரதி) சமர்ப்பித்தல் வேண்டும்.

சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதி: 2024 ஜூன் 24 ஆம் திகதியாகும்.

1. சீரான முறையில் கட்டப்பட்ட வன்பிரதியானது (மூலப்பிரதி) பதிவுத் தபாலில் தேசிய ஆராய்ச்சி பேரவையின் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

அத்துடன்

2. மூலப்பிரதியின் துல்லியமாக ஸ்கேன் செய்யப்பட்ட பிரதியொன்று 2024 ஜூன் 24 ஆம் திகதியன்று பி.ப. 4 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக தலைவருக்கு கிடைக்கும் தன்மையில் **apply@nrc.gov.lk** என்ற மின்னஞ்சல் வழியாக அனுப்பப்படல் வேண்டும்.

தாமதமான மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் (ஒன்றில் வன் அல்லது மென்பிரதி) பரிசீலனை செய்யப்பட மாட்டாது. மானியங்கள் நிதியின் இருப்புநிலையின் தன்மையிலேயே வழங்கப்படும். நிதி வழங்கல் தொடர்பாக தேஆபே இன் தீர்மானமே இறுதியானதாகும்.

**http://www.nrc.gov.lk** என்ற தேஆபே இன் இணையதளத்திலிருந்து விண்ணப்பப் படிவம் அத்துடன் வழிகாட்டிகள் மற்றும் தகுதியுள்ள நிறுவனங்களின் பட்டியலொன்று ஆகியன பதிவிறக்கம் செய்யப்படலாம். மேலதிக தகவலுக்கு கொழும்பு-07, 120/7, வித்யா மாவத்தை, தேசிய ஆராய்ச்சி பேரவையின் பிரதான நிறைவேற்று அலுவலருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 011-2675176 தொலைநகல்: 011-2675136 மின்னஞ்சல்: **apply@nrc.gov.lk**

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி பேரவை.**



**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**

## சீதுவ பாவனையாளர் சேவை நிலையத்திற்காக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு கட்டிடமொன்று தேவை

**கேள்வி இல.: LECO/24/NCB/PR4/149**

20 அடி அகலத்திற்கு குறையாத அணுகு வழிகளும் கொண்ட 5,500 ச. அடிக்கு குறையாத இடப்பரப்புள்ளதும் பாவனையாளர் சேவை நிலையமாக பாவிப்பதற்காக சீதுவ, கட்டுநாயக்க பிரதேசத்தில் விருப்பத்திற்குரிய வகையில், தண்டுகம பாலத்திற்கும் கட்டுநாயக்க 18ஆம் மைல் கட்டைக்குமிடையில் பிரதான வீதிக்கு முகப்பாக அல்லது அருகாமையில் பார ஊர்த்திகளுக்கு பொருந்தும் தன்மையில் கட்டிடமொன்று தேவை. இந்த இடப்பரப்பில் மின்சாரம், தொலைபேசி, நீர் வழங்கல், வடிகாலமைபபு வசதிகள் அத்துடன் ஆகக் குறைந்தது ஐந்து வாகனங்களுக்கான நிறுத்துமிடம் இருத்தல் வேண்டும். இந்த ஆதனமானது ஏறத்தாழ 40 பேர்ச்சுக்கள் விஸ்தீரணமுடையதாகவிருப்பதுடன் ஆதனத்தைச் சுற்றிவர சுற்று வட்டச் சுவர் விரும்பத்தக்கது.

வாடகைக்கு அல்லது குத்தகைக்கான கால எல்லையானது 02 வருடங்களாகும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024.06.18 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்பதுடன் விலைமனுக்களை மூடிய பின்னர் அவைகள் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் முன்வைப்புக்களை இந்த பெறுகைக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்த பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணத்தை www.leco.lk (“Tender Notice” Section) என்ற இணையதளத்தை அல்லது www.promise.lk என்பதனை பார்வையிடுவதன் மூலம், அல்லது 011-2371637 என்பதன் வழியாக LECO பெறுகைப் பிரிவை தொடர்பு கொள்வதன் மூலம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

முன்வைப்புக்கள் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் (விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக லங்கா மின்சார கம்பனியில் அவைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்) அல்லது விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கம்பனியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இடப்பரப்புக்களின் உரிமையாளர்கள் மாத்திரமே அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை மற்றும் விலைமனுவின் தலைப்பு குறிப்பிடப்படல் வேண்டும்.

எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும், தயவு செய்து மனித வளங்கள் மற்றும் நிருவாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் 011-2371600 என்ற இலக்கத்தினூடாக தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**
**ஈ.ஏச். குரே கட்டிடம்**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

PROCUREMENT NOTICE
www.leco.lk



**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**

## காலி பாவனையாளர் சேவை அத்தியட்சகரின் விடுதிக்காக வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வீடொன்று தேவை

**கேள்வி இல.: LECO/24/NCB/PR4/150**

காலி பாவனையாளர் சேவை அத்தியட்சகரின் விடுதிப் பாவனைக்காக 12 அடிக்கு குறையாத அணுகுவழியொன்றுடன் LECO காலி இயக்க செயற்பாடுகள் பிரதேசத்துள் ஏறத்தாழ 15 பேர்ச்சுக்கள் காணி, கராஜ் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புக்களுடன் 3 அறைகளுடைய வீடொன்று தேவை.

வாடகைக்கு அல்லது குத்தகைக்கான கால எல்லையானது 02 வருடங்களாகும்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024.06.18 ஆம் திகதியன்று பி.ப.3 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்பதுடன் விலைமனுக்களை மூடிய பின்னர் அவைகள் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் முன்வைப்புக்களை இந்த பெறுகைக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்த பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணத்தை **www.leco.lk** (“Tender Notice” Section) என்ற இணையதளத்தை அல்லது **www.promise.lk** என்பதனை பார்வையிடுவதன் மூலம், அல்லது 011-2371637 என்பதன் வழியாக LECO பெறுகைப் பிரிவை தொடர்பு கொள்வதன் மூலம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

முன்வைப்புக்கள் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் (விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக லங்கா மின்சார கம்பனியில் அவைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்) அல்லது விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கம்பனியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இடப்பரப்புக்களின் உரிமையாளர்கள் மாத்திரமே அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை மற்றும் விலைமனுவின் தலைப்பு குறிப்பிடப்படல் வேண்டும்.

எந்தவொரு தெளிவுறுத்தல்களுக்கும், தயவு செய்து மனித வளங்கள் மற்றும் நிருவாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் 011-2371600 என்ற இலக்கத்தினூடாக தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**
**ஈ.ஏச். குரே கட்டிடம்**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

PROCUREMENT NOTICE
www.leco.lk



# விலைமனுக்கோரல்

## இலங்கை விமானப்படை

## ஹிங்குராக்கொட விமான நிலைய செயற்திட்ட அபிவிருத்திக்கான பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொள்முதல்

1. இலங்கை விமானப்படையின் திணைக்கள வழங்கல் குழுவின் தலைவரினால் ஹிங்குராக்கொட விமான நிலைய செயற்திட்ட அபிவிருத்திக்காக தேவைப்படும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மற்றும் வாடகை அடிப்படையில் பார ஊர்திகள் மற்றும் இயந்திரங்களை வழங்குவதற்கான தகுதி மற்றும் தகைமைகளைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | முன்மனுக் கூட்டத்திற்கான திகதி மற்றும் நேரம் | மனுப் பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் கடைசி திகதி | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு மூடப்படும் திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | AHQ/24/PUB/ E/1001 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Motor Graders வாடகைக்கு பெறல் (நிலை I மற்றும் II) | 2024.06.10 1030 மணிக்கு | 2024.10.22 ரூ.468,000.00 | 2024.06.24 | 12,500.00 | 2024.06.25 1030 மணிக்கு |
| 02. | AHQ/24/PUB/ E/1002 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Excavators வாடகைக்கு பெறல் (நிலை I மற்றும் II) | 2024.06.10 1100 மணிக்கு | 2024.10.22 ரூ.290,000.00 | 2024.06.24 | 12,500.00 | 2024.06.25 1030 மணிக்கு |
| 03. | AHQ/24/PUB/ E/1003 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Vibrating Road Rollers வாடகைக்கு பெறல் (நிலை I மற்றும் II) | 2024.06.10 1130 மணிக்கு | 2024.10.22 ரூ.272,000.00 | 2024.06.24 | 12,500.00 | 2024.06.25 1030 மணிக்கு |
| 04. | AHQ/24/PUB/ E/1004 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Backhoe Loaders வாடகைக்கு பெறல் (நிலை I மற்றும் II) | 2024.06.11 1030 மணிக்கு | 2024.10.23 ரூ.267,000.00 | 2024.06.25 | 12,500.00 | 2024.06.26 1030 மணிக்கு |
| 05. | AHQ/24/PUB/ E/1005 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Heavy Machinery வாடகைக்கு பெறல் (நிலை I மற்றும் II) | 2024.06.11 1100 மணிக்கு | 2024.10.23 ரூ.354,000.00 | 2024.06.25 | 12,500.00 | 2024.06.26 1030 மணிக்கு |
| 06. | AHQ/24/PUB/ E/1006 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Drum Trucks, Tractor with Trailer மற்றும்Heavy Machinery வாடகைக்கு பெறல் (ஓடுபாதையின் நிலை I,II,III மற்றும் IV) | 2024.06.11 1130 மணிக்கு | 2024.10.23 ரூ.330,000.00 | 2024.06.25 | 12,500.00 | 2024.06.26 1030 மணிக்கு |
| 07. | AHQ/24/PUB/ E/1007 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக Water Bowsers வாடகைக்கு பெறல் (ஓடுபாதையின் நிலை I,II,III மற்றும் IV) | 2024.06.12 1030 மணிக்கு | 2024.10.10 ரூ.162,000.00 | 2024.06.26 | 6,000.00 | 2024.06.27 1030 மணிக்கு |
| 08. | AHQ/24/PUB/ B&CE/1001 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக சரளை மண் (Sub Base) கொள்வனவு ஓடுபாதையின் கட்டம் 01 (நிலை I) | 2024.06.12 1100 மணிக்கு | 2024.10.24 ரூ.272,000.00 | 2024.06.26 | 12,500.00 | 2024.06.27 1030 மணிக்கு |
| 09. | AHQ/24/PUB/ B&CE/1002 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக ABC கொள்வனவு செய்தல் கட்டம் 01 (நிலை I) | 2024.06.12 1130 மணிக்கு | 2024.10.24 ரூ. 467,000.00 | 2024.06.26 | 12,500.00 | 2024.06.27 1030 மணிக்கு |
| 10. | AHQ/24/PUB/ B&CE/1003 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக சரளை மண் கொள்வனவு கட்டம் 01 (நிலை I) | 2024.06.13 1030 மணிக்கு | 2024.10.11 ரூ.147,000.00 | 2024.06.27 | 6,000.00 | 2024.06.28 1030 மணிக்கு |
| 11. | AHQ/24/PUB/ B&CE/1004 | ஹிங்குராங்கொட விமான நிலையத் செயற்திட்ட அபிவிருத்தி நடவடிக்கைக்காக சரளை (Sub Base) கொள்வனவு கட்டம் 01 (நிலை I) Shoulder and Safety Area | 2024.06.13 1100 மணிக்கு | 2024.10.11 ரூ.53,000.00 | 2024.06.27 | 3,500.00 | 2024.06.28 1030 மணிக்கு |

2. மனுக்கோரலானது **தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (NCB)** இடம்பெறும்.

3. இது சம்பந்தமாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் முழுமையான மனு ஆவணங்களை இலங்கை விமானப்படை இணையத்தளமான **www.airforce.lk** மூலம் அல்லது **2024.06.03** ஆம் திகதி முதல் மனு ஆவணங்கள் வழங்கப்படும் கடைசி நாள் வரை **0900 மணி தொடக்கம் 1500 மணித்தியாலம்** வரை அனைத்து காரியாலய வேலைநாட்களிலும் கீழே 09 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்துமூர்வமான கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் கட்டணமின்றி இலவசமாக ஆவணத்தொகுப்பை பரீசித்துக்கொள்ள முடியும். மனு ஆவணங்களை வழங்கும் இறுதித்திகதிக்கு முன் **LL2 மாடி, இல.594, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 இல் அமைந்துள்ள இலங்கை விமானப்படை நிலையத்தின் சிராப்பரிடம் (Shroff) மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தி** 2024.06.03 ஆம் திகதி முதல் ஒவ்வொரு வேலை நாளிலும் **0900 மணி முதல் 1500 மணி வரை கொள்முதல் பிரிவில்,** மனுக்களுக்கான பிரிவில் மனு ஆவணத் தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். மனு ஆவணங்களை வெளியிடுவதற்கான கடைசி திகதி மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் முதற் பிரதியையும் இணைத்து முன்வைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டுகள் இல்லாமல் முன்வைக்கப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாத மனுக்களாக கருதப்படும்.

4. மனு ஆவணங்களை கொள்வனவு செய்த அனைத்து ஆர்வமுள்ள மனுதாரர்களும் **2024.06.03 ஆம் திகதி முதல் 2024.06.25 ஆம் திகதி வரை** ஒவ்வொரு வேலை நாளிலும் **0900 மணி முதல் 1500 மணி வரை** இலங்கை விமானப்படைத் தளமான ஹிங்குராக்கொடவில் செயற்திட்டத் தளத்தைப் பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

5. முத்திரையிடப்பட்ட பிரதிகளுடன் கூடிய மனுக்கள் இறுதித் திகதிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலின் மூலம் **"தலைவர், திணைக்கள வழங்கல் குழு, இலங்கை விமானப்படை"** க்கு அனுப்பிவைத்தல் அல்லது இறுதித்திகதிக்கு முன் இலங்கை **விமானப்படை தலைமை அலுவலகம்** (மேற்கு வாயில்), **இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை விமானப்படை நிலையத்தின் பிரதான பாதுகாப்பு அறையில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும். விலைமனுக்கள் இலத்திரனியல் முறையில் சமர்பிக்க அனுமதிக்கப்படாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனேயே **LL2 மாடி, இலங்கை விமானப்படை தலைமையகம், இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டையில்** மனுக்கள் திறக்கும் அறையில் மனுக்கள் திறக்கப்படும்.

6. மனுதாருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களின் தொழில்வழங்குனரின் அனுமதிக்கடிதத்தை முன்வைப்பதன் மூலம் மனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடையும் நேரத்திற்குப் பிறகு, மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி மனு திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. மனு ஆவணங்களை கொள்வனவு செய்த மனுதாரர்களுக்கு, மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் **LL2 மாடி, இலங்கை விமானப்படை, இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே** இல் அமைந்துள்ள இலங்கை விமானப்படை தலைமை அலுவலகத்தில் மனுக்கள் திறக்கும் அறையில் இடம்பெற திட்டமிட்டிருக்கும் முன்மனு தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.

8. அனைத்து மனுதாரர்களும், மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட மதிப்பு மற்றும் காலஎல்லைக்கான முதல் எழுத்துமூர்வ கோரிக்கையின்படி மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற மனு பத்திரம் மூலம் பணப் பரிமாற்றம் செய்யக்கூடிய மனு பிணையினை சமர்ப்பிக்க வேண்டும். மனுப் பாதுகாப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதத்துடன் "விமானப்படைத் தளபதி" க்கு அனுப்பப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு உத்தரவாதத்தின் மாதிரி நகல் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் - 2006 இல் வெளியிடப்பட்டது.

9. இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு தலைமை கொள்முதல் அதிகாரி (**தொலைபேசி - 011-2347694**) அல்லது பணியாளர் அதிகாரி வழங்கல் (மனுக்கள்) (**தொலைபேசி: 011-2495495, 077-2229073, 071-1874693**) நீட்டிப்பு - **12915,** பெக்ஸ் : **011-2441553** மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்து மூல விண்ணப்பத்தை முன்வைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**கொள்முதல் பிரிவு,**
**விமானப்படை தலைமையகம்,**
**இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர,**
**கோட்டே.**

**விமானப்படை தளபதி**

# வாரபலன்

02.06.2024 - 08.06.2024



கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

பல நன்மைகள் உண்டாகும். உங்கள் பேச்சுத் திறமை அதிகரித்து அதனால் பல காரியங்கள் சிறப்பாக நடந்துமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம், அவர்களால் உதவி ஆகியவையும் கிடைக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். பகை விலகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். கடன் பிரச்சினைகள் தொல்லை தராது. போட்டிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள், எதிர்ப்புகள் தீரும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பர். கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

திட்டமிட்டு செயற்படுவீர்கள். வாழ்க்கைக்கு தேவையான புதிய வசதிகள் கிடைக்கும். புதிய ஆடை அணிகலன்கள் – ஆடம்பரப் பொருட்கள் வாங்குவீர்கள். வீடு, மனை வாங்க திட்டமிடுவீர்கள். சிலர் புதிய வாகனம் வாங்குவர். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்குப் பின் நடைபெறும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். ஆனால் பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கு அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். அதே நேரத்தில் பணிகளை செய்து முடிக்க தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர் வருகை இருக்கும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும். பெண்களுக்கு தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த சிக்கல்கள் தீரும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

திட்டமிட்டபடி அனைத்தையும் செய்து முடிப்பீர்கள். எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். வீட்டில் இருந்து வெளியில் தங்கும் சூழல் ஏற்படும். எடுத்த காரியத்தை செய்யும் போது, எது சரி, எது தவறு என்று தடுமாற்றம் ஏற்பட்டாலும் திறமையால் அதனைச் செய்து முடிப்பீர்கள். தொழில் ஸ்தானம் மிகவும் வலுவாக காணப்படுவதால், தொழில் வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும். நிதி உதவி கிடைக்கும். வாடிக்கையாளர் மத்தியில் மதிப்புக் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்கும். கணவன் மனைவிக்கிடையே இதுவரை இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். கலைத்துறையினருக்கு நிலுவையில் உள்ள காரியங்கள் முடியும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

தன்னம்பிக்கை அதிகரிக்கும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் வரும். வெளியூர்ப் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கவுரவம், அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம். புதிய பொறுப்புகள் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினைகள் தீரும். கணவன் மனைவிக்கிடையே அன்பான நிலை காணப்படும். பெண்கள் அடுத்தவர்கள் பிரச்சினையை தீர்த்து வைப்பார்கள். பொறுப்புகள் கூடும். கலைத்துறையினர் சற்று எச்சரிக்கையுடன் செயல்படுவது உங்களுக்கு எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பிரச்சினைகளை தவிர்க்க வழிவகை செய்யும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் திருப்தி உண்டாகும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

அனைத்திலும் இருந்து வந்த தடைகள் அகலும். அனைத்து கிரகங்களுடைய அருமையான அமைப்பில் இருக்கிறீர்கள். நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. உழைப்பு வீணாகலாம். எனவே திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளுடன் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை உண்டாகலாம். பெண்கள் திட்டமிட்டு செய்யும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். கலைத்துறையினருக்கு மிகவும் நன்மை பயக்கும் காலமாக இது அமையும். மாணவர்கள் சகமாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

சுறுசுறுப்பாக செயல்பட்டு வெற்றி பெறுவீர்கள். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ணம் சம்பந்தமான நோய் ஏற்படலாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் உண்டாகலாம். அதனால் திடீர் பண நெருக்கடி வரலாம். இடம், பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தேவையற்ற பயணம் செல்ல நேரலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மனம்விட்டுப் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தருவதாக இருக்கும். பெண்களுக்கு எதிர்பாராத செலவு உண்டாகும். அடுத்தவர்களிடம் பழகுவதில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு சோதனைகள் மிகுந்த காலமாக இருக்கும். முன்னேற்றத்தில் தடைகள் இருக்கும். மாணவர்கள் எந்தவொரு பாடத்தை படித்தாலும் கவனத்தை சிதறவிடாமல் படிப்பது அவசியம்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எதிலும் இலாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணவரத்து அதிகரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு பாராட்டுப் பெறுவீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. அவருக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேற்றுமை அகலும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வார்கள். கணவன் மனைவிக்கிடையே சில்லறை பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பெண்கள் தன்னம்பிக்கையுடன் துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பார்கள். கலைத்துறையினர் இரவு பகலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு கூடும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

கொடுத்த வேலையை சரியான நேரத்தில் செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள். பலவிதத்திலும் பணவரத்து உண்டாகும். ஆனாலும் சுபச்செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் வரும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வேகமான முன்னேற்றம் இருப்பது கடினம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. சக ஊழியர்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியங்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப் பிடிப்பது நல்லது. பெண்களுக்கு தடைப்பட்ட காரியங்கள் தடைநீங்கி நல்லபடியாக நடந்து முடியும். கலைத்துறையினர் கடுமையாக உழைப்பின் மூலம் முன்னேற வேண்டி இருக்கும். மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்து கூடுதல் மதிப்பெண் பெற முயற்சிகளை மேற்கொள்வர்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரம் நன்கு நடக்க தேவையான உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக பணிகளை செய்து முடித்து நிர்வாகத்தில் நல்ல பெயர் பெறுவார்கள். நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றங்கள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த பிரச்சினைகள் தீரும். வீடு, வாகனம் போன்றவற்றை வாங்குவது, புதுப்பிப்பது போன்றவற்றில் ஈடுபடுவீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த வேலைகள் சாதகமாக நடந்து முடியும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். கலைத்துறையினருக்கு மிகவும் அனுகூலமான காலமிது. மாணவர்கள் சகமாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எதையும் நிதானமாக செய்து வெற்றி பெறுவீர்கள். நோய் நீங்கி ஆரோக்கியம் பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். எதிர்பாராத காரியத் தடைகள் வரும். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சுமாரான போக்கு காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நம்பிக்கையு டன் செயலாற்றுவதன் மூலம் நன்மை அடைவார்கள். அலுவலக பணிகளில் தாமதம் ஏற்படலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். பெண்களுக்கு எதிலும் எதிர்பாராத தடைகள் உண்டாகலாம். கலைத்துறையினருக்கு ஒத்துழைப்பு இருக்கும். மாணவர்கள் நம்பிக்கையுடன் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

கடும் முயற்சிக்கு பிறகு காரியங்கள் முடியும். வீண் வழக்குகள் வரலாம். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். சுக்கிரன் சஞ்சாரத்தால் அலைச்சலை சந்திக்க நேரிடும். பயணம் செல்ல வேண்டி இருக்கும். எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது கவனம் தேவை. விருப்பத்திற்கு மாறான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் குறிப்பாக கூட்டுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் முக்கிய பொறுப்புகளில் இருப்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் மறையும். கணவன், மனைவிக்கிடையே நீடித்து வந்த மனவருத்தம் நீங்கி சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும். பெண்களுக்கு மனக்கவலை ஏற்படலாம். கலைத்துறையினருக்கு உடனிருப்பவர்களுடன் சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு நீங்கும். மாணவர்கள் விளையாட்டு போட்டிகளில் ஈடுபடும் போது கவனம் தேவை.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

தெளிவாக சிந்தித்து சரியான முடிவெடுப்பீர்கள். அறிவுத் திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு வேலை கிடைக்கலாம். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கை துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. விருந்தினர்கள் வந்து செல்வார்கள். பெண்கள் எந்தவொரு காரியத்தையும் செய்து முடிக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டியிருக்கும். கலைத்துறையினருக்கு மகிழ்ச்சியான காலகட்டம். எதிர்பார்த்த செய்தி உங்களை வந்து சேரும். மாணவர்கள் மற்றவர்களை அனுசரித்து செல்வது நன்மைதரும்.

---

## 11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 38




# தமிழ் வளர்ச்சியில் தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு



தமிழ் வளர்ச்சியில் தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு தொடர்பான அவதானம் மாநாட்டில் முக்கிய பேசுபொருளாக விளங்கியது. முனைவர் பேராசிரியர் மு.ஹி.ஜவாஹிருல்லாவின் பங்கேற்பும் இவரது மாநாட்டு ஆய்வுரையும் மேற்குறித்த பார்வைக்கு வலுச் சேர்ப்பதாகவே அமைந்திருந்தது. பாபநாசம் தொகுதியின் சட்ட மன்ற உறுப்பினரான மு.ஹி. ஜவாஹிருல்லா, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், மனிதநேய மக்கள் கட்சி ஆகிய அமைப்புகளின் தலைவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 1985ஆம் ஆண்டு முதல் வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் வணிகவியல் பேராசிரியராக கடமையாற்றி 2009இல் சுய விருப்பில் ஓய்வு பெறுகிறார். 1996 தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமைப் பதவியை பொறுப்பேற்றார். 2011ஆம் ஆண்டு இராமநாதபுரம் தொகுதியில் மனிதநேய மக்கள் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டு தெரிவாகிறார். அதனைத் தொடர்ந்தே திமுக கூட்டணியில் இணைந்து பாபநாசம் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். 1997இல் கோவை கலவரத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு த.மு.மு.க நிதி வசூலித்து வழங்கியது. அதற்கு மத்திய அரசின் அனுமதி பெறவில்லை என்ற குற்றச்சாட்டில் வழக்கு தாக்கல் செய்ததனால் ஓராண்டு சிறைவாசமும் அனுபவித்துள்ளார்.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட அமைப்பாகும். இவ் அமைப்பு பாபர் மசூதி இடிப்பு தொடர்பான கண்டனத்துடன் டிசம்பர் 6ஆம் திகதி பல போராட்டங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசு, முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்க போராடிய அமைப்புகளுள் முதன்மையாக விளங்குகிறது. இவ் அமைப்பு தமிழகம் முழுவதும் 184 அவசர ஊர்தி சேவையினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இரத்ததான செயற்பாடுகளில் அதீத பங்களிப்பை செய்துவருகின்ற அமைப்பாகவும் விளங்குகிறது. கல்வி விழிப்புணர்வு, ஏழைகளுக்கு இலவச திருமணம், இஸ்லாமிய மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு மற்றும் தேர்தல் தொடர்பான அறிவை விருத்தி செய்யும் நடவடிக்கைகளிலும் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. இந்தியாவில் இருந்து அரபு நாடுகளுக்கு செல்பவர்களுக்கு மத வேறுபாடுகள் பாராமல் உதவிகளை செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. “மக்கள் உரிமை” எனும் தலைப்பில் இவ் அமைப்பின் உத்தியாகப்பூர்வ இதழை வெளியிடுகின்றது. இவ் அமைப்பின் அரசியல் பிரிவாகவே “மனிதநேய மக்கள் கட்சி” 2009ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த தமிழர்களை தமிழ் முஸ்லிம்கள் என அழைக்கும் வழக்கம் காணப்படுகிறது. தமிழ் பேசும் முஸ்லிம்கள் எனப்படுபவர்கள் மேற்கு ஆசிய முஸ்லிம்களுக்கும் தமிழ் பெண்களுக்கும் இடையிலான திருமண பந்தத்தின் வழித் தோன்றல்களாகவேவிளங்குகிறார்கள்.அவர்களுடன் முஸ்லிம்களாக மதம் மாறியவர்களும் இணைந்து கொள்கிறார்கள். இவ்வாறே இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் அரபு, பாரசீகம், தென்னிந்தியா, மலாய் வம்சாவளியினரின் வழித் தோன்றல்களாகவும் உருவானவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. நான்கு மில்லியன்களுக்கு மேற்பட்ட தமிழ் முஸ்லிம்கள் இந்தியாவில் இருப்பதாக அறிய முடிகிறது. சங்க காலம் தொடக்கம் தமிழகத்துடன் அரபு நாட்டவர்கள் வணிகத் தொடர்பினை கொண்டிருந்தார்கள். இஸ்லாமிய ஆட்சித் தலைவர்களான கலிபாக்கள் துருக்கியை தலைமையமாகக் கொண்டு ஆட்சி செய்தமையால் துருக்கர்கள் என அழைக்கப்பட்டார்கள். காலப்போக்கில் அச் சொல் மருவி துலுக்கர்கள் எனும் பிரயோகத்திற்கு வந்தமை கவனிக்கத்தக்கது. அவ்வாறே மார்க்க என்பது அரபில் கப்பலைக் குறிக்கும் சொல்லாகிறது. கப்பல் அல்லது மரக்கலத்தில் வணிக செயற்பாடுகளுக்காக வந்தவர்களை மரக்கலாயர் என அழைத்துள்ளார்கள். பின்னர் அச் சொல் மரைக்காயர் எனும் பிரயோகத்திற்குட்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இஸ்லாமிய மதப் பணியில் ஈடுபட்டவர்களை லப்பைக் என்ற அரபிச் சொல்லில் குறிப்பிடுவது வழமையாகும். அதன் வழியிலேயே லப்பை என்ற சொல் பிரயோகமும் தமிழில் இணைந்தமை அவதானிக்கத்தக்கதாகும். முஸ்லிம்களுடைய புனித நூலான அல்குர்ஆனின் மொழிப்பெயர்ப்பு என்பது தமிழ் முஸ்லிம்களின் பார்வையில் மிகுந்த திருப்புமுனையான அம்சமாகிறது. “பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்” எனும் வார்த்தை தமிழில் பின்வரும் மொழிநடையில் அருமையான வாக்கியமாக அமையப்பெறுகிறது. “அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன்” என்பதாகவே அமைகிறது. அம் மொழிப்பெயர்ப்பை செய்த பேரறிஞர் அல்லாமா அப்துல் ஹமீது பாகவி ஆவார். திருக்குர்ஆன் அருளப்பட்டு 13 நூற்றாண்டுகளுக்கு பின்னரே அப் புனித நூல் தமிழில் மொழிப்பெயர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அரபு மொழியை மூல மொழியாகக் கொண்ட குர்ஆனை பிறிதொரு மொழியில் மாற்றம் செய்வதையே பாவம் என்ற கொள்கை மேலோங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. அந்த தடையை உடைத்த ஆளுமையாகவே அல்லாமா அப்துல் ஹமீது பாகவி விளங்குகிறார். 26.11.1876இல் பிறந்த இவ் அறிஞர் வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அறபுக் கல்லூரியில் 1906ஆம் ஆண்டு மௌலவி பட்டத்தை பெற்றுக்கொள்கிறார். “இஸ்லாமிய நூல் பிரசுரச் சங்கம்” எனும் பெயரிலான அச்சகத்தின் வாயிலாக இஸ்லாமிய நூல்கள் பிரசுரம் பெற்றன. 1926.02.19ஆம் திகதி தொடங்கிய மொழிப்பெயர்ப்பு பணியை மிகுந்த அர்ப்பணிப்புடன் 1929.02.19 அன்று நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அன்றைய நிலையில் அப் பேறறிஞரை தூற்றிய சம்பவங்களும் கவனத்திற்குரியது. அர்ப்பணிப்பு மிக்க இப் பணியின் நிமித்தம் அறிஞர் சோதனைகளை எதிர் கொண்டமை கவலைக்குரியதாகும். 17ஆம் வயதில் தொடங்கிய அன்னாரது ஆசை 70ஆவது வயதிலேயே நிறைவெய்தமை குறிப்பிடத்தக்கது. இம் முயற்சிக்கு இலங்கையைச் சேர்ந்த வர்த்தகரும் வழக்கறிஞருமான என்.எம்.எம்.ஹனிபா நன்கொடை வழங்கி ஒத்துழைத்தமை குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலங்களில் தமிழில் பல மொழிப்பெயர்ப்பு முயற்சிகள் இடம்பெற்ற போதிலும் இவரது மொழிப்பெயப்புக்கு நிகரானதாக அமையவில்லை என்ற கருத்துக்களும் கவனிக்கத்தக்கவைகளாகும்.

திருக்குறள் உலகின் பல மொழிகளில் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1330 குறள்களையும் பேராசிரியர், முனைவர் ஜாஹிர் உசேன் தமிழில் இருந்து அரபு மொழிக்கு முதல் முதலாக மொழிப்பெயர்த்துள்ளமையை அறியலாம். 1980இல் ஆங்கிலமொழிமூல மொழிப்பெயர்ப்பில் அமைந்த குறள்களை “புனிதமான கவிதைகள்” எனும் தலைப்பில் அரபு மொழியில் மொழிப்பெயர்த்திருந்த முயற்சியும் குறிப்பிடத்தக்கது. ஜாஹிர் உசேன் 2012இல் மொழிப்பெயர்ப்பு பணியை தொடங்கி 2014ஆம் ஆண்டு நிறைவு செய்திருக்கிறார். அரபில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல் சவூதி அரேபியாவின் கலாசார துறையின் கீழ் இயங்கும் “அரபிக் கவிஞர்கள் மாநாடு” நிழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது. திருக்குறள் உலகப் பொதுமறை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அரபு நாடுகள் முழுக்க திருக்குறளை எடுத்து செல்வதுதான் என் திட்டம். தமிழ் மொழியிலுள்ள ஏனைய இலக்கியங்களை அரபு மொழிக்கு மொழிப்பெயர்க்கும் அவரது முயற்சியும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே அரபியிலுள்ள இலக்கியங்களையும் தமிழ் படுத்தும் அன்னாரின் பங்களிப்பும் கவனத்திற்குரியது. இவரின் தலைமையில் சென்னை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அரபி நாடக விழா முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. அரங்கியலாளர்களான பிரளயன், மு.இராமசாமி, நாசர் ஆகியோர் பார்வையாளர்களாக பங்கேற்று இந் நிகழ்வு தொடர்பில் வெளிப்படுத்திய கருத்துக்கள் பலரின் அவதானத்தை தூண்டியுள்ளது. அத்தோடு ஆத்திசூடியும் இவரால் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஜவாஹிருல்லாவின் உரையானது மேற்குறித்த விடயங்கள் தொடர்பிலான தேடலை என்னில் விரிவுபடுத்திக் கொள்வதற்கான ஆர்வத்தை தூண்டியது எனலாம். அன்னாரது உரையானது பின்வரும் சாராம்சத்தை கொண்டிருந்தது. “இஸ்லாம் எங்கள் வழி இன்பத் தமிழ் எங்கள் மொழி” என்ற தாரக மந்திரத்துடனேயே தமிழ் மீது அதீத பற்றுடன் இம் மொழியை நேசிக்கின்றோம். தமிழ் நாட்டை விட தமிழ் மொழியை மலேசியர்கள் நேசிக்கும் பாங்கு எம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. தமிழ் பிறந்த தமிழ் நாட்டிற்கு முன்னரே உலகிலேயே முதன் முதலாக இருபத்துநான்கு மணி நேரமும் இயங்கும் தமிழ் வானொலிச் சேவையை தொடங்கிய பெருமை மலேசியாவைச் சாரும். மலேசியா ஒரு பன்முக சமூகமாக இருக்கிறது. இந்த நாட்டில 526 தமிழ் பள்ளிகளை அரசே நடத்துகிறது. இது இந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்கு மிகப் பெறுமதியான சேவையை அளித்து வருகின்றமையை எடுத்துக் காட்டுகிறது. கோலாலம்பூரை சுற்றி பார்க்கும் போது இங்கிருக்கும் உயரமான கட்டிடத்தில் தமிழ் மொழி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. துண் சம்பந்தன் எனும் பெயரே தமிழில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கட்டடத்தின் பின்னால் இன்னுமொரு முக்கியத்துவமும் இருக்கிறது. அந்தக் கட்டடத்தில்தான் மலேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கத்தின் தலைமையகம் அமைந்துள்ளது. இந்த அமைப்பு மலேசிய தமிழ் மக்களுக்கு ஏராளமான சேவைகளை வழங்கி வருகிறது. கடந்த 31 ஆண்டுகளாக இலக்கிய போட்டிகளை தொய்வின்றி நடத்தி வருகிறது. அப் போடடிகளின் ஓர் அம்சமாக ஈராண்டுகளுக்கு ஒரு முறை பன்னாட்டு புத்தக பரிசளிப்பு போட்டியினை நடத்துகிறது. தமிழ் நூல் போட்டிக்கு உலகத்திலேயே மிகப்பெரிய பரிசுத்தொகையை வழங்கும் போட்டியாக அமைகிறது.



அல்லாமா அப்துல் ஹமீது பாகவி

தமிழ், முஸ்லிம்கள் காலந்தோறும் தமிழுக்கு பங்களிப்பு செய்துள்ளார்கள். அவர்களை பட்டியல் படுத்துவதென்றால் மலேசியாவில் இருந்து தொடங்கலாம். மலேசியாவின் திறன் அமைப்பிலும் உருவாக்கத்திலும் ஒட்டுமொத்தமாக தமிழர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. முக்கியமாக காடு கழனி அழித்து அதனை பண்பட்ட பூமி ஆக்குவதில் வல்லவர்களாக தமிழர்களின் ஆளுமை குறிப்பிடத்தக்கதாகும். மலேசியாவில் தமிழ் மொழி வாழ்த்தையும், பொங்கல் கீதத்தையும் இயற்றியவர் ஒரு முஸ்லிம். அவ்வாறே இங்கு முதல் தமிழ் பாடசாலையை உருவாக்கியவரும் ஒரு முஸ்லிம் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே தென் கிழக்காசிய நாடுகளிலும் சரி, ஆசிய நாடுகளிலும் தமிழ் இலக்கிய உலகிற்கு இன்குலாப், அப்துல் ரஹ்மான், மேத்தா போன்ற ஆளுமைகள் அடையாளமாக காணப்படுகிறார்கள். இவர்களைப் போல பல தமிழ் முஸ்லிம் ஆளுமைகள் படைப்பிலக்கியத்திலும், மொழிப்பெயர்ப்பு, ஆய்வுகள் மற்றும் இதழியல் துறைகளிலும் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். அவ்வாறே சமகாலத்திலும் இத் துறையில் மிக நேசமுடன் பலர் இயங்கி வருகின்றமையும் அவதானத்திற்குரியதாகும்.

ஜவாஹிருல்லாவின உரையின் பின்னர் அவருடன் தொடர்ந்த உரையாடலில் இலங்கை முஸ்லிம்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள பங்களிப்பு தொடர்பிலும் கலந்துரையாடினோம். பிரித்தானியரின் ஆட்சியில் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து மலேசியா உருவாக்கத்தில் பங்கேற்ற தமிழர்களைப் போலவே இலங்கைக்கும் புலம்பெயந்த தமிழர்களின் மலையக சமூக உருவாக்கம் தொடர்பிலும் கலந்துரையாடல் விரிவுபெற்றது.

*(பயணம் தொடரும்)*

# படித்ததும் பகர்வதும் 193



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### அதிபர் எனும் தலைவர்



ஒரு பாடசாலையின் அல்லது கல்லூரியின் வளர்ச்சியும், வீழ்ச்சியும். அதன் அதிபரின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எதிர்காலம் பெரும்பாலும் அவரது செயற்பாட்டினாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்றால் மிகையல்ல. எமது நாட்டின் பாடசாலைகளில் பெரும்பாலானவற்றில். நூற்றுக்கணக்கான மாணவர்களும், சிலவற்றில் ஆயிரக்கணக்கான மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள்.

மாணவர்களது எதிர்காலத்தை ஒளிமயமானதாக மாற்றுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வது ஆசிரியர்களது கடமையாக இருக்கிறது என்பது உண்மையாயினும், அந்த ஆசிரியர்களை சரியான முறையில் வழி நடத்துகின்ற பொறுப்பு அதிபர்களையே சார்ந்திருக்கிறது. பாடசாலை ஒன்றில் அதிபராக இருப்பவர், பாடசாலை ஆசிரியர்களோடு சுமுகமான நல்லுறவை பேணுதல் வேண்டும். கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும், பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டியும், அவர்களுக்கு கொடுக்கக் கூடிய வசதிகளையும், சலுகைகளையும் இயலுமான வரையில், உயரிய அளவில் வழங்கியும் அவர்களது நல்லபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை தனது அடிப்படையான ஒரு செயற்பாடாக கொள்ளுதல் வேண்டும்.

எல்லா ஆசிரியர்களையும் ஒரே அளவில் திருப்தி செய்ய ஒரு அதிபரால் முடியாவிட்டாலும், கூடுதலானவர்களை திருப்தியடையச் செய்வதன் மூலம், உயர்ந்த, நல்ல, திருப்தியான, பொருத்தமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

ஒரு நிறுவனத்தின் தலைவர் என்ற வகையில் பாடசாலை அதிபர் ஒருவர் சிறந்த தலைவராக மாறுவதற்கு அதற்கே உரிய பண்புகளை அவர் தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும். உண்மைத் தன்மை, நம்பகத்தன்மை, தூரநோக்கான சிந்தனை, தொடர்பாடற் திறன், ஏனையவர்களுடன் சுமுகமான உறவு, குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும் பண்பு, தீர்மானிக்கும் ஆற்றல், திட்டமிடல், கலந்துரையாடல் போன்ற முக்கிய பண்புகளை அதிபர் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இதன்மூலம் அதிபர்கள் தமது கடமைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க வழியேற்படும்.

தமது பாடசாலையின் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி, அவற்றிலிருந்து உயரிய விளைவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அதிபர் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் குறைபாடாக உள்ள, தேவையாக உள்ள, அவசியமான வளங்களை இயலுமான வழிகளில், சகல முயற்சிகளையும் மேற்கொண்டு பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளையும் செய்தல் அவசியம்.

பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை ஒன்று திரட்டி அவர்களது நல்லாதரவை, பாடசாலையின் எல்லா விடயங்களுக்கும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இதற்கென அவர்களை கிரமமான முறையில், பொருத்தமான இடைவெளியில் சந்தித்து கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.


இதேபோன்று. கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு என்பவற்றின் உயர் அதிகாரிகளுடன் முறையான தொடர்புகளைப் பேணி, அதன் மூலம் பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பாடசாலை அதிபர்கள் மீது பாரிய பொறுப்புகள் நிறைந்திருக்கின்றன. உண்மையில் ஊரின், சமூகத்தின், நாட்டின் நாளைய தலைவர்களை உருவாக்கும் உன்னத பணி அவர்களது கரங்களிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள நம்பிக்கையாகும்.

உண்மையில் அதிபர் என்பவர் ஒரு ஊரின் தலைவர் போன்று, ஒரு சமூகத்தின் தலைவர் போன்று, பாடசாலையின் தலைவராக இருந்து, அதனை சரியான முறையில் நிருவகித்து, மாணவர்கள் உயரிய பயன்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களது எதிர்காலம் சுபிட்சமான முறையில் அமைவதற்கான வழிவகைகளை மேற்கொள்பவராக இருத்தல் வேண்டும். மாணவர்கள் உயரிய பயன்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நல்லாட்சியாளராக மிளிர வேண்டும்.

## புது வரவு

### "வகவக் கவிதைகள்"



2013இல் மீள ஆரம்பிக்கப்பட்ட, 'வகவம்' எனும் வலம்புரி கவிதா வட்டத்தின் 100ஆவது விஷேட கவியரங்கை முன்னிட்டு வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பு "வகவக் கவிதைகள்". வகவத்தின் தலைவர் என். நஜ்முல் ஹுசைன், பொருளாளர் ஈழ கணேஷ் ஆகியோரை தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு நூலாக வெளிவந்துள்ளது.

கவிஞர் கனிவுமதியின் வித்தியாசமான அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ள இத் தொகுப்பில் 122 வகவக் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் வகவக் கவிஞர்கள், பல்வேறு தலைப்புகளில் எழுதியுள்ள அரைப் பக்கம் முதல் ஆறு பக்கங்கள் வரையிலான தனியான கவிதைகள் இதில் காணப்படுகின்றன. புதுக் கவிதைகள் முதல் மரபுக் கவிதைகள் வரை பல விதங்களில், பல்வேறு வகைப்பட்டதான கவிதைகள் இத்தொகுப்பை அலங்கரித்துள்ளன.

வலம்புரி கவிதா வட்டத்தின் பௌர்ணமி கவியரங்குகளில் ஒரு கவிதையேனும் பாடி அரங்கேற்றியுள்ள கவிஞர்களின் கவிதைகள் மட்டுமே இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளமை விஷேட அம்சமாகும். இதில் இடம்பெற்றுள்ள கவிதைகளை எழுதியோரின் புகைப்படங்களும் அவர்களைப் பற்றிய சிறு குறிப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளமை இந்நூலை மிகச்சிறந்த ஆவணமாக, பாதுகாக்கக் கூடிய ஒன்றாக ஆக்கியுள்ளது எனலாம்.

வலம்புரி கவிதா வட்ட சிரேஷ்ட ஸ்தாபகர் கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர் கனி, தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், வீரகேசரி மற்றும் வீரகேசரி வார வெளியீடு பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், தமிழன் பத்திரிகையின் 'தமிழ் முரசு' பகுதியின் பொறுப்பாசிரியர் ஜீவா சதாசிவம், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம். பைறூஸ், காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோர் வலம்புரி கவிதா வட்டத்தின் 100வது விஷேட கவியரங்கை முன்னிட்டு வழங்கியுள்ள வாழ்த்துகளும் இந்நூலை மேலும் சிறப்பாக்கியுள்ளன.

வகவப் பொருளாளர் ஈழ கணேஷன் எழுதியுள்ள குறிப்பும், வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைனின் ஏழு பக்க தலைவர் உரையும் வகவத்தின் இப்போதைய வளர்ச்சியையும் அதற்கு துணை நின்றவர்களையும் கௌரவித்துள்ளன. "வகவம்" – ஒரு புதிய தலைமுறையின் ஆரம்பம் என்ற வகவச் செயலாளர் பீ. எம். முர்ஷிதீனின் அட்டைப்படக் குறிப்பு வலம்புரி கவிதா வட்டத்தின் 'மீள் ஆரம்ப'க் கதை'யை எடுத்துக் காட்டியுள்ளது.

'வகவக் கவிதைகள்' அனைத்து தமிழ் கவிஞர்கள் கரங்களிலும் இருக்க வேண்டிய ஒரு நூல் என்றால் மிகையல்ல.

நூல்: வகவக் கவிதைகள், தொகுப்பாசிரியர்கள்: கவிமணி என். நஜ்முல் ஹுசைன், ஈழகணேஷ், பக்கங்கள்:296, விலை: ரூபா. 800/=, வெளியீடு: எம். தருமலிங்கம் (ஈழகணேஷ்), வலம்புரி கவிதா வட்டம், தொடர்புகளுக்கு: நஜ்முல் ஹுசைன் (0741438447), முர்ஷிதீன் (0777388149), ஈழகணேஷ் (0717563646)

## நொறுக்குத் தீனி

### பெண்ணும் 'விசேட' தினங்களும்!




1. சரியான பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "காதலர் தினம்"
2. அன்பான பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "அன்னையர் தினம்"
3. தவறான பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "தியாகிகள் தினம்"
4. சோம்பேறிப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "உழைப்பாளர் தினம்"
5. பணக்கார பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "புத்தாண்டு தினம்"
6. அதி புத்திசாலிப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "முட்டாள்தினம்"
7. லூசுப் பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "குழந்தைகள் தினம்"
8. கோபக்கார பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "அடிமைகள் தினம்"
9. படித்த பெண்ணைத் திருமணம் செய்தால் தினமும் "ஆசிரியர் தினம்"
10. திருமணமே செய்யாமல் இருந்தால் தினமும் "சுதந்திர தினம்".

உண்மைதானா.?!

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### காயிதே மில்லத் வாழ்வில்.



காயிதே மில்லத் ஒருநாள் பொதுக் கூட்டத்துக்குச் சென்றுவிட்டு இரவு தாமதமாகி வீடு திரும்பினார். எப்பொழுதும் வழமையாக நேரங்காலத்தோடு தூங்கிவிடும் அவரது தாய் அன்று கண் விழித்திருந்தார். தாயார் தூங்காமல் விழித்திருப்பதைப் பார்த்து, "என்னம்மா, உடல் நலமில்லையா? தூங்காமல் விழித்திருக்கிறீர்களே?" என்று கேட்டார் காயிதே மில்லத்.

இரவுச் சாப்பாட்டினைக் கொண்டு வந்து அவரது முன்னே வைத்த தாய், "மகனே! நீ முதலில் சாப்பிடு. பின்னர் சொல்கிறேன்" என்றார்.

காயிதே மில்லத் சாப்பிட்டு முடித்த பின்பு தாயிடம், "அம்மா, சாப்பிட்ட பின்பு சொல்கிறேன் என்று சொன்னீர்களே... உங்கள் உடலுக்கு என்ன?" என்று மீண்டும் விசாரித்தார்.

"மகனே, எனக்கு உடல் நலமாகத்தான் இருக்கிறது. காலில்தான் சிறிது வலி இருக்கிறது. அதனால் தூக்கம் வராமல் விழித்திருந்தேன்" என்றார்.

தாயின் கால் வலியைப் பற்றிக் கேட்டதும் காயிதேமில்லத்தின் மனம் இலேசாக வலித்தது.

"அம்மா நீங்கள் படுத்துத் தூங்குங்கள். நான் உங்கள் கால்களை அழுத்தி விடுகிறேன். கால் வலி குறையும்" என்றார்.

தாயாரோ, "வேண்டாம் மகனே, எனக்கு கால் வலி சிறிது நேரம் கழித்துப் போய்விடும். நீ கூட்டத்திற்குப் போய் வந்ததால் களைப்பாய் இருப்பாய். நீ முதலில் போய் தூங்கு" என்றார்.

காயிதே மில்லத் படுக்கச் செல்லாமல் தாயின் காலைப் பிடித்து மெதுவாக அழுத்தியபடி இருந்தார். அந்தத் தாயின் கால் வலி மெதுவாகக் குறைய தாயார் அயர்ந்து தூங்கினார். அதிகாலையிலேயே எழுந்து பழக்கப்பட்ட அந்தத் தாய், வழக்கம்போல் எழுந்த போது, அப்போதும் காயிதே மில்லத் தூங்காமல் தாயின் காலை அழுத்தி விட்டுக் கொண்டிருந்தார். அதைப் பார்த்துக் கண் கலங்கிப் போனார்.

"மகனே, என் தூக்கத்திற்காக உன் தூக்கத்தை விட்டு, என் காலை அழுத்திக் கொண்டிருக்கிறாயே! நீ தூங்கவில்லையா?" என்று கேட்டார் அந்தத் தாய்.

"என் தூக்கம் இருக்கட்டும். தங்களின் கால் வலி இப்போது எப்படி இருக்கிறது? "என்று பதிலுக்கு கேட்டார் காயிதே மில்லத்.

அதற்கு தாயார், "மகனே என் கால் வலி போய் விட்டது. நீ இப்போதாவது சிறிது நேரமாவது தூங்கு!" என்றார்.

'தாய்க்குச் செய்யும் சேவைதான் உண்மையான சேவை' என்பதை காயிதே மில்லத் வாழ்வில் இடம்பெற்ற இந்த சம்பவம் மூலம் எல்லோரும் உணர வேண்டும்.

## நலமே வாழ்வோம்

### குடிநீர் போத்தல்கள் எச்சரிக்கை!



சந்தையில் விற்பனை செய்யப்படும் குடிநீர் போத்தல்களில் மீண்டும் நீர் நிரப்பி பாவிப்பது பொருத்தமானதல்ல என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த போத்தல்களில் கடுமையான சூரிய ஒளிபடும் நிலையில் சில இரசாயனங்கள் தண்ணீரில் கலக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகம் காணப்படுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட இத்தகைய போத்தல்களில் மீண்டும் நீர் நிரப்புவதை தவிர்த்து, கண்ணாடி அல்லது தரமான போத்தல்களை பயன்படுத்துவதே மிகவும் பொருத்தமானது

பாடசாலை மாணவர்களுக்கு தண்ணீர் கொடுத்து அனுப்புதல், தொழில்களுக்குச் செல்வோர் தமது உணவுப் பார்சல்களோடு தண்ணீர் கொண்டு செல்லுதல், வாகனங்களில் உபயோகிப்பதற்காக தண்ணீர் போத்தல்களைப் பயன்படுத்தல் போன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் கண்ணாடி அல்லது தரமான போத்தல்களை பயன்படுத்துவதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும். இதன்மூலம் தேவையற்ற தேகநல அசௌகரியங்களுக்கு ஆளாகாமல் பாதுகாப்பு பெற முடியுமென வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது ஒரு சாதாரண விடயம் போல் தோன்றினாலும், இத்தகைய செயற்பாடுகளில் போதிய முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ளுதல் பாதுகாப்பானதாகும்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

---




ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்

# புதிதாக வந்திருக்கிறாளே பேபி என்று ஒருத்தி வைத்துக் கொள்ளுங்களேன் அவளை மனதில் நிறுத்தி

அல்லது கொலை முயற்சி ஒன்று நடந்திருக்க வேண்டும்! சரி வா மாடிக்கு போய் கொஞ்சம் பார்த்து விட்டு வருவோம்!" என்று சொல்லிவிட்டு,

அங்கே படிந்திருந்த அந்த இரத்தக் கறை பிரதான கதவுவரை தொடர்ந்து சென்றிருந்தது!

ஆனாலும்,

முற்றத்தில் எந்த விதமான கறைகளும் படிந்திருக்கவில்லை!

சிந்துஜன் கழற்றிக் கொண்டு வந்திருந்த இரத்தக் கறை படிந்த அந்த மாபல் துண்டை நன்றாகப் பார்த்தார் சிரஞ்சீவி!

"ம் இது கண்டிப்பாக இரத்தக்கறை தான் ஆனால் இது யாருடைய ரத்தமாக இருக்கும் என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

திடீரென்று மேலே பார்த்த சிந்துஜனுக்கு, அங்கே அடிக்கப்பட்டிருந்த 'சீலிங்கில்' வித்தியாசமான ஓர் ஓட்டை விழுந்திருப்பதைக் கண்டு,

அதை சிரஞ்சீவிக்கு காட்டினான்!

அதில் ஏதோ வித்தியாசமிருப்பதை உணர்ந்து கொண்ட சிரஞ்சீவி,

எதிரில் இருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு,

அதில் ஏறி,

அந்த ஓட்டையைத் தடவிப் பார்த்தான்!

பிறகு,

தனது சட்டைப் பையில் இருந்த சிறிய கத்தியொன்றை எடுத்து,

அந்த ஓட்டையைப் பெரிதாக்கினார்!

என்ன ஆச்சரியம்!

அதற்குள், சுடப்பட்ட துப்பாக்கித் தோட்டா ஒன்றிருந்தது!

அதைக் கையில் எடுத்துப் பார்த்தார்!

"இங்கே ஒரு கொலை நடந்திருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்களா மாமா?" பதற்றத்துடன் கேட்டான் சிந்துஜன்.

"கொலை நடந்திருக்க வேண்டும்

மாடிப்படிகளில் ஏறி மேலே சென்றார்.

சிந்துஜனும் அவரைப் பின் தொடர்ந்தான்.

அந்த மாடியில்,

நான்கு அறைகள்!

ஓர் அறையில்,

இரண்டாக மடித்து

வைக்கக் கூடிய விதத்தில் இருந்த ஒரு சாக்குக் கட்டில் இருந்தது!

அந்த சாக்குக் கட்டிலுக்கு கீழே,

தூசு படிந்த ஒரு சூட்கேஸ் பெட்டி இருந்தது!

ஆனால்,

அதற்குள் எதுவும் இல்லை!

"ம் பயணங்கள் போகிறவர்கள் காலியான சூட்கேஸ்களை எடுத்துப் போக மாட்டார்கள்! இந்த பெட்டிக்குள் என்ன இருந்தது என்பதை சமையல் அறைக்குள் போனால் கண்டு பிடித்து விடலாம் என்று நினைக்கிறேன்!" என்று சொல்லிய படியே,

சமையல் அறையை தேடிச் சென்றார் சிரஞ்சீவி.

அவர் பின்னால் சிந்துஜனும்!

அது,

கொஞ்சம் விசாலமான சமையல் அறையாகவே இருந்தது!

நாலைந்து அடுப்புகள்!

பல ஆடைகளையும் தஸ்தா வேஜுகளையும் எரித்ததற்கான அடையாளமும் அங்கே இருந்தது! அங்கே கிடந்த அந்த சாம்பல் குவியலைக் கிண்டினார் சிரஞ்சீவி.

அதை,

மிக நிதானமாகவே செய்தார், இரண்டு அடுப்பு கற்களுக்கு நடுவில் சிக்கி,

முழுவதுமாக எரிந்து போகாத காகிதத் துண்டொன்றும் அதில் இருந்தது! அதை எடுத்து,

கையில் வைத்து ஆராய்ந்து பார்த்தார்!

"ம் சிந்துஜா இது என்ன கடதாசித் துண்டென்று உன்னால் சொல்ல முடியுமா என்று பார்" என்று சொல்லி,

அந்த கடிதத் துண்டை அவனிடம் கொடுத்தார். அதை வாங்கிப் பார்த்தான் சிந்துஜன். சாம்பல் நீல நிறக் கோடுகளைத் தவிர வேறு எதுவும் அதில் இருக்கவில்லை!

"இதில் அப்படி எதுவும் வித்தியாசமாக இல்லையே மாமா!"

"ஏன்டா முட்டாளே இது நூறு ரூபாய் தாளின் ஒரு துண்டு என்பதை இன்னுமா உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை? மத்திய வங்கியின் அதிகாரி ஒருவரிடமிருந்து இதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோம்!" சொல்லிவிட்டு,

தனது கைப்பைக்குள் கவனமாக வைத்துக் கொண்டார்.

"இந்த மாதிரி பணத்தை சுடுகின்ற பைத்தியக்காரன் யார் மாமா?" வியப்பை விழிகளில் கட்டிக் கொண்டான்.

"வேறுயார் அப்படி செய்யப் போகிறார்கள் எரிக்கும் அளவுக்கு காசுள்ளவர்கள் தான் அதைச் செய்வார்கள்!" கிண்டலாகச் சொன்னார் சிரஞ்சீவி.

துப்பாக்கி முனையில் கிடைத்த தகவல்களை வைத்து என்ன தெரிந்து கொள்ளலாம் என்பதைப்பற்றி,

திரும்பி வரும்போது,

இருவரும் புகையிரதத்தில் வைத்து ஆராய்ந்தார்கள்!

"இங்கே நாம் கண்டு பிடித்தவற்றை வைத்துக் கொண்டு கொஞ்சம் அலசிப் பார்ப்போம். அந்த அறைக்குள் இருந்தது மனித ரத்தம் என்றால் அதேபோல் அங்கே கண்டெடுத்த எரிந்துபோன அந்த தாள் பண நோட்டு என்றால் எனது கண்டு பிடிப்பு தப்பாகாது!" சொல்லிவிட்டு,

சிந்துஜனை நிமிர்ந்து பார்த்தார்.

"என்ன உங்கள் கண்டு பிடிப்பு?" ஆர்வத்துடன் கேட்டான் சிந்துஜன்.

"அதாவது சோண்டஸ் வங்கியின் மகேந்திரனை செல்வராகவன் துப்பாக்கி முனையில் வைத்து கொலை செய்திருக்கிறார்!" "என்ன! அவர் இந்தியாவுக்கு பாய்ந்தோடி விட்டார் என்று தானே சொன்னார்கள்.

"ஆமாம் அதுவும் மறக்கக் கூடாத ஒரு விஷயம்தான். இன்னொரு சமயம் அதைப் பற்றிப் பேசுவோம். என்னுடைய அடுத்த நடவடிக்கை தோட்டத்தை சுத்தமாக்கி எலும்புக் கூடொன்றைக் கண்டு பிடிப்பது தான்!"

"பிணத்தை தோட்டத்தில் புதைத்திருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"வாசல் கதவு வரையில் இரத்தக்கறை இருந்ததை நீ அவதானித்தாய் தானே அதனால் தான் அப்படி நான் நினைக்கிறேன்!"

"சொலமனிடம் இதைப்பற்றிச் சொல்லப் போகிறீர்களா?"



"இல்லை இந்த கேஸ் முடியும் வரை இது ரகசியமாகவே இருக்கும்! இப்போது இதைப் பற்றி அவரிடம் சொன்னால் அவர் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்! நாங்கள் அமைதியாக எங்கள் வேலையைச் செய்து கொண்டு போவோம்!" என்றார் சிரஞ்சீவி.

அன்றுகாலை,

அவர்கள் மருதானை புகையிரத நிலையத்தில் இறங்கும் போது,

காலை ஒன்பது மணியாகியிருந்தது.

அவர்கள் போக வேண்டிய மற்ற புகையிரதம் வருவதற்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் செல்லும் என்று அறிவித்ததால், இருவரும் வெளியே வந்து நகருக்குள் கொஞ்சம் நடந்து சென்றார்கள்! கொஞ்சதூரம் நடந்து வந்த அவர்கள், சற்றுத் தொலைவில் நடந்து சென்ற ஒருவனைப் பார்த்ததும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். முன்னால் நடந்து சென்றவன், சொலமனின் வேலைக்காரன், முனியாண்டி! மரியகடையில் உள்ள மார்க்கட்டு பக்கம் செல்வதை இருவரும் வியப்புடன் பார்த்தனர். "இவன் கொழும்பில் என்ன செய்கிறான்.

நாம் போய் அவனிடம் பேசிப் பார்ப்போமா?" என்றான் சிந்துஜன். "இல்லை வேண்டாம் அவன் என்ன செய்கிறான் என்று ரகசியமாகப் பார்ப்போம்!" என்று சொல்லிவிட்டு,

இருவரும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்! விரைந்து நடந்து வந்த முனியாண்டி, மார்க்கட்டுக்கு முன்னால் வெற்றிலை விற்றுக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் அருகில் வந்து நின்றான்.

சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டான்.

அவர்கள் இருவரும் நீண்ட நாள் நண்பர்கள் என்பதை, அவர்களின் நடவடிக்கைகளை வைத்து புரிந்து கொண்டார் சிரஞ்சீவி.

அவர்கள் இருவரும் மெல்ல நடந்து சென்று,

மார்க்கட்டுக்கு அருகில் இருந்த ஒரு முடுக்குக்குள் நுழைந்தார்கள். பிறகு, அரைமணித்தியாலங்கள் கடந்து வெளியே வந்தார்கள்! இது,

முனியாண்டியின் 'சொந்த' விஷயமாக இருக்கலாம் என்பதை நினைத்து, அதை மறந்துவிட்டு, மீண்டும் புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தார்கள்.

"சிந்துஜா உனக்கு அந்த பெண்ணைப் பற்றித் தெரியுமா ? இந்தப் பகுதியில் உள்ள எல்லோரும் அவளை பேபி அக்கா என்றுதான் அழைப்பார்கள். எல்லா பொலிஸ்காரர்களுக்கும் அவளைப் பற்றித் தெரியும். ஒரு காலத்தில் பெரிய தாதாவைப் போல்தான் அவள் வாழ்ந்தாள். இப்போ சிறகுகள் உடைந்ததனால் தான் வெற்றிலை விற்றுப் பிழைக்கிறாள். முன்பு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நர்சுகளுக்கு உதவி செய்பவளாக வேலை செய்தாள். பைத்தியக்காரர்களின் உணவு, பணம் போன்றவற்றை திருடியதினால் வேலையை இழந்துவிட்டாள். அதன்பிறகு விபசார விடுதி ஒன்றை நடத்தி வந்தாள். இதில் சிக்கிக் கொண்டு ஆறு மாதங்கள் சிறையில் இருந்தாள்.

அதன்பிறகு கஞ்சா சாராயம் எல்லாம் விற்கத் துவங்கினாள். அதற்காகவும் சிறை சென்று வந்தாள். இப்போது அதையென்றல்லாம் விட்டு விட்டுத்தான் இந்த வெற்றிலை விற்கும் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறாள்.

பேபியின் சரித்திரத்தை திறந்து வைத்தார் சிரஞ்சீவி.

அவர்கள் கொழும்பில் இருந்து,

வீடுவந்து சேர்ந்த போது,

பகலாகிவிட்டது.

"ஹலோ சிரஞ்சீவி எப்படி நீங்கள் போன பயணம் பிரயோசனமாக இருந்ததா ?" என்று கேட்டபடியே,

ஹாலில் அமர்ந்திருந்த சொலமன் எழுந்து நின்றார்,

"ம் எதிர்பார்த்த அளவுக்கு எதுவும் கிடைக்கவில்லை!" என்று சிரித்தபடியே சொன்னார் சிரஞ்சீவி.

சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்ட சொலமன், "எங்கே துர்கா வரவில்லையா ! உங்களுடன் சேர்ந்து வருகிறேன் என்று சொல்லிவிட்டு நேற்று கொழும்புக்கு வந்தாளே ஏன் அவளைக் கூட்டிக் கொண்டு வரவில்லையா," என்று கேட்டார். "என்ன! எங்களுடன் வருவதாகச் சொல்லி துர்கா நேற்று கொழும்புக்கு போனாளா?"

வியப்புடன் கேட்டார் சிரஞ்சீவி

அவர் சொன்னதைக் கேட்டு,

பதறிப் போனான் சிந்துஜன்!

(தொடரும்)

# சிறுவர் உலகம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 116

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ★ | 05 |
| ★ | 06 | ★ | 07 | ★ | 08 |
| 09 | 10 | ★ | 11 | 12 | 13 |
| 14 | ★ | 15 | ★ | ★ | 16 |
| ★ | 17 | 18 | 19 | 20 | ★ |
| 21 | 22 | ★ | 23 | 24 | 25 |

பெயர் ...............................................
வகுப்பு ...............................................
தொலைபேசி இல ...............................................
பாடசாலை பெயர் ...............................................
வதிவிட முகவரி ...............................................
...............................................
.............................. ..............................
மாணவரின் பெயர்
வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) இயற்கை அனர்த்தங்களில் மிகவும் ஆபத்தானது இது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இந்த அனர்த்தம் இடம்பெறுவதில்லை. நெருப்பின் தாக்கத்துடன் சம்பந்தப்பட்ட இந்த இயற்கை அனர்த்தமானது பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சிலி போன்ற பல நாடுகளில் ஏற்படுவது வழக்கமாகும்.
(9) இலட்சத்தின் நூறு மடங்கு. (தலைகீழான சொல்)
(11) மேகத்தின் ஒத்தபொருள் சொல்.
(17) வளிமண்டலத்தில் உருவாகின்ற தாழமுக்கம் காரணமாக ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தம் இது.
(21) பெண்கள் தமது காதுகளில் அணிகின்ற ஆபரணம். இக்காலத்தில் ஆண்கள் சிலரும் நாகரிகம் கருதி காதில் அணிந்து கொள்கின்றார்கள்.
(23) நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய ஈரூடகவாழி உயிரினம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(2) மரத்தைத் தறிப்பதற்கும், விறகு வெட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகின்ற கூரிய உபகரணம். (தலைகீழான சொல்)
(4) குழந்தைகள் பேசுகின்ற பேச்சு இது. சரியாகப் புரிந்து கொள்ள முடியாமல் விட்டாலும், ரசிக்கத்தக்கதாக இருக்கும் அப்பேச்சு. (தலைகீழான சொல்)
(5) குதிரைக்கு இவ்வாறும் ஒரு ஒத்தபொருள் சொல் உள்ளது. (தலைகீழான சொல்)
(9) எமது இதயத்தில் இருந்து உடலின் பாகங்களை நோக்கி இரத்தம் செல்கின்ற குருதிக்கலன்கள் இப்பெயர் பெறும். (தலைகீழான சொல்)
(15) சமாதானப் பறவை.
(17) வெப்பத்தைக் குறிக்கும் சொல்.
(19) எலியின் வசிப்பிடம். (தலைகீழான சொல்)
(20) புவியைச் சூழ்ந்துள்ள சடப்பொருள். கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அசைந்தால் தொடுகையினால் உணர முடியும். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 115

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. திமிங்கிலம் 07. மான் 11. சனம்
14. நதி 17. சபை 22. கிளி 24. குதிரை

**மேலிருந்து கீழ்**

01. சமாதி 02. மின்னல் 04. கிளை 06. நகம்
14. சதி 17. குப்பை 19. களி 21. கூரை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 114

### பாராட்டு பெறுவோர்

**1. பஹ்மா**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி, கம்பளை,
இல. 12/22, இளவதுறை, கம்பளை.

**2. எம். இர்ஷாத் பாத்திமா**
தரம் 05, முகர்ரமா கல்லூரி,
இல. 10, போதிராஜ மாவத்தை, கொழும்பு - 10.

**3. ஆயிஷா ஜின்னா**
தம் 05, ஏத்துமுல்ல ம. வித்தியாலயம்,
இல. 325, ஏத்துமுல்ல, நாகொலாகொட.

**4. எம்.என். அப்லல் அஹ்மத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**5. எம்.ஆர். அம்ரத் அயானி**
தரம் 03, அல் ஹிதாயா மகளிர் கல்லூரி, பாலமுனை,
இல. 14, பாலமுனை - 0.3

**6. துவாரகன்**
தரம் 07C, கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை 01.

**7. த. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
உடையார் வீதி, காரைதீவு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 116
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**ஈகை : ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்
தாமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர்**

***தெளிவுரை :***
*தாம் சேர்த்து வைத்துள்ள பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்து விடும் வன் கண்மை உடையவர், பிறர்க்கு கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ.*

## மனிதர்களை கொல்லும் தீவு



இத்தாலியில் உள்ள இந்த கயோலா தீவு மிக அழகான ரம்மியமான தீவாம். இந்த அழகான தீவிற்கு பின் பல மர்மங்கள் உள்ளதாம்.

இத்தாலியில் பல சிறு நாடுகள் உள்ளன. அவற்றில் ஒன்றான நேப்ல்ஸ் நாட்டு மக்கள் இந்த தீவை சபிக்கப் பட்டது என்று கூறுகின்றனர். அதற்கு அவர்கள் பல காரணங்களையும் கூறுகின்றனர்.

இந்த தீவின் சொந்தக்காரர்கள் (முதலாளிகள்) எல்லாம் அற்ப ஆயுளில் இறந்து விடுவதால் இந்த மக்கள் இதை கண்மூடித்தனமாக நம்புகின்றனர்.

1920 களில் இந்த தீவுக்கு உரிமையுடையவர் சுவிஸ் ஹான்ஸ் பௌன் என்பவர் ஒரு தரை விரிப்பில் சுருட்டப்பட்டு இறந்து கிடந்தார். அவரின் மனைவி அருகில் உள்ள கடலில் மூழ்கி இறந்து போனார்.

இதற்கு அடுத்து இந்த தீவை வாங்கிய ஜேர்மன் ஓட்டோ க்ருன்பக் தீவின் மாளிகையில் வசிக்கும் போது மாரடைப்பால் இறந்தார். அடுத்த உரிமையாளர் மிகப்பெரிய தொழில் அதிபர் மௌரிசேய்வேஸ் சாண்டோஸ். இவர் பைத்தியம் பிடித்து மனநல காப்பகத்தில் இருக்கும் போது தற்கொலை செய்து கொண்டார்.

இவருக்கு பிறகு இதை வாங்கியவர் ஒரு ஜேர்மன் இரும்பு தொழிற்சாலை அதிபர். இதை வாங்கியவுடன் அவரின் நடவடிக்கைகள் மாற்றமடைந்து மொத்த சொத்தும் அழிந்தது.

அடுத்து வாங்கிய ஜியானி அக்னெல்லி, அவரின் பெரும்பாலான உறவினர்கள் மரணமடைந்ததாக கூறப்படுகிறது. பிறகு பால் கெட்டி என்பவர் வாங்கினார். வாங்கிய பின் அவரின் பேரனை யாரோ கடத்தினார்கள்.

இச்சம்பவம் 2009 ஆம் நடந்தது. அதன் பின்னர் பிரான்கோ அம்ப்ரோசியா மட்டும் அவரின் மனைவி ஜியோவன்னா சாக்கோ இருவரும் இந்த தீவின் எதிரில் உள்ள ஒரு மாளிகையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது கொலை செய்யப்பட்டனர்.

இவை அனைத்தும் தற்செயலாக நடந்தது கூட இருக்கலாம்! இருந்தாலும் இந்த தீவின் அருகில் இருக்கும் மக்களுக்கு உண்மை தெரியும் வரையில், இவை அனைத்தும் புரியாத ஒரு புதிராகவே இருக்கும் என்பதில் மட்டும் ஐயமில்லை.

## இவ்வார மழலை




ஈஷா

## சிறுவர் சித்திரங்கள்



எஸ். ஹரேன் விஷால்
தரம் 09, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி.




## நட்புக்காக அமைக்கப்பட்ட இரு மாதங்கள்

ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களில் மட்டும் 31 ஆம் திகதிகளில் முடிவடைகின்றன. காரணம் என்னவென்றால் மாதங்களும் கிரேக்க மன்னர்களின் பெயர்களை கொண்டது.

அதில் ஜூலியஸ் மற்றும் அகஸ்டியஸ் மன்னர்கள் இருவரும் உயிர் நண்பர்கள். அவர்கள் இருவருக்கும் சம உரிமை அளிப்பதற்கே அவர்களின் பெயர்களை கொண்ட ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் 31 ஆம் திகதிகளில் முடிவடைகின்றன. இது ஒரு நட்பின் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## பூவே சொல்லு

சிங்காரப் பூவே
செம்பருத்திப் பூவே
தங்கச்சியைப் போலே
தலையை ஆட்டும் பூவே!

உன்னை ஒன்று கேட்பேன்
ஒளிக்காமல் நீ சொல்வாய்!
கண்ணைப் பறிக்கும் பூவே
கதை ஒன்று சொல்வாய்!

உன்னை ஏனோ கண்டு
ஓடி வருது வண்டு?
என்ன கதை சொன்னாய்?
ஏனோ தேனும் தந்தாய்?

நேற்று மாலை பார்த்தேன்
நீயும் மூடி இருந்தாய்!
காற்றில் ஆடும் பூவே
காலை ஏன் நீ விரிந்தாய்?

ஹிதாயா பாரிஸ்
மள்வானை

## வயிற்று வலியை உண்டாக்கும் பேப்பர் கப்



தற்போது பெரும்பாலான கடைகள் மற்றும் உணவகங்களில் பேப்பர் கப்கள் பயன்படுத்தப்படுகின்றன. மலிவான, தரம் குறைந்த காகிதங்களால் செய்யப்படும் கப்கள், தண்ணீராலோ, திரவத்தாலோ கரைந்து விடக் கூடாது என்பதற்காக, அதன் உட்புறங்களில், மெழுகு பூசப்படுகிறது. இப்படி மெழுகு பூசப்பட்ட கப்களில், மிகவும் சூடான தேனீர் அல்லது வேறு ஏதும் சூடான பானங்கள் ஊற்றப்படும் போது அவை உருகி நம் வயிற்றுக்குள் சென்று விடுகிறது.

அது, நாளடைவில், வயிற்றில் பல உபாதைகளை தோற்றுவிக்கிறது. ஆகையால், தேனீர் மற்றும் வேறு ஏதும் சூடான பானங்கள் அருந்துவதற்கு, கண்ணாடி அல்லது செரமிக் கப்களே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

## எலிகளின் அதிசயங்கள்



★ எலிக்கு நீரில் நீந்துவது மிகவும் பிடிக்கும். எலிகளால் இரண்டு மூன்று நாட்கள் கூட தண்ணீரில் மிதந்து நீந்திக் கொண்டு இருக்க முடியும்.

★ மலசல கூடத்தின் வழியாக நீந்தி வீட்டிற்குள் நுழைந்து விடும். அதே வழியில் வெளியில் சென்றுவிடும்.

★ அதிக ஞாபக சக்தி உள்ளன. மனித முகங்களை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளும்.

★ இதை செல்லப்பிராணியாக வளர்ப்பவர்கள் பெயர் வைத்து அழைத்தால் அறிந்து கொண்டு விடும்.

★ எலி அதன் வழியை மறக்கவே மறக்காது.

★ அவற்றின் வால் அதன் உடல் வெப்பத்தை சீராக வைக்கும். அதன் உடலை சமநிலைப்படுத்த உதவும். மேலே ஏறவும் உதவும்.

★ ஒரு எலி நோய்வாய்ப்பட்டால் மற்ற எலிகள் அதை நன்றாக கவனித்து கொள்ளும்.

★ அது தன் உடலை நன்றாக சுத்தம் செய்து வைத்துக் கொள்ளும். பூனை, நாயைவிட அதிக சுத்தமாக இருக்கும்.

## கடற்கன்னி



*உலகில் கடற்கன்னிகள் தொடர்பில் பல்வேறான விடயங்கள் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் அது இன்று வரை நம்பமுடியாமல் உள்ளது. புராண இதிகாச கதைகளில் இது பற்றி கூறப்பட்டுள்ளன. இதனைப் பலர் நேரில் பார்த்தாகக் கூறியுள்ளனர். ஆனால் அறிவியல் ரீதியாக கடற் கன்னிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கண்டறியப் படவில்லை.*

*கடற்கன்னிகளை தெய்வமாக வழிபட்டு வரும் சம்பிரதாயங்களும் காணப்படுகின்றன.*

*கடற் கன்னிகளின் உடலின் மேற் பகுதி பெண்ணாகவும் கீழ் பகுதி மீனின் வாள் மாதிரி இருப்பதாக கூறப் படுகின்றது. மேலும் கடலின் ஆழ் பகுதிகளில் இவை வாழ்வதாக நம்பப்படுகின்றன.*

*புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள கடற்கன்னிகளை முதலில் நேரில் பார்த்ததாகக் கூறியவர் கிறிஸ்டோபர் கொலம்பஸ். இவர் 1493இல் கடல் வழி பயணம் மேற் கொண்ட போது கரீபியன் தீவுகளுக்கு இடையே கடற்கன்னிகள் மூன்றைப் பார்த்தாகக் கூறியுள்ளார்.*

*ஆனால், இந்தக் கடல் கன்னிகள் அழகிய தோற்றத்தை கொண்டிராமல் அவலட்சணமாக இருந்ததாகவும் அது கப்பலை கடலுக்குள் சாய்த்து விடும் தன்மைக் கொண்டது எனவும் அதிர்ச்சியான தகவலைக் கூறியுள்ளார்.*

*ஆனால் அப்போது பலர் கொலம்பஸ் உண்மையில் கடற்கன்னியை பார்க்கவில்லை என்றும் அவர் பார்த்தது மெனடி என்னும் கடல் வாழ் உயிரினம் என்றும் கருத்து தெரிவித்திருந்தனர். கடலில் பல நாட்கள் பயணம் செய்யும் கொலம்பஸுக்கு மெனடிக்குக்கும் கடற் கன்னிக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்குமா?.*

*மேலும் 1608 இல் ஐரோப்பாவைச் சேர்ந்த ஹென்றி ஹட்சன் என்பவர் கடல் பயணத்தின் போது கடல் கன்னியைப் பார்த்ததாகவும் அந்தக் கடற் கன்னி பல கடற் கன்னிகளை அழைத்து வந்ததாகவும் சிறிது நேரத்தில் அவற்றைக் காணவில்லை எனவும் அவரும் அவருடன் பயணித்தவர்களும் கூறியிருந்தனர்.*

*அதாவது ஒரு கடற் கன்னி கூட்டத்தையே பார்த்தாகக் கூறியிருந்தனர்.*

*அதன் பின்னர் அப் பகுதியில் மீண்டும் பயணித்த போதும் அங்கு ஒரு கடற்கன்னிக் கூடக் தென்படவில்லை எனக் கூறியிருந்தார். ஹென்றி ஹட்சன் பார்த்ததும் மெனடி என்ற கடல் வாழ் உயிரினம் எனக் கூற முற்பட்டாலும் உண்மையில் அதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், ஹென்றி ஹட்சன் கடற்கன்னியைப் பார்த்ததாகக் கூறியது அலஸ்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான பகுதியில். அந்தக் கடற்பகுதியில் மெனடி என்ற உயிரினமே கிடையாது. அதனால் ஹென்றி ஹட்சன் உண்மையில் பர்த்தது கடற்கன்னிகளா என்பது மர்மமாகவே உள்ளது.*

*கடற்கன்னிகளில் பெண்கள் மட்டுமல்லாது ஆண்களும் இருப்பதாக கூறப்படுகின்றது. கடற்கன்னிகள் வேட்டையாடி வரும் உணவை உண்டு வாழ்வதாகக் கூறப்படுகின்றது. அதேபோல் 1737ஆம் ஆண்டு நவம்பர் 10இல் ஸ்பெயின் கடற்கரையில் ஒரு கடற்கன்னியின் உடல் கிடைத்ததாகவும் அதன் முகத்தில் தாடி, மீசை இருந்ததுடன் அதன் நிறம் மிகவும் கருப்பாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

*2012இல் சிம்பாப்வேயில் நீர்ப்பாசன அமைச்சர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அணைக் கட்டச் சென்ற போது அங்கு இருந்த கடற்கன்னிகள் அணை கட்ட விடாமல் குழு உறுப்பினர்களை வேட்டையாடி விரட்டி அடித்ததாக கூறியுள்ளார். அதனால் அங்கு அணைக் கட்டப்படவில்லை எனவும் அவர் கூறியிருந்தார். இது எந்த அளவு உண்மை என அறியப்படவில்லை.*

*கடற்கன்னிகள் தொடர்பில் இந்தியா, கிறீஸ், ஜப்பான், அமெரிக்கா, சீனா மற்றும் தாய்லாந்து முதலிய நாடுகளில் பரவலாக நம்பப்படுகின்றது. ஆனால் இதுவரை கடற்கன்னிகள் இருப்பதற்கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை.*

கு. அவினாஷ் - வத்தளை

# விளையாட்டு

## உலகக் கிண்ணம் ஆரம்பம்





**புதுஇடம், அதிக அணிகள், அதற்கேற்ப அதிக போட்டிகள், அதிக சவால் என்று டி20 உலகக் கிண்ணப் போட்டி இன்று (02) ஆரம்பமாகிறது. உண்மையில் அமெரிக்க நேரப்படி பார்த்தால் நேற்றே போட்டி ஆரம்பமாகிறது என்றபோது, காலத்தில் இலங்கை முந்திச் செல்வதால் இலங்கை நேரப்படி இன்று காலை 6 மணிக்குத் தான் டி20 உலகக் கிண்ணத்தின் முதல் போட்டி ஆரம்பமாகிறது.**

அதிலும் முதல் போட்டியும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. டலாஸில் நடைபெறும் இந்தப் போட்டியில் அமெரிக்கா மற்றும் கனடா அணிகள் மோதுவது நவீன கிரிக்கெட்டுக்கு பரீட்சயம் இல்லாததாக இருந்தாலும் இந்த இரு அணிகளுமே கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது சர்வதேச போட்டியில் ஆடின. அது நிகழ்ந்தது 1844 ஆம் ஆண்டு நியூயோர்க்கில். ஆனால் தற்காலத்தை பொறுத்தவரை இந்த இரு அணிகளும் கத்துக்குட்டிகள்தான்.

கடைசியாக 2022 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் டி20 உலகக் கிண்ணம் நடந்தபோது இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி இங்கிலாந்து சம்பியன் கிண்ணத்தை வென்றது. அப்போது மொத்தம் 16 அணிகளுடன் 45 போட்டிகள் தான் நடந்தன. இம்முறை மொத்தம் 20 அணிகளுடன் 55 போட்டிகள் நடைபெறப்போகின்றன.

மேற்கிந்திய தீவுகளுடன் அமெரிக்காவும் சேர்ந்தே போட்டிகளை நடத்துகின்றன. ஆரம்ப சுற்றுப்போட்டிகள் அமெரிக்காவில் நடைபெறுவதால் அது எவ்வாறு இருக்கும் என்பது கிரிக்கெட் உலகுக்கு புதிதாக அமையும்.

உலகக் கிண்ணத்திற்கென்றே தயாரிக்கப்பட்ட தற்காலிக மைதானங்கள் மற்றும் பாரம்பரிய மைதானங்களை புதுப்பித்தே போட்டிகள் நடத்தப்படுகின்றன. எப்படி இருந்தலும் அமெரிக்காவில் ஆடுகளம் எப்படி இருக்கும் என்பது தான் பெரிய அணிகளுக்கு இருக்கு பெரிய குழப்பமும் சவாலுமாக அமையும்.

அமெரிக்கா முதல் முறை உலகக் கிண்ணத்தை நடத்துவது மாத்திரம் அன்றி அது முதல் முறையாகவே உலகக் கிண்ணத்தில் ஆடப்போகிறது. அத்தோடு கனடா மற்றும் உகண்டா அணிகளும் முதல் முறையாகவே டி20 உலகக் கிண்ணத்தில் களமிறங்குகின்றன.

முந்தைய டி20 உலகக் கிண்ணத்தில் முதல் எட்டு இடங்களை பெற்ற இங்கிலாந்து, பாகிஸ்தான், நியூசிலாந்து, இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நெதர்லாந்து மற்றும் இலங்கை இம்முறை நேரடி தகுதி பெற்ற நிலையில் தரவரிசையில் அடுத்து இருந்த ஆப்கான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் உலகக் கிண்ணத்திற்கு முன்னேறின.

ஐரோப்பிய பிராந்திய தகுதிகாண் சுற்றின் மூலம் அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளும் கிழக்காசிய–பசிபிக் தகுதிகாண் சுற்றின் மூலம் பப்புவா நியு கினியும், ஆசிய தகுதிகாண் சுற்றின் மூலம் ஓமான் மற்றும் நேபாள அணிகளும் தகுதிபெற்றன. ஆபிரிக்க பிராந்திய தகுதிகாண் சுற்றில் உகண்டாவுடன் நமீபியாவும் உலகக் கிண்ணத்திற்கு முன்னேறியது.

### போட்டி விபரம்

**ஏ குழு:**
இந்தியா, பாகிஸ்தான், அயர்லாந்து, கனடா, அமெரிக்கா

**பி குழு:**
இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நமீபியா, ஸ்கொட்லாந்து, ஓமான்

**சி குழு:**
நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், ஆப்கானிஸ்தான், உகண்டா, பப்புவா நியு கினி

**டி குழு:**
தென்னாபிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ், நெதர்லாந்து, நேபாளம்

20 அணிகளும் ஆரம்ப சுற்றி ஐந்து அணிகளாக பிரிக்கப்பட்ட நான்கு குழுக்களின் கீழ் மோதவுள்ளன. இதன்போது ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் ரவுன் ரொபின் முறையில் தலா ஒரு முறை மோதும். முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும். அவ்வாறு எஞ்சிய எட்டு அணிகளும் சுப்பர் 8 சுற்றில் தலா நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டு இரு குழுக்களில் மோதும்.

### ஆரம்ப சுற்று:

இதில் சுப்பர் 8 சுற்றுக்கு பிரதான எட்டு அணிகளான இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை முன்னேறும் பட்சத்தில் அந்த சுற்றில் குழு நிலை முன் திட்டமிப்பட்டபடி இருக்கும். அது குழு நிலையின் முடிவுகள் எந்த வகையில் இருந்தபோதும் மாறாது.

எனவே சுப்பர் 8 சுற்று இப்படி இருக்கக் கூடும்

**குழு 1:**
இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இலங்கை

**குழு 2:**
பாகிஸ்தான், இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா

இதில் திட்டமிடப்படாத அணி சுப்பர் 8 இற்கு முன்னேறும் பட்சத்தில் அந்த அணி எந்த அணி வெளியேறுகிறதோ அதன் இடத்தை பிடிக்கும். ஒருவேளை ஒரே குழுவில் திட்டமிடப்படாத இரு அணிகள் சுப்பர் 8 சுற்றுக்கு வந்தால் அது ஆரம்ப சுற்றில் பெற்ற இடத்தை பொறுத்து சுப்பர் எட்டில் இடம்பெறும்.

சுப்பர் 8 இல் ஒவ்வொரு அணியும் தமது குழுவில் இருக்கும் மற்ற அணியுடன் மோதி இரண்டு குழுக்களிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

மோசமான காலநிலையால் அரையிறுதி போட்டி ஒன்று முழுமையாக நடத்த முடியாமல்போனால் சுப்பர் 8 இல் முன்னிலையில் உள்ள அணி இறுதிக்கு தகுதி பெறும்.

### இலங்கைக்கு எப்படி?

வனிந்து ஹசரங்க தலைமையிலான இலங்கை அணி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் ஒப்பீட்டளவில் வலுவாகவே இருக்கிறது. குறிப்பாக வனிந்து, மஹீஷ் தீக்ஷன, துஷ்மன்த சமீர, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பதிரண, நுவன் துஷார என்று பந்து வீச்சு முகாம் நம்பிக்கை தருகிறது.

என்றாலும், அதனை குறிப்பிடத்தக்க பின்னடைவாக பார்க்கலாம்.

குறிப்பாக இலங்கை அணி ஆரம்ப சுற்றிலும் நெதர்லாந்தை எதிர்கொள்ளப்போவதால் எதிரணிக்கு இது உற்சாகத்தை தரக்கூடியதாக இருக்கும்.

என்றாலும் அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ், முன்னாள் அணித் தலைவர் தசுன் ஷானக்க, குசல் மெண்டிஸ் மற்றும் வனிந்து ஹசரங்க போன்ற வீரர்கள் வேகமாக துடுப்பெடுத்தாடக் கூடியவர்களாக உள்ளனர்.



துடுப்பாட்டத்தில் நின்று பிடித்து நிதானமாக ஆடும் வீரர்களுக்கே சற்று முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது அங்குள்ள ஆடுகளங்களுக்கு பொருத்தமாக இருக்கும் என்பது தேர்வாளர்களின் நம்பிக்கை.

என்றாலும் கடந்த செவ்வாயன்று நடந்த நெதர்லாந்துக்கு எதிரான பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி தோல்வியை சந்தித்தது. பயிற்சிப் போட்டி என்பதால் அதனை பெரிதாக பொருட்படுத்த முடியாது

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகள் ஆடுகளங்கள் சற்று மந்தமாக சுழற்பந்துக்கு உதவக் கூடியதாக இருக்கும் என்பது பொதுவான நம்பிக்கை. என்றாலும் பௌண்டரி எல்லை சிறியது என்பது கவனிக்க வேண்டியது. அதற்கு ஏற்பவே இலங்கை அணித் தேர்வும் இருக்கிறது. ஆனால், வலுவான அணிகளின் வேகமான துடுப்பாட்டங்கள் இந்த நம்பிக்கையை எத்தனை உண்மையாக்கும் என்பது போகப்போகத் தான் புரியும்.



### இலங்கை அணியின் போட்டிகள்:

***ஜூன் 03: இலங்கை – தென்னாபிரிக்கா, நியூயோர்க், இரவு 8.00***

***ஜூன் 08: இலங்கை – பங்களாதேஷ், டலாஸ், காலை 6.00***

***ஜூன் 12: இலங்கை – நேபாளம், லோடர்ஹில், அதிகாலை 5.00***

***ஜூன் 17: இலங்கை – நெதர்லாந்து, கிரோஸ் இஸ்லெட், காலை 6.00***

### யாருக்கு வாய்ப்பு

வெற்றி வாய்ப்பு என்று வரும்போது கடந்த ஒரு தசாப்தத்தில் இந்தியா தான் முன்னிலையில் இருக்கும். ஐ.பி.எல். முடிந்த கையோடே இந்திய அணி உலகக் கிண்ணத்தில் களமிறங்குவதன் சாதகம் பற்றி பெரிதாக பேசப்பட்டாலும் அது பாதகமாகவும் தாக்கம் செலுத்தலாம்.

ஓட்ட இயந்திரமாக முன்னணி வீரர் விராட் கொஹ்லி செயற்பட்டாலும் அவரது ஓட்ட வேகம் சந்தேகங்களை எழுப்புகிறது. ரோஹித் ஷர்மா தொடர்ந்து ஆபத்தான வீரராக இருக்கிறார். என்றாலும் இந்தியாவில் பந்துவீச்சு வரிவை வலுவாக இருப்பதோடு அது எந்த நேரத்திலும் போட்டியை திசைதிருப்பும் பலம் மிக்கது.

மற்றது அவுஸ்திரேலிய அணி பற்றியும் பலரும் அவதானம் செலுத்துகிறார்கள். அண்மையில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ணத்தை வென்ற அந்த அணியின் உற்சாகம் இன்னும் தணியவில்லை. அணியின் கட்டமைப்பு எப்படி இருந்தபோதும் அணித் தலைவர் பட் கம்மின்ஸ் தலைமை பற்றி நம்பிக்கை உச்சத்தில் இருக்கிறது.

மூன்றாவது முறையாக உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்புடன் களமிறங்கும் நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அணியில் அதிரடி துடுப்பாட்ட வரிசை ஒன்று இருக்கிறது. என்றாலும் ஆட்ட சூழல் அதற்கு பொருந்துமா என்ற மிகப்பெரிய கேள்வியும் இன்னும் விடுவிக்கப்படாது உள்ளது. எனவே இந்தத் தொடரில் இங்கிலாந்துக்கு முழுமையாக சாதகமாக அல்லது பாதகமாக இருக்க வாய்ப்பு அதிகம்.

இம்முறை உலகக் கிண்ணத்திற்கு பாகிஸ்தான் கடைசியாகவே அணியை தேர்வு செய்து அறிவித்தது. அணித் தேர்வில் அதிகம் கவனம் செலுத்தி இருப்பது தெரிகிறது. அதன் பந்துவீச்சு வரிசை எப்போதும்போல் வலுவாக இருந்தாலும் துடுப்பாட்ட வரிசையில் கோளாறு தெரிகிறது. என்றாலும் பாகிஸ்தான் என்பதால் எதுவும் நடக்கலாம்.

அண்மைக்காலங்களில் உலகக் கிண்ணங்களில் நியூசிலாந்து சிறப்பாக ஆடி வருகின்றபோதும் இன்னும் கிண்ணத்தை வெல்லத் தான் முடியாமல் இருக்கிறது. அது இம்முறையாவது கைகூடச் செய்ய கடுமையாக போராடும். தென்னாபிரிக்காவின் கதை சற்று முரணானது. அது உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு வலுவான அணியுடனேயே இருக்கிறது. இம்முறையாவது அதிர்ஷ்டத்திற்கு காத்திருக்கிறது.

போட்டியை நடத்தும் மேற்கிந்திய தீவுகள் பற்றி எதிர்வுகூற முடியாது. அந்த அணியில் பந்தை பௌண்டரிக்கு வெளியே விளாசும் துடுப்பாட்ட வரிசை இருக்கிறது. பந்துவீச்சாளர்கள் ஒத்துழைப்பாக இருந்தால் அந்த அணியை அசைக்க முடியாது.

இதற்கு அப்பால் எந்த அணியேனும் டி20 உலகக் கிண்ணத்தை வென்றால் மிகப்பெரிய வரலாற்று திருப்பமாகத் தான் இருக்கும்.

### தெரியுமா?

- தொடரில் போட்டி ஒன்று சமநிலையாவதற்கு வாய்ப்பில்லை. போட்டி முடிவில் ஆட்டம் சமநிலையானால் முடிவை தீர்மானிக்க சுப்பர் ஓவர் பயன்படுத்தப்படும். அதிலும் போட்டி சமநிலையானால் முடிவு தீர்மானிக்கப்படும் வரை சுப்பர் ஓவர்கள் நடத்தப்பட வேண்டும்.
- வெற்றி பெறும் அணி இரண்டு புள்ளிகளை பெறும் என்பதோடு போட்டியின் முடிவு கிடைக்காவிட்டால் ஒரு புள்ளி கிடைக்கும். தோற்றால் புள்ளியில்லை.
- குழுநிலையில் முடிவை தீர்மானிப்பதற்கு அணி ஒன்று குறைந்தது தலா ஐந்து ஓவர்கள் ஆட வேண்டும். அதுவே அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் தலா 10 ஓவர்கள் ஆட வேண்டும்.
- மோசமான காலநிலையில் தடைப்பட்டால் முதல் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிக்கு மேலதிக நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இரண்டாவது அரையிறுதியில் மேலதிக நாள் ஒதுக்கப்படவில்லை. அன்றைய தினத்தில் போட்டியை ஏற்பாடு செய்வதற்கு 250 நிமிட அவகாசம் கிடைக்கும்.
- இந்தியா நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறினால் அவர்கள் இரண்டாவது அரையிறுதியில் இந்தியாவுக்கு பொருத்தமான நேரத்தில் (இரவு 8) போட்டியில் ஆடும். இந்திய தொலைக்காட்சி ரசிகளுக்கான விசேட சலுகையாக இது இருக்கும். அப்போது முதல் அரையிறுதிப் போட்டி இந்திய நேரப்படி காலை 6 மணிக்கே ஆரம்பமாகும்.
- முதல்முறையாக, டி20 போட்டியில் 'ஸ்டொப்–கடிகாரம்' (stop– clock) பயன்படுத்தப்பட உள்ளது. பந்துவீசும் அணி முந்தைய ஓவர் முடிந்த 60 விநாடிகளுக்குள் அடுத்த ஓவரை வீசத் தயாராக இருக்க வேண்டும்.

## டயலொக் அனுசரணையில் பாடசாலை றக்பி லீக்



புதிய விளையாட்டு திறமைகளை வளர்க்கும் மற்றும் எதிர்கால வெற்றியாளர்களை உருவாக்கும் நோக்கத்தில், இலங்கையின் முதற்தர இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, டயலொக் பாடசாலை றக்பி லீக் 2024 ஐ மீண்டும் முன்னெடுக்கின்றது.

மொத்தம் 84 பாடசாலை அணிகள் மூன்று பிரிவுகளில் போட்டியிட உள்ளன, இது பாடசாலை றக்பி லீக் வரலாற்றில் புதிய மைல்கல்லாகும். கடந்த சில ஆண்டுகளில் டயலொக் தொடர்ந்து வழங்கிய ஆதரவின் விளைவாக இம்முறை அதிகமான பாடசாலைகள் பங்கேற்கின்றன. அதில் அபிவிருத்தி சுற்றுப்போட்டிகள் போன்ற முன்னெடுப்புகளும் அடங்கும். பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள இந்த பருவம் ஜூன் 14 ஆம் திகதி ஹவ்லொக் மைதானத்தில் பிரிவு 1 பகுதி A மோதலுடன் ஆரம்பமாகும்.

டயலொக் பாடசாலை றக்பி லீக் 2024 இல் பிரிவு 1 குழு A பட்டத்தை வெல்ல 16 பாடசாலைகள் மோதுகின்றன. இதில் நடப்பு வெற்றியாளரான புனித பீட்டர்ஸ் கல்லூரி, கடந்த ஆண்டின் இரண்டாம் இடம் பெற்ற றோயல் கல்லூரியும் இடம்பெறுகின்றன.

Dialog SCHOOLS RUGBY
நாளைய செம்பியன்களை வலுவூட்டும்
Dialog

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2024 ஜூன் 2 ஞாயிற்றுக்கிழமை

# ஜெர்மனி பொலிஸார் கொலையாளியை தேடிய இலட்சணம்



ஜெர்மனியில் பயங்கர தொடர் கொலையாளி ஒருவர் இருந்தார். ஆறு கொலைகள், இன்னும் தீர்க்கப்படாத மரணங்களுடன் அந்த கொலையாளிக்கு தொடர்பு இருந்தது. 15 ஆண்டுகளாக அவரை ஜெர்மனி பொலிஸார் சல்லடை போட்டுத் தேடினார்கள்.

ஆரம்பத்தில் அது ஒரு பெண் தொடர் கொலையாளி என்று பொலிஸார் குறிப்பிட்டனர். ஒரு வயது முதிர்ந்தவரை கழுத்து நெரித்துக் கொன்றது, பெண் பொலிஸார் ஒருவரை கொன்றது என்று 40 குற்றச்செயல்களில் இந்த மர்மக் கொலையாளியின் தடயம் இருந்தது. அதாவது எல்லா இடத்திலும் அவரது டி.என்.ஏ தவறாமல் இருக்கும்.

ஆனால அவர் யார் என்பதை பொலிஸாரால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவரை 'முகமில்லாத பெண்' என்று பொலிஸார் அழைத்து வந்தனர். ஜெர்மனியின் ஆபத்தான பெண் என்றும் அவர் பெயர் பெற்றார்.

அந்தப் பெண்ணை பற்றி துப்புத் தருபவர்களுக்கு 300,000 யூரோ சன்மானம் தருவதாகவும் அறிவித்தார்கள். அந்த கொலையாளியின் வரை படம் ஒன்றையும் கோணல்மாணலாக வரைந்து வெளியிட்டார்கள். ஹ்ம்... எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. ஒரு துப்பறியும் நாவல் போன்று எந்த தீருப்பமும் இன்றி கொலைக் கதை நீண்டது.

பொலிஸாரிடம் இருந்து ஒரே ஒரு ஆதாரம் அந்த டி.என்.ஏ தடயம் மாத்திரம் தான். ஒரு துப்பறியும் திரைப்படத்தின் ஹீரோ போல் யாராவது சிந்திக்க ஆரம்பித்திருப்பார். இந்த விசாரணை முழுவதிலும் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அந்த பொலிஸார் கூறியிருப்பார் போல்.

விசாரணையின் திருப்பம் என்ன தெரியுமா? உண்மையில் அப்படி ஒரு தொடர் கொலையாளியே இருக்கவில்லை.

விசாரணை எந்த திருப்பமும் இன்றி நீண்டு கொண்டிருப்பதைப் பார்த்த பொலிஸார் சோதனை செய்த இடத்திற்கு பதில் சோதனைக்குப் பயன்படுத்திய பொருட்கள் பற்றி ஆராய ஆராம்பித்தார்கள். அதாவது டி.என்.ஏ மாதிரியை எடுக்க பயன்படுத்தும் பஞ்சு இருக்கிறதே அதனை உற்பத்தி செய்யும் பவரியா நகரில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்க்கும் பெண் ஒருவரின் டி.என்.ஏ தான் தொடர் கொலையாளியின் டி.என்.ஏ என்று கண்டுபிக்கப்பட்டது.



அதாவது அந்தப் பஞ்சை கொண்டு தடயம் தேடிய இடங்களில் எல்லாம் அதில் ஏற்கனவே இருந்த அந்தப் பெண்ணின் டி.என்.ஏ மாதிரி கிடைத்திருக்கிறது. அதனை வைத்துக் கொண்டு ஜெர்மனி பொலிஸாரும் இல்லாத கொலையாளியை 15 ஆண்டுகளாக துரத்தி இருக்கிறார்கள்.

# 'ஏரியா 51' மர்மம்



ஏரியா 51 என்பது உலகின் மர்மமான இடங்களில் ஒன்று. அமெரிக்காவின் தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் அந்த இடத்தில் அமெரிக்க விமானப்படைத் தளம் ஒன்று தான் இருக்கிறது. அங்கே என்ன நடக்கிறது என்று கேட்டால் அமெரிக்க அரசு கமுக்கமாக இருந்துவிடும்.

அங்கே யாருக்கும் போகமுடியாது மேலால் விமானங்கள் கூட பறக்கத் தடை இருக்கிறது என்கின்றபோது யாருக்குத் தான் சந்தேகம் வராது. எனவே, ஏரியா 51 பற்றி ஏகப்பட்ட கதைகள் இருக்கின்றன.

இது ஒரு திறந்த பயிற்சி முகாம் என்று பொதுப்படையாக விளக்கம் அளிக்கப்பட்டபோதும், அங்கே ஆயுத சோதனைகள் நடத்தப்படுவதாகவும், சக்தி வாய்ந்த நவீன ஆயுதங்கள் வைக்கப்பட்டிருப்பதாகவும், ஏன், வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய ரகசியங்கள் கூட இருப்பதாகவும் ஆளுக்கொரு கதை சொல்கிறார்கள்.

'ஏரியா 51' இராணுவ மையத்தில் என்ன ஆராய்ச்சி செய்யப்படுகிறது? எவ்வளவு செலவு செய்யப்படுகிறது? நடுப் பாலைவனப் பகுதியில், உலகிலேயே மிகப் பாதுகாப்பான இராணுவ மையம் எதற்காக செயல்படுகிறது என்கிற கேள்விகளுக்கு இன்று வரையில் பதில் இல்லை.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# உங்களின் மூதாதையர் தெரியுமா?

உங்களது முதாதையர் பற்றி எண்ணிப்பார்த்ததுண்டா? உங்களுக்கு அப்பா, அம்மா... தாத்தா, பாட்டி.... கொள்ளுத் தாத்தா, கொள்ளுப் பாட்டி... எள்ளுப்பாட்டி, எள்ளுப்பாட்டன்... என்று உங்களது பரம்பரை நீண்டு கொண்டே போகும். இதனைக் கணக்குப் போட்டால் ஒருவருக்கு தாத்தா, பாட்டிகள் நால்வர், கொள்ளுப்பாட்டன்மார் எட்டுப் பேர் என்று ஒவ்வொரு தலைமுறையாக அது இரட்டிப்பாகிக் கொண்டுபோகும். அப்படி கணக்குப் போட்டுக்கொண்டு போனால் 40 தலை முறைகள் பின்னோக்கிச் செல்லும்போது உங்களுக்கு 1 டிரில்லியன் பேர் தாய் மற்றும் தந்தை வழியில் உறவினர்களாக இருப்பர். ஆனால் அது சாத்தியமில்லாத ஒன்று. ஏனென்றால் அப்போது உலக சனத்தொகையே ஒருசில மில்லியனுக்கு சுருங்கி இருக்கும்.

உண்மையில் இந்தக் கணக்கு சரியாக



இருந்தாலும் முழுக்க முழுக்க தப்பானது. இதனை ஆங்கிலத்தில் *Pedigree collapse* என்று அழைப்பார்கள். அதாவது ஒருசில தலைமுறைகள் பின்னோக்கி போகும் போது எல்லோருமே மாமன் மச்சான் என்று சொந்தத்திற்கு திருமணம் முடித்திருப்பார்கள். இதனால் மூதாதையர் எண்ணிக்கை சுருங்கிவிடும்.

இப்படியே உலகில் உள்ள எல்லோரினதும் முதாதையர்களையும் கூட்டிப் பார்த்தால் ஒரு புள்ளியில் எல்லோருக்கும் பொதுவான மூதாதையர் இருப்பார்கள். அப்படியான ஒருவரின் மரபணு எம் எல்லொரிடமும்இருக்கிறது.அவர்கிட்டத்தட்ட 5000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருப்பதாக ஒரு கணிப்பு.

அதாவது 2500 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தில் பிரமிட்டுகளை கட்டிய பாரோக்கள் கூட ஒருவகையில் எமக்கு சொந்தக்காரர்கள் தான். எனவே, யாராவது வந்து நான் அலெக்சாண்டர் பரம்பரை, சேர சோழன் பரம்பரை என்று புழுகினால், நாங்களும் தான்! என்று பதில் கூறிவிடுங்கள்.

# Queen Cobra பிரபாலினி பிரபாகரனின் இன்னிசை மழை

























இலங்கையின் முதல் தமிழ் பெண் இசையமைப்பாளர் Queen Cobra பிரபாலினி பிரபாகரன் வழங்கும் இன்னிசை மழை இசை நிகழ்ச்சியும், ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி பரமேஸின் 'உனக்கு தெரியுமா' பாடலுடன் 50 பாடல்கள் அடங்கிய 50 வருட இசைத்தென்றல் தொடரின் இசைத்தட்டு வெளியீடு மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பு நிகழ்வு என்பன திங்கட் கிழமை (27) மாலை கொழும்பு வெள்ளவத்தை சபையர் ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர்களான தமுகூ தலைவர் மனோ கணேசன், மமமு தலைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட இந்நிகழ்விற்கு மும்மொழிகளின் எழுத்தாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவருமான முனைவர் சதீஷ்சிவலிங்கம் தலைமை தாங்கினார். புரவலர் புத்தகப்பூங்கா நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் இசைத்தட்டுக்களின் முதற் பிரதிகளை பெற்றுக் கொண்டார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளரும், கவிஞரும், எழுத்தாளரும் ஆகிய இக்பால் அலியின் இரு நூல்கள் வெளியீடு



அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்திய எழுத்தாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலி எழுதிய காலத்தின் கால்கள் (திறன்நோக்கு கட்டுரைத்தொகுதி), குரங்குத் தம்பி (சிறுவர் பாடல்கள் ) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா 23052024 காலை அக்குறணை ஐடெக் கல்வி நிலையத்தின் இயக்குனர் ஐ. ஐனுடீன் தலைமையில் இடம்பெற்றது.

முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினரும் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் எம். எச். ஏ. ஹலீம் ஆகியோர் கலந்துதுலகிற்கு பங்களிப்புச் செய்த பெருந்தகைகள் தொழிலதிபர் அல்ஹாஜ் டி. எம். எஸ். நிஸைஹிர் ஹாஜியார், தொழிலதிபர் தேசமான்ய எஸ். முத்தையா, மலையக கலை கலாசார (இரத்தின தீப) சங்கத்தின் தலைவர் தேசமான்ய எஸ். பரமேஸ்வரன். மடவளை ஜும்மா பள்ளிவாயல் தலைவர்அல்ஹாஜ் நாஜிம், ஆர். பி .எஸ் எல் செய்ப் ஹனிபா மற்றும் கலாநிதி ஷாமிலா தாவூத் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் வரவேற்புரையினையும், மத்திய மாகாண முன்னாள் முதல் அமைச்சர், வட மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் சரத் ஏக்











கொண்டனர்.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக, அக்குறணை பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக கலந்து கொண்டார்.நூல் முதல் சிறப்புப் பிரதிகளைப் பெற்று எழுத்

கநாயக்க, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, மனித அபிவிருத்தி தாபன இயக்குனர், சர்வதேச விவசாய நிறுவனத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம், சமய,சமூகப் பேச்சாளர், நெலும் ஆடைக் காட்சியகத்தின் உரிமையாளர் தேசமானிய முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர்.பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் நூல்கள் பற்றிய அறிமுகத்தையும், பேராதனை பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை முன்னாள் விரிவுரையாளர் கவிஞர் ரா. நித்தியானந்தன் மற்றும் கண்டி திரித்துவக் கல்லூரி சிரேஷ்ட ஆசிரியை திருமதி சர்மிளாதேவி துரைசிங்கம் ஆகிய இருவரும் நூல் நயவுரையினையும், நூலாசிரியர் இக்பால் அலி ஏற்புரையினையும், அக்குறணை பிரதேச செயலகத்தின் மொழிபெயர்ப்பாளர் பீ. தாரீக் நன்றியுரையினையும் நிகழ்த்தினார்.







# வெசாக் தானம் வழங்கும் கலாநிதி ஜனகன்..!








வெசாக் தினத்தை முன்னிட்டு வெள்ளவத்தைகுரே வீதி பிரதான முற்றத்தில் (24) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெசாக் அன்னதானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி.வி.ஜனகன் அங்கு வருகை தந்தோருக்கு அன்னதானங்களை பகிர்ந்தளித்து வழங்கி வைத்தார்.

# 36 வருடங்கள் கல்வி பணியாற்றிய ஜெஸீமாவுக்கு பாராட்டு!



கல்விப் பணியில் 36 வருடங்கள் உன்னத பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற அதிபர் திருமதி ஜெஸீமா முஸம்மில்லின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை (25) காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பாடசாலை உதவி அதிபர் ஏ.ஆர்.எம்.அஸ்வர் நழீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்களால் ஓய்வுநிலை அதிபர் திருமதி ஜெஸீமா முஸம்மில் கௌரவிக்கப்பட்டு, நினைவுப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர்களால் அவர் கௌரவமளிக்கப்பட்டு, பாராட்டுப் பத்திரம் மற்றும் நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவப்படுத்தப்பட்டார். அத்தோடு அவரது கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்கள் கவிதைகள் மற்றும் பாடல்கள் வாயிலாக விரிவாக எடுத்துக் கூறினர்.

**க.கிருபாகரன்**
**கல்லடி**





## கலை, இலக்கியம், புகைப்படத் தொழில்நுட்பம், மரபு சார்ந்த ஈடுபாடு, ஆன்மீகம்

# பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்ட இராசையா கிருஷ்ணபிள்ளை

இராசையா கிருஷ்ணபிள்ளை 1950 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 29ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி – 02 ஆம் குறிச்சியில் பிறந்து, தற்போது ஆரையம்பதி கிழக்கு கிராமக் கோட் வீதியில் வசிக்கின்றார்.

இவர் தமது ஆரம்பக் கல்வியை ஆரையம்பதி நொத்தாரிஸ் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் திருகோணமலை, கந்தளாய் கோயில் கம அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் மட்டக்களப்பு சிவானந்த வித்தி











யாலயத் திலும் கல்வி பயின்றவர்.

1970 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இணைந்து செங்கலடி, ஹீணகலகண்டிய, வாகனேரி, ஓமடியாமடு, குஞ்சன்குளம், உறுகாமம், உன்னிச்சை (நுவரெலியா மாவட்டம்) ஹேவாகெட்ட, வலப்பனை, ஹங்குரான்கெத்த, நவகிரித் திட்டத்திலும் வேலை மேற்பார்வையாளராகப் பணிபுரிந்தார்.

மேலதிக கடமையாக பதில் களஞ்சியப் பொறுப்பாளராகவும், பதில் நீர்ப்பாசன நிறுவன அபிவிருத்தி (ஐஆயுஊ) உத்தியோகத்தராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது சேவைக்காலத்தில் கல்கமுவ நீர்ப்பாசனத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேவைக்கால பயிற்சியும்





நஜஐஆயுஊஹதலைமைத்துவப் பயிற்சி, தேசிய நீர்ப்பாசன முகாமைத்துவத் திட்டப் பயிற்சியும் பெற்றுள்ளார்.

இவர் ஒரு சமாதான நீதவானாகவும் ஆரையம்பதி கிழக்கு

கட்டிட நிர்மாணத் தொழில்நுட்பம், நீர் முகாமைத்துவம், வுநயஅ டுநயன

சிவில் பாதுகாப்புக்குழுத் தலைவராகவும் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப

உத்தியோகத்தர் சங்கத்தில் கிழக்கு மாகாணப் பிரதிநிதியாகவும் ஆரையம்பதி சமூக அபிவிருத்திச் சங்கத்தில் நிர்வாக சபை உறுப்பினராகவும் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதவான்கள் சமூக மேம்பாட்டு மையத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தில் நிர்வாக சபை

உறுப்பினராகவும் ஆரையம்பதி கலா மன்றத்தின் உறுப்பினராகவும் மண்முனைப்பற்று கலாசார பேரவை, கலாசார அதிகார சபை உறுப்பினராகவும் சமூக சேவைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இவர் ஒரு சமூக சேவையாளராகவும் இலக்கிய, வாசிப்பு, எழுத்து, புகைப்படத்

தொழில்நுட்பம், மரபு சார்ந்த ஈடுபாடு, ஆன்மீகம் என பல துறைகளில் ஈடுபாடுடையவர். விசேடமாக பாரம்பரியப் பொருட்கள், ஆவணங்கள், அருகி வரும் மரபு சார்ந்த பொருட்கள் முதலானவற்றை பொருட்களாகவும் புகைப்படங்களாகவும் சேகரித்து, கிழக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் வெளிமாகாணத்திலும் காட்சிப்படுத்தி வருகின்றார்.

பாடசாலை மாணவர்கள் முதல் பெரியோர் வரை அனைவரும் பயன் பெறத்தக்க வகையில் இவரது கண்காட்சி அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். இக் கண்காட்சியைத் தொடர்ந்து நடாத்துவதற்குத்

தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியும் கிடைத்துள்ளது. அத்தோடு, இவர் இலங்கையின் தொன்மை மற்றும் மரபுரிமை பாதுகாப்பு தொடர்புள்ளவர் என்பதன் காரணமாக பல ஆய்வுக் கட்டுரைகள், அது தொடர்பான புகைப்படங்கள் போன்றவற்றையும் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையெல்லாம் கலாசார இலக்கிய விழாக்களிலும் பத்திரிகைகளிலும் வெளியிட்டுள்ளார்.

இவரது கலை இலக்கியத்திற்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி, கலாசார திணைக்களம் 37ஆவது கலாபூஷணம் அரச விருது விழா 2022இல் இலக்கியத்துறைக்கு கலாபூஷண அரச

உயர் விருதும் பணப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2018.11.30இல் கலாசாரத்

திணைக்களம் கலைஞர் சுபதம் விருது வழங்கி கௌரவித்தனர். 02.03.2020இல் தேசிய கலைஞர் அடையாள அட்டையும் (வரலாறு கதை எழுத்தாளருக்கான) வழங்கி கௌரவித்தனர்.

06ஆம் பக்கம் பார்க்க...

# குயின்ஸ்வே சர்வதேச பெண்கள் பாடசாலையின் 20வது ஆண்டு விழா கொண்டாட்டம்

20 மே 2024 அன்று, குயின்ஸ்வே சர்வதேச பெண்கள் பாடசாலை தனது 20 வது ஆண்டு கொழும்பில் உள்ள டவர் ஹாலில் விழாவை கொண்டாடியது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் இளம் சட்டத்தரணிகள் குழுவின் தேசிய பிரதிநிதி, சட்டத்தரணி, மற்றும் கொழும்பு அசோசியேட்ஸ் பணிப்பாளர் அஜ்ரா அஸ்ஹர் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்.

திருமதி அஜ்ரா அஸ்ஹர் தனது பிரதான உரையில், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான பொருளாதார சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார், சமத்துவம் மற்றும் அதிகாரமளித்தலை அடைவதற்கான ஒரு முக்கியமான படியாக அதை எடுத்துக்காட்டினார். இளம் மாணவர்கள், குறிப்பாக பின்தங்கிய பின்னணியில் உள்ளவர்கள், அவர்கள் எதிர்கொள்ளக் கூடிய தடைகள் இருந்தபோதிலும், மேன்மைக்காக ஆசைப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "பொருளாதார சுதந்திரம் என்பது பணம் வைத்திருப்பது மட்டுமல்ல; தேர்வு செய்யும் சுதந்திரம் மற்றும் உங்கள் சொந்த எதிர்காலத்தை வடிவமைக்கும் சக்தி ஆகியவற்றைப் பற்றியது," என்று அவர் கூறினார்.

விழாவையொட்டி மாணவர்களின் இசை, நடனம், நாடகம் போன்றவற்றில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. கடந்த இரண்டு தசாப்தங்களாக பள்ளியின் சாதனைகள் பெருமை மற்றும் சாதனை உணர்வுடன் கொண்டாடப்பட்டது.







பெண் குழந்தைகளுக்கான கல்வியில் சிறந்து விளங்கும் பாடசாலையின் பயணத்தின் மைல்கற்கள் மற்றும் நினைவுகளை விவரிக்கும் சிறப்பு இதழ் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் திருமதி ஷப்ரா மற்றும் மேல் மாகாண வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர் திருமதி கமகே ஆகியோர் வரவேற்கப்பட்டனர்.

குயின்ஸ்வே இன்டர்நேஷனல் பெண்கள் பள்ளியின் அதிபர், தனது உரையில், நிர்வாகக் குழு மற்றும் ஆசிரியர்களின் அயராத முயற்சிகளையும், இளம் பெண்களின் வளர்ச்சிக்கு பாடசாலையை வளர்ப்பதற்கு பெற்றோர்கள் வழங்கும் தளராத ஆதரவும் என்றும் பெரும் துணையாக இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.





பதுளை சார்ணியா தமிழ் மகா வித்தியாலயத்தில் எழுத்தறிவித்த இறைவனுக்கு மணிமகுடம் சூட்டி கௌரவித்த பழைய மாணவர்கள்! பதுளை சார்ணியா தமிழ் மகா வித்தியாலயம் ஏற்பாடு செய்து நடாத்திய " வாழும் போதே வாழ்த்துவோம் " எனும் தொனிப்பொருளில் வித்தியாலயத்தில் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான சுமார் மூன்று தசாப் காலப்பகுதிகளில் பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கும் சமூகத்திற்கும் அரும்பணியாற்றி சேவையாற்றிய ஓய்வுநிலை அதிபர்கள் திரு.திருமதி தேவராஜா, தம்பதியினர் மற்றும் ஆசிரியர் பெருந்தகைகளின் அர்ப்பணிப்புமிக்க சேவைகளைப் போற்றி வாழ்த்தி வணங்கி முத்தாரம் சூட்டி கௌரவிக்கும் நிகழ்வு (25) வித்தியாலய அதிபர் ஏ. அருள்ஞானம் தலைமையில் கந்தேகெதர இந்து கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.




## பல்வேறு துறைகளில்...

06ஆம் பக்கத் தொடர்ச்சி

2022இல் ன் திறமைக்கான தேடல் விருதும் 2022இல் கலை கலாசார ஊடக சமூக சேவை பங்களிப்புக்காக கலைமாமணி விருதும், சமூகதீபம், சமூக ஜோதி கலைமுத்து பட்டங்களையும் வழங்கி கௌரவித்தனர். 2022ஆம்ஆண்டு மண்முனைப் பற்று பிரதேச கலாசார பேரவை கலாசார அதிகார சபையும் இணைந்து ஆவணக் காப்பகத்திற்கான விருதையும்சான்றிதழையும் வழங்கி பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தனர். ஆரையம்பதி பொது நூலகத்தில் மண்முனைப்பற்று பிரதேச சபை தவிசாளரால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். இவருக்கு மட்டக்களப்பு தமிழ் சங்கத்தில் இலக்கியத்துறையில் பல விருதுகள் பெற்றமைக்காக பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர். மதம், கலை, கலாசாரம் போன்றவற்றை வெளிக்கொணரும் சிறந்த கலைஞருமாவார். இவரது பணியை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், பிரதேச சபை தவிசாளர், பொது நூலகக் காப்பாளர், பாடசாலை அதிபர்கள், நிர்வாக சபை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளரது பாராட்டுக்களும் நற்சான்றிதழ்களும் இவரது பணிக்காகக் கிடைக்கப்பெற்றது. 10. 03 .2024 இல் இலங்கை இந்திய நட்புறவு அமையத்தினால் 'மலையகம்200' எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட தேர்வில் அங்கீகாரம் பெற்று, உயரிய விருதாக கௌரவிக்கும் 'ஸ்ரீ விக்கிரம கீர்த்தி' விருதினைப் பெற்று, ஆரையம்பதி மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். இந் நிகழ்வு கண்டி கெப்பட்டிப்பொல கலாசார மண்டபத்தில் முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

# புது பாதையில் வசுந்தரா!

இயக்குநர் எஸ்.பி ஜனநாதன் இயக்கிய பேராண்மை படத்தில் ஐந்து நாயகிகளில் ஒருவராக நடித்திருந்தாலும் அவர்களில் துடுக்கும் மிடுக்குமாக துள்ளலான நடிப்பை வெளிப்படுத்தி தனக்கென தனி அடையாளம் பெற்றவர் நடிகை வசுந்தரா.புது பாதையில் வசுந்தரா!

தொடர்ந்து கதைக்கும் கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இயக்குனர்களின் படங்களில் கதாநாயகியாக நடிக்கும் அதிர்ஷ்ட வாய்ப்பையும் பெற்ற வசுந்தரா, செலக்டிவான படங்களில் நல்ல நல்ல கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வருகிறார். அந்தவகையில் இந்த வருடத்தில் கண்ணை நம்பாதே, தலைக்கூத்தல் என இரண்டு படங்களிலும் மாடர்ன் லவ் சென்னை என்கிற வெப் சீரிஸிலும் நடித்துள்ள வசுந்தரா மீண்டும் பிஸியான நடிகையாக மாறியுள்ளார்.

அது மட்டுமல்ல, இதுவரை செலக்டிவான கதைகளையும் கதாபாத்திரங்களையும் மட்டுமே தேர்ந்தெடுத்து நடித்து வந்த வசுந்தரா, இனி படங்களை தேர்வு செய்வதில் தானே வகுத்துக் கொண்டுள்ள விதிகளை கொஞ்சம் தளர்த்தி புதிய பாதையில் பயணிக்க போகிறேன் என்கிறார்.

நான் எதிர்பார்ப்பது சவாலான கதாபாத்திரங்களைத்தான். அதில் கதாநாயகியாகத்தான் நடிப்பேன் என்றால் வருஷத்துக்கு ஒரு படம் தான் பண்ண முடியும். ஆனால் எதிர்மறை கதாபாத்திரங்களில் நடிக்கும்போது முதலில் நமக்கே போர் அடிக்காது.நடிப்பை வெளிப்படுத்த அதிக வாய்ப்பும் இருக்கும். தமிழ் சினிமாவில் எப்போதுமே பெண்கள் நெகட்டிவ் கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு இருந்து கொண்டே தான் இருக்கிறது. முன்பெல்லாம் மக்கள் அப்படி நடிப்பவர்களை நிஜத்திலும் வில்லியாகவே பார்த்தார்கள். இப்போது காலம் மாறிவிட்டது.

மக்களும் அந்த கதாபாத்திரத்தை ரசிக்கும் அளவுக்கு மாறிவிட்டார்கள். நடிகை ரம்யா கிருஷ்ணன் பாசிடிவ், நெகடிவ் என இரண்டு கதாபாத்திரங்களிலும் சூப்பராக நடிப்பவர். அவருடைய ரசிகை நான். ஒரு பாவமான, கஷ்டப்படுகிற ஹீரோயினாக நடிப்பதை விட ஒரு நெகட்டிவ் கதாபாத்திரத்தில் கெத்தாக நடிக்கலாம். அதனால் இனி கமர்சியல் படங்களில் கவனம் செலுத்தப் போகிறேன். அந்த வகையில் தற்போது ஒரு மல்டி ஸ்டாரர் கதையில் நெகடிவ் கதாபாத்திரத்தில் நடித்து வருகிறேன். இந்த படமே பெண்களை மையப்படுத்தி ஒரு மாடர்ன் க்ரைம் டிராமாவாகத்தான் உருவாகி வருகிறது. படத்தில் நிறைய திருப்பங்கள் இருக்கின்றன.

அதில் நானும் ஒரு திருப்பமாக இருப்பேன். பப்கோவா என்கிற வெப்சீரிஸை இயக்கிய லட்சுமி நாராயணன் ராஜு தான் இந்த படத்தை இயக்கி வருகிறார். இது தவிர ஒரு மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவாகும் படம் ஒன்றிலும் நடித்து வருகிறேன். அதை பற்றிய தகவல் விரைவில் தயாரிப்பாளர் தரப்பில் இருந்து வெளியாகும்.

தமிழ் தான் எப்போதுமே என் சொந்த வீடு. என்றாலும் ஒரு நடிகையாக முழுமை பெற மற்ற மொழிகளிலும் நடிப்பதற்கு தயாராக இருக்கிறேன். குறிப்பாக மலையாளம், தெலுங்கு மொழிகளில் நடிக்க வேண்டும் என்பது என் ஆசை. மலையாள படங்களை பார்க்கும்போது இப்படி ஒரு கதாபாத்திரத்தில் நாம் நடித்திருக்கலாமே என்கிற ஏக்கம் இயல்பாகவே எனக்குள் எழும்.

தெலுங்கில் ஆரம்பத்தில் எனக்கு சில வாய்ப்புகள் வந்தது. சில சூழல்கள் காரணமாக அந்த வாய்ப்புகள் மிஸ் ஆகி போனது. அந்த வகையில் மன திருப்திக்காக மலையாள படங்களிலும் கேரியர் வளர்ச்சிக்காக தெலுங்கு படங்களிலும் நடிக்க விரும்புகிறேன். இந்த வருடம் நான் நடித்த மூன்று படங்கள் வெளியாகி இருக்கின்றன. அடுத்த வருடம் நிச்சயம் இரண்டு படம் வெளியாகும் என்கிறார் வசுந்தரா.





# 27 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் பிரபுதேவா கஜோல்...

27 ஆண்டுகளுக்கு முன் அதாவது கடந்த 1997 ஆம் ஆண்டு பிரபுதேவா மற்றும் கஜோல் இணைந்து ஒரு படத்தில் நடித்த நிலையில் தற்போது மீண்டும் ஒரு படத்தில் இணைந்து நடித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டு பிரபு தேவா, கஜோல், அரவிந்சாமி நடிப்பில் வெளியான திரைப்படம் 'மின்சார கனவு'. ராஜீவ் மேனன் இயக்கத்தில் ஏஆர் ரகுமான் இசையில் உருவான இந்த படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது என்பது இந்த படம் சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடகர், சிறந்த பாடகி, சிறந்த டான்ஸ் மாஸ்டர் ஆகிய நான்கு தேசிய விருதுகளை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 27 ஆண்டுகளுக்கு பின் தற்போது மீண்டும் பிரபுதேவா மற்றும் கஜோல் இணைந்து நடிக்கும் தெலுங்கு படம் ஒன்று உருவாகி வருகிறது. சரண்தேஜ் உப்பிலபதி இயக்கத்தில் உருவாகும் இந்த படம் அதிரடி த்ரில்லர் கதை அம்சம் கொண்டது என்றும் இதில் சம்யுக்தா மேனன், நஸ்ருதீன் ஷா, சென்குப்தா, ஆதித்யா ஷீல் உள்பட பலர் நடித்து வருவதாகவும் தெரிகிறது.

ஹர்ஷவர்தன் ரமேஷ்வர் இசையில் உருவாகி வரும் இந்த படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்து விட்டதாகவும் விரைவில் இந்த படத்தின் டீசர் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது. 27 ஆண்டுகளுக்கு முன் வெளியான 'மின்சார கனவு' படத்தில் 'வெண்ணிலவே' என்ற பாடல் மிகப் பெரிய வரவேற்பை ரசிகர் மத்தியில் பெற்றதை அடுத்து, அதே போன்ற ஒரு பாடலை இந்த படத்திலும் வைக்க படக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# கோடி ரூபா கொடுத்தாலும் அதை மட்டும் செய்ய மாட்டேன்!

மாளவிகா மோகனன்!



இதுவரை மாளவிகா மோகனனுக்கு சரியான முக்கிய கதாப்பாத்திரங்கள் கிடைக்கவில்லை. சில படங்களில் கதாநாயகியாக ஒப்பந்தம் ஆனாலும் படத்தில் அந்த கேரக்டருக்கு முக்கியத்துவம் இல்லை என வருத்தத்தில் உள்ளாராம்.கோடி ரூபா கொடுத்தாலும் அதை மட்டும் செய்ய மாட்டேன்! – மாளவிகா மோகனன்!

தென்னிந்திய சினிமாவில் சில படங்களில் நடித்து பிரபலமாக இருப்பவர் மாளவிகா மோகனன். 2013ல் பட்டம் போலே என்ற மலையாள படத்தில் அறிமுகமான இவர் மலையாளம், கன்னடம், இந்தி படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் வெளியான பேட்ட படத்தில் ஒரு ப்ளாஷ் பேக் காட்சியில் மட்டும் நடித்திருந்தார்.

பின்னர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியான மாஸ்டர் படத்தில் விஜய்க்கு ஜோடியாகவும் நடித்திருந்தார். தொடர்ந்து தமிழ், மலையாள படங்கள் சிலவற்றில் நடித்து வருகிறார். ஆனாலும் இதுவரை மாளவிகா மோகனனுக்கு சரியான முக்கிய கதாப்பாத்திரங்கள் கிடைக்கவில்லை. சில படங்களில் கதாநாயகியாக ஒப்பந்தம் ஆனாலும் படத்தில் அந்த கேரக்டருக்கு முக்கியத்துவம் இல்லை என வருத்தத்தில் உள்ளாராம் மாளவிகா மோகனன்.

சமீபத்தில் படங்களில் நடிப்பது குறித்து பேசிய அவர் "இனிமேல் எனது கதாப்பாத்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் மட்டுமே நடிப்பது என முடிவு செய்துள்ளேன். ரூ.500 கோடி வசூலிக்க கூடிய படமாக இருந்தாலும் என கதாப்பாத்திரத்திற்கு முக்கியத்துவம் இல்லை என்றால் அதில் நடிக்க மாட்டேன். படம் வசூலில் சாதனை படைத்தாலும், முக்கியத்துவம் இல்லாத கேரக்டரில் நடித்தால் யாரும் நினைவில் வைத்துக் கொள்ள மாட்டார்கள்" என கூறியுள்ளார்.

# விஜய்சேதுபதிக்கு மலேசியாவில் கிடைத்த ஏமாற்றம்




விஜய் சேதுபதி நடித்து வரும் 51 வது படமான 'ஏஸ்' என்ற படத்தின் படப்பிடிப்பு கடந்த சில வாரங்களாக மலேசியாவில் நடந்தது என்பதும் கிட்டத்தட்ட முழு படமும் மலேசியாவில் தான் படமாக்கப்பட்டதாகவும் செய்தி வெளியானது.

இந்த நிலையில் மலேசியாவில் இந்த படத்தின் படப்பிடிப்பு நடந்த போது மலை மீது உள்ள முருகன் கோவிலில் படப்பிடிப்பு நடத்த படக்குழுவினர் திட்டமிட்டதாகவும் ஆனால் மலைக்கோவிலின் அடிவாரத்தில் மட்டுமே படம் எடுக்க முடிந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் ஏராளமான படிகள் கொண்ட மலையில் ஏறி முருகனை தரிசிக்க விஜய் சேதுபதி விரும்பியதாகவும் ஆனால் அதிக கூட்டம் காரணமாக முருகனை தரிசனம் செய்யாமலேயே விஜய் சேதுபதி சென்னை திரும்பி விட்டது அவருக்கு ஏமாற்றமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்த படத்தின் புதிய அப்டேட்டாக படப்பிடிப்பு முழுமையாக முடிந்துவிட்டதாகவும், அடுத்தகட்டமாக தொழில்நுட்ப பணிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிகிறது. விஜய் சேதுபதி, யோகி பாபு, ருக்மணி வசந்த், திவ்யா பிள்ளை, முத்துக்குமார், ராஜ்குமார், உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்த படத்தை ஆறுமுக குமார் இயக்கி தயாரித்து உள்ளார். இவர் ஏற்கனவே விஜய் சேதுபதி நடித்த 'ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்' என்ற படத்தை இயக்கியுள்ளார் என்பது தெரிந்ததே. ஜஸ்டின் பிரபாகரன் இசையில், கரன் ரவாத் ஒளிப்பதிவில், கோவிந்தராஜ் படத்தொகுப்பில் இந்த படம் உருவாகியுள்ளது.

இந்த படத்தின் ஒரு நிமிடத்திற்கு மேல் உள்ள டைட்டில் வீடியோ வெளியானது என்பதும் இந்த வீடியோவுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆன்லைன் விளையாட்டு

## மோசடியை அம்பலப்படுத்தும் 'ஈமெயில்'

கன்னட திரையுலகின் முன்னணி நடிகையும் சமீபகாலமாக தமிழ், தெலுங்கில் கவனம் பெற்றுள்ளவருமான ராகினி திவேதி இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்க, கதாநாயகனாக முருகா அசோக்குமார் நடித்துள்ளார்.

இரண்டாவது கதாநாயகியாக போஜ்புரி மற்றும் ஹிந்தி படங்களில் நடித்து புகழ்பெற்ற ஆர்த்தி ஸ்ரீ நடிக்க, இரண்டாவது கதாநாயகனாக ஆதவ் பாலாஜி நடித்துள்ளார். மனோபாலா மற்றும் லொள்ளு சபா மனோகர் முக்கிய வேடங்களிலும் பில்லி முரளி வில்லனாகவும் நடித்துள்ளனர்.காமெடி, ஆக்சன், சென்டிமென்ட் கலந்த சஸ்பென்ஸ் திரில்லராக இந்த படம் தமிழ்,கன்னடம் என இரு மொழிகளில் உருவாகி உள்ளது. அவினாஷ் கவாஸ்கர் இப்படத்திற்கு இசையமைக்க திரௌபதி புகழ் ஜுபின் பின்னணி இசை மேற்கொண்டு இருக்கிறார்.

கன்னட சினிமாவில் கிட்டத்தட்ட 20 படங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்ட செல்வம் மாதப்பன் இப்படத்தின் ஒளிப்பதிவைக் கவனித்துள்ளார். வேலையில்லா பட்டதாரி,நான் மகான் அல்ல உள்ளிட்ட படங்களில் பணியாற்றிய ராஜேஷ் குமார் இப்படத்தின் படத்தொகுப்பை மேற்கொண்டுள்ளார்.



கதாநாயகிக்கு திடீரென ஒரு ஈமெயில் வருகிறது. அதில் குறிப்பிட்ட லிங்க்கை கிளிக் செய்து விளையாடினால் மிகப் பெரிய பரிசு காத்திருப்பதாக சொல்லப்பட,அந்த விளையாட்டிற்குள் இறங்கிய கதாநாயகி எதிர்பாராத விதமாக ஒரு மாஃபியா கேங்கில் சிக்கிக் கொள்கிறார். இதிலிருந்து அவர் மீண்டாரா? இல்லையா என்பதுதான் இந்த படத்தின் கதை.

சமீப காலமாக ஆன்லைன் விளையாட்டுக்களில் நடக்கும் மோசடிகளையும், அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் மையப்படுத்தி இந்த படத்தின் கதையை உருவாக்கி உள்ளார்கள்.

இந்த படம் குறித்தும் படப்பிடிப்பு அனுபவங்கள் மற்றும் ரிலீஸ் குறித்தும் படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநருமான எஸ்.ஆர் ராஜன் கூறும்போது,ஒரு பிசினஸ்மேனாக இருந்துகொண்டு படம் தயாரிக்கும் ஆர்வத்தில் சினிமாவிற்கு வந்தேன். ஆனால் இங்குள்ள சூழ்நிலை என்னை ஒரு இயக்குநராகவே மாற்றி விட்டது.

# பிள்ளைகள் வளர்ப்பில் வேற்றுமை அவசியமா?

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறி வறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.

பெறத்தகுந்த பேறுகளில் அறிய வேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெறுவதைத் தவிர, மற்றப்பேறுகளை யாம் மதிப்பதில்லை.

பிள்ளைகள் வளர்ப்பது ஒரு கலை. அவர்கள் பிறந்தது முதல் தங்களை தாங்களே நிலைநிறுத்தும் காலம் வரைக்கு பெற்றோர் அவர்களுக்கு உறுதுணையாக நின்று வளர்ப்பது காலம் காலமாக தொடர்கிறது.

இப்படி வளர்க்கும் குழந்தைகளுக்கு நடுவே வேற்றுமை காட்டி நடத்தும் நிகழ்வுகள் ஏராளம் உண்டு .

அவை

ஆண்பிள்ளை பெண்பிள்ளை
மூத்த பிள்ளை
இளையப் பிள்ளைகள்
நல்லப் பிள்ளை
குழப்படி பிள்ளை

என்றெல்லாம் பட்டியல் நீண்டுக் கொண்டே செல்லும்.

இந்த வேற்றுமை தேவையா? இதனால் ஏற்படும் நன்மை தீமைகள் தான் எவையென ஆராய்வோம்.

அந்த காலத்தில் பிள்ளைகளுக்கு உணவூட்டும் போது தாயானவள் அனைவரையும் தன்னைச் சுற்றி அமரவைத்து சாதம் பிசைந்து உருண்டைகளாக்கி அனைவருக்கும் ஒரே மாதிரியான அன்பினை செலுத்தி ஊட்டினார்கள் என்பதை எம் பெற்றோர் அவர்களின் வயதை ஒத்தவர்கள் சொல்லக் கேட்டிருப்போம்.

ஆனால் இன்று பிள்ளைகளை ஒவ்வொரு விதமாக வளர்க்கிறோம்.

இது ஒரு பிள்ளையை உயர்வாக பார்ப்பதாகவும் மற்றைய பிள்ளையை வஞ்சகனாக பார்ப்பதாகவும் அவர்களின் மனதில் தோற்றத்தை உருவாக்கும்.

இதனால் பிள்ளைகளுக்கு இடையில் ஒற்றுமை இல்லா தன்மை உருவாகும்.



அதிலும் ஆண்பிள்ளை, பெண்பிள்ளை வேறுபாடு மிகவும் கவலையளிக்கும்.

"பெண் பிள்ளைகள் செய்யும் வேலை ஆண்பிள்ளை நீ செய்யக் கூடாது". "பொம்பள பிள்ளை இப்படி உட்காரக் கூடாது"

அதுபோல " நீ ஆண்பிள்ளை தானே நீ பொருட்களை தூக்கு "

" போன்ற பால் பிரிவினை கட்டளைகள்.......

அதுபோல "மூத்தவர் அவருக்குத் தான் முதலிடம்" என்பதும் "மூத்தவருக்கு கொடு உனக்கு பிறகு பார்க்கலாம்" என்றும்

"நீ பெரிய ஆள் தானே. சின்னவனுக்கு கொடுத்தால் என்ன ",

"அவன் சின்னப்பிள்ளை அவனுக்கு வாங்கிய பின் உனக்கு பார்ப்போம் "போன்ற வார்த்தை உபயோகங்கள்

அவர்கள் வாழ்நாள் முழுக்க சமத்துவமாக வாழும் மனநிலையைக் கொடுக்காது. ஏற்ற தாழ்வை உருவாக்கும்

பிள்ளைகளின் முதல் கல்விக்கூடம் வீடாகும். அந்த வசிப்பிடத்தில் நீங்கள் விதைக்கும் விதைகளையே பிள்ளைகள் வளர்ந்து இந்த சமூகத்திற்கு கொடுப்பார்கள். நீங்கள் விதைக்கும் நல்லெண்ணம், நற்சிந்தனைகள், பாகுபாடுகள் அற்ற சமத்துவம், சிறப்பான வார்த்தை உபயோகம் என்பன குழந்தைகள் நல்லபடியாக வளர வைக்கும் பயிற்சியாகும்.

குழந்தைகளை வளர்க்கும் விதத்தில் விழும் வேறுபாடு அவர்கள் மனதில் பல பிரிவினையை எவ்வாறு கொடுக்கும் என்று பார்த்தால்

முதலில் பிள்ளைகளுக்கு இடையில் போட்டி, பொறாமை ஏற்படும். இதனால் ஒற்றுமை குறையும்.

அத்துடன் பெற்றோர் மீதான நம்பிக்கை குறையவும் வாய்ப்புள்ளது. காரணம் தன்னை விட மற்றைய பிள்ளையை நன்றாக பார்ப்பதாய் நினைத்து பெற்றோர் சொல்வதை ஏற்றுக்கொள்ள மறுப்பது, பிடிவாதம் பிடித்தல், சம்பந்தப்பட்ட பிள்ளையுடன் சண்டை பிடித்தல் என்பன நடக்கும்.

வெள்ளை நிலவாக உலா வரும் பிள்ளை நிலா!

**கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...**



# இதயத்துக்கு இதமூட்டும் மெட்டி ஒலி கீதம்

பெண்கள் காலில் அணியும் மெட்டி வெள்ளியால் ஆனதாக இருக்க வேண்டும். தூய வெள்ளியால் அணியும் மெட்டி பெண்களின் கால் நரம்புகளுக்கு தூண்டுதலை கொடுத்து, கர்ப்பப்பையில் இணையும் நரம்புகள் வழியே கருப்பையில் பல்வேறு பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என்பதால் இவ்வாறு தொன்று தொட்டு திருமணத்தின் பொழுது பெண்களுக்கு கணவனின் கையால் மெட்டி அணிவிக்கப்படுகிறது. இத்தகைய அற்புதம் நிகழ்த்தும் மெட்டி, ஒரு பெண்ணின் காலில் எப்படி இருக்க வேண்டும்? இதனை அடிக்கடி மாற்றுவது சரியா? தவறா? என்பதைத் தான் இந்த பதிவின் மூலம் தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

ஒரு பெண்ணுக்கு நெற்றியில் குங்குமமும், கழுத்தில் திருமாங்கல்யமும், காலில் மெட்டியும் திருமணத்திற்கு சாட்சியாக இருந்து வருகிறது. இதில் ஒவ்வொரு விஷயமும், ஒவ்வொரு விசேஷ பலன்களை அந்த பெண்ணிற்கு கொடுக்கும். நெற்றியில் குங்குமம் இடுவதால் அப்பெண்ணை துர் சக்திகள் நெருங்குவது இல்லை. கழுத்தில் அணியும் திருமாங்கல்யம் அந்த பெண்ணிற்கு வேலியாக அமைகிறது.

அதே போல காலில் அணியும் மெட்டி கருப்பை பிரச்சினைகளை சரி செய்வதுடன், உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுத்து உஷ்ணத்தைத் தணிக்கும் செயலையும் புரிகிறது. அதனால் தான் பெண்கள் அணியும் மெட்டி வெள்ளியால் ஆனதாக இருக்கிறது.

வெள்ளிச் சுக்கிர பகவானுக்கு உரிய ஒரு உலோகமாகும். ஒரு பெண்ணிடம் சுக போக வாழ்க்கைக்கு தேவையான செல்வங்கள் சேர இரு கால் விரல்களிலும் கட்டை விரலுக்கு அடுத்து இருக்கும் நான்காம் விரலில் மெட்டி அணிய வேண்டும். அவர் அவரின் குடும்ப வழக்கத்திற்கு ஏற்ப அதன் எண்ணிக்கையும், உருவமும் மாறுபடுகிறது. ஆனால் பொதுவாக இரண்டு வளையங்களை போடுவது வழக்கம். அப்படி போடும் மெட்டியானது கால் நகத்திற்கு கீழே இருக்கும்



மூட்டுக்கு மேலே தங்கியிருக்க வேண்டும். மெட்டி அதற்கு கீழ் செல்லக்கூடாது. பெண்கள் நடக்கும் பொழுது தரையில் மெட்டி உரச வேண்டும். இது தான் சரியான மெட்டி அணியும் முறையாகும்.இப்படி அணியும் மெட்டி தேய்ந்து விடுவதற்கு முன்னர் நாம் மாற்றி விட வேண்டும். மெட்டி தேய தேய பெண்கள் கையில் இருக்கும் செல்வமும் தேயும் என்கிற நியதி உண்டு.

எனவே பெண்கள் மெட்டி அடிக்கடி மாற்றுவதில் தவறு இல்லை! மெட்டி தேய்ந்து போக போக இல்லத்தில் மகிழ்ச்சியும், செல்வமும் குறையும். எனவே மெட்டியை கெட்டியாக அணிந்து கொள்ளுங்கள். சுக்ரனுக்கு உகந்த வெள்ளி என்கிற உலோகத்தால் மெட்டியும், காலில் கொலுசு அணியும் பெண்களிடம் சரளமாக பணம் புழங்கும் என்கிற ஐதீகம் உண்டு.

# வசந்த கானங்கள் இன்னிசை மாலையில் கலாநிதி ஜனகன்



அக்ஷரா – வீனஸ் இனிய இசையில் 67ஆவது 'தேனும் பாலும் கலந்து வசந்த கானங்கள் இன்னிசை மாலை' கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07 இல் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. IDM Nation Campus International கல்வி நிறுவனத்தின் பிரதான அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில்; பிரதம அதிதியாக IDM Nation campus இன் தலைவர் கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தியும் விஷேட அதிதிகளாக வீரகேசரி பத்திரிகையின் பிரதம நிறைவேற்று அதிகாரி முருகேசு செந்தில்நாதனும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளருமாகிய அதி வணக்கத்திற்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோவும் சிறப்பு அதிதிகளாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பாலும் கலந்து கொண்டனர். இந்திப் பாடகர் அனுபா குணசேகரவும் இதில் கலந்து கொண்டு இந்திப் பாடல்களைப் பாடி சிறப்பித்தார். இந்நிகழ்வில் கலைஞர்களும், ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர்.




எதுக்காக சார் இப்படி வேகமாகப் படிக்கட்டு வழியாக இறங்குறீங்க?
என் கடிகாரம் மாடியிலிருந்து விழுந்துவிட்டது, சார்.
இந்நேரம் விழுந்திருக்குமே சார்?
இன்னும் விழுந்திருக்காது, சார். அது அஞ்சு நிமிஷம் ஸ்லோ!



முன்னவர் : ஆசையே துன்பத்துக்குக் காரணம்னு இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன்!

பின்னவர் : எப்படி?

முன்னவர் : என் மனைவியை நான் ஆசைப்பட்டுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.



நர்ஸ் : டாக்டர் இரண்டு தடவை மயக்க ஊசி போட்டும் மயங்கி விழலை.

டாக்டர் : ஊசியோட விலையைச் சொல்லு. உடனே மயங்கி விழுந்து விடுவார்.

வைத்தியர்: நான் சீக்கிரம் கோடீஸ்வரனாக ஏதாவது மந்திரம் இருந்தா சொல்லுங்களேன்...!

ஜோதிடர்: அது தெரிஞ்சா நான் ஏன்யா நீங்க கொடுக்கற பத்து அஞ்சு பிச்சைக்கு உக்காந்து ஜோசியம் பாக்கறேன்...?



மானேஜர் : ஆபீசுக்கு ஏன் லேட்?

டைப்பிஸ்ட் : என்னை ஒருவன் பின் தொடர்ந்து வந்தான்.

மானேஜர்: அப்படி என்றால் வேகமாக நடந்து சீக்கிரமாக வந்திருக்க வேண்டியது தானே?

டைப்பிஸ்ட்: அவன் மெதுவாத்தானே வந்தான்!



ஒரு பையன் தன் தலைக்கடியில் டிக்ஸனரியை வச்சிட்டு தூங்கறான். ஏன்?

ஏன்னா... அவனுக்கு அர்த்தமில்லாத கனவா வருதாம்.



சமூக சேவையாளர் பாஸி ஸுபைர் தலைமையில் நடைபெற்ற

# பேருவளையில் தினகரனின் 92ஆவது பிறந்த தின விழா



நண்பர்களின் அட்டகாசம்





# முஜாமலாவின் கவிதைகள்: முடிவுறாது நீளும் நீதம்



பொதுவெளியில் ஒருபெண் கவிதைமூலம் தன்னை அறிவிக்கும் நிகழ்வு அசாதாரணமாக நிகழும் சூழலில் புதிய தலைமுறையைச் சேர்ந்த முஜாமலாவின் வருகை மகிழ்வளிக்கின்றது. தூங்கிக் கொண்டிருக்கும் நாம் சட்டென விழிப்பது போன்றதுதான் நமக்குள் ஒளிந்திருக்கும் கவிமன விழிப்பும். அது அகலக் கண்திறந்து விழிக்கும் போது கிடைக்கும் தரிசனங்களும் பேரொளிர்வும் நமக்குள் ஏற்படுத்தும் அதீதம் அனந்தம்.

"அன்பின் வெற்றிடங்களில் பூவனங்களை வரைந்து முடிக்கும் வரிகளாகவே கவிதையை நோக்கமுடியும்" என்கின்ற பிரகடனத்துடன் முஜாமலாவின் கவிதைப் பிரவேசம் நடந்தேறுகிறது. பொதுவாக பெண்கள் கவிதை எழுத நேர்கின்றபோதெல்லாம் 'கவிதை ஆணா? பெண்ணா?' என்றதொரு சம்பிரதாயபூர்வமான கேள்வியை பலரும் கேட்டு வைப்பார்கள். பெண்கள் எழுதுகின்ற கவிதைகளில் பெண்ணையும் பெண்மொழியையும் தேடவிழைகின்றதன் விளைவே இக்கேள்வியின் பின்னால் ஒளிந்துள்ள அரசியலாகும்.அன்புசூழ் உலகொன்றை பெண்ணாலேயே சிருஷ்டிக்க முடியும் என்பதை இயற்கையிடமிருந்து நாம் கற்றிருக்கிறோமெனில் அவ்வியற்கையின் பகுதியாக முஜமலா வெளிப்படுகிறார். பிறரால் பாதிப்புறுகின்றபோதும் இந்த அன்பினை அவர் கைவிடுவதாகயில்லை.

**எதுவாயினும்**
**அநீதிக்குட்பட்ட**
**ஆத்மா நீயானால்**
**உந்தன்**
**தனித்துவ வழிகளை**
**தொட்டுக் காட்டு**
**அவை**
**அழகியலை விதைக்கட்டும்**
**நேசங்களிடையே**

என்று எழுதுகிறார். 'எதுவாயினும்', 'பெருமழைக்காரி', 'உறவே நீதான், முதலிய கவிதைகள் இந்த அன்பின் நிமித்தங்களையே பாடுகின்றன. அநீதியை நீதியால் அறுக்கும் மாமருந்தையே பலரும் சிபாரிசு செய்யும் நிலையில் அந்நீதிக்குள் அன்பற்றுப் போகும் சந்தர்ப்பங்களில் இவர் விட்டுச் செல்லும் அன்புலகு துளியாய் இருந்து வெள்ளமாகப் பெருகுகின்றது.

நினைவுகளில் வாழ்தல் மனித வாழ்க்கையில் பொதுவெனினும் முஜாமலாவின் கவிதைகளில் இவ்வாழ்வு முரணும் முரணிணைவாகவுமே பயணிக்கிறது. சில ஞாபகங்களும் இன்னும் சில முகங்களும் வழித்துணைகளாக வருவதை ஏற்கும் இவர்,

**ஒரு பனித்துளிக்காய் ஏங்கி**
**சூரியனைக் கட்டிக் கொண்ட**
**நாட்களும்**
**காற்றுக்கு முத்தமிட விரும்பி**
**கட்டாந்தரையில்**
**வழுக்கிய ஞாபகங்களுமே**
**வெறுப்பாகிறது.**
**என எழுதுகின்றார்.**
**அதேகணம் சாவதானமாகி,**
**நனைந்துவிட்ட**
**அப்பங்கங்களில் மிதக்கும்**
**சோகங்களை**
**விழிகூட்டிச் செப்பனிடும்**
**இயல்பென்பது...**
**எத்தனை அழகாக!**

என்றும் எழுதுகிறார். இந்த சுழற்சிநிலை கவிமனதின் பிறழ்வு என்றாலும் அந்தப் பிறழ்வில் பிறக்கும் சுகானுபவங்கள் கவிதைகளில் ரசபேதம் காட்டுகின்றன.

மனிதனை சந்தேகக் கண் கொண்டுநோக்கும்பொதுநிலையை முஜாமலாவும் ஏற்கனவே செய்கிறார். ஈழத்தில் மஹாகவியும், நீலாவணனும், அண்ணலும் இத்தகைய பொதுநிலைசார்ந்து ஆழமான கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளனர். ஆனால் ஒருபெண் மனிதனைப் பொதுநிலைப்படுத்தி எழுதும்போது அது ஆணைக் குறிக்கிறதா என்ற சந்தேகம் நமக்குள் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

**மனிதனின்**
**மனக்கிழிசல்கள்**
**ஆங்காங்கே**
**ஒட்டுப்போட்டு ஒளிரும்**
**புன்னகை வானங்களாக.**
**(அந்த அன்பின்)**
**பூமி தொடுத்திடும்**
**புறக்கணிப்பை**
**உணராதவனாய்**
**பெரும் மிடுக்கோடு**
**நகர்கிறானா மனிதன்?**
**(எச்சரிக்கை)**
**எல்லா மனிதர்கள் பற்றிய**
**குறிப்புகளும்**
**தினமொரு விசித்திரங்கள்**
**நிறைந்ததாகவே**
**(தினமொரு)**

ஆணையும் பெண்ணையும் எதிரெதிர் நிலைகளில் வைத்துப் பேசும் கவிதைகள் இத்தொகுப்பில் அதிகமென்பதால் இச்சந்தேகம் நமக்கு மேலும் வலுக்கவே செய்கிறது.

இவரது கவிதைகளில் வெளிப்படும் புதுமைப்பெண்ணிற்கு போராட்ட குணத்தை இவர் கற்றுக் கொடுக்கவில்லை. மாறாக மறைந்திருந்து எதிர்க்கும் துணிவைச் சிபாரிசு செய்கிறார்.

**உன்னை சுற்றி**
**அத்தனை ஆணிகள்**
**அறையப்பட்ட**
**விஞ்சும் சலிப்பை மென்று நீ**
**மறைந்து நில்!**
**(மறைந்து நில்)**

'தேவதைகளும் மனிதர்களே' எனும் இவரது கவிதை, பெண்கள் தேவதைகளாக வர்ணிக்கப்படுவதையும், அதன் மூலம் நிகழ்த்தப்படும் அமைதிப்படுத்தல்களையும் கேள்விக் குள்ளாக்குகிறது; கண்ணகியின் துயரங்களை மறைக்க அவளுக்கு தெய்வீக அந்தஸ்து வழங்கிய சமூக அமைப்பினை கிண்டல் செய்யும் கைங்கரியத்திற்குரியது.

**துடித்தால் துடிக்கவும்**
**அழுதால் அழவும்**
**மிஞ்சினால்**
**கெஞ்சவும்**
**தெரிந்தவர்களே தேவதைகள்!**

இதேவேளை அரசியல் மற்றும் சமூக எதிர்ப்புணர்வுகள் இவரது கவிதைகளில் வெளிப்படையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 'கொஞ்சம் இரு', 'அமைதியாக எரியுங்கள்' முதலிய கவிதைகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள்.

இவைதவிர, வாழ்வின் மீதான பாடல்களை சுருதி குறைத்தும் கூட்டியும் இவரது கவிதைகள் பாடவிழைகின்றன. ஏக்கமும், துயரும், மென்னுணர்வுகளும், கழிவிரக்கங்களும் அவற்றின் பேசுபொருளாகின்றன. இவைபற்றியும் விரிவாகப் பேசலாம்; ஒரு விவாதத்தைத் தொடக்கி வைக்கலாம்.கவிதையில் இயற்கையைப் பாடுவதை பொருள் சார்ந்தும் உத்தி சார்ந்தும் நம்புகின்ற பலரும் இங்குளர். இதேபோல இயற்கையினூடாக மானுடத்தைப் பாடும் உத்தியும் இங்கு வழக்கில் உள்ளது. முஜாமலாவின் கவிதைகள் பலவும் காற்றையும், வானையும், மழையையும் அவற்றின் ஜாலங்களுடனும் அவ்வப்போது நேரும் மனித மனத்தின் விகற்பங்களுடனும் வாசிப்புச் செய்கிறது. காற்று குறித்த இவரது பல்வேறு பார்வைகளை நோக்கின்,

**இன்றொரு சகதியில்**
**விளையாடியும்**
**நாளையொடு**
**மலர் வனத்தில்**
**இளைப்பாறவும்**
**ஆவலோடு வேகம்**
**கொண்டோடும்**
**காற்றுக் கென்றும்**
**புத்தியே இல்லை**
**(வெட்கமற்ற காற்று)**
**நாளையும் ஆடைகள்**
**களையவேண்டுமென**
**ஆர்வம் கொண்டெழும்**
**வெட்கமற்ற காற்றே!**




**உனக்குள் கிடக்கும்**
**குப்பைகளை**
**அடக்கிக் கொள்!**
**இல்லாதவரை**
**அவனியில் நீயொரு பெரும்**
**அழிவாய்!**
**(பெரும் அழிவாய்)**

இங்கு எல்லாவற்றையும் அழிக்கும் காற்றையே 'நீ அழிவாய்' எனக்கூறும் துணிச்சல் நுனித்து நோக்கத்தக்கது. இதுபோன்றே தனித்தலையும் விரிந்து கிடக்கும் தத்தலும் தவழ்தலுமான வானம் பற்றி கவிதைகள் பேசுகின்றன.

கவிதை மொழிதலில் உவமைகளுக்கும் உருவகங்களுக்கும் நெருக்கமான வாலாயமான சொற்கள் பிறப்பதுண்டு. இது கவிஞனின் தனித்துவமாகவும் நோக்கப்படுகிறது. முஜாமலாவும் மனக்கூச்சங்கள், சுவைநீட்டல்கள், அழகுருண்டை, வலசை சொற்கள், மனக்கிழிசல்லகள் என்றெல்லாம் சொற்சேர்க்கை செய்ய விழைகிறார். வருங்காலத்தில் இச்சொற்களின் பொருளளவில் கூர்மைபெறும்போது இவரின் கவிதைகள் மேலும் மெருகேற இடமுண்டு.

மொழியும் கவிதையில் அதன் பிரயோகமும் குறித்து முஜாமலா கவிதைப் பரிசோதனை செய்ய விழைகிறார். பின்நவீன எழுத்துக்களும் அவற்றின் வெளிப்பாட்டு உத்திகளும் ஆரம்பநிலையில் இவரை ஆகர்ஷிக்கின்றன. பெண்களின் கவிதைகளில் நிறைந்திருப்பது போன்ற உவமைகள் இவரின் கவிதைகளில் குறைவாகவே தென்படுகின்றன. சில கவிதைகளில் தொடர்பறும் தன்மையும் உண்டு.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com
Whatsap: 0714901181

# ஊர்வசி:சொல்லிய சேதி

ஈழத்துத் தமிழ்கவிதைப் பரப்பு புதுமையடையத் தொடங்கிய எண்பதுகளில் முளைகொண்ட பேனா ஊர்வசியுடையது.



எண்பதுகளின் தேசம் கொண்டிருந்த சமூக,பொருளாதார,அரசியல் சூழலில் சூல் கொண்ட இளங்கவிப் பெருக்கின் அடையாளம் ஊர்வசி.

இளம் பெண் எழுத்தியக்கத்தின் பேரலை ஊர்வசி. புதுசு, அலை, சக்தி,கல்குதிரையென கவிதைகளால் இயங்கிய ஊர்வசி 'மரணத்துள் வாழ்வோம்' மற்றும் 'சொல்லாத சேதிகள்'பெண் கவிதைத்திரட்டின் முக்கிய படைப்பாளி.

எண்பதுகளில் யாழ் எழுச்சியில் ஒலிக்கத் தொடங்கிய இளங்குரல் பின் சிலகாலம் ஓய்ந்திருந்து பின் மீளவும் ஒலிக்கத் தொடங்கிய போது அதன் அடர்த்தியும் அவசியமும் பேசப்பட்டது.

ஊர்வசி கவிதைகள் எளிமையான சொற்களின் அடர்ந்த பொருளுடையவை; அதிகமாக சமூகப்பயன்பாட்டுச்சொற்களைக் கவிதையில் பெய்ய வல்லவர்;அந்தப் பெய்தலில் உணர்வைக்கலந்து பொழியும் பண்புடையவர்.

அத்துடன் வாய்மொழித் தன்மையாக மொழியை வாசிப்பின் அமலுக்கு கண்கொண்டு வருபவர்.

ஊர்வசி கவிதைகளில் அக,புற மரபுகளின் இயல்பு படிந்திருக்கக் காணலாம்.

தனிமைத்துயர்,ஏக்கம்,அலைவு,அடைதலுக்கான அவா,என் தனிமனித உணர்வுகளில் நிறுத்தும் சமூக நிலையை ஊர்வசியின் கவிதைகளை வாசிக்கையில் அவதானிக்க முடியும்.'அவரது கவிதைகள் அவரது தனித்துவ அடையாளத்தைக் காட்டுவன.ஊர்வசியின் கவிதைகள் யுத்தத்தின் பிரசவங்கள் தான்.யுத்தத்தின் வலி அவற்றில் அழுத்தமாகப் பதிவாகியிருக்கிறது'என்பார் எம்.ஏ.நுஃமான்.

இடைக்காலம் தாண்டி மீளெழுதும் ஊர்வசி கவிதைகளில் திரட்டாக 'இன்னும் வராத சேதி'பத்தாண்டுகளுக்கு முன்பு வந்திருக்கிறது.' ஒரு கால் நூற்றாண்டுக்காலம் கழிந்த பின் ஊர்வசியின் கவிதைகளை இப்போது எடுத்து வாசிக்கையிலும் ஏக்கமும், பதற்றமும், கழிவிரக்கமும் நிரம்பிக் கழியும் ஒரு துயரடர்ந்த மனநிலை நம்மை வந்தடைகிறது 'என பா.அகிலன் மதிப்பிடுகிறார்.

ஊர்வசியின் கவிதைப்'பாதைகள் பிரிவதில்லை'

மரங்களின் மேலாக நிலவு எழுந்து வந்தது
என் ஆழ்மனதின் இராகங்கள்
குழந்தையின் விரல் பட்ட வீணை நரம்பின்
ஒலி பேதங்களாய் தெறித்து விழப் பிரிவு நிகழ்ந்தது
என்றோ நிகழ்ந்து விட்ட சம்பவங்கள்
எதிரொலியில் இன்றுவரை
காலைக் காற்று சிலுசிலுப்பதில்லை
உணர்வுகளின் சோகத்தில் மங்கிவிட்ட
சாளரக் கண்ணாடிகளின் பின்னணியில்
நான் ஐம்பதுகளின் சுருங்கங்களுடன்
யாருடனும் நட்பு கொள்ளாத. வானமாக
வெறித்த மனம் தகிக்கும். வெயில்
மின்சாரக் கம்பிகளில் சிட்டுக்குருவிகள்
ஊறுகாய் நினைவுகளுடன்

# உலக சினிமா வரலாற்றில் ஈரானுக்கான இடம் ஆச்சரியமூட்டும் அற்புதம்



இன்றைய ஈரானிய புதிய சினிமா உலக சினிமாவுக்கான காட்சித்திரையாக வளர்ந்து நிற்கிறது. சினிமா என்பது கதைசொல்லும் கருவியல்ல; அது கலைத்துவம் கலையாத உயர் படைப்பு.

1929இல்தான் ஈரானிய திரைத்தொடக்கம் நிகழ்கிறது.ஓவியங்களும் கலை வேலைப்பாடுகளாலான கம்பளங்களும் நிறைந்த ஈரானில் திரைக்காட்சி விம்பம் தொடங்குகிறது.

1930 இல் ஈரானிய முதல் மௌனப்படம் 'அபி அண்ட் ராபி'வருகிறது.32 இல் 'ஆஜி அகா' வருகிறது.1931 இல் ஈரானிய எழுத்தாளர் சேபாந்தாவின் திரைக்கதையை அர்தேசிர் என்கிற ஈரானிய 'லோர் கர்ல்'என்ற பெயரில் 1933 இல் பேசும் ஈரானிய படமாக வெளிவந்தது. இது ஈரானிய சினிமாவின் தொடக்க கட்டமெனலாம்.

உலகு போல் ஈரானிலும் அரசியல் மாற்றங்களும்,கிளர்ச்சிகளும்,போக்குகளும் சினிமாத்துறையில் செல்வாக்குச்செலுத்தியே வந்துள்ளது.

ஈரானிய சினிமாவின் இரண்டாம் கட்டம் தொழில்நுட்ப வளர்ச்சியோடு மேலெழுந்தது. அமெரிக்க பல்கலைக் கழகங்களில் ஈரானியர் சினிமா தொழில்நுட்பம் கற்றனர்.இதன் பின்புலத்தில் 1948 இல் 'வாழ்க்கையின் புயல்'பாரசீகப் பேசும் படம் இஸ்மாயீல் குஷான் உருவாக்கினார்.

1951 இல் 'இளவரசியின் கைதி ''மயக்கத்தையளிக்கும் காதல்'1952 இல் 'வெள்ளைக்கையுறை'என்பன குஷானின் உருவாக்கங்கள் ஆகின. எனினும் பிற்காலத்தைப் போல் சாதாரண மனித வாழ்வியல் /நடுத்தர வர்க்க வாழ்வியல் சினிமா அப்போது வரவில்லை.

1960களின் பின்பு பைராம் பேசாயாலும்,தர்யூஷ் மெஹ்ருஜுயியும் இத்தகைய சினிமாவைச் சாத்தியமாக்கினர்.

எனினும் 1953 இலிருந்து ஈரானிய தேசிய மைய திரைப்படங்கள் உருவாகத் தொடங்கின. லெப்டினன்ட் முஹம்மது தொராம்பகேஷின் திரைக் கதையைத்தழுவி 'தேசிய வாதியை'குலாம் உஸைன் நஷின்னே வெளிக் கொணர்ந்தார்.1957 இல் 'யாக்ஸ் லேத் சபாரி'யையும் வெளிக்கொணர்ந்தார்.எனினும் ஈரானிய சினிமாப் போக்கில் ஜஹேலிபுதிய சினிமாப் போக்கில் வெளிவந்தவர் இஸ்மாயில் குஷான்தான். இவரது 'மஹ்மலி''பாரீசில் ஏப்ராம்'ஆகியன குறிப்பிடும்படியானவை.

(அடுத்த கட்டம் தொடரும்)




பாடசாலை தர்மவிதிப்புத்தகத்தின் பதின்மூன்று பக்க அடிக்குறிப்பு
நான்காம் பக்க அடிக்குறிப்பு
(ஈ)
தர்மத்தின் மூலவிதை ஆசிரியம்
ஆல விருட்சமென மாணவர் சமூகம் வியாபிக்க வேண்டுமெனில்
தர்மத்தின் பெரு நிழலைப்பரவியொரு
சிறு விதை தூவல்
ஆசிரியம்
ஆனாலும் ஆசிரியர்
தர்மத்தின் தூதெடுத்துப் பணி செய்ய முயல்வரா
மாணவரின்
அறிவுக்கு ஆற்றலுக்கு திறனுக்கு முன்
நல் மனப்பாங்குக்கு
பணி செய்ய வேண்டுமல்லோ
முன் நடத்தை ஆசிரியம்
முன்மாதிரிப் பண்பான மாணவரை
வகுப்பறையில்
விதைக்கும்
விருட்ஷமென வியாபிக்கும்
புலனுணர்வின்
மாதிரியே ஆசான்
எனின் நற்
புலனுணர்வு
மாணவர் உருவாவர்
விழுமியங்களின் விளை நிலம்தானே
பாடசாலையெனும் வளர் நிலம்
விழுமியத்தை விதைத்திட ஆசானால் முடியுமெனில்
பண்பான சமூகமும் சடைத்தெழும்
வளரும் பயிருக்கு
வார்க்கும் நீராதல்
ஆசிரியர் ஒழுகலாறு
முளையிலே தெளிவிக்கும்
மாணவரின்
எதிர்காலம்
ஒளிர்காலம்
பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் பக்கங்களில்
பிழைபட்ட
ஆசிரியத்தின் குறைபட்ட குணமுண்டு
அதனால் தர்மவிதி இழந்ததென
பாடசாலைகளாச்சு
நேர வரவு,விடுப்பு,வீண் நேரமடிப்பு,பொறுப்பின்மை,ஆற்றுப்பாடில்லாமை,முன்மாதிரியற்ற சடங்கு வாதமென
குறை குணங்கள் குடி கொண்ட ஆசிரியனாலாதலென்ன
தர்மவிதி நொந்தழும்
சமூகமொன்றைக் காணுதே விதியாய்

# தளம் : சிற்றிதழ் இலக்கியம்

இலக்கிய வெளிப்பாட்டுப் புலத்தில் சிறு சஞ்சிகைச்சூழலின் கனதியான பங்களிப்புக்கு நீண்ட வரலாறுண்டு.

பிறமொழிகளிலும் சரி,தமிழிலும் சரி சிறு சஞ்சிகைச் சூழல் தொடர்ந்தும்,தொடரறுந்தும்,இயக்கங்கொண்டு வருகிறது.

இன்றைய சூழலில் இந்நிலை மின்சஞ்சிகைப் பரிமாணம் எடுத்துள்ளதாயினும். எழுத்துச்சஞ்சிகையின் இடம் தேய்ந்து விடவில்லை.

தமிழகத்திலும்,புலம்பெயரிடத்திலும்,இலங்கையிலும் இவ் இரு வழி சிறுசஞ்சிகைகள் இயங்குகின்றன.

இந்த போக்கின் இன்னொரு வரவு தளம். காலாண்டிதழான
தளத்தின் முப்பதாவது இதழ்(ஜனவரிமார்ச் 2024) அண்மையில் கைவசம் கிடைத்தது.

கருணா பிரசாத் வெளியிடும் தளம் ஆசிரியர் பாரவி.இராயப்பேட்டை சென்னையிலிருந்து வரும் தளம் கட்டுரைகள்,கதைகள்,கவிதைகள் உட்பட




நாடகம்,நினைவு கூரல்,மீள் வாசிப்பு, நூல் அறிமுகம், மற்றும் அதிர்வுகள் என் உள்ளடக்கக்கனதி கொண்டுள்ளது.

காத்திரமான வாசிப்பு க்கான தளத்தை விரிக்கிறது 'தளம்'.

இருபதாம் நூற்றாண்டின் நாடகர்,கவிஞர் பெர்டோல்ட் பிரெக்ட் பற்றிய. கனதியான கட்டுரை,மற்றும் நாடகத் தமிழ் வேரும் விருதுகளும் விவரிப்பு,ஆண்டான் அடிமைப் சமூகங்களுக்கு இடையிலான உறவும் இறுக்கமும் பற்றிய ரணஜித் குஹா கட்டுரை, கறுப்பு வெள்ளை அறிக்கைகளும் அரசியல் கட்சிகளுமென அரசியல் அலசல், மகாகவியும்,புரட்சிக்கவியும் பற்றிய தொடர் என்பன பல்வைத்தன்மையான கட்டுரைகளாகத் தளத்தை நிரப்புகின்றன.

ஆருத்ராவின்கதை(சித்தமுகி),தடம் புரளுமுன்னே(ஜனநேசன்),யேவாரம் (அமரந்த்தா),வளையல்கள்(டி. கருப்புசாமி),எங்க மாமன் பெயர் வச்சவன் (இரா. மதிராஜ்)கதைகள் வித்தியாசமான வாசிப்புத்தளத்தை விவரிக்கின்றன.

எட்வர்ட் பான்ட் 1971 இல் எழுதிய பெஸன் நாடகம் பிரதியாகியுள்ளது.

மகாராணி,பிரதம மந்திரி,மந்திரவாதி உரையாடலாக நகரும் நாடகப் பிரதியிது.

மேலும் முக்காட்டு முகங்கள் மீள்வாசிப்பும்,வத்ஸலாவின் தேர்ந்தெடுத்த கவிதைகள் நூலறிமுகமும் தளத்தின் கனதிகள்.

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

நீ நின்று கொண்டும் அவர் கால் மேல் கால் போட்டு ஆட்டிக்கொண்டும் இருந்த காட்சியை கண்டதும் ஏனோ தெரியவில்லை என்னை அறியாமலே உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். அதனால்தான் அப்படி கத்திவிட்டேன். பாவம் அவர் என்னை பற்றி என்ன நினைத்தாரோ தெரியவில்லை” என்று தவறுதலாக நிகழ்ந்த தவறுக்காக மனம் வருந்தினான். மண்டேலாவோ “ஆமாம், நீ நடந்துகொண்ட முறை முற்று முழுதாக முட்டாள்தனம். வேறு யாராவதாக இருந்தால் உன்னை வேலையில் இருந்து இன்றே நீக்கியிருப்பார்கள். ஆனால் அவர் அப்படி செய்யவில்லை.




அவர் நல்ல உள்ளம் கொண்ட நல்ல மனிதராக இருப்பதாலும் நம் விடுதலை உணர்வுக்கு உறுதுணையாக இருப்பதாலும் அவர் அமைதியாக இருந்துவிட்டார். இந்த அவமானத்தை பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டார்” என்றதும் சிசுலுவும் மண்டேலாவிடம் “சபாஷ், நண்பா விட்டால் சிடெல்ஸ்கியை தூக்கி வைத்து கொண்டாடுவாய் போல, அந்தளவுக்கு அவருக்கு வக்காலத்து வாங்குகிறாயே” என்று கேலி செய்தான். மண்டேலாவோ உரத்து சிரித்துவிட்டான். அன்றிரவு மூவரும் நெடுநேரம் சிரித்து பேசிவிட்டே தூங்க சென்றனர். மறுநாள் விடுமுறை தினம் என்றால் மூவரும் ஒன்று கூடி கேலிக் கதைகள் பேசி இராப்பொழுதை கலகலப்பாக கழிப்பதே அவர்களது வழக்கமாக இருந்தது.

அதே அலுவலகத்தில் பணிபுரியும் நேட் என்பவரின் பரிச்சயமும் மண்டேலாவுக்கு கிடைத்தது. அவர் ஒரு வெள்ளையர். ஆனாலும் மனதளவில் வெள்ளையர்களின் அதிகாரப் போக்கு அவரிடம் இல்லை.

ஒருசமயம் பாண் துண்டு ஒன்றை கொண்டு வந்து மண்டேலாவிடம் கொடுத்து கொஞ்சம் இதை பிடித்து கொள்ளுங்கள் என்று கூறியதும் மண்டேலா திகைத்துவிட்டு நேட் சொன்னபடி பாண் துண்டின் ஒரு முனையை பிடித்துக்கொண்டான். நேட் அப் பாண் துண்டின் மறுமுனையை பிடித்து கொண்டு பின்னோக்கி சென்றார். அப் பாண் துண்டு இரு துண்டுகளாக பிரிந்ததும், நேட் சிரித்தபடி மண்டேலாவிடம் “உங்களிடம் இருப்பது உங்கள் பங்கு, என்னிடம் இருப்பது என் பங்கு. உரியவர்களுக்கு உரியவற்றை பிரித்து கொடுப்பதே கம்யூனிஸம்” என்று நேட் பாண் துண்டை சாப்பிட்டபடியே கூறினார். கோரை போல நேட்டும் கம்யூனிஸக் கட்சியில் இணைந்துவிட்டார் என்று மண்டேலாவுக்கு தெளிவாக புரிந்துவிட்டது.

மண்டேலாவும் யோசிக்கத் தொடங்கினான்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...✍

# இஸ்லாமியப் பாடல்களின் இன்னிசை ராணி...கே.ராணி....!

(Child Prodigy), குழந்தை மேதையாக இவர் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறார். அக்காலத்தில் வைஜயந்திமாலாவின் நாட்டிய நிகழ்ச்சி பெரிய அரங்குகளில் நடைபெறும். நிகழ்ச்சிக்கிடையில் அவர் உடை மாற்றிக் கொண்டு வர சற்று நேரம் பிடிக்கும். அந்த இடைவெளி நேரத்தை பூர்த்தி செய்வதற்கு 5 வயது குழந்தையாக, அருமையாக பாடக்கூடிய திறன் படைத்திருந்த சிறுமி ராணியை மேடையில் ஏற்றி பிரபலமான பாடல்களை பாட வைப்பார்கள். கேள்வி ஞானத்தை வைத்து, கேட்டுப் பழகி, திறமையை வளர்த்துக் கொண்ட சிறுமி ராணியின் பிசிறில்லாத லாவகமான குரல்வளம் பலத்த கரகோஷத்தை அள்ளித் தரும்;.

அரங்கத்தையே அதிர வைக்கும். நாட்டிய நிகழ்ச்சி முடிவதற்கு முன்பே குழந்தை ராணி தூங்கிவிடுவாளாம். அவளை வைஜயந்திமாலாவும் அவருடைய பாட்டி யதுகிரி அம்மாளும் அவளை காரில் ஏற்றிக் கொண்டு அவளுடைய வீட்டிற்கு கொண்டு போய்ச் சேர்ப்பார்களாம்.



ஒரு பேட்டியில் அவரே இதைச் சொல்லியிருக்கிறார். ஒருநாள் வைஜயந்திமாலாவின் நடன நிகழ்ச்சி ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்தபோது அதைக் கண்டு களிக்க இசையமைப்பாளர் சி.ஆர்.சுப்பராமன் வந்திருக்கிறார். சிறுமி ராணியின் திறமை கண்டு ஆச்சரியத்தில் மூழ்கி போயிருக்கிறார். அடுத்த நாள் ஆர்மோனியத்தை எடுத்துக் கொண்டு ராணியின் வீட்டுக்கே வந்துவிட்டார். தமிழிலும், தெலுங்கிலும் ஒருசேர வெளிவந்த “தேவதாஸ்” திரைப்படத்தில் பாட வைத்தார். தேவதாஸ் படம் வெளிவருவதற்கு நீண்ட நாட்கள் பிடித்ததால், ராணி பின்னணி பாடியிருந்த மற்ற மற்ற படங்கள் முதலில் வெளிவந்தன. 1943ஆம் ஆண்டில் பிறந்த இவர், தனது எட்டாவது வயதிலேயே ரூபாவதி (1951) , சிங்காரி (1951) போன்ற தெலுங்கு சினிமாவில் பாடத் தொடங்கிவிட்டார். இவரை புகழின் உச்சத்திற்கு கொண்டுச் சென்ற படம் “தேவதாஸ்” என்பதில் சந்தேகமில்லை.தேவதாஸ் படத்தில் இவர் பாடிய எல்லாம் மாயை தானா? – பேதை எண்ணம் யாவும் வீணா? ஏழை எந்தன் வாழ்வில் இனி இன்பம் காண்பேனோ?” என்ற சோகம் பிழியும் பாடல் ‘சூப்பர் டூப்

(தொடரும்)



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...✍
கம்பளை

## நமக்காக நாம் அமைப்பின் திட்டமிடல்









வத்தளை அருண் மாணிக்கவாசகம் இந்து கல்லூரியில் கல்வி கற்கும் மாணவச் செல்வங்களுக்காக பெற்றோர்கள் இணைந்து ஆரம்பித்த வத்தளை நமக்காக நாம் அமைப்பு மிக குறுகிய காலப்பகுதியில் பல சேவைகள் செய்துள்ளதை கருத்தில் கொண்டும் நேற்றைய தினம் ந.நா.அமைப்பின் நான்காவது செயற்குழு கூட்டம் மிக அருமையாக அனைவரின் ஆதரவுடன் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அமைப்பின் வருடாந்த திட்டமிடல் மற்றும் அடுத்து ஆண்டுக்கான கிட்டதட்ட 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் நமக்காக நாம் அமைப்பின் செயலாளர் எஸ்.மகேந்திரன் ஜேபி மற்றும் எம்எஸ்சி விளையாட்டு கழகத் தலைவர் கிஷோர் குமார், ஒருங்கிணைப்பாளர் . இரா.கமலேஸ்வரன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் ஆற்றி வரும் சிறந்த செயற்பாடுகளுக்காக கௌரவிக்கப்பட்டார்கள்.



மலையோரம் வீசும் காற்று தொலைக்காட்சி நாடக கதாநாயகி புனிதாவின் குடும்பம்

# வெற்றிகரமாக இடம்பெற்ற வலம்புரி கவிதா வட்டத்தின் நூறாவது கவியரங்க விழாவும் "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும்

2013 ஆம் ஆண்டு டிசம்பர் பௌர்ணமி தினத்தில் மீள்ஆரம்பத்தின் முதல் கவியரங்கை நடாத்திய வலம்புரி கவிதா வட்டம் தனது நூறாவது கவியரங்க நிகழ்வை கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு 7, ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தில் விழாவெடுத்து கொண்டாடியது. அடைமழை பெய்து கொண்டிருந்த காலநிலையையும் பொருட்படுத்தாமல் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மிக அதிகமான கவிஞர்கள், அபிமானிகள் வந்து கலந்து கொண்டு நிகழ்வை வெற்றி விழா ஆக்கினர். வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்தினார். நிகழ்வில் ஈஸ்வரன் பிரதர்ஸ் தலைவர் கணேஷ் ஈஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். சிறப்பதிதிகளாக தினகரன், தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் வீரகேசரி மற்றும் வார வெளியீடு பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவைப் பொறுப்பாளர் திருமதி எம். ஜே. பாத்திமா ரினூஷியா, கெப்பிட்டல் டிவி, கெப்பிட்ட ல் எப்.எம். ஆகியவற்றின் பிரதானி ஷியாஉல் ஹசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விசேட பேச்சாளராக சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா பங்கேற்றார். வரவேற்புரையை வகவ தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன் நிகழ்த்தினார்.ஆரம்ப காலம் முதல் வகவத்தோடு இணைந்து செயல்பட்டு அதன் வளர்ச்சியில் உறுதுணையாய் இருக்கும் இப்போதைய வகவப் பொருளாளர் கவிஞர் ஈழகணேஷுக்கு வலம்புரி கவிதா வட்டம் பொன்னாடைப் போர்த்தி, வகவ விருது வழங்கி மகிழ்ந்தது.

122 வகவக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும் இடம்பெற்றது. நூலின் முதல் பிரதி பிரதம அதிதி கணேஷ் ஈஸ்வரனுக்கு வழங்கப்பட்டது.







சிறப்புப் பிரதிகள் சிறப்பதிகளுக்கும், கவிஞர்களுக்கும் வழங்கப்பட்டன.

நூறாவது கவியரங்கு தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் மிகவும் கலகலப்பாக நடைபெற்றது.

சிறிதும் சளைக்காமல் பத்து வருடங்களாக வீறுநடை போட்டு நூறாவது கவியரங்கினை கொண்டாடிய வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டம் அனைத்து இலக்கிய உள்ளங்களினதும் ஏகோபித்த பாராட்டினைப் பெற்றுக் கொண்டது.








# டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்களின் பாராட்டு விழா






டாக்டர் சாம்பசிவ டீ. எம். எஸ். மணிக்குருக்கள் தமிழ்நாட்டின், சாலிகிராமம், கோல்டன் பரடைஸ் மண்டபத்தில் நடத்திய கலைஞர்கள் கௌரவிப்பு விழாவில் டாக்டர் சாம்பசிவ டீ. எம். எஸ். மணிக்குருக்கள் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத் தலைவர் செல்லையா விஜயராஜையும் Zeetamil தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளரும் படப்பிடிப்பாளருமான பாலாவையும் கலைச்சுடர் பட்டம் வழங்கி கௌரவித்தபோது பிடிக்கப்பட்ட படங்கள். இதில் தென்னிந்திய கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.